பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஜூலை 2026



**பாவலரேறு வாணிதாசன்**

**122 வது பிறந்தநாள் மலர்**

**22.07.1915 – 22.07.2026**

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – ஜூலை 2026

655

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

இம்மாத இதழ் வரும் 22 ஆம் திகதி பிறந்தநாளை முன்னிட்டு, கவிஞரேறு புகழ் வாணிதாசனாரின் சிறப்பிதழாக மலர்கிறது. இதற்காக ஒத்துழைப்பை நல்கிய செந்தமிழ்ச் செல்வர் பொன்முருகன் அவர்களுக்கும், மலருக்கென தமது ஆக்கங்களை அனுப்பி ஒத்துழைப்பு வழங்கிச் சிறப்பித்த அனைத்து படைப்பாளிகளுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

வாணிதாசன் எனும் தமிழ்த்தொண்டன், 34 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து தமிழச்சி, கொடிமுல்லை ஆகிய சிறு காப்பியங்களையும், தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் ஆகிய கவிதை நூல்களையும் வழங்கியுள்ளார். இவரின் ‘வாணிதாசன் கவிதைகள்’ என்னும் கவிதைத் தொகுப்பு பெரும் புகழ் பெற்றது. கவிஞரேறு, பாவலர் மணி, தமிழ்நாட்டுத் தாகூர், புதுமைக் கவிஞர் என வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்ட இவரை இவ்விதழில் சிறப்பிப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இதழை முழுமையாக வாசித்துப் பயன்பெறுவதோடு, உங்கள் கருத்துகளையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்!

கடந்த எனது பிறந்தநாளுக்காக, வாழ்த்துகளை அள்ளி வழங்கிய அத்தனை நெஞ்சங்களுக்கும் இதயப்பூர்வமான நன்றிகளை சமர்ப்பிக்கிறேன். உங்கள் வாழ்த்துகளால் தான் வலுவுடன் வாழ்கிறேன் என்பது மிகையில்லை. இதைவிட எனக்கு வேறென்னதான் வேண்டும். இந்த அன்பு என்றும் தொடரவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் நிறைவு செய்கிறேன்.

நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்






கவிஞரேறு வாணிதாசன் பிறந்தநாள் ஜூலை மாதம் 22. கவிஞரின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நெஞ்சம் இதழை வாணிதாசனாரின் சிறப்பு இதழாக வெளியிட்டு கவிஞரை சிறப்பு செய்து கொண்டாடி கொண்டிருக்கும் தமிழ்நெஞ்சம் இதழ் ஆசிரியர் அமின் ஐயா அவர்களுக்கும் மற்றும் இதழின் பொறுப்பாளர்களுக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களின் வேண்டுகோளுக்கு இணங்க வாணிதாசனாரை சிறப்பிக்கும் விதமாக ஆக்கங்கள் எழுதி அனுப்பிய தமிழ் அறிஞர்கள்கவிஞர்கள்எழுத்தாளர்கள்மற்றும்இதழின்சிறப்பிற்கு ஒத்துழைத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்களின் அன்பு நிறைந்த நெஞ்சார்ந்த நன்றியை கவிஞரேறு வாணிதாசனார் குடும்பத்தினர் சார்பாகவும், கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கியப் பேரவையின் சார்பாகவும் தெரிவித்து மகிழ்கிறோம்.

என்றும் அன்புடன்



கவிஞரேறு வாணிதாசனார் குடும்பத்தினர்
செந்தமிழ்ச் செல்வர் பொன்முருகன்
தலைவர் கவிஞரேறு வாணிதாசனார்
கலை இலக்கியப் பேரவை
கனி குறள் பதிப்பகம்
புதுச்சேரி

# பாரதி தாசன் புகழ் வாழ்க...



.

பாரதி தாசன் போற்றும்
　　பைந்தொடை மாண வன்நீ
சீரசை அணிகள் கூட்டும்
　　சிந்தையின் தேன வன்நீ
காரது பெய்யும் போதுங்
　　காற்றது வீசும் போதும்
சாரணர் போல பாட்டு
　　சரித்திடும் வான வன்நீ

.

பாமரன் படித்துப் பார்த்துப்
　　பாங்குடன் புரியும் வண்ணம்
பூமணம் வீசு கின்ற
　　புலமையின் உச்சம் பெற்று
சாமரம் வீசும் பாட்டால்
　　சரித்திரம் படைக்க அந்த
நாமகள் உனக்கு மட்டும்
　　நல்வரம் தந்தா ளாசொல்

.

செந்தமிழ் மட்டும் அன்றி
　　சிறப்புடன் பிரஞ்சு மற்றும்
அந்தவூர் தெலுங்கு மேலும்
　　ஆங்கிலப் புலமை பெற்று
தந்தவை எல்லா நூலும்
　　தரமென புகழும் வண்ணம்
சிந்திடும் சிந்தை கொண்ட
　　சிகரமும் நீதான் ஐயா

.

பாட்டினில் நாட்டுப் பற்றும்
　　பழகிடும் மொழியின் பற்றும்
ஏட்டினில் எழுதி வைத்த
　　எம்பெரும் புலமை வாய்த்தத்
தீட்டிய கத்தி போல
　　திசையெலாம் சாதி தன்னை
மூட்டிய தீயாய் நீக்கி
　　முழுவதும் சீரும் செய்தாய்

.

நண்பனாய் தாச னுக்கும்
　　நற்றமிழ் அணிக ளுக்கும்
விண்ணொளிர் கவிதை தந்து
　　வியத்தகு கவியே நிற்கும்
அன்பனே உன்னைப் போற்ற
　　அருந்தமிழ் பத்தா தையா
இன்பனே உன்னைப் போற்ற
　　இனும்மொழி வேண்டு மையா

தமிழ்நெஞ்சம் அமின்



# நெஞ்சில் நிலைத்து நின்றவை

ஐயை பொன்னுசாமி
கவிஞரேறு வாணிதாசரின் மகள்
குயவர்பாளையம், புதுச்சேரி - 605 013

*கவிஞர் வாணிதாசன் இன்றைய தமிழ்க் கவிஞருலகில் மாபெருந் தலைவராய் விளங்கியவர்.*

*பொங்கும் கடலாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரையின் தலைமைப் பெருங்கவிஞர்; அவர்தம் அருமந்த முதல் மாணாக்கர்.*

*எங்கும் என்றும் எதற்கும் தாழாது சாயாது கோடாது தலை நிமிர்ந்து தன்மானம் உணர்ந்து தமிழ் காத்த புதுமைக் கவிஞர், ஈடிலா இயற்கைக் கவிஞர் 'பாவலர் மணி', 'கவிஞர் ஏறு', 'புதுமைக் கவிஞர்', 'பாவலர் மன்னன்' என்னும் சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்.*

*தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்ப் பெருங்கவிஞர் மன்றத்தின் நிரந்தரத் தலைவராய் விளங்கியவர்.*

*திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினராய்ப் பிரெஞ் சிந்திய ஆட்சி மாறி இந்திய ஆட்சி ஏற்படும் வரை இருந்தவர்.*

*தன்மான இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகங்களில் - சிறப்பாகத் திராவிடர் இயக்கங்களில் உறுப்பினராய்த் திகழ்ந்தவர்.*



*பெரியார் ஈ.வே.ரா., பேரறிஞர் அண்ணாதுரை ஆகியவர்களைத் தலைவர்களாய்க் கொண்டு, அவர்தம் வழியினைப் பின்பற்றி நடந்தவர்.*

*'உலகப் பெருங்கவிஞர் ஆதல் வேண்டும்' என்ற தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களின் உள்ளக் கிடக்கையை வேணவாவை- வேட்கையைப் பெற்றவர்.*

*'தமிழ் நாட்டுத் தாகூர்' எனத் தமிழ்த் தாத்தா பேராசிரியர் மயிலை சிவ. முத்து அவர்களால் பாராட்டப் பெற்றவர்; மனித சமுதாயத்திற்குப் புதிய புதிய கவிதைகளைப் படைத்துத் தொடர்ந்து நடந்தோரில் வெற்றிகரமாக முன்னேறியவர்.*

*தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய இந்த இருவரினும் விஞ்சிய வகையில் பாடியவர்.*

*உண்மையான கவிதைகளைப் புனைவதற்காகவே உதித்தவர்; 'கவிஞர்கள் பிறக்கிறார்கள் செய்யப்படுவதில்லை' என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர், சிறந்த சீர்திருத்தவாதி.*

*சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினராய் இருந்தவர், சுய முயற்சியால், சுய உழைப்பால் உயர்ந்து, வாழ்வாங்கு வாழ்ந்து, 'தூக்கிவிடாக் கவிஞனைப் போல்' மறைந்தவர், மாற்றார் அருளுக்கோ அன்றிப் புகழுக்கோ எந்நாளும் பொருளுக்கோ பாடாமல் பொய் எதிர்த்தே பாடிப் பறந்துவிட்ட பாமன்னர்!*

*அடர்ந்து படிந்த கன்னங்கரிய முடி; பரந்த நெற்றி; கண்ணாடி பெற்ற கண்கள்; நீண்ட மூக்கு; நீள் கழுத்து; இறுகிய உடல்; இளமைத் தோற்றம் நாவலர் நெடுஞ் செழியனைவிட மிக்க உயரம்; இளகிய மனம்: தைரிய நெஞ்சம் தலைக்கேறிய எளிய இனிய தமிழ்ப் போதை*

-

*இத்தகைய சிறப்புகளைக் கொண்ட தோற்றத்தை உடையவர் கவிஞர்ரேறு வாணிதாசன்.*

*தமிழ்த் திரைப்படத் துறையில் 1950களில் அறிஞர் அண்ணா, கலைஞர்கருணாநிதிபோன்றோரின்நுழைவால்திரைப்படத்துறையில் பாடல்களும் திரைக்கதை வசனங்களும் எழுதி அதை இயக்கி வெற்றியும் பெற்றனர். இதனால் கழக எழுத்தாளர்களும் கவிஞர்களும் படத்துறையினரால் தேடப்பட்டனர். அப்போது வாணிதாசர் கழக எடுகளில் கவிதை எழுதி வந்ததால் இவரையும் அந்தப் பட நிறுவனம் பாட்டெழுதத் தேடி வந்தனர். அவர்களிடம் பார்க்கலாம் என்று கூறிவிட்டு. உடனே தமதாசான் பாவேந்தரிடம் சென்று செய்தியைக் கூறி அறிவுரை கேட்டாராம் பாவேந்தருக்கும் படத்துறைப் பட்டறிவுண்டு. அதிலும் சேலம் படநிறுவனத்தை அவர் நன்கறிந்தவர்.*

நீட்டிப் பேசாமல் ஒற்றை வரியாக அது உனக்கு ஒத்துவராது என்று கூறிவிட்டார். இதைக் கேட்டுத் தயங்கி நின்றாராம் வாணிதாசன்.

படம் பாட்டென்று ஆசைப்பட்டுச் சோறுபோடும் வேலையை விட்டுவிடாதே! அது ஆள் விழுங்கித்துறை பணம் விளம்பரம் என்றெல்லாம் கறைகண்டு கையிலுள்ள ஆசிரியர் வேலையைத் தொலைத்துவிட்டால் உன் மனைவி பிள்ளைகள் வீதியில் நிற்க நேரிடும் போய்ப் பிழைப்பைப் பார் என்று எச்சரித்து அனுப்பி வைத்தாராம் பாவேந்தர் என்று என்னிடம் கூறியிருக்கிறார் என் தந்தை.

கவிஞரேறு அவர்களின் நண்பர் கவியரசர் முடியரசன் கண்ணாடி மாளிகைப் படத்திற்குப் பாடலும் உரையாடலும் எழுதிவிட்டு இந்தத் துறை நமக்குச் சரிப்பட்டுவராதென்று திரும்பிவிட்ட செய்தியை அறிந்தபோது தனதாசான் அன்று கூறிய அறிவுரையை எண்ணிப் பார்த்து வியந்தேன் என்று மீண்டும் என்னிடம் கூறியது என் செவிகளில் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

சென்னைக் கவிஞர் க. வேழவேந்தன் அவர்கள் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தமிழக அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் பொறுப் பேற்றிருந்தவர். இவர் தலைமையில் புதுவை அரசு பாவேந்தர் விழாக் கவியரங்கை நடத்தியது. புதுவை காந்தி திடலில் 19.04.1972ல் நடைபெற்ற 81 ஆம் பிறந்த நாள் கவியரங்கம் அது வாணிதாசனாரும் பாவேந்தர் பாட்டுலகில் மாணவர்கள் என்ற தலைப்பில் பாடினார்.

கவியரங்கத்திற்குப் பிறகு கவிஞரேறு வாணிதாசனாரைக் க.பொ. இளம்வழுதி அவர்கள் சந்தித்து அவருள் உறுத்திக்கொண்டிருந்த வினாவைக் கேட்டாராம் மூத்த கவிஞராகிய தாங்கள் உங்கள் தகுதியோடு இணையாக வைத்து எண்ண முடியாத கா. வேழவேந்தன் தலைமையில் பாட ஒப்புக்கொண்டது சரியா? என்றாறாம்.

அதற்கு என் தந்தை வாணிதாசனார் பாவேந்தர் பிறந்தநாள் விழாவில் வேழவேந்தன் தலைமையில் பாடியது தவறானதோ, தாழ்வானதோ அல்ல பாவேந்தர் விழாவில் பாட அழைக்காமல் தோரணம் கட்ட வேண்டுமெனக் கட்டளை இட்டிருந்தாலும்

*அதனை ஒரு பேறாகக் கருதிச் செய்திருப்பேன். நடைபெற்ற விழா என் ஆசான் பாவேந்தருடையது என்று கூறினாராம்.*

*இச்செய்தியை நிகழ்வு முடிந்து இரவு என் வீட்டிற்கு வந்து உறங்கி மறுநாள் காலையில் க.பொ. இளம்வழுதி கேட்டதாகவும் அதற்குத்தான் இவ்வாறு பதில் சொன்னேன் என்று என்னிடம் கூறினர். அவர் கூறியது என் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதிந்துவிட்டது இன்றும் என் நெஞ்சில் நிழலாடுகிறது.*

*அடிமை மலை பிளக்கும் உளி எங்கள் தமிழே!*
*ஆண்மைக்கும் வலிமைக்கும் உரமெங்கள் தமிழே!*

*எனத் தமிழைத் தொழுத என் தந்தை கவிஞரேறு வாணிதாசனார் தமிழ் உலகிற்குக் கிடைத்த அரும் பெரும் கவிஞராவார். நல்ல முற்போக்குச் சிந்தனைக் கொண்டு பாவேந்தரின் பைந்தமிழ்க் கொள்கையையும் ஏற்று வாழ்ந்த புதுமைப் புலவர். அவர் கவிஞராய் இருந்த காலம் தி.மு.க. மிகச்சிறப்பாக ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலமாகும். கலைஞருக்கும் கவிஞரேறுவிற்கும் உண்டான நட்பினை நேரில் கண்டு வியந்து மகிழ்ந்திருக்கிறேன். அத்தகைய சிறந்த நட்புறவைப் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன்.*

*கடலூரில் அவ்வப்பொழுது தி.மு.க. கூட்டம் நடைபெறும். அக் கூட்டத்திற்கு அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, என்.வி. நடராசன். ஈ.வெ.கி. சம்பத், நாவலர் நெடுஞ்செழியன். சத்தியவாணி முத்து, நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன் போன்றோரெல்லாம் கலந்து கொள்வார்கள். என் தந்தையும் அக்கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வார். எங்கள் தாய்மாமன் பிள்ளைகளும், நாங்களும் கவிஞரேறுவுடன் கூட்டத்திற்குப் பலமுறை சென்றிருக்கிறோம்.*

*அண்ணாவின் தலைமையில் நடைபெறும் அக்கூட்டங்களில் கவிஞரேறு வாணிதாசனும் கவிதை பாடுவார். இப்பொழுது உள்ளது போல் அப்பொழுதெல்லாம் பேருந்து வசதிகள் இல்லாத காலம். பெரும்பகுதி பெட்டிவண்டி கட்டிக்கொண்டு கடலூருக்குச்செல்வதே வழக்கம். அதற்கு வாய்ப்பில்லாச் சமயங்களில் மிதிவண்டி யிலேயே கடலூரில் நடைபெறும் கழகக் கூட்டத்திற்குச் சென்றுவிடுவார். என் தந்தை அந்த அளவிற்கு அவருக்கு கொள்கைப்பிடிப்பு அதிகம்.*

ஒருமுறை கூட்டத்திற்குச் சென்ற என் தந்தை இரவு வெகுநேரம் கழிந்தும் வீடு திரும்பவில்லை. வீட்டிலும் அனைவரும் உறங்கிவிட்டனர். தந்தையைக் காணாததால் நான் மட்டும் உறக்கம் வராமல் விழித்திருந்தேன். நள்ளிரவில் மகிழுந்து வரும் சத்தம் கேட்டு கதவைத் திறந்தேன். விளக்கொளியில் என் தந்தை மகிழுந்திலிருந்து இறங்குவதைக் கண்டேன். உள்ளே இருந்து வருகிறேன் அண்ணா! என்று சொன்னவரின் குரலைக் கேட்டு யார் என்று பார்த்தேன். அந்தக் குரல் கலைஞரின் குரல், உடனே ஓடிச் சென்று வணக்கம் கூறினேன்.

கூட்டத்திற்குக் கலந்து கொள்ள வந்திருந்த கலைஞர். என் தந்தையிடம் தனியாகச் செல்ல வேண்டாம் நான் புதுவை வழியாகத் தான் செல்கிறேன். எனக்கு ஒன்றும் சிரமமில்லை என்று மகிழுந்தில் ஏற்றி வந்ததையும். அவருடனே உணவருந்தி மகிழ்ந்ததையும் பகிர்ந் தார். அத்தகைய நெருங்கிய தொடர்புடையவராக கவிஞருக்குக் கலைஞர் திகழ்ந்தார்.

கலைஞரின் 46வது பிறந்த நாள் விழாவில் 46 வெண்பாக்களைப் பாடிக் கலைஞரை மகிழ்வித்தார். அத்திடலிலுள்ள மக்கள் அனைவரும் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர். அந்நிகழ்ச்சியை என்னிடம் தந்தை பகிர்ந்தபோது அளவில்லா மகிழ்ச்சி அடைந்தார். இந்நிகழ்வு இன்றும் பசுமையாய் என் நினைவில் நிற்கிறது.

கவிஞரேறு வாணிதாசன் கடைசியாகக் கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி 16-06-1974 அன்று தஞ்சாவூரில் நடைபெற்றது. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சரா யிருந்த கலைஞர் திரு. மு. கருணாநிதியின் பொன் விழாக் கவியரங்கமாகும். அதில் என் தந்தை கவிஞரேறு வாணிதாசனார் தலைமையேற்று நடத்திக் கொடுத்தார்.

அதற்கென அவர் புதிதாக எழுதிய பாடல் ஒரு வெண்பா மட்டுமே. ஏற்கெனவே கலைஞரின் நாற்பத்தாறவது பிறந்த நாள் விழா கடலூரில் கொண்டாடப் பெற்றது. அதற்குக் கலைஞரைப் பற்றி 46 வெண்பாக்கள் எழுதி யிருந்தார். அத்துடன் புதிதாக எழுதிய 1 வெண்பாவையும் சேர்த்து இங்குத் திரும்பப் படித்துவிட்டேன் என்று என்னிடம் கூறி மகிழ்ந்தார்.

கவிஞரேறு வாணிதாசனாரின் நெருங்கிய குடும்ப நண்பரான

புலவர் அறிவுடை நம்பி சிறந்த பேச்சாளர். புலவர் அறிவுடை நம்பியின் குடும்பம் கடலூரில் போடி செட்டி தெருவில் வசித்தனர். 'செண்பகம்' என்ற இதழையும் அறிவுடை நம்பி நடத்தி வந்தார்.

கடலூரில் நடைபெறும் மாநாட்டில் அறிஞர் அண்ணா கலந்து கொள்வதாகவும் கவிஞரேறு கவிதை பாடுவதாகும் திட்டமிடப்பட்டிருந்தது. புலவர் அறிவுடை நம்பி வீட்டில் அறிஞர் அண்ணா தங்குவதால், கவிஞரேறு தன் குடும்பத்தாருடன் தன் வீட்டிற்கு வருகைபுரிய வேண்டும் என்று புலவர் அறிவுடை நம்பி கேட்டு கொண்டதற்கு ஏற்ப நாங்கள் அனைவரும் சென்றோம். அங்கு அறிஞர் அண்ணா, சொல்லின் செல்வர் சம்பத், நாவலர் நெடுஞ்செழியன், என்.வி. நடராசன், கலைஞர் கருணாநிதி மற்றும் தோழர்களுடன் என் தந்தை உரையாடி மகிழ்ந்து உணவு உண்டுகளித்தார். நானும் என் தாயும் புலவர் அறிவுடை நம்பி மனைவி பிள்ளைகளுடன் உணவு உண்டு களித்தோம். அன்று மாலை மூன்று மணியளவில் மாடியில் இருந்த அறிஞர் அண்ணாவைக் காண என்னை அழைத்துச் சென்றார், அப்பொழுது அண்ணாவை வணங்கி ஆசிப்பெற்றேன். கலைஞரும் உடனிருந்தார். அந்நிகழ்வு தித்திக்கும் நினைவாக நினைக்கும்போதெல்லாம் இன்றைக்கும் இனித்துக்கொண்டே இருக்கிறது.

என் தந்தை எங்குச் சென்றுவந்தாலும் நடந்த நிகழ்ச்சிகளை என்னிடம் பகிர்ந்து கொள்வது வழக்கம். அவ்வாறு பகிர்வது எங்கள் இருவருக்குமே மகிழ்வை அள்ளித்தரும். தந்தை பள்ளிச்சென்று திரும்பியதும், அவருக்கு வரும் கடிதங்களையும். அவர் கவிதைகளைத் தாங்கி வரும் முரசொலி. திராவிட நாடு. மன்றம் போன்ற இதழ்களை அவரிடம் மறக்காமல் காண்பிப்பேன். அவ்வப்போது கவிதைக் கேட்டு வரும் மடல்களையும் தந்தையிடம் நினைவூட்டுவேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இறந்த செய்தியினை வானொலியில் ஒளிப்பரப்பினார்கள். அன்றைய தினம் ஏதோ வேலையின் காரணமாகத் தந்தை தாமதமாக வீட்டிற்கு வந்தார். வந்தவுடன் அவரிடம் கூறினேன். துடிதுடித்துப் போய்விட்டார். உடனே என் தந்தை சேலியமேட்டில் இருந்து புதுவைக்குப் புறப்பட்டுவிட்டார்.

பாவேந்தரின் உடலைக் கண்ட வாணிதாசனார் அழுதழுது மயங்கி

விழுந்துவிட்டார். உடன் இருந்தவர்கள் தண்ணீர் தெளித்து உட்கார வைத்தனர். அங்குக் கவிஞர். புதுவைச் சிவமும், என் தந்தையும் மற்றும் புதுவைக் கவிஞர்களும் கலைஞரின் வருகைக்காகக் காத்திருந்தனர். இரவு ஒரு மணி அளவில் கழகத் தொண்டர்களுடன் கலைஞர் வந்தார். என்.வி. நடராசனும் உடனிருந்தார். மலர் அஞ்சலி செலுத்திவிட்டு அன்றிரவு பாரதிதாசனின் எதிர் வீட்டுத் திண்ணையில் அனைவரும் உணவு கூட உண்ணாமல் விழித்துக் கொண்டு ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டே இரவு முழுவதும் இருந்தனர்.

கலைஞருக்குப் பயணக் களைப்பால் கண்கள் உறக்கத்தைத் தழுவியது. அதனால் பக்கத்தில் அமர்ந்திருந்த கவிஞரேறு வாணிதாசனின் தோள்களில் சற்று சாய்ந்தவர் தன்னை நிலைப் படுத்திக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். கலைஞர் கருணாநிதியின் களைப்பைக் கண்ட கவிஞரேறு வாணிதாசன் கலைஞரைத் தன் மடியில் படுத்துக் கால்களை நீட்டியபடி சற்று ஓய்வெடுக்கச் சொன்னார். அவ்வாறே கலைஞரும் வாணிதாசனின் மடியில் தலைவைத்துக் காலை நீட்டி படுத்துக் கொண்டவாறே பேசிக் கொண்டு அன்று இரவைக் கழித்ததாகவும். மறுநாள் அடக்கம் முடிந்து இரவு எட்டு மணிக்கு வந்த என் தந்தை நடந்த நிகழ்வுகளை எல்லாம் கூறினார். தந்தை இழந்த தவிப்பினைப் போல் கவிஞரேறு அன்று துடித்துப் போனார். என் தந்தையின் துயரம் நிறைந்த கண்களை எண்ணினால் இன்றும் என் மனம் கலங்குகிறது.

இவ்வாறு என் தந்தை இறக்கும் வரை கலைஞருடன் நெருங்கிய நட்புறவுடனே பழகிவந்தார். என் தந்தையின் மறைவிற்குப் பின் கலைஞரின் ஆட்சிக் காலத்தில், தந்தையின் "பாட்டரங்கம் பாடல்" நூலுக்கு கலைஞர் முதல் பரிசளித்துப் பாராட்டினார் என்பது குறிப்பிடத் தக்கது. சென்னையில் நடந்த பாராட்டு விழாவிற்குக் குடும்பத்துடன் கலந்து கொண்டோம்.

இவற்றிற்கெல்லாம் சிறப்பிற்குச் சிறப்பாக 26-05-2007ஆம் ஆண்டு கலைஞரின் ஆட்சிக் காலத்தில் தான் கவிஞரேறு வாணிதாசனாரின் நூல்கள் அரசுடைமை ஆக்கப்பட்டது. இந்நிகழ்விலும் கவிஞரேறுவின் பிள்ளைகள் அனைவரும் பங்கேற்று, அதற்கான காசோலையைப் பெருமிதத்தோடு பெற்று மகிழ்ந்தோம். கலைஞரின் வாழ்த்துக்களையும் பெற்று உள்ளம் பூரித்துப்போனோம்.



# பத்தரை மாற்றுப் பசும்பொன்வாழியவே!

கல்தோன்றி மண்தோன்றாக காலத்தே முன்தோன்றிய
மூத்தக் குடி பிறந்த தமிழ்மொழியாம் வாணிதாசர்
பல்லோர் போற்றும் பைந்தமிழ்ப் பாவலன் வாணியின்
நல்லிதழில் நீ பிறந்தாய் தமிழே! நீ வாழி!
நானென்றும் உனைமறவேன் நானிலம் புகழும்
தேனெழுந்த உன் பெருமை நாடறிந்த உண்மை! உண்மை!
மாவேந்தும் முக்கனிச்சாராம் அவர்யாத்த பாடல்
பாவேந்தனின் வழிவந்த பாவலர் மணி வாழியவே!
காதல் இயற்கை கைம்மை மறுமலர்ச்சி
தீதை எதிர்க்கும் திண்டோள் மறவீரம்
பாட்டிற் புரட்சி பலவிளக்கியத் துயதமிழர்!
நாட்டிற் களித்த நற்கவிஞர் வாணிதாசனார்.
வளமிகுந்த வாழ்க்கைக்கு வாணியின் கவிதை கண்டோம்.
வான் வழங்கும் செம்பரிதி வருதல் கண்டோம்.
உளம் கூட்டும் செந்தமிழை உலகுக் களித்தோன்
களம் கண்ட நற்கவிஞர் இனிய தமிழ்ப்பாடல்
கலை பயில் சாலையெங்கும் தமிழிசை காதிற் கேட்கும்
விலையில்லா கவியை வாரி வழங்கிய வாணி
தமிழகத்தின் தனிச்சொத்தாம் தன்மானக் கவிஞன்
அமிழ்தாம் தமிழை அரியணை ஏற்றியவர்
பழகுத்தமிழ் தனித்தமிழ்ப் பாவலன் வாணிதாசனின்
பழந்தமிழும் பாட்டும் அமிழ்து என்பேன்
சிந்திக்கத் தூண்டும் செந்தமிழ்ப் பாக்களை தந்து
நமக்கு பகுத்தறிவை ஊட்டியவர்
புத்தம் புதுக்கருத்து புத்துணார்வு ஊட்டிய
பத்தரை மாற்றுப் பாம்பொன் வாழியவே!



பாவலர் இளவெயினி பாண்டுரங்கம்
முதலியார்பேட்டை புதுச்சேரி - 4

# கவிஞரேறு வாணிதாசன் பிரெஞ்சு மொழி பெயர்ப்பு

**பாவலர் இளவெயினி பாண்டுரங்கம்**

முதலியார்பேட்டை புதுச்சேரி - 4

கவிஞரேறு வாணிதாசன் இளமையிலேயே பிரெஞ்சு மொழி பயின்று பிரெஞ்சு இலக்கியத்தில் புலமை பெற்றிருந்தார். பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் பல கவிதை கதைகளை மொழிபெயர்த்துள்ளார். பிரெஞ்சு மொழி மூலத்திலிருந்து கவிஞர் அதிகமாக தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். அதில் மாப்பசானின் ஒரே நெடுங்கதை மட்டுமே பெரிய இடத்துத் செய்தி என்னும் பெயரில் சிறு நூலாக வெளியிட்டார். மாப்பசானின் சிறுகதைகளில் ஏறத்தாழ இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கதைகளை மொழிபெயர்த்துள்ளார். இவருடைய மொழிபெயர்ப்புகள் பொன்னி கலைமன்றம் இதழ்களில் வெளிவந்து பல பாராட்டுக்களை பெற்றது. விக்டர் யகோவின் நாடகம் காதல் எங்கே எமிலி சோலாவினால் எழுதப்பட்ட மனித மிருகம் என்ற புதினமும் பாக்காக்கினால் எழுதப்பெற்ற கருமியின் மகள் என்ற புதினம் போன்ற பல கதைகளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இவர் தமிழிலக்கியத்திலும் புலமை பெற்று இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவருடைய நூல்கள் ஆங்கிலத்திலும் ரஷ்யா மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு பாராட்டுகளைப் பெற்றது. இவருடைய பிரெஞ்சு மொழி திறமையையும் புலமையையும் அறிவுத்திறமையும் பாராட்டி 1954-ம் ஆண்டு பிரெஞ்சு குடியரசு தலைவர் இவருக்கு பிரஞ்சு அரசின் உயரிய விருதான செவாலியே விருதினை வழங்கி சிறப்பு செய்தார் இவரின் நூல்கள் அனைத்தும் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கி சிறப்பு செய்தது.

கவிஞரேறு வாணிதாசன் இயற்கையின் அழகையெல்லாம் எழிலோவியமாக நீட்டியவர் ளுக்கு இருக்க வேண்டிய கூர்மையான நோக்கு இவரின் பாடலில் அதிகமாக இருந்தது கவிஞன் சமுதாயத்தின் வழிகாட்டி சமுதாயத்துக்கு நன்னை தியாகம் செய்பவன். கலிஞன்

சக்தி எல்லாம் மனித சக்திக்கும் அப்பாற்பட்டது.

கவிஞனும் வருங்காலத்தை அறியக்கூடியவன். மக்களுக்காக வாழ்ந்து மக்களுக்காகவே மரணத்தைக் தழுவ வேண்டும் என்பது களிஞரின் கண்ணோட்டம். மே மாத இரவு என்ற உணர்ச்சிமயமான ஒரு கவிதையில் கவிஞனின் மாபெரும் தியாகத்தைப்பற்றி தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைதான் வெண்கழுகுப் பேடை என்னும் கவிதை, இக்கவிதை களிஞ வாணிதாசனாரின் கவிதைகள் தொகுதி இரண்டில் இடம் பெற்றுள்ளது.

கவிஞர் வாணிதாசனாரைக் கவர்ந்த பிரெஞ்சு கவிஞர்கள் பலருண்டு அவர்களில் குறிப்பிடத்தக்கவர் விக்டர் யூகோ அல்ரிரத் தெ முய்சே போன்றோர் 19-ம் நூற்றாண்டில் முற்பகுதியில் வாழ்ந்தவர் அல்பிரத் தெ -முய்சே அவர் ஒரு பெண் கவிஞரை காதலித்து பின்னர் அதில் தோல்வியுற்று இறவாத் தன்மை வாய்ந்த பல அற்புதக் கவிதைகளைப் படைத்தான் உலகில் மக்கள் வாழ்ந்தால் கவிஞன் வாழ்வான் மக்கள் வீழ்ந்தால் அவனும் வீழ்வான் மக்கள் மகிழ்வுக்காக கவிஞன் எழுதுகிறான் மற்றவர்கள் துன்பத்தை தன் துன்பமாக எண்ணி அழுகின்றான், வியக்கின்றான். அவனே கவிஞன் கண்ணுக்குத் தெரியாமல் அழுதழுது சோர்ந்த கவிஞர் தான் கண்கலுழும் கவிபுனையக் கூடும் என்று அல்பிரத் தெ முய்சே வைஇப்பாடலில் நினைவு கூறுகிறார்.

அல் பிரத் தெ முய்சேயின் பிரெஞ்சு கவிதையினை வெண்கழுகுப் பேடை என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்க்கபட்ட கவிதை மக்களோடு மக்களாக வாழ்ந்த கவிஞன் ‘புண்பட்ட உள்ளம்தான் பிறர் புண்ணைக் காணும்‘ மங்களின் நிலையைக் கண்டு புண்பட்ட கவிஞன் உள்ளம் போன்று வெண்கழுகுப் பேடையின் உள்ளம் பசித்துன்பத்தால் வாடும் குஞ்சுகளுக்கு உணவளிப்பது என்ற சிந்தனையை தனது கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

வான்வெளுக்கத் தாய்பறவை மலைச்சாரல் எங்கும்
வட்டமிட்டு வட்டமிட்டு நெடுநேரம் சுற்றி
உயிரொன்றும் கிடைக்கவில்லை! என் செய்யும் பேடை!
கான்தேடி வயல்தேடி கடல் பரப்பும் தேடிக்
கண்ட பயன் களைப்பொன்றே! கூடுதிரும் பிற்றே

ஊனுக்கு வாய்திறக்கும் குஞ்சகளைக் கண்டே
ஒருநொடியில் தன்னுடலைக் கிழித்ததுமூக் காலே

(வாணிதாசன் கவிதைகள் தொகுதி - 2)

'பெரிய கண்கள் பெருங்கால்கள் உளியொத்த சிறிய விரல் போன்ற உருவம் உடைய வெண்கழுகுப் பேடை தன் குஞ்சுகளின் பசித்துன்பத்தை நினைக்கும்போது சராசரி தாய் தன் குழந்தைகளுக்கு பசியைப் போக்க என்ன செய்வாள் என்பதை கவிஞர் தாயன்பே அன்பாம் என்கிறார். அவள் முதலில் செய்ய வேண்டியது என்ன என்று முடிவெடுக்கிறாள். அதேபோல கொடிய பறவையான வெண்கழுகுப் பேடை தன் குஞ்சுகளின் பசியைப் போக்க கான்தேடி வயல்தேடி கடல்பரப்புத்தேடி கண்ட பயன! களைப்பொன்றே கடைசியாக ஒருநொடியில் தன் உடலை கிழித்துக் கொட்டுகின்ற குருதியினை குஞ்சுகளுக்கு ஊட்டியது பிஞ்சுவாய்க் குஞ்சுகள் தன் தாயின் மரணம் அறியாது கொட்டுகின்ற குருதியினை வயிறார உண்டு மகிழ்ந்தது. பறவையின் நிலை குஞ்சுகளுக்கு வயிறார ஊட்டிய மகிழ்வுடன் வெண்கழுகுப் பேடை மாண்டது இதிலிருந்து கவிஞர் வாணிதாசனார் கூற வரும் செய்தி என்னவென்றால் உயிரினங்கள் அனைத்திருக்கும் உணவும் தாயன்பும் முக்கியமானதாகும்.

'வெண்கழுகுப் போன்றவரே நற்கவிஞர் கூட்டம்டு
விளையாட்டாய்ச் சொல்லவில்லை! உண்மை! முழுஉண்மை!
புண்பட்ட உள்ளந்தான் பிறர் புண்ணைக் காணும்!
புரியாத சிக்கலெல்லாம் புரிந்தமனம் நீக்கும்!
கண்ணுக்குத் தெரியாமல் அழுதழுது சோர்ந்த
கவிஞர் தாம் கண்கலுழும் கவிபுனையக் கூடும்!
மண்ணுள்ளோர் சிரிப்பதற்கும் வாழ்வதற்கும்
இந்த மாக்கவிஞர் இல்லையெனில் நாடுகடு காடே!

(வாணிதாசன் கவிதைகள் தொகுதி - 2)

தன்னுயிரை கொடுத்த வெண்கழுகுப் பேடை போன்றவரே நற்கவிஞர் கூட்டம். கழுகினைப் போலத் தன்னையே கொடுத்து மகிழ்பவன் கவிஞன் என்று கூறுகிறார் கவிஞர் வெண் கழுகுப்பேடை தன் குஞ்சுகளுக்காகவே வாழ்ந்து மாண்டது அதே போல நற்கவிஞர்கள்

மக்களுக்காகவே தன்னை கொடுத்து மரணத்தை மகிழ்வுடனே ஏற்பவர் கவிஞர்கள், மக்களை மகிழ்விக்க பிறந்தவர்கள் சொல்லாலும் செயலாலும் கவியாலும் மகிழ வைத்து தன்னை இழப்பவர்கள் கவிஞர்கள். அத்தகைய கவிஞர்கள் இல்லையென்றால் இந்நாடு சுடுகாடு தான் என்கிறார். ஒரு நல்லிசைப் புலவன் சமுதாயத்திற்கு ஆற்றவேண்டியதை ஒரு வெண்கழுகுப் பேடையின் தியாகத்தின் மூலம் காட்டுகிறார்.

வெண்கழுகுப் பேடை எனும் வாணிதாசன் கவிதைக் கதை பிரெஞ்சு கவிதையிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்ட கவிதை ஆகும். வாணிதாசன் கவிதையில் பொதிந்திருந்த கவிதை நுட்பத்தை, கருத்துச் செறிவை கற்பனை நயம் உவமை சிறப்பு இயற்கை உணர்ச்சி மனித நேயம் கவிதை மரபு போன்றவற்றை படித்து இன்பம் பெற்று மகிழ்வோமாக!

## வாணிதாசனாரின் சிறப்புகள்

தென்னார்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றம் கவிஞரேறு பட்டம் அளித்து தமிழ்ச்சங்கம் பாவலர்மணி அளித்து வெள்ளிக்கேடயம் அளித்து போற்றியது. வாணிதாசனாரின் மறைவுக்குப் பிறகு போற்றியது. புதுவை விருது தமிழக அரசு கவிஞருக்கு பாவேந்தர் விருது அளித்து, மேலும் தங்க பதக்கமும் கொடுத்தது.

‘கோடி கொடுப்பினும் கொள்கையிற் கோடேல்‘ என்ற கொள்கையில் வாழ்ந்து மறைந்தவர் கவிஞர் வாணிதாசனார்.





# இவர்க்கிலை ஈடு

வங்கக் கடல்சார் வளமார் புதுவை;
தங்கும் நிழல்சார் தண்பொழில் நாப்பண்
கண்ணெதிர் சிலையாய்க் காணும் இவர்யார்?
எண்ணெதிர் வினவுதிர்!இயம்புவன் மன்னே!
தண்டமிழ் நாட்டுத் தகைசால் கவிஞருள்
கண்டநற் கவிஞரே றெனப்போற்றப் படுபவர்;
சங்கத் தமிழில் தேர்ந்த புலமையர்;
தங்கும் பிரஞ்சும் தகுமுறை அறிந்தவர்;
கண்வழி காணும் இயற்கை வனப்பெலாம்
எண்ணெழி லோவியம் விருத்தமாய் அமையும்;
கோடுறு குறுஞ்சியும், காடுறை முல்லையும்
பீடுறு மருதமும் பெருங்கழி நெய்தலும்,
கோலச் சிட்டும் கொண்டைச் சேவலும்,
சோலைக் குயிலும் காலையும் மாலையும்
வான்கதிர் நிலவு மீனும் பீடுறும் உறுமே!

இயற்கையைப் பாட இவர்கிலை ஈடென
வியந்துரை செய்குவர் ஆய்ந்துணர்ந் தோரே !
இனிக்கும் பாடலாய் இலக்கிய இன்பம்
நனிசுவைக் கூட்டி நயமுறப் படைப்பர்
சிற்றூர் திருந்திட திருந்திடும் நாடென
உற்றதொரு தமிழச்சி ஊரதில் கண்டவர்;
பற்றும் பரிவும் பகுத்தறி பொதுமையும்
மற்றவர் நலம்பெற மாண்கவி புனைந்தவர்;
கோணல் இலாத கொள்கைக் கோமான்;
வாணி தாசனென வாய்த்தநற் பேரினர்;
என்றும் எளியர் எவர்க்கும் இனியர்;
தொன்று மரபினர் தூநெறிப் பண்பினர்;
புதுவகை உவமைகள் புதுக்கிய இவரோ
புதுமைக் கவிஞர் போற்றுதும் போற்றுதும்மே!

புலவர் வ. கலியபெருமாள்
பிரான்சு

# பாட்டுத் தமிழ்

தென்புது வையில் வாழ்ந்து வந்த
தேன்பா வாணன் வாணி தாசன்
தென்ற லாக உலவி வந்தான்
தித்திக்கும் பாக்கள் தந்து சென்றான்
முன்னைப் பழமை வீரம் தந்தான்
முதிர்ந்த தமிழின் மாட்சி கண்டான்
கன்னல் ஆறு பெருக்கெ டுக்கக்
காலம் வெல்லும் பாட்டெ டுத்தான்

பொன்னாய் உள்ளம் பொலிந்து தோன்றப்
புதுமை செய்தான் தமிழ்ப்பா உலகில்
புன்மை நிலையை ஓட்டி வந்தான்
பொதுமை அறத்தைப் பாடி வந்தான்
இன்ப இலக்கியம் ஏற்றி வைத்தான்
இயற்கை எழிலைக் குவித்து வைத்தான்
அன்புச் சிறுவர் பாடி மகிழ
அழகாய் இனிக்கும் பாட்டுத் தந்தான்

தொன்மை நலன்கள் பாட்டில் கனியத்
தொடுவான் அழகைத் தோற்று வித்தான்
வென்றார் தமிழர்; இமய வெற்பில்
வெற்றிக் கொடியைப் பறக்க விட்டார்
நன்றே வாழ்ந்த தமிழி னத்தை
நாளும் பாடி மகிழ்ச்சி கொண்டார்
குன்றம் பிளக்கும் பாட்டுத் தமிழில்
கொடுத்தார் எழுச்சி வாணி தாசன்


## தமிழ்மாமணி இலக்கியன்
புதுச்சேரி




# வாணியின் கவிவளம்

**பாவலர் பொன்வாணி ஜானகிராமன்**
**காவேரி நகர், வில்லியனூர்,**

**சூழ்ந்த மொழியுள் தமிழே தாயாம்**
**மண் தோன்றிய நாள்முதல் தோன்றியதாம் தமிழ்** -
வாணிதாசன்

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட்ட கவிஞர்களில் புதுவை மண்ணுக்கு பெரும் புகழ்ச் சேர்த்த கவிஞர்களில் கருத்துமிகு கவிகள் தந்து உச்சி முகர்ந்து கொண்டாடக் கூடிய கவிஞர்களில் கவிஞரேறு வாணிதாசனார் பெரிதும் போற்றத்தக்க மாபெரும் கவிஞர் ஆவார்.

வண்டமிழ் வளம், செந்தமிழின் செழுமை கன்னித்தமிழின் இளமை முதலியவற்றை தம் கவிதைகளில் எடுத்துக்காட்டி தம் எண்ணங்களால் வண்ணங் குழைத்த வாணிதாசனார் திருக்காமு - துளசியம்மாளுக்கு நன் மகனாக வில்லியனூரில் பிறந்தவர். பெற்றோர் இவருக்கு இட்டப்பெயர் எத்திராஜலு கவிஞர் தனது 7வது அகவையில் தாயை இழந்து பாட்டி அம்மாயி அம்மாவால் அன்புடன் வளர்க்கப்பட்டவர் வாணிதாசனார். தமது தொடக்க கல்வியை வில்லியனூர் பாகூர் மற்றும் புதுவையிலும் பயின்றார். முதுபெரும் தமிழறிஞர்களான எல்லப்ப வாத்தியார், முத்துக்குமாரசுவாமி, புரட்சிக்கவிஞர் போன்றோரை ஆசிரியராகப் பெற்றது கவிஞரின் பெரும் பேறு. தமது ஆசான் பாரதிதாசனால் ஊட்டப்பெற்ற தமிழுணர்வு அவருக்கு கவிதை இயற்றும் ஆற்றலைத் தந்தது.



முதன் முதலில் தமிழன் இதழில் 'ரமி' என்ற புனைப் பெயரில் பாடல்கள் எழுதினார். "பாரதி நாள் இன்றடா பாட்டிசைத்து ஆடடா" என்பதே இவர் இயற்றிய முதல் பாடல். இப்பாடல் அறிஞர் பெருமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. முத்தாரம், முரசொலி, திராவிட நாடு, பொன்னி, காதல் போன்ற நாளிதழ்களில்

தொடர்ந்து கவிதைகள் எழுதலானார். 'திராவிட நாடு' என்ற இதழில் 'விதவைக் கொரு செய்தி' என்ற கவிதை இவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது. தமிழன் இதழின் ஆசிரியர் சண்முககசுந்தரம் இவருக்கு 'வாணிதாசன்' என்ற பெயரிட்டு எழுதச் சொன்னார். இப்பெயரே தமிழுலகம் போற்றும் கவிஞரேறு வாணிதாசனார் என்ற பேற்றினைப் பெற்று தந்தது.

வாழ்க்கை என்பது மலர்ந்து விரிந்துக்கொண்டே செல்வது. அன்பு, நிறைவான நெஞ்சம், பண்பு, ஒழுக்கநெறி மாறா வாழ்க்கை முதலியவற்றைக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவே. கவிஞர்கள் இலக்கியங்களை இயற்றினார்கள். அந்த வகையில் உலகம் போற்றும் மாமனிதர் வாணிதாசனாரின் கவிதைகள் அன்பு, காதல், பெண்ணுரிமை, பொதுவுடைமை, சமூக உணர்வு, தமிழுணர்வு, இயற்கை, இன உணர்வு அனைத்து பரிணாமமும் கொண்ட பன்முக கவிஞராக அவரை உலகிற்கு அடையாளம் காட்டியது என்பதே மாபெரும் உண்மை.

இத்தகைய அரிய கவிஞரின் பன்முக கவி வளத்தினை பகிர்ந்து கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். வாணியின் கவிவளம் மலர்கிறது.

**தமிழுணர்வு**

கவிஞரின் கவிதைகளில் தமிழ் உணர்வு எங்கும் நிரம்பி வழிகின்றது. தமிழ் வேறு வாணிதாசன் வேறு என்று கூறிவிட முடியாத அளவிற்கு தமிழும் வாணியும் ஒன்றி பிணைந்தவர்கள். தமிழை தன் உயிர் மூச்சாக நேசித்தும் சுவாசித்தும் வாழ்ந்திருக்கிறார் கவிஞர்

.

***தமிழும்மை ஈன்றாள்! அவள்***
***அமிழ்தினைப் போன்றாள்!***
***தமிழ் காப்போர் வாழ்வார்! தனித்***
***தமிழ்ச் சாய்ப்போர் வீழ்வார்***
***தமிழின்பம் சேர்க்கும் தூயத்***
***தமிழ் துன்பம் போக்கும்***



தமிழை உயிராய் மதிக்க வேண்டும். தூய தமிழ் அமிழ்தைப்

போன்றது அதனை உயிராய் மதிக்க வேண்டும் என்று முழக்கமிடுகிறார் கவிஞர்.

***கன்னித்தமிழே! உன்னைப் போல்***
***கண், செவி, மூக்கு, மெய்வாய்க்கென்றும்***
***மன்னிய இன்பம் வழங்கியதில்லை***

*என்று கூறி ஐம்புலன்களுக்கு ஒருசேர இன்பம் அளிப்பது தமிழே என்கிறார்.*

*அன்னையை மறந்தாலும், அப்பனை மறந்தாலும், அன்பு மனைவி மக்கள் அணைப்பை மறந்தாலும் செந்தமிழே! உன்னை நான் மறவேனோ? என்கிறார்.*

*இத்தகைய தமிழுணர்வு கொண்ட கவிஞர் தன்தாயைப் பற்றிக் கூறும்போது தன் பாட்டின் ஆதியாகி விளங்கியவர் தன் தாய் என்கிறார்.*

***என் அன்னை சிற்றூராள் எழுதாத பாடல் !***
***இல்லறத்தின் வழிகாட்டி புகழ்ச்சியில்லை உண்மை!***
***மின்னலிடை தேயாத வெண்மதியம்! நீங்கள்***
***விரும்புகின்ற என் பாட்டின் ஆதியவள்?***

*தன்தாயை தன் பாட்டின் ஆதியாக கூறும் கவிஞரின் உணர்வு நம்மை பெரும் வியப்பில் ஆழ்த்துகிறது. கவிஞரின் தாயுணர்வும் தமிழுணர்வும் என்றென்றும் உலகம் வியந்து போற்றும் என்பதில் ஐயமில்லை.*

**பெண்ணியம் போற்றும் கவிஞர்**

*கவிஞரேறு வாணிதாசன் ஒரு பெண்ணியம் போற்றும் கவிஞர். இவரது படைப்புகளில் பெண்களுக்கான உரிமைகள் பெண்கள் சமுதாயத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற துடிப்பு, புரட்சி, குடும்ப வாழ்கையிலும், சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளாதாரச் சூழலிலும் ஆணுக்கு பெண் நிகரானவள் என்பதனை தமது கவிதைகளில் முன்னெடுப்பாக்கி தமிழச்சி, கொடிமுல்லை போன்ற காவியங்களைப் படைத்திருக்கின்றார்.*

ஓட்டைப் போல பெண்ணை
ஒதுக்கினார் அன்னார் நாண
நாட்டினில் படிப்பில் போரில்
நல்லறப் பண்பில் வன்மை
காட்டிட வேண்டும்

என்றும் பெண்களுக்கு வலிமை வேண்டும் என்றும் பாடுகிறார்.

இவர் இயற்றிய தமிழச்சி காவியத்தில் பாட்டியிடம் பெயர்த்தி கற்பு நிலைப் பற்றி பேசுவதை புரட்சியாக்குகிறார் கவிஞர்.

இவ்வாறு தொட்ட இடங்களில் எல்லாம் பெண்ணியம் பேசி மகிழ்கின்றன கவிஞரின் கவிதைகள். இவற்றைப் படிக்கும் பொழுது பெண் சமுதாயம் விழிப்பெய்தும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.



**"மூட வெள்ளத்தை மீன்போல் பெண்கள்**
**எதிர்த்திடில் அடிமையெல்லாம்**
**தள்ளூண்டு போகும்"**

என்ற பாடல் ஒன்றே சான்றாகும்.

**கவிஞரின் கொடிமுல்லை**

கவிஞர் வாணிதாசனுக்கு பெண்ணை பெருமைப்படுத்துவதும் தமிழ் மண்ணை செழிப்படையச் செய்வதும் உயிர் மூச்சாகவே இருந்திருக்கின்றது. இவரது கொடிமுல்லை காவியம் இயற்கை, காதல், கற்பு, தமிழ்ப்பற்று, தேசப்பற்று, மானுடம் போற்றும் பொதுவுடைமை, நட்பு, வரலாற்று மனம் மாறா கலைகள் என அனைத்தும் ஒன்று சேர்ந்து ஐம்புலன்களுக்கும் இன்பம் சேர்க்கும் இன்பக்காவியம்.

அழகனும் கொடி முல்லையும் முதல் சந்திப்பிலேயே காதல் கொண்டனர் என்பதனை

***"கருவிழிகள் ஒன்றை யொன்று தாவி***
***கவ்வுகின்ற வேளையில்"***

*என்ற பாடும் கவிஞனின் பாங்கு மெய்சிலிர்க்கிறது.*

***கட்டுக்கும் முட்டுக்கும் அஞ்சி வாழ்ந்தால்***
***காதலெங்கும் தழைத்திருக்கும்! சொல்வீர்***

*என்ற வரிகள் காதலின் உச்சத்தைக் காட்டுகின்றது. பார்போற்றும் ஓர் உன்னத காவியமாக கொடிமுல்லையை இயற்றியிருக்கிறார் கவிஞர்.*

**பொதுவுடைமை**

*காலங்காலமாக தமிழ்ச் சமுதாயம், ஏற்றத் தாழ்வற்ற ஒரு பொதுவுடைமை சமுதாயமாக விளங்க வேண்டுமென்பதே கவிஞர்களின் ஒருமித்த உணர்வாக இருந்திருக்கிறது. "புதியதோர் உலகம் செய்வோம்" என்று பாரதிதாசனின் எண்ண எழுச்சிக்கேற்ப வாணிதாசன் பொதுவுடைமை சமுதாயத்திற்கு வித்திடுகிறார் தம் பாடல்களில்.*

***கூப்பிடடி வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி***
***கார் தந்த செல்வம் விளை நிலங்கள்***
***சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன் விளைவாம்***
***பங்காக்கி உண்போம் பசியேது பின்நாட்டில்***
***படித்திடில் சாதிப் பேச்சும் பறந்திடும் அறிவும் உண்டாம்***
***படித்திடில் அடிமை ஆண்டான்***
***எனும் பேச்சும் பறக்கும் அன்றோ***

***கொடுமையடா மண்ணில் சிலருண்டு வாழ்வில்***
***கூழுக்கும் வழியற்று பாட்டாளி தாழல்***
***உடைமை பொதுவாக்கி வாழ்வோம் இந்நாட்டில்.***
*என்ற பொதுவுடைமைக் கருத்துக்கள் சமுதாயம் புத்துணர்வு பெறவும் எழுச்சிப் பெறவும் பாடப் பெற்ற வலிமை மிக்க பாடல்கள்.*

**வாணிதாசன் பாடல்களில் இயற்கை**

தமிழக கவிதை உலகில் இயற்கையை பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். கவிஞர் வாணிதாசன் இயற்கையை ரசித்து, நேசித்து, சுவாசித்து உயிர் மூச்சாக ஒன்றி இயற்கையோடு இணைந்தே பாடல்களைப் புனைந்திருப்பதால் இவர் இயற்கைக் கவிஞர் என்றே தமிழுலகம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இயற்கையைப் பாடுவதில் தமிழுலகில் இவருக்கு நிகர் எவருமில்லை. தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த் 'தென்னாட்டின் தாகூர்' என்றும் போற்றப்பட்டவர்.

கதிரவனின் வருகையை கவிஞர் படம்பிடித்து காட்டும் திறம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

**தொடுவான் மதிலுக்கப் பால்**
**தோன்றிடும் அழகைக் காண**
**நடுவினில் துளைத்த சந்தோ**

என வினா எழுப்பி சிந்தனையைத் தூண்டி வியப்பில் ஆழ்த்துகிறார் கவிஞர்.

**"யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம்"**

என்ற மனப்பான்மையில் தான் கண்டு ரசித்த இயற்கையினை அப்படியே தம் கவிதைகளில் படம்பிடித்துக் காட்டுகிறார் கவிஞர்.

**"வீட்டோரத் தோட்டத்தில் வெளியிலே**
**தொங்கும் சுரைக்காய்கள் மீட்டாது**
**மாட்டி வைத்த மெல் யாழாம்"**

**"காட்டுப் பூனைப் பல்லாம்**
**கார் முல்லை நீளரும்பு"**

**"இலவங்காய் வால் முளைத்துப்**
**பறப்பதைப்போல் கிள்ளை நெட்டாக**
**கல்வீட்டு புறச் சுவரைத் தாவும்"**



என்று புதுமையான உவமை உருவகம் அமைத்து கற்பனை வளம் அமைய பாடுவதில் கவிஞருக்கு நிகர் கவிஞரே.

கதிரவன் தோன்றும் காட்சியினைக் கவிஞர்

**"கடற்பரப்பில் உப்பங்கழி பரப்பில் தாழை**
**மடற்பரப்பில் நெய்தல் மணற்பரப்பில் சாய்ந்தே**
**முடப்புன்னைப் பைங்கிளையில் முண்டகப் பூங்காட்டில்**
**அடங்கியிருந்த இருள்கிழியக் கீழ்**
**கடல்மேல் தங்கப்பரிதி தலைநிமிர்ந்தான்"**

எத்தகைய வருணனை அப்பப்பா! கவிஞரின் இயற்கை இன்பம் கவிதைகளில் மலர்ந்து மணம் வீசுகின்றது.

**குழந்தை இலக்கியம்**

குழந்தைகளுக்கு எளிதில் புரியும் வண்ணம் பாடல்களின் மூலம் கருத்துக்களை புரிய வைக்கும் முனைப்பே குழந்தை இலக்கியம் கதையும் பாட்டும் குழந்தைகளுக்கு பேரின்பம் ஊட்டுவன கதைக்கேட்டு வரலாறு படைத்த சான்றோர் பலராவார் குழந்தைகளுக்கு இனிய எளிய முறையில் நல்லறிவைச் சேர்க்கும் முயற்சியே இக்குழந்தை இலக்கியத்தின் குறிக்கோள் என்று குழந்தை இலக்கிய நூலின் உரையில் வாணிதாசனே குறிப்பிடுகிறார்.

**"செந்தமிழோ! தீப்கருப்பங்சாறு! - பள்ளி**
**சென்று கற்கப் பொன்னிவள ஆறு!**
**சொந்தமொழி தமிழ் மொழிப் போல உனக்கு**
**எந்தமொழி இனிமைத்தரும் கூறு?"**

கரும்புசாறு போல் இனிக்கும் தமிழை பள்ளிக்கு சென்று கற்க வேண்டும் என்கிறார்.

**"உலகில் கல்லார் உன்னிடத்தில்**
**ஔவைக் கிழவி உண்டென்பார்**
**நிலவே! அந்த கிழவிக்கு**
**நீரும் சோறும் கொடுப்பது யார்"**

என்று நிலவைப்பற்றி பாடும்போதும் அறிவியலை இணைத்து பாடும் கவிஞர் எழுச்சிப் பாடல்களில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

**"மழையே! மழையே! வா! வா!**
**வாழ்வின் உயிரே! வா! வா!**
**உழவர் உன்னை எதிர்ப்பார்த்தே**
**ஒவ்வொரு நாளும் பேசுகின்றார்"**

என்று உழவரின் எதிர்பார்ப்பை பிஞ்சு உள்ளங்களில் விதைக்கும் பாவலனின் பாங்கு கனிபிழிந்த சாறு.

வாணிதாசன் அவர்கள் ஔவையின் அடியொற்றி ஆத்திசூடி கொன்றை வேய்ந்தோனையும் இயற்றியுள்ளார். இது சிரித்த நுணா என்ற நூலில் இடம் பெறுகிறது. எதிர்கால தலைமுறையினர் ஏற்றம் பெற அரிய பல கருத்துக்களை இரண்டு மூன்று சொற்களில் அமைந்திருக்கும் போக்கு கவிஞரின் நுண்மான் நுழைபுலத்திற்கு சான்றாகும்.

ஆத்திசூடி 95 வரிகளும் கொன்றை வேய்ந்தோன் 91 வரிகளையும் கொண்டு சிறக்கின்றது. ஔவைக்குப்பின் கொன்றை வேய்ந்தோன் இயற்றிய பெருமை கவிஞரேறு வாணிதாசனாரையேச் சாரும்.

சான்றாக சிலவரிகள்

**ஆத்திச்சூடி**
**அறிவைப் பெருக்கு**
**கெஞ்சி வாழேல்**
**தாய்மொழி வளர்த்திடு**
**மூடப்பழக்கம் தள்**
**கொன்றை வேய்ந்தோன்**
**அடிமை வாழ்விற் இடங்கொடுக்காதே**
**இழிந்தவர் உயர்ந்தவர் பிறப்பில் இல்லை**
**சாவாப் புகழை மேவுதல் அழகு**
**ஓதுவது எல்லாம் தாய்மொழி யாக்கு.**



போன்ற இத்தகைய பெருமைக்குரிய கவிஞர் வாணிதாசனாரின்

படைப்புகள் இமயம்போல் வானளாவி உயர்ந்து நின்று படிப்போரை திகைக்க வைக்கின்றன என்பதே உண்மை.

தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், இனிக்கும் பாட்டு, தீர்த்தயாத்திரை, இன்ப இலக்கியம், பெரிய இடத்து செய்தி, சிரித்த நுணா, இரவு வரவில்லை, பொங்கற் பரிசு, பிரஞ்சு கையரசு முதலி போன்ற இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை கவிஞர் வாணிதாசன் இயற்றி தமிழுலகிற்கு பெருமைச் சேர்த்துள்ளார்.

கவிஞரின் கவிதைகள் பிரஞ்சு போன்ற பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழக அரசு இவரது படைப்புகளை அரசுடைமையாக்கி யுள்ளது. கவிஞர் வாழ்ந்த சேலியமேட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு வாணிதாசனார் பெயரினைச்சூட்டியுள்ளனர். பிரஞ்சு அரசு இவரின் இலக்கியப் பணியினைப் பாராட்டி 'செவாலியர்' விருதளித்து பெருமைப்படுத்தியுள்ளது. இது கவிஞரின் படைப்பாளுமைக்கு கிடைத்த தனிச்சிறப்பு புதுவை அரசு இவரது நினைவு நாளில் விழா எடுத்து சிறப்பு செய்து வருகிறது. புதுவை பூங்காவில் இவர் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு புதுவைக்கு அணிச் சேர்க்கின்றது.

**வாணிதாசரும் - பாவேந்தரும்**

கவிஞர் வாணிதாசன் தனது ஆசான் பாவேந்தரைப் பற்றி கூறி பெருமைக் கொள்கிறார்.

***"பாப்புனையும் நற்றொழிலை அவரிடத்தில் கற்றேன்
படித்துணரும் நற்செயலை அவரிடத்தில் கண்டேன்
யாப்பணியைத் தொன்னூலை அவர் விளக்கக் கேட்டேன்
யார் இனிமேல் அவர்போல எனை யூக்க வல்லார்"***

***எனதாசன் நீண்ட குமரிமுனைத் தமிழ்க்கடலே
கடலோரம் நானே"***

என்று தொட்ட இடங்களிலெல்லாம் தனது ஆசானைக் கொண்டாடி மகிழ்கிறார். கவிஞர் பாவேந்தரும் வாணிதாசனாரை பெரிதும் வியந்து போற்றுகிறார்.

***"எல்லாரும் நல்லார் என்ற எண்ணுவார்
இன்றமிழ்வல்ல கவிவாணி தாசனார்
தமிழர் பண்பாடு பற்றி புகலும் பாட்டு
ஒவ்வொன்றும் பொன்"***

*வாணியின் பேற்றிற்கு வேறென்ன சான்று வேண்டும்.*

***வாணிதாசனாரின் கனவு***

*வாணிதாசன் தமிழகம் எப்படி இருக்க வேண்டும் எனக் கனவு காண்கிறார். அது பாடலாக உருவெடுக்கிறது*

***தமிழ் முரசம் கேட்குது அதோ கேள் பெண்ணே!
சாதி மதம் கட்சி எல்லாம் ஒன்றாம் அங்கே!
தமிழ்நாட்டை தமிழ் தலைவர் ஆள்வதைக் கண்டு
தோளெல்லாம் பூரிக்கும் கூட்டம் பார்.***

*சாதி மதமற்ற ஆட்சியும் தமிழ்நாட்டை தமிழ் தலைவர்கள் ஆளவேண்டும் என்பதனை தன் கனவாகக் கூறி சென்றுள்ளார் ஏற்றம் மிகு எண்ணம் கொண்ட எழில் வேந்தர் வாணிதாசர்.*

*உருசியாவில் இந்தியாவில் இளங்கவிஞர்கள் என்ற நூலை வெளியிட்டார்கள். உருசியாவில் இந்திய இளங்கவிஞர் தமிழ் என்ற தலைப்பில் "அழியா நூல்" என்ற வாணிதாசன் பாடலும் இடம் பெற்றிருந்தது. இந்நூலின் நூலாசிரியர் தனது நூற் குறிப்பில் வாணிதாசனாரின் "அழியா நூல்" பாடலுக்கு இணையாக வேறு எந்த ஒரு பாடலையும் கூற முடியாது. என்று குறிப்பிட்டு பாராட்டியிருந்தார். இப்பாராட்டு கவிஞருக்கு பல்வேறு பாராட்டுகளையும், பரிசுகளையும் பெற்றுத் தந்தது. கவிஞரின் படைப்புகளை வாசிக்கும் பொழுது அவர் உடன் பயணிக்கின்ற உணர்வை கவிதைகள் நமக்களிக்கின்றன. அதுவே வாணிதாசனின் படைப்பு ஆளுமையின் தனிச்சிறப்பு.*

*இவ்வளவு படைப்புகளை படைத்த மாபெரும் கவிஞர் தன் கவிதைகள் மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தினால் போதும் என்பதனை*

***ஊருக்கே உழைப்பதுவும்***
***மக்கள் உயர்வுக்கே உழைப்பதுவும் நற்கவிஞர் வாழ்க்கை***
***தேருக்கே அச்சாணி! திசை திருப்ப முட்டு***
***தெருவெல்லாம் கொடுப்பதற்கு திரண்ட தோள் வேண்டும்***
***காருக்கே யார் சொன்னார் கடல் நீரை மொண்டு***
***கழனியெல்லாம் வளமாக்க? நாம் வாழும் நாட்டில்***
***நேருக்கு நேர் நடக்கும் அறிவற்ற செய்கை***

*நெறிப்படுத்த என்பாடல் வழிவகுத்தால் போதும்*


*அப்பப்பா! வாணிதாசனின் தேசப்பற்றும், இனப்பற்றும், மொழிப் பற்றும் படைப்புகளின் தனிச்சிறப்பாக மிளிர்கின்றன.*

*தன் கவிதைகளை மக்கள் வாசிக்கும் போதுதான் அவை உயிர்பெற்று உலகாளும் என்பதனை மிகத் தெளிவாக அருதியிட்டு கூறும் கவிஞர் வேறு எவரும் இலர் என்றே எண்ணத் தோன்றுகிறது.*

***"என் கவிதைகள் வெறும் காகித பூக்கள்***
***உன் உதடுகள் உச்சரிக்கும்போது***
***அவை வாசம் மட்டும் பெறுவதில்லை***
***சுவாசமும் பெறுகின்றன"***

*கவிஞன் என்பவன் எப்படி காலக் கண்ணாடியாகிறான் என்பது இதிலிருந்தே அறியலாம் தம் பாடல் எதற்கு வழிவகுக்க வேண்டும் மக்கள் என்ன செய்தால் தம் படைப்புகள் இடம்பெறும் என்று கணித்து தம் படைப்புகள் வாசிக்கப்பட வேண்டும். பாடல்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி பன்முகக் கவிஞனாக, மாபெரும் இமயமாக, மலைக்க வைக்கும் மானுடம் போற்றும் மாக்கவிஞனாக உயர்ந்து நிற்கும் மாமனிதர் வாணிதாசனாரின் புகழ் பரப்புவோம்! தமிழ் வளர்ப்போம்!*

*மானுடம் செழிக்க அவர் படைப்புகளை படிப்போம்!*
*அறிவில் சிறப்போம்!*
*வாழ்க தமிழ்! வளர்க வாணிதாசனார் புகழ்!*



# வாணி புகழ் ஓங்குக

கலிவெண்பா

வயலெல்லாம் செந்நெல் வளமாகப் பொங்கி
கயலெல்லாம் துள்ளும் கவின்சேர் சிவலிங்க
ஊரின் திருமகனாய் ஓங்கி வளர்ந்திட
பாரிலே உம்புகழ் பாவலர்மணி என்றிட
பைந்தமிழ் பாவலன் பாவேந்தன் வாழ்த்திட
செந்தமிழ் நாயகன் செம்மொழி பாடியே
என்றும் அழியா எழிலாம் இயற்கையை
தென்றல் சிறுகாற்றை தீந்தமிழ் பாடலால்
கார்சேர் மலர்க்குளங்கள் காவின் அழகையே
ஏர்பூட்டி செல்வ எழில்கவி  தந்தாய்
தமிழச்சி தந்த தலைமகன் வாணி
அமிழ்த மொழியிலே அற்புதப் பாட்டால்
தமிழின் உணர்வை தமிழன் சுவைக்க
இமியும் வழுவா எழில்சேர் தமிழால்
தொகுத்திட்ட பாடலுமே துள்ளிடும் நெஞ்சால்
வகுத்திட்ட வாழ்க்கையும் வாகு

**பாவலர் பொன்மலர்** பெ ஆசிரியை
(கவிஞரே வாணிதாசனரின் பெயர்த்தி)
திருமகள் நகர், வேல்ராம்பட்,  புதுவை





# வாணியின் கவி இன்பம்

*சேலிய மேடு வாணியின் ஊரே!*
*ஊரின் செழுமையை செப்பிடுவாரே!*
*செந்தமிழ் கொண்டு பாப்படைத்தாரே!*
*முத்தமிழை முத்தாய் காத்திடுவாரே!*
*பாவேந்தர் மாணாக்கர் என்ற பெருமை கொண்டாரே!*
*புவி மாந்தர்க்கு ஒழுக்கத்தை ஓதி வைத்தாரே!*
*வண்டமிழ் தொண்டினை ஊக்குவித்தாரே !*
*பகுத்தறிவைத் தூண்டும் கவிதை தந்தாரே!*
*சான்றாண்மை மிக்க கவிஞன் ஆனாரே!*
*இனப்பகையை ஒழித்திட்ட இன்பக்கவியாலே!*
*இயற்கை பொதுவுடமை பெண்ணியம் பேசினாரே!*
*கொள்கை பல நல்கிக் கொடுத்த ஆன்ற கவியாலே!*
*கனி உள்ளம் கொண்டு பொதுவுடமை செய்தாரே!*
*கடமையாற்றி நற்காதல் வீரம் பாடினாரே!*
*ஏற்றமிகு பாவலராய் விளங்கி நின்றாரே!*
*பன்னூறு பாக்கள் தீட்டித் தந்தாரே!*
*செந்தமிழுக்கு புகழ் மாலை சூட்டினாரே!*
*வாணியின் சுவாசமும் பகுத்தறிவாலே!*
*சான்றோர் இதயத்தில் இடம் பிடித்தாரே!*
*நீங்கா சமுதாய நற்கருத்தைத் தந்தாரே!*
*வாணியின் நூல்களை நாம் அறிவோமே!*
*அறிந்து பல்லோருக்கு உணர்த்திடுவோமே!*
*உழவின் நின்ற வாசம் பாரினில் படரட்டுமே!*
*தமிழ் வானில் பறந்து புகழ் பரவட்டுமே!*
*நன்று சொல்லி அவர் புகழை மகிழ்ந்தேனே!*
*சுவைத்தமிழால் அவரை வாழ்த்தி இசைத்தேனே!*



பாவலர் பொற்செல்வி திருக்குமரன்
துணைச் செயலாளர்
கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கியப் பேரவை
புதுச்சேரி



# கவிஞரேறு வாணிதாசன்

**பாவலர் சுந்தர பழனியப்பன்**
தலைவர் அனைத்துலகப் பொங்குதமிழ்ச் சங்கம்

***மலைபடு வளனும் வயல்படு வளனும்***
***வற்றாப் பெரும்புகழ் உற்றதமிழ் நாடே!***
***அலைபடு பெருங்கடல் அக்கரை நாடும்***
***அருங்கலை வாரி வழங்கிய வள்ளல் நீ!***
***தமிழ்நாடு வாழ்கவே! - வாணிதாசன்***

கவித்துவம் இளையோடி கவிபெருக்கால் மக்கள் இதயம் கவர்ந்த கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் கவிஞரேறு வாணிதாசன். தாம் பாடாத பொருளில்லை எனும் அளவிற்கு கவி சிந்தியிருக்கிறார். தொடுக்கும் பாடல்களெல்லாம் அணி மழைப் பொழிந்திருக்கிறார். தாய் மொழியினை வாழ்த்தும் நிலையில் செம்மாந்து நிற்கும் புலவராக இயற்கை இன்பத்தில் நனைந்தவராக சீர்த்திருத்த கருத்துகளைச் செதுக்குபவராக கதைப் பாடல், உலகப் பாடல்களிலெல்லாம் உயிர்ப்புள்ள ஒரு கவிஞராக எழுகிறார்.; இவர்தம் கவிதை நூல்கள் ஈண்டு ஆராயப்பட்டுள்ளன.



இன்பச் சொத்து என்னும் தலைப்பில் ‘மலர்க்காடு பசியடங்கும் நல்லுணவு, பூத்த மலர்பாடும் தேன்வண்டு செவிக்குணவு, பாய்ந்தே இலைதழுவி வருதென்றல் இருவிழிக்குத் தேனாம்” என தனிமை இன்பச் சொத்தினை காட்சியாக தத்ரூபமாக தம் கவிதையில் வடித்திருக்கிறார். செல்வங்கள் மட்டுமே சொத்து என்னும் பெட்டகத்துள் அடக்கிடும்

*சமூகத்தில் இயற்கை என்னும் இன்பத்தினை சொத்தாக காணும் கவிபோக்கு வாணிதாசனாரின் தனி சொத்து. கனிரசம் சிந்தும் இவரின் கவிவரிகளுக்கு மணிமகுடமாக தமிழ் மொழியைப் பற்றி 'தமிழ் வெல்க' என்னும் தலைப்பில் பின்வருமாறு சொல்கிறார்.*

***'ஊனில் உயிரில் இன்பமூட்டி வளர்ப்பதாம்!***
***ஒண்பொருள் கல்விகேள்வி ஒழுக்கத்தைச் சேர்ப்பதாம்!***
***வானில் உயர்ந்ததாம் ! கடலினும் ஆழ்ந்ததாம்!***
***மக்கள் மனைவிநலம் மிக்கதாம் மிக்கதாம்!***

*என்று ஊனாகி, உயிராகி, உணர்வாகி, வழி(ளி)யாகி,உயர்வாகி நின்று நிலைக்கும் தமிழ் இன்பத்தினை பறைசாற்றுகின்றார் கவிஞர். உலகப்பாடம் என்னும் தலைப்பில் மலைக்குகை சாமி வாழ்ந்த மலையினைக் குறிப்பிடும் போது,*

***வானை முட்டும் மாமலை உச்சி***
***தேனடை தொங்கும்! தேனடை உடைத்த***
***கோலின் வழியே குளிர்தேன் பாயும்!***
***குரங்கு குட்டிகள் குந்தி குடிக்கும்***
***வண்டுகள் பாடும் ! மான்வெருண்டோடும்***
***அருவி முழக்கம் அடர்ந்த சாரல்***
***பூத்துக் குலுங்கிப் புதுமணம் பரப்பும்!***

*என்று தேன் உண்ணும் குரங்குகளின் செயலும் வண்டுகளின் பாடலும் மருண்டோடும் மான்களுமாக மலை உச்சியினை வருணித்திருப்பார்.*

*மற்றொரு கவிதையில் மரங்கள் அடர்ந்த மரக்கிளை தாழ்ந்த குளத்தில் தாமரை குறுநகை புரியும்! கன்றை ஈன்ற கருமை நாகு குளத்தில் மூழ்கி கொம்பை உயர்த்தும்! என வருணித்து அங்கே விளையாடும் சிறுவர்களைக் காட்சிப்படுத்துகிறார்'.*

***"மாநகர் சிறுவர் மரக்கிளை ஏறித்***
***திடுமெனப் பாய்ந்து சிறுகுளம் அதிரக்***
***குளித்து மணலைக் கொண்டு மகிழ்ந்தனர்!'***

*என வருணனை விளையாட்டில் முக்குளிப்பார். பேரூர் நாட்டினைக்*

*காட்டும் போது,*

***மலைகள் முப்புறம்! மறிகடல் ஓர்பால்!***
***குலைமுதிர் வாழை கொடிபடர் தென்னை***
***செந்நெல் கரும்பு செழுங்கழை சோளம்"***

*நல் வளம் நிறைந்த நாட்டினை கவிதையால் செழுமைப் படுத்துகிறார்.:'எனக்கு இயற்கையின் மீது ஈடுபாடு மிகுதி ,இயற்கை கவிதை அதிகம் எழுத ஆசைப்படுகிறேன். எழுதுகிறேன். என் பாடல் வாயிலாக என் வாசகர்களை அடிக்கடி சிந்திக்கத் தூண்டுகிறேன்" என்ற வாணிதாசனாரின் கூற்று அவர் கவிதையில் நிறைந்து மானசீக கவிஞனை தரிசித்த உணர்வு கிடைக்கிறது. இவர் கவிதைகளில் நகைச்சுவையும் நையாண்டியும் கலந்திருக்கும்.*

***அடிமலைச் சாமி மாநகர் தினமும் வந்து***
***'அறம்பல செய்மின்;;: ஆண்டவன் நினையுமின்!***
***இறந்தால் கிடைப்பதோ இருபே ருலகம்***
***ஒன்று மோட்சம் உயர்ந்தவர்க் கதுவே!***
***நரகம் பிறிது நமக்கைவை வேண்டாம்***

*என்று மக்களை நல்லது செய்ய சிற்றுரை நிகழ்த்துவார்.;*
*திருடன் மலைப்புலி மாண்டான். அவன் நரகம் அடைந்தான் அங்கே அடிமலைச் சாமி அழுவதைக் கண்டு, ஒழுக்கசீலரே! உமக்கா நரகம் என்று மலைத்தான். அடிமலைச் சாமி அவன் வாய் பொத்தி,*

***மலைக்குகைச் சாமியும் வந்துள்ளார் நரகம்!***
***வாய் திறவாதே மறைவோம் என்றார்***
***தலையைத் தாழ்த்தி மலைப்புலி***
***உலகப் பாடம் உய்த்துணர்ந்தானே!***

*என்று நகைத்து போலி சாமியார்களைத் தோலுரித்துக் காட்டுகிறார் கவிஞர். அடலேறு, அடுபசி, கிள்ளை, கடல்மல்லை, கோவலர், குறிஞ்சி, நொதுமல் போன்ற சொற்களை கவிதையில் ஆங்காங்கே எடுத்தாளும் கவிஞர் சங்கத்து இலக்கியம் தந்த தனித்தமிழ்ச் சொற்களை விரும்பி மீட்டுருவாக்கம் செய்திருப்பதில் உயர்ந்து நிற்கிறார்.*

***தமிழா அஞ்சாதே! என்னும் தலைப்பில்***
***நெஞ்சினில் வீரம் கையினில் வில்மீன்***
***நீள்புலிக் கொடி யுயர்த்தி***
*அஞ்சலி செய்வாய் தமிழா! தமிழர்*
*ஆவியின் சின்ன மதே!*

*என்று சங்கத்து அரிசுவட்டில் தமிழரின் அச்சம் போ□க்கும் கவிஞராக திகழ்கிறார்.*

***எழுத்தசைசீர் அணியாப்பு நனிகற்ற பின்னர்***
***இனகவிதை பாடுவதே மேலோர்கள் செய்கை***
***பழுத்திருக்கும் நற்புலமை பண்பட்ட இந்தப்***
***பார்புகழும் புதுவைக்குத் தனிச்சொத்தாம் கண்டீர்!***

*(என் நன்றி) என்று கவி புனைய அறைகூவல் விடுத்திருக்கிறார். நூற்றாண்டுகளாககொண்டாடிக்கொண்டிருக்கும்மகாகவிஞர்களின் வரிசைப்பட்டியலில் தம் கவியால் சிறப்பு இடம் பெற்றிருக்கும் கவிஞரேறு வாணிதாசன் அவர்கள் பாராட்டுதற்குரியவர். ஆசிரியர் பெயர் பாரதிதாசன். மாணவர் பெயர் வாணிதாசன். பாரதியும் வாணியும் கலைமகளைக் குறிக்கும் செற்கள்தாமே என்று பெயரைத் தேர்ந்தெடுத்து ரமி என்னும் புனைப் பெயரைப் பெற்ற இவரது தனிப் பாடல்கள் வாணிதாசன் கவிதைகள் என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளன. "உனக்கு எளிய முறையில் எழுத வருகிறது. ஆனால் நடை படியவில்லை. என் கவிதைகளைப் படித்து வா" என்று பாவேந்தர் கூறியது எவ்வளவோ பயனுடையதாக இருக்கிறது என்னும் கவிஞனின் எளிமையும், நயமும், இனிமையும் உடைய கவிக்கடலுள் ஒரு தேன் சொட்டு இது.*

***"நோக்கடா கீழ்வான் தங்கக்***
***காட்டாறு நுண்முகில்கள்***
***ஆக்கிய அழகிய அழகைக்***
***காண ஆயிரம் கண்கள் வேண்டும்"***

*என்று அந்திவானம் பாடும் கவிஞர் தமிழ் உள்ளளவும் பாடப்படுவார்.*

# கவிஞரேறு வாணிதாசனாரின் படைப்புவளம்

*நல்லாசிரியர்* **வளர்மதி முருகன்**
*புதுச்சேரி - 605 013*

*தமிழுக்கு அழகூட்டி அணிசேர்த்த விடுதலைக் குயில் பாரதி, புரட்சிக்குயில் பாரதிதாசன், புதுவைக் குயில் வாணிதாசன் இம்மூவரும் புதுவைக்கு புகழ்சேர்த்த புகழ்க் குயில்கள். அவர்களுள் புதுமைக் கவிஞர் வாணிதாசனாரின் படைப்புவளம் குறித்து தங்களோடு பகிர்ந்து கொள்வதில் பேரின்பம் கொள்கிறேன்.*

**'கோடி கொடுப்பினும் கொள்கையில் கோடேல்'**

*என்னும் கொள்கை வழி இறுதிவரை வாழ்ந்த நேர்மையாளர்.*

**'எழுத்தாலே தாய்நாட்டை தான் பிறந்த நாட்டை**
**ஈடேற்ற முனைவதுதான் படித்தவனின் செய்கை'**

*என்னும் பண்பின் அடித்தளத்தை உணர்த்திய உத்தமர்.*

**'புத்துலக எண்ணப் புதுவிதையைத் தூவிவிட்டால்**
**கொத்தாய்த் துளிர்க்கும்; குலைபழுக்கும் நல்வாழ்வு!'**

*என்று புதுமை கருத்துக்களை கொண்ட புதுமைக் கவிஞர்.*

**'எல்லாரும் நல்லார் என்(று) எண்ணுவார்**
**இன்றமிழ் வல்ல கவி வாணிதாசனார் – அல்லும்**
**பகலும் தமிழர்தம் பண்பாடு – பற்றிப்**
**புகலும் பாட்(டு) ஒவ்வொன்றும் பொன்'**

*என்று புகழ்கிறார் பாவேந்தர் தம் மாணவனை. நான்காம் வகுப்பு படிக்கும் போதே வாணிதாசனாருக்கு தமிழ் இனித்ததாம். அதற்கு காரணம் அவர்தம் ஆசான் பாவேந்தர். அவர் ஊட்டிய தமிழ் போதையும், பெரியார் காட்டிய பகுத்தறிவு பாதையுமே தம்மை சிறந்த கவிஞனாக நிலைநிறுத்தியது என்று கவிவாணி பெருமிதம் கொள்வார்.*



*பாரதிதாசன் தனக்கென தனி பரம்பரையை வகுத்தவர். அவர் வழிவந்த கவி வாணி தனதாசானை பலரும் சொந்தம் கொண்டாடினாலும் அவர் தனதாசான் என்பதை*

**எனதாசான் எனதாசான் எனதாசான் என்றே**
**இன்றுலகில் பலபேர்கள் மார்தட்டிச் சொல்வார்**

**எனதாசான் எனதாசான் எனதாசான் என்றே**

**இன்றுலகில் மார்தட்ட இருவர்களே உள்ளோம்!**

**எனதாசான் எனப்புதுவைச் சிவம் சொல்லல் உண்மை**

**எனதாசான் என உலகம் என்றென்றும் சொல்லும்**

*என்று தன் கவிதைகளுக்கெல்லாம் ஆணிவேராக அடித்தளமிட்டவர் புரட்சி கவிஞர் என்பார். தன்னை தமிழ்ப் பணியில் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள அவரே விதை விதைத்தார் என்று கூறுவார். பிரேஞ்சு, தெலுங்கு போன்ற மொழியிலும் புலமை பெற்றவர் நம் கவிஞர்.*

*கத்தும் கடலையும் மலையையும் தொடுவானையும் தன் கவிதையில் எழிலோவியமாய்த் தீட்டியதால் தென்னாட்டுத் தாகூர் என போற்றப்பட்டார்.*

*இயற்கையின் அழகில் தோய்ந்து தொடுவானம், எழிலோவியம், எழில்விருத்தம் போன்ற படைப்புகளை படைத்தளித்தார். விருத்தம் பாடுவதில் வித்தகர் நம் கவிஞர். எழில் விருத்தம் விருத்தபாவியலுக்கான நூல் அதில் ஒவ்வொரு பாடலுக்கான நூற்பாவும் பயின்றுவருவது சிறப்பாக பார்க்கப்படுகின்றது. தொடுவானம் சொற்சுவையும் சந்த நயமும் கொண்ட இசை ஊற்று இந்நூலிலும் பாடலுக்கான பண் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக கவிஞரேறு வாணிதாசனாரை இயற்கை கவிஞர், உவமை கவிஞர் என்று பலரும் போற்றி புகழ்வார்கள். அவர் புரட்சியும், புதுமையும் ஒருங்கிணைந்த புதுமை கவிஞரும் கூட.*

*புரட்சி விதையிட்டு பெண்ணுரிமைக்கு குரல்கொடுத்து ’தமிழச்சி’ என்னும் காவியம் தீட்டியவர். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற காவியமாக ’தமிழச்சியும்’ கொடிமுல்லையும் திகழ்கின்றது. தமிழச்சி முழுமையும் ஆசிரியரின் கற்பனையால் உருவாக்கப்படடத்து. கொடிமுல்லை வரலாற்று பின்னணியில் உருவாக்கப்பட்டது.*

*இவ்விரு காப்பியமும் தலைவிகளை முன்னிருத்தியே படைக்கப்பட்டவை என்பது போற்றுதற்குரியது. புத்தெழுச்சி பெற்று வளர்ந்து வரும் இலக்கியங்களுள் குழந்தை இலக்கியமும் ஒன்று அவ்வகையில் குழந்தைகளுக்கு தமிழ்வுணர்வு ஊட்டவும், சிந்தையை செம்மைப்படுத்தவும் குழந்தை இலக்கியம், இனிக்கும் பாட்டு போன்ற படைப்புகளை கவிவாணி படைத்தளித்துள்ளார். மேலும் தீர்த்தயாத்திரை, பொங்கற்பரிசு, இரவு வரவில்லை, வாணிதாசன் கவிதைகள் தொகுதி 1. 2, 3 என 20க்கும் மேற்பட்ட நூல்களை நமக்கெல்லாம் பரிசளித்துள்ளார்.*

*சமூகத்தில் நிலவும் பெருமைகளையும் சிறுமைகளையும் கண்டு சிறுமைகளுக்கு சீறியும் பெருமைகளுக்கு பெருமைப்பட்டும், கொடுமைகளை எதிர்த்தும், சீர்கேடு களைந்தும், காலம் புதிய கவிஞர்களை ஈன்றெடுத்த வண்ணமே உள்ளது. அத்தகைய புதிய நோக்கு கொண்டவர்களின் எழுத்தே பிரதிபலிக்கும் எழுத்தாகிறது. காலத்தின் குரலும் ஆகிறது.*

*அவ்வாறு சமுதாய இன்னல்களை களைய காலம் ஈன்றெடுத்த கவிஞர்தான் விஞரேறுவும். இவர் கவிதைகளில் இலட்சிய வெறி ததும்பும் இலட்சியங்கள் இல்லாமல் இலக்கியங்கள் பிறப்பதேது? இந்த இலட்சிய கவிஞர் முதல் பாடல் தமிழன் இதழில் வெளிவந்தது.*



**பாரதி நாள் இன்றடா!**
**பாட்டிசைத்து அடடா!**
**கற்றகல்வி காட்ட வென்று**
**கவி புனைந்த தமிழ்மொழி**
**கண்டு கேட்டுப் பொருள் விளங்காக்**
**கசப்புக் கொண்ட நாட்களில்**
**சொற்றொடரில் இனிமை தந்தான்**
**சுப்ரமணய் பாரதி!**

**ஒரு மனிதன் உணவேயின்றி**
**உயிர் துடிக்க கண்டிடில்**
**உருகுலைப்போம் உலகம் தன்னை**
**ஒன்று கூடும் என்றவன்**

*என்று செந்தமிழ் தேனி, சிந்துக்கு தந்தை, முண்டாசு பாட்டனான பாரதியை போற்றிய பாடலிது.*

*கவிஞரேறு புகழுக்கோ பொருளுக்கோ விரும்பிக் .... என்றும் கவி படைத்ததில்லை. தாய்மொழி செம்மையுறவும் சமுதாயம் சீர்திருத்தம் பெறவும், ஏழை பணக்காரன் இல்லாத பொதுவுடைமை நாட்டில் நிலைபெறவும் பாடல் படைத்தவர். இதனையே தனது குறிக்கோளாகவும் சுட்டுகிறார் கவிவாணி.*

**பழக்கத்தால் உயர்வு தாழ்வு**
**படைப்பினால் அல்ல தம்பி**
**விளைவினை மக்கள் எல்லாம்**
**பொதுவாகத் துய்க்கும் மேன்மை**
**முளைத்திடில் தமிழர் நாட்டில்**
**முளைத்திடும் இன்ப வாழ்வு**

*என இன்ப வாழ்விற்கான இலக்கணத்தை வகுத்தளிக்கிறார் கவிஞரேறு.*

**உடைமை பொதுசெய்**
**சோற்றை பகிர்ந்துண்**

*போன்ற மேலான கருத்து விதையை பிஞ்சு உள்ளங்களிலே விதைக்கவே கவிவாணி முனைந்திருப்பது புலப்படுகிறது.*

அந்தியிலே கோயிலெலாம் மணியடிக்கக் கேட்பேன்
ஆனாலும் எனதுள்ளம் அமைதிகொள்வ தில்லை
சந்தியிலே கூடுகின்ற கூட்டம்போல் இன்றித்
தமிழ்மக்கள் தாய்நாட்டின் நலம்பேண வேண்டும்
பந்தியிலே தலைவாழை இலையிட்டே உண்போர்
பசிமீறக் கையேந்திக் கெஞ்சுகின்ற ஏழை
புந்தியிலே நிழலாடக் காண்கின்றேன் இந்தப்
போக்கிற்கெலாம் என் பாடல் வழிவகுத்தால் போதும்
என்று பகுத்துண்டு பண்போடு வாழ கவிஞர் கூறுவது புலனாகிறது.
கூப்பிடு வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி
காப்பெதற்கு! கார்தந்த செல்வம் விளைபொருள்கள்
சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன் விளைவாம்!
பங்காக்கி உண்போம்! பசியேது பின்நாட்டில்

*என்று வாழ்வோர் அனைவரையும் பொதுவுடைமைச் சமுதாயம் அமைக்க அழைக்கிறார்.*

*சமுதாய சாபக் கேடுகளாய் விலங்கிய சாதி வேற்றுமை, மூட நம்பிக்கை எதிர்ப்பு, தீண்டாமை, மறுமணம் என புதுமைக்கான பாதையை வகுத்தவர்.*

ஆண்டான் அடிமைகள் ஏய்ப்பதற்கே! நம்மை
அடிமைக் குழியினில் சாய்ப்பதற்கே!
தீண்டாமை என்றொரு பொய்யுஞ் சொன்னார் – மீளும்
செய்தி உரைக் கின்றேன் கேளுங்களே
கட்டாயமாய்க் கல்வி கற்க வேண்டும்! – சாதிக்
காடுகளை வெட்டிச் சாய்க்க வேண்டும்!
கொட்டாவி விட்டிங்குத் தூங்குகின்ற – தொந்திச்
சோம்பர்களைத் தலைகுட்ட வேண்டும்.

*என்று தனது அவாவை ஏக்கத்தை பொதுவுடைமை கோட்பாட்டை வெளிப்படுத்துவதில் இருந்து எதிர்கால சமுதாயம் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயமாக நிலைபெற நம்மை ஆயத்தம் செய்கிறார் என்று தோன்றுகிறது.*

பொன் பொருள் நிலங்கள் எல்லாம்
பொதுவாகச் செய்து விட்டால்
இன்னலே மக்கட்(கு) இல்லை!
ஏற்றமும் தாழ்வும் இல்லை
மன்னிய பசியும் இல்லை!
வஞ்சமும் கொலையும் இல்லை

*மேலும், தீண்டாமை ஒழி, சாதி பிரிவிகழ், மூடப் பழக்கம் தள், பகுத்தறிவோடு வாழ் என்னும் புரட்சி விதையை விதைத்த நம் கவிஞரேறு சிறந்த சமூக சீர்திருத்தவாதியாக தோன்றுகிறார்.*

**கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே**
**வேரில் பழுத்த பலா**
**என்றார் பாரதிதாசன்.**
**கவி வாணியோ பாரதிதாசனின் மாணவர் ஆயிற்றே அவர்,**
**கசங்கிய மலரே! உன்னைக்**
**கண்டதும் இந்த நாட்டில்**
**கசங்கிய மலர்கள் சிந்தும்**
**கண்ணீர் என் கண்முன் தோன்றும்**

*என்று கைம்மை கொடுமையால் வாடிய மலராய் மாறிப்போன மங்கையரை சுட்டுகின்றார்.*

*தடைகளை தகர்த்தெறியும் திறனை பெண்கள் பெற வேண்டும். விதவை பெண்களுக்கு வாழ்வளிக்க ஆண்கள் முன் வரவேண்டும் என்கிறார் முன் உதாரணமாக.*

**தாலி இழந்தாளைத் தாலிகட்டி இற்பேணல்**
**'ஏலா' தெனப்பெற்றொர் ஏசிடினும் – வேலி**
**நறைகமழ் பூங்கூந்தல் நங்காய்! மணப்பேன்!**
**குறைகூறு வார்கூறுக!**

*என்று விதவை மறுமணம் புரிவதாக தமிழச்சியில் பாடியிருப்பார். பெண்கள். வீரம் மிகுந்தவர்களாகவும் விவேகம் நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது கவிஞரேறுவின் கருத்து.*

**வீரம் வளர்த்தவர் வெற்றி கொடுத்தவர்**
**வேல் விழியார் தமிழ்ப்பெண்கள் – நெஞ்சில்**
**ஈரம் வளர்த்தவர் இன்பங் கொடுத்தவர்**
**ஏந்திழை யார்தமிழ்ப் பெண்கள் – நம்**
**தீந்தமிழ் நாட்டிற்கோ கண்கள்**

*வீரம் விதைத்த வேலுநாச்சியார், குயிலி போன்ற வரலாறு படைத்த பெண்கள் வாழ்ந்த மண்ணில் தமிழ்ப் பெண்கள் வீறுகொள்ள வேண்டும், ஆண் ஆதிக்கத்தை அரவே அழிக்க வேண்டும் அதற்கான திண்மையுடன் பெண்கள் விளங்க வேண்டும் என்கிறார்.*

**ஆட்டிட ஆடுகின்ற**
**பாவைநான் அல்லள்; சற்றுப்**
**பாட்டையில் நடந்தால் என்ன?**
**பலருடன் பழகி பேசி**
**வீட்டிற்கு வந்தால் என்ன?**
**விழிப்புண்டு கற்பில்**

*ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்னும் சமன்பாட்டை கவிஞர் விதைத்திருக்கிறார். கற்பு என்பது அறம், அது இவ்வாறு பேசி பழகுவதால் கெடாது என்கிறார். புதுமை பெண்ணாக உலகில் வளம் வர அழைக்கிறார் கவிவாணி. அவரவர் தாமே தம்மை அரண்செய்து காத்தால், கற்புத் தவறுமோ? என்கிறார்.*

**ஓட்டையைப் போலப் பெண்ணை**
**ஒதுக்கினார் அன்னார் நாண**
**நாட்டினில், படிப்பில், போரில்**
**நல்லறப் பண்பில் வன்மை**
**காட்டிட வேண்டும்! என்கிறார் கவிஞர்.**

*பெண் விழித்தால் விடுதலை நிலைக்கும் நாட்டில் என்பதோடு சிற்றூர்ப் பெண்கள் திருந்தினால்தான் நாடு திருந்தும் என்பது என் துணிவு அத்துணிவில் தோன்றியவளே தமிழச்சி என்று பெண்ணை, பெண் விடுதலையை முன்னிறுத்திய மாபெரும் கவிஞன் கவிவாணிதாசன். அனைத்து படைப்புகளிலும் புதுமையை விரும்பி புத்துலகம் காண முற்பட்ட கவிஞன். கவிஞரேறு காண விரும்பிய 'இலட்சிய உலகு' திருவள்ளுவரின் அறநெறியும் அண்ணாவின் அன்பு நெறியும் மார்க்சின் பொதுவுடைமை நெறியும் ஒன்றாகக் கலந்து உருவான புத்துலகம் பொன்னுலகம் என்று திருநாவுக்கரசு புகழ்வார். அத்தகைய உலகில்*

**ஆண்டியும் அரசும் இல்லை!**
**அவசரச் சட்டம் இல்லை**
**வேண்டியது) அவர் அவர்க்கு**
**விருப்பம் போல் கிடைக்கும்! மன்றம்**
**ஆண்(டு) இல்லை வழக்குத் தீர்க்க**
**அச்சமோ இல்லை! நெஞ்சில்**
**மூண்டிடும் காமம், வஞ்சம்**
**முளைப்பதற்(கு) இடமே இல்லை!**

*இதுகாறும் அன்னாரின் புதுமை போக்கை பார்த்தோம் இப்படி கவிஞரையும், இயற்கையையும் நம்மால் பிரித்தரிய முடியாது, இயற்கை எழிலை கருவாக*

*கொண்டு கவிதை வடிக்கும் பாங்கு கொண்டவர் விழியெல்லாம் இயற்கை தரும் விருந்துக்கே சொந்தம் என்று இயற்கையை போற்றியவர்.*

**பயிரின் பசுமை குயிலினிமை**

**பாட்டுப்பாட நமைத் தூண்டும்!**

*என்று இயற்கையை எழிலோவியமாய் தீட்டிய சிற்பியிவர். சந்த பொலிவு, கலைநோக்கு எளிய நடை, உவமை நயம், வருணனை உலகநெறி என புதுநெறி தழுவி இயற்கையை கொண்டாடியவர்கள் பாரதிதாசனும், வாணிதாசனும்.*

**பொன்னலைகள் வீசுகின்ற கடலோ! வானோர்**

**புதுநாடோ! மலைசெறிந்த காடோ!**

**அன்னை எழில் கலையரசி தீட்டு கின்ற**

**அழகு திரைத் சீலையோ! செங் குருதியாறோ**

**பொன் பழுக்கம் பேருலையோ அந்தி வானம்**

**புதுமையடா புதுமை**

*கவிஞரேறுவின் கவிதைகளில் நுணா சிரிக்கும், செங்கதிர் ஒளி வீசும், பெட்டை கோழி கூவும், சிட்டு பாடும், கிளியோ கொஞ்சம் தமிழ் பேசும், ஆட்டுக்குட்டியின் அழகு அள்ளும், ஓடை துள்ளும், பூசணி கீற்று பூரிக்கும், வெண்ணிலா வெள்ளி தட்டாகும், நீலவானோ கவிழ்ந்த நீல சட்டியாகும், வாழை தண்டோ கொம்பாகும், ஆம்பல் அழகால் அள்ளும், அப்பப்பா எத்தனை உவமைகள், இயற்கையின் சிரிப்பில் கவிதையின் வனப்பை ரசிக்கும் கவிஞரேறுவின் எழுத்துவளம் வியப்பில் ஆழ்த்துகின்றது.*

**தொடுவான மதிலுக் கப்பால்**

**தோன்றிடும் அழகைக் காண**

**நடுவினில் துளைத்த சந்தோ**

**அகண்டமோ நடு விளக்கோ**

**கடலிடை எழுந்த காலைக்**

**கதிரவன்? கதிரின் வீச்சுப்**

**படுமிட மெல்லாம் பொன்! பொன்!**

**பார் எழி லோவி யத்தை!**

*என்று கதிரவனின் வருகையை வேறு எந்த கவிஞனால் இப்படி உவமைப்படுத்தி பாட முடியும், கடலிடை எழுந்த கதிரவன் வானின் மறுபுறம் உள்ள அழகை காண கிடைத்த வானை துளைத்த சந்தென குறிப்பிடும் உவமை நெஞ்சை அள்ளுகின்றது.*

**மருண்ட மக்களின் அறிவைக் கொளுத்தும்**

**தெருண்ட மேலவர் செந்தமிழ்ப் போலே**

**இருண்ட மேகத் திடை புகுந்தே**
**உருண்டு செல்லும் வெள்ளித்தட்டு**
**உயர்வு தாழ்வு இன்றி மக்கள்**
**உடைமை பொதுவாய் அடைந்து வாழத்**
**துயரம் நீக்கும் இன்ப நிலவைத்**
**தோப்புத் துரவு எங்கும் சேர்த்தே**

*மேகத்திடையே உருளும் வெள்ளிதட்டு வெண்ணிலா என்றும், உடைமை பொதுவாக்கி எங்கும் ஒளிர்கின்றாய் என்றும் அழகாய் பாடுகிறார்.*

**மாவின் பசுந்தளிர்கள் பனித்துளி தூவிடும்**
**மலர்கள் மணம்பரப்பி உயிர்களைக் கூவிடும்**
**பூவின் மதுநுகர்ந்து பொறிவண்டு பாடிடும்!**
**புதர்கள் தலைஅசைத்துப் புன்சிரிப்பூட்டிடும்!**
**கூவிச் சிறகடித்து வரிச்சேவல் எழுப்பிடும்!**
**கொடுமை இருளகல ஒளி எங்கும் தாவிடும்.**

*இயற்கையின் எழிலை எப்படியெல்லாம் போற்ற முயுமோ அப்படியெல்லாம் போற்றி நெகிழ்ந்திருக்கிறார். இயற்கையின் ஊடே கவியின்பத்தையும் கவியின்பத்தின் ஊடே பொதுவுடமையையும் பாடிய புதுமை கவிஞரே நம் கவி வாணி*

**கவிழ்த்த நீலச் சட்டி போலக்**
**கண்முன் தோன்றும் வானம்**
**காலை மாலை கதிரைக் காட்டி**
**உலகைக் காக்கும் வானம்! - இந்த (2)**
**என்று வானை கவிழ்த்த சட்டியாக பார்க்கிறார்.**

*தொன்மை மொழிக்கெல்லாம் மூத்த மொழி நம் செம்மொழி என்பதனால் தான் கவிஞரேறு எந்த மொழியானாலும் சொந்தமொழி போல் உனக்கு இன்பம் தருவதுண்டோ? என் தாய் மொழியாம் தண்டமிழ் மொழியை இவர் பாடும் அழகே அழகுதான்*

**தனித்தமிழ் போல் இனிப்பு வேறில்லை**
**தாய்மொழி வளர்த்திடு**
**தூய தமிழ் படி**
**என்றெல்லாம் தமிழை போற்றும் கவிஞர்**
**'சூழ்ந்த மொழியுள் தமிழே தாயாம்**

**மண் தோன்றிய நாளே தோன்றியதாம் தமிழ்‘**

**என்று பெருமைக் கொள்கிறார்.**

**சாலைக் கிளிமொழியில் ஓலைப் படபடப்பில்**

**தவழ்ந்து நெளிந்துபாயும் அருவி முணுமுணுப்பில்**

**நீலக் கடலலையில் கோலக் குயிலிசையில்**

**நினைத்துப்பார் நந்தமிழ் அனைத்திலும் கேட்குதடா**

*இயற்கையில், தான் கண்ட எல்லாவற்றிலும் தமிழை மட்டுமே கண்ட மா பெரும் கவிஞனின் படைப்பு வளம் பகுத்தறிவு பாங்கு, பண்பாட்டை எடுத்தியம்பிய விதம் நெகிழச் செய்கிறது. தமிழ் ஓங்க குரல் கொடுத்த தங்க கவிஞனின் புகழ் தமிழ் உள்ளவரை நிலைப்பெற்று ஓங்கி நிற்கும் என்பதில் ஐயமில்லை.*

**ஓங்குக! ஓங்குகவே! தமிழ்**

**உலகோடே உயர்வாக நிலைபெற்று நீடுழி**

*தமிழுக்கு தொண்டு செய்வோர் என்றும் வீழ்வதில்லை என்பதை அழுத்தமாக பதிவு செய்கிறார்.*

**தமிழ்காப்போர் வாழ்வார் - தனித்**

**தமிழ்சாய்ப்போர் வீழ்வார்**

**தமிழ் சாய்போர் வீழ்வார்**

**தமிழின்பம் சேர்க்கும்! - தூய**

**தமிழ்துன்பம் போக்கும்.**

*அதனால் தான் கவிஞர் அனைத்தையும் மறந்து நான் வாழ்ந்தாலும் என் உயிருக்கு உயிரான செந்தமிழே உன்னை மறப்பேனோ என்கிறார்.*

**உன்னை மறந்துநான் வாழ்வேனோ! என்**

**உயிருக்குயிர் ஆகிய செந்தமிழமே! அமுதே!**

**அன்னையை மறந்தாலும் அப்பனை மறந்தாலும்**

**அன்பு மனைவி மக்கள் அணைப்பை மறந்தாலும்**

*என்கிறார், இனிமையான மொழி நம் தமிழ்மொழி. அதை கற்க வேண்டும் என்கிறார்.*

**செந்தமிழோ திங்கருப்பஞ் சாறு - பள்ளி**

**சென்றுகற்க பொன்னிவள ஆறு**

**சொந்தமொழி தமிழ்மொழியைப் போல - உனக்(கு)**

**எந்தமொழி இனிமைதரும் கூறு?**

*இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை கொண்ட நம் தமிழன் பண்பாட்டை போற்றி நெகிழ்கிறார் கவிஞர்.*

**தமிழன் இயலோ அறிவாக்கம்**
**தமிழன் இசையோ தேன்தேக்கம்**
**தமிழன் கூத்தோ நல்லூக்கம்**
**தமிழன் இலக்கியம் பெருநோக்கம்**

*இவ்வாறு ஒப்பிட முடியாத ஒப்பற்ற மொழியை போற்றுவதே தன் கடமையாக கொண்டு வாழ்ந்தவர் கவிஞரேறு வாணிதாசனார்.*

*ஓசையின்பத்திலே ஒன்றி திளைக்காதவரே இல்லை என்பார் அழவள்ளியப்பா, அத்தகைய ஓசையின்பமும், சந்த நயமும், சிந்து மெட்டும் குழந்தை இலக்கியத்திற்கு இன்பம் சேர்க்கும், அத்தகைய நயம் மிகுந்த படைப்பே கவிஞரேறுவின் குழந்தை இலக்கியம்.*

**கத்துங் கடலே! இரவெல்லாம்**
**கரையைச் சீரி மோதுவதேன்?**
**பித்துப் பிடித்து விட்டதோ?**
**பிரிவுத் துயரமே விட்டதோ?**
*என்கிறார்*

**வெய்யில் மழையில் வயல்வேலை**
**வேண்டா மென்றால் உணவில்லை**
**கையில் மிச்சக் காசில்லை**
**காலம் முழுதும் இத்தொல்லை**
**வேலிக் கறிகாய் பால்தயிரே**
**வெளியில் விற்றால் அரைவயிறே!**
**கூலித் குழைத்தால் மாலையில்**
**கூழும் வேகும் சாலையிலே**
*என்று வாழ்வியலை படம்பிடித்து காட்டிய மிகச்சிறந்த பாவலன் வாணிதாசன் என்பதை அவன் பாடல்கள் உலகுக்கு பரைசாற்றுகின்றன.*

*இயற்கை எழிலாம் இளமரக்காவை, இதமாய் வருடும் இனிய தென்றலைக் கிழக்கு வெளுக்கும்கீழ்வான்பரிதியின்ஓவிய எழிலை, கண்டு களித்து,துய்த்து நெகிழ்ந்து சங்கத்தமிழின் சாயலைக் காட்டிப் பொங்கும் உணர்வினை யாப்பினில் கூட்டி இயற்கையைக் கவிதையில் எழிலோவியமாய்த்தீட்டிக்கொடுத்த பாவலன் வாணிதாசன் அவனை அவனி அறிய அறிமுகம் செய்வோம்! படிப்போம்! பாடுவோம்! அவையில் பேசுவோம்!*



# அறிவைப் பெருக்கு

**பொன் முருகன்**
குயவர்பாளையம், புதுச்சேரி - 605 013

**(கவிஞரேறு வாணிதாசன் ஆத்திசூடி)**

## அறிவைப் பெருக்கு

**அறிவு என்பது எல்லா உயிர்களுக்கும் உண்டு, அது இயற்கையின் படைப்பு அந்த அறிவைப் படித்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.**

வழுதாவூர் கிராமத்தில் அழகிய பூந்தோட்டத்தின் நடுவே ஒரு சிறு ஓலைக் குடிசை வீடு இருந்தது. அந்த குடிசை வீட்டில் முருகையன் மற்றும் அவரின் பேரன் சேதுராமனும் வசித்து வந்தனர்.



விவசாய வேலை செய்து வந்தார் முருகையன். அவரின் பேரனை பள்ளியில் சேர்த்து படிக்க அனுப்பிவைத்தார். அவன் பாடம் படிக்காமல் பள்ளிக்கு சரியாக செல்லாமலும் விளையாட்டில் மூழ்கி நேரத்தைப் போக்கினான்.

பள்ளிக்கு போகலாம் வா... என்றார் தாத்தா.

பள்ளிக்கு வரமாட்டேன் பள்ளிக்கு வந்தால் படிக்கச் சொல்லி ஆசிரியர் அடிக்கிறார் என்றான் அழுது கொண்டே சேதுராமன்.

அருகில் இருந்த குச்சியை எடுத்து அடிக்கச் சென்றார் தாத்தா. அவன் குடிசையை விட்டு வெளியே ஓடிவிட்டான்.

உன்னை போல பிள்ளைகள் எல்லாம் படிக்கப் பள்ளிக்குப் போறாங்க உனக்கு எப்பதான் படிக்கிற எண்ணம் வருமோ தெரியலையே.

படிச்சாதான் நல்ல வேலைக்கு போயி நாலு காசு சம்பாதிக்க முடியும். என்னைப்போல நீயும் கஷ்டப்பட போற என்று புலம்பிக்கொண்டே வேலைக்கு சென்றார்.

கழுத்தில் வலி அடிக்கடி வந்தது அதை பொருட்படுத்தாமல் இருந்தார் முருகையன். ஒருநாள் அதிக வலியும் தலைச்சுற்றலும் இருந்ததால் வீட்டுல படுத்துகிட்டு இருந்தார்.

என்ன தாத்தா படுத்துட்டு இருக்கிறீங்க என்றான் சேதுராமன். தலைச்சுற்றலும் கழுத்தில் வலியும் இருக்குதுடா அதான் படுத்துட்டேன் என்றார்.

எழுந்திருங்க மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை பார்க்கலாம் வாங்க என்றான்.

இல்லடா கொஞ்ச நேரம் படுத்திருந்தா சரியாகிவிடும். நீ போய் சாப்பிடு என்றார்.

இல்ல தாத்தா எழுந்து வாங்க என்று எழுப்பி மருத்துவமனைக்கு கூட்டி சென்றான்.

மருத்துவரிடம் கழுத்தில் அடிக்கடி வலியும் மயக்கமும் வருது என்றார் தாத்தா.

மருத்துவர் எக்ஸ்ரே எடுக்க சொல்லி எழுதிக் கொடுத்தார். எங்கே எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என்றார் டாக்டரிடம் சேதுராமன்.

கடைசி ரூம்ல போனா அங்கு எடுப்பாங்க எடுத்துக்கிட்டு என்னை வந்து பாருங்க என்றார்.

தாத்தாவை கூட்டிகிட்டு போய் எக்ஸ்ரே எடுத்தான். அதன் ரிப்போர்ட்டை டாக்டரிடம் காட்டினான்.

ரிப்போர்ட்டை பார்த்துவிட்டு கழுதில் எலும்பு தேய்ந்து போயிருக்கு அதனாலதான் வலியும் மயக்கமும் வருது. மருந்து எழுதிதரேன் அதை வாங்கி சாப்பிடுங்க மாத்திரைகளும் விட்டமின் சிரப் ஒன்றும் கழுத்தில் தடவ தைலம் ஒன்றும் எழுதிக் கொடுத்தார். தைலத்தை கழுத்தில் தடவ வேண்டும்.

மருந்தை வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தனர்.

மருந்தை எடுத்து எந்த மருந்து உள்ளுக்கு சாப்பிடுவது எந்த மருந்து உடலுக்கு வெளியெ தடவுவது என்று படிக்கத் தெரியாமல் தடவும் தைலத்தை மாற்றி கொடுத்தான்.

மருந்தை உட்கொண்ட சில நிமிடங்களில் கண்கள் பிதுங்கின, பற்களைக் கடித்தும், நெளிந்து கொண்டு வாந்தி எடுத்தார் தாத்தா.

வாந்தி எடுத்ததைப் பார்த்து பயந்துபோன சேதுராமன் தாத்தாவை கூட்டிகிட்டு மருத்துவமனைக்குச் சென்று டாக்டரிடம் தாத்தாவிற்கு மருந்து கொடுத்ததும் சில நிமிடங்களில் கண்கள் பிதுங்கின வாந்தி எடுத்ததையும் சொன்னான்.

எந்த மருந்தை கொடுத்தாய் காட்டு என்றார் டாக்டர் கையில் இருந்த மருந்தைக் காட்டினான் சேதுராமன்.

இந்த மருந்தை கொடுக்கக்கூடாது வெளியில் தடவும் மருந்தை கொடுத்துவிட்டாய்.

வெளியில் தடவும் மருந்தை உள்ளுக்கு கொடுத்தால் உள்

உருப்புகளை அழித்துவிடும், உயிருக்கு ஆபத்தாக மாறிவிடும். உனக்கு படிக்கத் தெரியாதா? பள்ளியில் படிக்க வில்லையா? மாணவப் பருவத்தில் இருக்கிறாயே நான் முன்பே சொல்லித்தானே அனுப்பினேன் என்று கடிந்து கொண்டார்.

தாத்தாவை மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை அளித்து காப்பாற்றினார் டாக்டர்.

நேரம் கடந்து வந்திருந்தால் உங்க தாத்தாவை காப்பாற்றி இருக்க முடியாது நல்ல வேலையாக குறித்த நேரத்தில் வந்ததால் அவரை காப்பாற்ற முடிந்தது என்றார் டாக்டர்.

இருவரும் நன்றி கூறினார்கள்.

உங்க பேரனை படிக்க வைக்கவில்லையா? என்று கேட்டார் டாக்டர்.

பள்ளிக்கு அனுப்பினேன் படிக்கமாட்றான் பள்ளிக்கு சரியா போவது இல்லை விளையாடி காலத்தை வீனாக்குகிறான். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்கமாட்றான் சார் என்றார்.

நான் படித்ததால்தான் உன் தாத்தாவுக்கு மருத்துவம் பார்த்து காப்பாற்ற முடிந்தது. படித்தால் மட்டும்தான் ஒரு செயலை சரியாக செய்ய முடியும். படித்து அறிவை பெருக்கிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நல்லது கெட்டது எது என்று தெரியும்.

நீ படித்திருந்தால் எந்த மருந்து உள்ளுக்கு சாப்பிடுவது எந்த மருந்து வெளியில் தடவுவது என்று உனக்கு தெரிந்திருக்கும் படிக்க தெரியவில்லை அதனால்தான்.

உன் தாத்தாவிற்கு மருந்தை மாற்றி கொடுத்து விட்டாய் உன் தவறால் அவர் இறக்கும் நிலைக்கு சென்றுவிட்டார். நல்லநேரம் அவரை காப்பாற்றி விட்டேன்.

நீ பள்ளிக்கு சென்று படிக்கவேண்டும் என்றார் டாக்டர்.

படிக்கத் தெரியாமல் நடந்த தவறால் தாத்தாவை இழந்திருப்பேன்.

என் தவறை உணர்ந்துவிட்டேன் நான் பள்ளிக்கு சென்று நன்கு படிப்பேன். படிப்பால் கிடைக்கும் நன்மைகளை உணர்ந்து கொண்டேன். நானும் உங்களைப் போல பெரிய வேலைக்கு சென்று என்னால் முடிந்த உதவிகளை அனைவருக்கும் செய்வேன் என்றான்.

உங்கள் பேரன் படிக்க என்ன உதவி வேண்டு மானாலும் தயங்காமல் என்னை கேளுங்கள். நான் செய்து கொடுக்கிறேன் என்றார் டாக்டர்.

ரொம்ப நன்றி டாக்டர் தேவைப்படும் போது உங்களிடம் கேட்கிறேன் என்றார்.

என் பேரனின் அறிவுக் கண்களை திறந்த உங்களுக்கு என் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி கெட்டதிலும் ஒரு நல்லது நடந்ததை எண்ணி அங்கிருந்து மகிழ்ச்சியோடு வீடு திருப்பினார்.



# கவிஞரேறு வாணிதாசனாரின் கவியின்பம்

**திருமதி.க.மலர்வாணி ஜெயராஜ்**

தமிழ் இலக்கியத்தில் 20ஆம் நூற்றாண்டு ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் , வாணிதாசன் எனக் கவிஞர்கள் செங்கோலோச்சிய அற்புதமான காலம். தமிழுக்கு பெருமை சேர்த்த, வளமைப் படுத்திய பல கவிஞர்களும், படைப்பாளிகளும் வாழ்ந்த அருமையான காலம்.

காணாத ஒன்றினைக் காணும் போதோ, கேளாத ஒன்றினைக் கேட்கும் போதோ, நினையாத ஒன்றினை நினைக்க வாய்ப்பு வரும் போதோ நம் உள்ளத்தில் தோன்றுவதே கவிதை என்பார் திரு. மயிலை சிவமுத்து ஐயா அவர்கள்.

கவிதை என்பது தன்னைத் தானே எழுதும். அது விரல்களின் வழியே வழியும் என்பார் திரு சுகி சிவம் ஐயா.

இயற்கையே இந்த கவிஞரின் இதய இருக்கை. யார் அந்த கவிஞர். புதுவை ஈன்றெடுத்த புதுமை அவர். புதுவைக்கு அருகே இன்றைய வில்லியனூர் என்றழைக்கப்படும் அன்றைய வில்வநல்லூர் என்னும் ஊரில் 1915 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22 ம் நாள் திரு திருக்காமு துளசியம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர் வாணிதாசன் அவர்கள்.

பெற்றோர் இட்டப் பெயர் அரங்கசாமி உறவினர்கள் அழைத்த செல்லப்பெயர் எத்திராசலு கவிஞரின் பிள்ளைப் பருவம் வில்லியனூரில் கழிந்தது தொடக்கக் கல்வியை வில்லியனூரிலும், புதுவையை அடுத்த பாகூரிலும் தொடர்ந்தார். அன்றையக் காலக்கட்டம் புதுவையும், அதன் சுற்றுப் பகுதிகளு அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. தொடக்கக் கல்வியைத் தொடர்ந்து புதுலை கல்வே கல்லூரியில் தன் கல்வியைத் தொடர்ந்தார் நம் கவிஞர்.



இக்காலக் கட்டத்தில்தான் பாவேந்தர்

*பாரதிதாசனாருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவரைத் தன் குருவாக ஏற்றார். அவரிடம் முறையாக இலக்கண இலக்கியங்களை தனது ஆசானிடம் சுற்றுத் தெளிந்தார் வாணிதாசனார்.*

*சங்க இலக்கியங்கள் தங்கும் குடில் இவர் பிரெஞ்சு இலக்கியங்கள் இவருக்கு பிஞ்சு வெள்ளரி போன்றது. அதனால்தான் 'பாவலர் செல்வேன்' என்பவர்*

***சங்கத்தார் பாட்டுநடை தமிழில் நல்ல***
***சரக்குள்ள வர்க்குத்தான் புரியும்; ஆனால்***
***இங்குற்ற நம்கவிஞர் கையால் கின்ற***
***எளியநடை எல்லார்க்கும் புரியும்; கட்டித்***
***தங்கத்தைப் பொடிபொடியாய் ஆக்கி***
***நல்ல தாதுவளர் மருந்தாக்கும் கலையை***
***அன்னார் எங்குதான் பெற்றாரோ என்றுகேட்டேன்***
***இன்தமிழைக் காதலித்துப் பெற்றேன் என்றார்.***

*சங்கத்தமிழ் இலக்கியங்களில் மூழ்கி, ஆழ்ந்து ஆழ்ந்து ஆனந்தித்திருக்கிறார் கவிஞர் என்பது புலனாகிறது.*

*இச்சூழ்நிலையில் 1937 ஆம் ஆண்டு தமிழாசிரியர் பணீயைத் துவங்கினார். இக்காலங்களில் கவிஞருக்கு கவிதை இயற்றுவதிலும் இலக்கியச் சொற்பொழிவாற்றுவதிலும் ஆர்வம் ஏற்பட்டது. இந்நாட்களில் கோ. தா. சண்முக சுந்தரம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஆதித்தனாரால் நடத்தப்பட்ட, 'தமிழன் எனும் இதழ் வந்து கொண்டிருந்தது. அதில் மகாக் கவி பாரதி பிறந்த நாளுக்காக பாரதி நாள் இன்றடா பாட்டிசைத்து ஆடடா என்ற தனது முதல் கவிதையை 'பாரதி நாள்'' என்ற தலைப்பில் எழுதினார்.*

*அவருடைய இயற்பெயரான அரங்கசாமி எனும் பெயரின் முதல்-கடைசி எழுத்தை எடுத்து ரமி எனும் புனைப்பெயரில் எழுத துவங்கினார். ஆனால் திரு. சண்முக சுந்தரம். அவர்கள் 'வாணிதாசன்' எனும் பெயரில் எழுதுங்கள் என அன்பு கட்டளையிட 'வாணிதாசன்' எனும் பெயரே நிலைத்து நின்றுவிட்டது.*

*திராவிட நாடு இதழுக்கு 'விதவைக்கொரு செய்தி' எனும்*

கவிதையை எழுதி அனுப்ப முகப்பட்டையில் வெளிவந்தது. கூடவே அறிஞர் அண்ணாவின் பாராட்டும், தொடர்ந்து எழுத ஊக்கமும் தந்ததாக கவிஞர் தம் நினைத்துப் பார்க்கின்றேன் என்று தன்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

பாவேந்தருக்கும் வாணிதாசனாருக்குமான நெருங்கிய தொடர்பு வியப்பினை அளிக்கின்றது. ஆசானுக்கும், மாணவருக்கும் தொடர்பு இருக்கமுடியுமா? பாவேந்தர் எங்கு சென்றாலும் வாணிதாசனாரையும் உடன் அழைத்துச் செல்வாராம். நிகழ்வுகளில் அருகமர்த்தி உண்ணச் செய்வாராம். பாவேந்தர் தலைமையேற்கும் திருமணங்களுக்கு வாணிதாசனாரையும் உடன்வரச் செய்து வாழ்த்துக் கவிதை வாசிக்கச் செய்வாராம்.

வாணிதாசனார் எழுதும் கவிதைகளை உடனுக்குடன் படித்துப் பாராட்டுவாராம்.

***எல்லோரும் நல்லார் என்றெண்ணுவார் இன்றமிழ்***
***வல்லக்கவி வாணி தாசனார் - அல்லும்***
***பகலும் தமிழர்தம் பண்பாடு பற்றிப்***
***புகழும் பாட்டு ஒவ்வொன்றும் பொன்***

என நமது கவிஞரைப் போற்றிப் பாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசனார்.

வாணிதாசனாரோ ஆசிரியரை எனதாசான், எனதாசான் என்றே பாடுகின்றார்.

***பாரினைத் திருத்தும் ஆசான்***
***பழமையை திருத்தும் ஆசான்***
***சீர்தளை திருத்தி நல்ல***
***செந்தமிழ் திருத்தும் ஆசான்***
***ஊர்கண்ட ஆசான்! என்றன்***
***உளங்கண்ட ஆசான்.***

என்றும்



***சிரிக்கின்ற அழகெலாம் செஞ்சொல் தீட்டிச்***
***செந்தமிழின் நயம்விளங்கச் செய்திட்ட ஆசான்***
***செக்கிழுக்கும் மாடொத்த புலவர் உள்ளச்***
***சிறுமைக்கும் எழுத்திருக்கும் அறிவூட்டும் ஆசான்***
***என்று பாடிக்கொண்டே வந்து***
***மிக்கநறுந் தமிழ்த்தென்றல் முத்தமிழின் தோற்றம்***
***வேறெவர்க்கும் பணியாத தமிழ்நாட்டு வேங்கை***
***இக்காலத் தமிழ்நாட்டின் நிலையுயர்த்தப் பாடும்***
***எனதாசான் கவியரசர் தமிழ்மக்கள் ஆசான்***

*என எந்நேரமும் பாவேந்தரைப் பற்றியே சிந்தித்தவர் நமது கவிஞர்.*

*இவரின் கவித்திறனைக் கண்ட தென்னாற்காடு தமிழ்க் கவிஞர் மன்றம் 'கவிஞரேறு'' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. அப்பட்டமே நின்று நிலைத்து வருகிறது. இம்மன்றத்தின் நிரந்தரத் தலைவராக தன் வாழ்நாள் முழுமையும் இருந்து மிகச்சிறப்பாகத் தமிழுக்குப் பணியாற்றினார் கவிஞரேறு. புதுவைத் தமிழ்ச் சங்கம் 'பாவலர் மணி' என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டியது.*

*கவிஞரின் முகமும், உருவமும் மிகவும் வடிவுடையது. (சீன் சிறு வயது நினைவில் நிற்கும் கவிஞரின் வடிவம்) அடர்ந்து படிந்த கன்னங்கரிய முடி. பரந்த நெற்றி. நீண்ட மூக்கு, நீள் கழுத்து. நெடிய உயரம். இறுகிய உடல், இளமைத் தோற்றம். கண்ணாடி அணிந்த கண்கள், கூர்மையான கருவிழி. (அதில் குளிர்ச்சி மட்டுமே காணலாம்) மெல்லிய உடல்வாகு. தைரிய நெஞ்சம் தலைக்கேரிய எளிய இனிய தமிழ்ப் போதை. இத்தகைய சிறப்புகளைக் கொண்டவர்தான் கவிஞர் வாணிதாசனார்.*

*அவர் பாடாத பொருள் இல்லை. இனிக்கும் தனித்தமிழ் இவர் படைப்பெல்லாம்! இயற்றியப் பாடல் யாவும் இனிமை! எளிமை! எளிமை என்பது இவரது எழுத்து நடையில் மட்டுமே! எழுத்தெல்லாம் பழுத்த கனியின் சுவை!*

*கற்றத் தமிழின் கரத்தை விடாது, முற்றா வாழ்வை முடித்துக் கொண்டவர்.*

*தமிழ்மொழி இயற்கை மொழி. தமிழ்ப் புலவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினர். நம் கவிஞரோ இயற்கையைப் பாடுவதில் கைதேர்ந்தவர். அதனால்தான் இயற்கைக் கவிஞர் என்றும். தமிழ்நாட்டின் 'வோர்ட்ஸ்வொர்த்' என்றும் போற்றப்படுகிறார்.*

*தோப்பும், துறவுமே இவரது படைப்பின் காப்புச் செய்யுள் என்பார் இவரைப் பற்றி நன்கு அறிந்த க. பொ. இளம்வழுதி.*

*வாய்க்கால் வரப்பு, வளர்செடி கொடிகள், நீர் நிலைகள், நீள்குரல் புட்கள்தாம் இவரது பாட்டுணர்வை ஊட்டி வளர்த்த உறவுகள்.*

*காலை, மாலை, சோலை, பரிதி, காடு, காரி, குளம், ஆறு, கடல், மலை எனக் காணும் பொருள் யாவும், செயல் யாவும் இயற்கை, இயற்கையே...*

*இயற்கையே வாணியின் மனமாக திகழ்ந்திருக்கின்றது. அவரின் உள்ளமோ இளகிய உள்ளம், அதிர்ந்து பேசா அன்பர். நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், நிற வெள்ளுடையும் வாணிதாசனாரின் வருகையை உணர்த்தும், அன்னாரின் எழில் விருத்தமும், எழிலோவியமும் இயற்கையை அள்ளிக் கொட்டும் நூல்கள் இயற்கையின் மணம் வீசி நம்மை மயங்க வைக்கும் படைப்புகள்.*

*எழில் விருத்தம் என்ற நூலில் காணும் கவிதைகளில் இயற்கை அழகு பொங்கி வழியும். (விருத்தப்பாவியல் என்ற இலக்கண நூலில் காணும் இலக்கணத்திற்கேற்ப இந்நூல் இயற்றப்பட்டுள்ளது) கவிதை எழுதப் பயிற்சி பெறுபவர்களுக்கு எழில் விருத்தம் உதவி புரியும், இந்நூலில் கிடைப்பதற்கு அரிய பொக்கிஷமாக அவரின் கவிதைகள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக சோலையின் அழகை கூறும் கவிஞர்*

***வாயில் வருபவர் முன்னே***
***வணங்கி வரவேற்கும் கைபோல்***
***சாயல் குறையாக் குளத்துள்***
***தாமரை கூம்பி அழைக்கும்***
***பாயினை எங்கும் பரப்பி***

**வைத்த மணவறை போலக்**
**காய்கனி பூத்த மலர்கள்**
**கலைவிருந் தூட்டும் சோலை'**

*என்று சோலைக்கு வருவோரை வரவேற்பதாக அவ்வியற்கையில் மனம் தோய்கிறார் கவிஞர்.*

*அதனால்தான் தென்றல் இதழில் கவியரசு கண்ணதாசன் அவர்கள் மனித சமுதாயத்திற்குப் புதிய புதிய கவிதைகளைப் படைத்துத் தொடர்ந்து நடந்தோரில் வெற்றிகரமாக முன்னேறியவர் தோழர் வாணிதாசனார். கவிஞர்கள் பிறக்கிறார்கள் செய்யப்படுவதில்லை என்பது இவர் வரையில் உண்மை. இவரது பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்தால் நோபல் பரிசு பெறக் கூடும். சொல் வளம், கற்பனை ஊற்று என்ற இரண்டும் வளமாகப் பெற்றவர் கவிஞர் வாணிதாசன் எனப் போற்றுகின்றார்.*

*சீரகம் இல்லா உணவு சிறக்காது என்பார்கள். அதுபோல் உவமை இல்லாக் கவிதை உருபெறாது. ஆனால் வாணியின் கவிதைகளில் உவமைக் கொட்டிக்கிடக்கின்றது. எனவேதான். தமிழறிந்த அறிஞர் கூட்டம் அவரை உவமைக் கவிஞர் எனக் கொண்டாடுகின்றது. விண்மீன் என்ற கவிதையில்*

**'தைத்திங்கள் குளம்பூத்த பூவோ விண்மீன்?**
**தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக் காசோ? '**

*எனத் தொடர்ந்து...*

**'நீல வான நெடுவயலில்**
**தெளித்திட்ட தூள் பிண்ணாக்கோ'**

*என்றும்,*

**'வானம் பூத்துத் தொங்குகின்ற பீர்க்கம்பூ'**
**வேரிட்ட குண்டுபலா வெடித்திட்ட வகைப்போல்**
**விண்மீன்கள் கருவானில் தெரிந்தனவாம்.**

*அதுமட்டுமா!*

**‘செவ்வல்லி தீச்சுடர் போல் குளத்தினிலே பூக்கும்**
**சென்றடையும் வெய்போனை நின்றிருந்துப் பார்த்தேன்’’**

*எனவும்,*

**‘கொல்லன் உலைப்போல் மேற்குத் தொடுவானம்‘**
**‘காக்கை நிற நல்லிரவு‘**
**‘நாணலின் பூவை ஒத்த நரைமயிர் பாட்டி‘**
**‘கூன் முதுமை கொட்டை முந்திரி‘**

*என்று புதுமையான உவமைகளைக் கூறுவதால்தான் கவிஞரை ‘புதுமைக் கவிஞர்‘ என்கிறோம். வெறும் புகழ்ச்சி அல்ல. அவரின் எழுத்துக்களே அதற்குச் சான்றாகும்.*

*பெரியாரின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை தனது கொள்கையாக ஏற்று, அண்ணாவின் வழியில் நின்று சமுக சீர்திருத்தத்திற்கும் பகுத்தறிவுப் பாதைக்கும் பணியாற்றியவர். பகுத்தறிவின் இறுதி பொதுவுடைமை என்று கண்டு கொண்டவர். அதனால்தான் இவரது பாடல்களில் பொதுவாக்கி உண்போம். பங்காக்கி உண்போம், பகுத்துண்டு வாழ்வோம் போன்ற சொற்றொடர்கள் மிகுதியும் அணி செய்யும்,*

**‘உழைப்பினைப் பொதுமை ஆக்கி**
**உருப்பெறும் விளைவை யெல்லாம்**
**பிழைப்பவர் பகிர்ந்து துய்க்கப்**
**பேணுதல் பொதுமை‘**

*என்றார். மேலும்...*

**‘ஆண்டான் அடிமை வேண்டாம்**
**இழிந்தவர் உயர்ந்தவர் பிறப்பால் இல்லை‘**
**‘சுடுகாடேனும் விடுதலை வேண்டும்‘**

*எனத் தனது கவிதைகள் மூலம் சமுக சீர்திருத்தக் கருத்துக்களையும்,*

*பொதுமைப் பாக்களையும் பாடியள்ளார்.*

*கவிஞரின் கவிதைக் கண்டு முதலமைச்சராக இருந்த திரு. எம்.ஜி.ஆர். தமிழக அரசின் 'பாவேந்தர் விருது வழங்கிச் சிறப்பித்தார். இவரது படைப்புகளில் தமிழின் சிறப்பும், காதலின் கனிவும் பரவி கிடக்கின்றன. அதனால்தான்*

**'உன்னை மறந்து நான் வாழ்வேனோ என்**
**உயிருக்கு உயிரான செந்தமிழே அமுதே'**

*என்று உருகியிருக்கின்றார், அவருடைய கவிதைகளில் தமிழே முதன்மை இடம் பிடிக்கின்றன.*

***தமிழை மட்டுமா! காதலைப் பாடியுள்ள கவியேறு***
***மலையினும் பெரிதாம் காதல்; வானினும்***
***பெரிதாம் கடலினும் பெரிதாம் காதல்;***
***கதிரினும் பெரிதாம் காதல் வாழியவே***
***எனும் கவிஞரின் காதல் மனதை வாழ்த்துவோம்.***

*இவரின் பாக்களைப் படித்து சுவைத்து திளைத்த முத்தமிழ் அறிஞர் திரு. மு.கருணாநிதி அவரின் அரசு கவிஞரேறுவின் நூல்களை அரசுடைமை ஆக்கி கவிஞருக்குப் பெருமை சேர்த்தது.*

*புதுவை அரசும் 7.08. 2006 ஆம் ஆண்டு கவிஞரின் முழு உருவச் சிலையை புதுவையில் நிறுவி, ஆண்டுதோறும் அவரின் பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாடி வருகின்றது.*

**'ஊருக்கே உழைப்பதுவும் ஊர்வாழ் மக்கள்**
**உயர்வுக்கே உழைப்பதுவும் நற்கலிஞர் வாழ்க்கை'**

*என்று கவிஞர்களின் கடமை பற்றிக் கூறும் இவரைப் பற்றியும், இவரின் படைப்புகள் பற்றியும் கூறவும், எழுதவும் முயல்வது கடலின் ஆழத்தைக் கண்டறிவது போன்றது.*

**'கோடி கொடுப்பினும் கொள்கையிற் கோடேல்'** *என்று அவரது* **'கொன்றை வேய்ந்தோன்'** *ல் குறிப்பிட்டது போல், தான் கொண்ட*

கொள்கையிலிருந்து கோடாது வாழ்ந்தவர் நமது கவிஞரேறு வாணிதாசனார்.

கவிஞரின் துணைவியார் திருமதி ஆதிலட்சுமி வாணிதாசன், இவர்களுக்கு ஐந்து பெண் பிள்ளைகளும், நான்கு ஆண் பிள்ளைகளுமாக ஒன்பது பிள்ளைகள், பிள்ளைகளுக்குத் தமிழ் முறையில்தான் திருமணம் நடத்தி வைத்தார்.

அவரது பிள்ளைகளும், இளவல்களும், மாணவர்களும் கவிஞரின் நோக்கத்தை இன்று வரை நிறைவேற்றி வருகின்றனர்.

அவரது வழியில் நின்று காதலோடு தமிழைக் கற்றுத் தெளிவோம். வாழ்க தமிழ். வளர்க 'வாணிதாசனார் புகழ்'



# கவி வாணிதாசன் வாழி !



வில்லியனூர் கண்ட வில்லியவன் ! கொடி
முல்லைக் கவிதந்த  ஷெல்லியவன் !
அரங்கமகன் திருக்காமு கண்ட தமிழானவன் !
சொல்லுக்குச் சுகஞ்சேர்க்க துளசியவள் மகனானான் !

உள்ளத்தில் எழுகின்ற எண்ணம் தன்னை
வள்ளலென வழங்கிநின்றார் மெய்சிலிர்க்க
துள்ளுதமிழ் மொழியழகை வாணியவள் ஈய
அள்ளுகின்ற நெஞ்சத்தில் அசையாடவைத்த தாசன் !

வாயசைத்துப் பாடுகின்ற குழவியதன் நெஞ்சம்
வாலசைத்து காட்டுகின்ற குருளையதன் நெஞ்சம்
நாவசைத்து பாடிநின்ற கனக சுப்புரத்தின நெஞ்சமதில்
நலம்பாடி நின்றதுதான் நற்றமிழின் ஆனிப்பொன் மஞ்சம் !

செவ்வல்லித் தீச்சுடர் போல் மலருங் கவி !
செந்தணலில் விழுந்தாலும் மீண்டெழுங் கவி !
செந்தமிழில் சொன்னதெல்லாம் செழுங் கவிதான் !
செவ்வானில் உதித்தெழுந்த குளிர்மதிய வளர்கவிதான் !

சென்றிடுவீர் எட்டு திக்குமென்ற பாரதியின்
செந்தமிழைச் சுமந்த பாரதிதாசனின் மாணவராய்
பொன்னி இதழ் கண்ட பாட்டுப் பரம்பரைதான் !
பொன்னலைகள் உரசுகின்ற கவிக் கடல்தான் !

கனவு ஒரு கானலென்ற கார்த்திகை விளக்கு !
கோலெடுத்தால் ? சொக்கிய நாள் வருமோ ?
போவோம் புதுவைக்கு ! அணிசெய்வோம் தமிழ்ப்
பாவைக்கு ! என வாழ்ந்த கவி வாணிதாசன் வாழி !



குலசை.அ.வேலுப்பிள்ளை
பொங்கலூர் -



# வண்டமிழ்க் கவிஞன் வாணிதாசன்

பாரதிக்கோ பாவேந்தர் ; பாவேந் தர்க்கோ
பாசமிகு மாணவராம் வாணி தாசன்
பாரதியோ தேசியத்தைப் பாடி நின்றார்
பாவேந்தர் குமுகத்தை ஏற்றி நின்றார் !
சாரதியாய் வந்தயிவர் இயற்கை தன்னைச்
சரம்சரமாய்ப் பாடியதால் நிலைத்து நின்றார்
கூரதிக வேலைப்போல் இவரின் பாட்டோ
குத்திவீழ்த்தும் தமிழ்ப்பகையை ; பஞ்சாங் கத்தை !

பொதுவுடைமை சொன்னலெனின் மார்க்சின் கொள்கை
பொலிகின்ற புரட்சித்தீப் பாக்கள் நெய்தோன்
எதுவுடைமை தமிழனுக்கு ? தமிழ்ோ டிங்கே
ஏற்றமிகு தன்மானம் உடைமை என்றோன்
பதுமையன்று தமிழச்சி ! தளையு டைக்கப்
பகுத்தறிவு வீரத்தை ஊட்டி விட்டோன்
புதுமைகளைப் படைப்பதற்கே தொடுவா னத்தைப்
பூத்தஎழில் ஓவியத்தைப் படைத்த ளித்தோன் !

வெள்ளுடையும் நிமிர்நடையும் இவரின் தோற்றம்
வேற்றுமொழி கலப்போர்க்கோ உயிரின் கூற்றம்
உள்ளொன்றும் புறமொன்றும் பேசி டாமல்
உயர்சிந்தை எல்லாமே தமிழின் ஏற்றம் !
பள்ளத்தை நோக்கிவரும் நீரைப் போல
பாட்டெல்லாம் தமிழினத்தின் மேன்மை தேற்றம்
தள்ளாமை வருமுன்னே தன்னை ஈந்து
தள்ளாமை வாராமல் தமிழைக் காத்தோன் !



பாவலர் கருமலைத்தமிழாழன்

# கொடிமுல்லைத் தந்த கோமகன்



திருக்காமுத் துளசியம்மாள் பெற்றப் பிள்ளை
தீந்தமிழின் உணர்வினிலே வளர்ந்தக் கிள்ளை
பெருநகராம் புதுவையிலே கல்விக் கற்று
பேராசான் கனகசுப்புக் கருத்தை பெற்று
உருபெற்றக் கவிதையினை உள்ளம் வைத்து
ஊருலக ஒற்றுமையை தன்னுள் தைத்து
பருவதத்தின் மேல்நின்ற வாணி தாசன்
படிக்கின்ற அவன்புகழை நேசன் நானே !

வெடித்ததுவே கவியூற்று வோட்சு வொர்த்தாய்
வேற்றுமொழிப் பலயாவும் உதட்டின் மேலே
கொடிமுல்லைக் காப்பியத்தில் அறிவு மங்கை
கொண்டதொரு காதலனைக் காண ஏங்கி
வடித்தமனம் துன்பமதை வாணி தாசன்
வரிவடிவில் சொல்லமைத்த வாழ்க்கைப் பாடம்
கடித்துண்ணக் கனித்தேடும் மனிதர் யாரும்
கைக்கொள்வீர் அரங்கசாமி கவிதை ஒன்றை!

மண்வேண்டாம் பொன்வேண்டாம் மகிழ்வும் வேண்டாம்
மாநிலத்தில் தமிழ்தவிர எதுவும் வேண்டாம்
கண்ணிமைப்போல் காத்துவரும் கன்னி எந்தன்
காலமெல்லாம் தமிழினையே உண்டு வாழ்வேன்
திண்ணமுடன் வாழ்ந்துவந்த பொதிகை நீதான்
தீண்டாமை எதிர்த்துவந்த தியாகி நீதான்
பண்பட்டச் சொற்றொடரில் பாவை ஆக்கி
பாவலராய் கவிஞரேறாய் பட்டம் பெற்றே !




**கவிஞர்.பெ.கலியன்**

தலைவர் பொதுமறைத் தமிழ்ச் சங்கம், விழுப்புரம்



# கவிஞரேறு வாணிதாசன்

துள்ளிவரும் கவியெனவே வாணி தாசன்
. தூயமணி ஒன்பதென இனிக்கும் கேட்டால்
அள்ளிவரும் தமிழ்மணக்கும் அருவி யாக
. ஆற்றலுடை செயலாக அரும்பி நிற்கும்
தெள்ளுதமிழ் இசையோடு இணைந்தி ருந்து
. தீங்கனியாய் சுவைகொடுக்கும் படிக்கும் போது
வெள்ளியென தங்கமென உயர்ந்த சொற்கள்
. வேலெனவே தைக்குமொரு வெற்றி நோக்கி

குருவெனவே பாவேந்தர் ஏற்ற தாலே
. குவலயத்தில் அவர்க்கீடாய் கவிகள் யார்த்து
திருவிளங்கும் யாப்புவகை திசைகள் போற்றும்
. தேசத்து. புலவருக்கு ஈடு செய்யும்
கருவிலொரு பண்பாட்டு மரபு நிற்கும்
. காலத்தில் அழியாத கவிதை தந்தார்
அருமருந்தாய் அறமுடைய சொற்கள் எங்கும்
. அகமுடைய தமிழோர்க்கு அரங்க மாக

புதுவைக்கு புகழ்சேர்க்கும் கவிஞ ரேறு.
. பொங்கிவரும் காவிரிபோல் புதிய சொற்கள்
எதுகைகளும் மோனைகளும் இலகெ னத்தான்
. ஏங்கிவந்து குடிபுகுமே இசையி னோடு
பொதிகைவளர் தென்றலென மேடை வீசும்
. பூந்தமிழை இலக்கியத்தில் காணும் போது
அதிமதுரம் சுவைக்குமொரு கவிகள் தந்த
. ஆற்றலுடை வாணிதாசன் புகழில் வாழ்க!



**கலைமாமணி வை.இராமதாசு காந்தி**
துணைத் தலைவர் தமிழ்நாடு புலவர் பேரவை.
புதுச்சேரி.




## எங்கள் வாணிதாசனார் வாழிய, வாழியவே !

எழுதுகின்ற எழுத்துகளோ பாரை ஆளும்,
எனையீன்ற தமிழ்த்தாயின் புகழைப் பாடும்,
வழுவனைத்தும் இவர்நடைக்குப் பயந்து சாகும்,
வளங்கொழிக்கும் வாழ்வியலோ மணம்வி ரிக்கும்...
மழுவாகி மூடயிருள் தன்னைக் கொல்லும்,
மாண்பாகிச் சான்றோர்க்கு வணக்கஞ் சொல்லும்,
விழுதாகித் தமிழ்காக்கும் வாணி தாசன்...
வெல்புவியில் உயிரிருக்கும் வரையில் வாழ்வார் ! 1

பெரும்புலவர் பலரமைத்த அமுத வானில்;
பேரரம்பைத் தமிழ்த்தாயை உலவச் செய்தார்.
கரும்பெடுத்து வில்லமைத்து நாணும் பூட்டிக்,
கற்பகப்பூ அம்புசெய்து போர்தொ டுத்தார்.
கருப்பொருளே, புதுச்சேரி விடியல் மேரே,
கலையன்னை ஈன்றெடுத்த திறவு கோளே;
திருவமைந்த பெரும்பேறே! வாணி தாசன்,
தீந்தேனே, தினைமாவே வாழ்க! வாழ்க!! 2

குழிபறித்துத் தமிழ்புதைக்க எண்ணு வோரின்
குள்ளநரிச் சிந்தையெல்லாம் வேர றுத்தார்
வழியமைத்த தமிழன்னை படர்ந்து பூக்க
வளமான பன்னூல்கள் படைத்த ளித்தார்
அழியாத கவிநூல்கள் அழகின் ஓடை
அறமீனும், நலவாழ்வு நற்சி லேடை
விழிக்கூர்மை, நேர்சிந்தை, புரட்சிப் பார்வை
விதைத்திட்ட வாணிதாசர் வாழ்க! நன்றே! 3



கவிமாமணி **கட்டிக்குளம் ஒ.சுந்தரமூர்த்தி,**
மாநில நல்லாசிரியர்,



## செந்தமிழில் சிகரம் தொட்ட உவமைக் கவிஞர்
## கவிஞரேறு வாணிதாசனார்

பாரதிதா சனார்க்குப்பின் கவியின் வேந்தர்
பார்புகழும் கவிஞரேறு வாணி தாசன்!
நேரெனவே இலக்கணத்தில் புலமை பெற்றார்
நிலையான மரபுவழிக் கற்றுத் தேர்ந்தார்!
காரெனவே தமிழ்க்கவிதை பொழிந்து மக்கள்
கல்விக்கே வாணியென புகழைப் பெற்றார்!
தாரணியில் செவாலியேநல் விருது பெற்றார்
தனிப்புதுவை புலமையிலே நிமிர்ந்து நின்றார்!

எழிலோவி (யம்) இன்சுவையின் விருந்து தானே
இன்பத்தின் இலக்கியமும் இனிய நூலாம்
வழிவழியாய் குழந்தைகளின் இலக்கி யந்தான்
வரலாற்றில் நிலையாக நின்று வாழும்!
விழுதாக தீர்த்தவொரு யாத்தி ரையும்
விளக்கெனவே தமிழச்சி நூலு மாக
பழுதில்லா நன்மொழியில் நூலும் செய்தார்!
பகர்ந்தவொரு அறநெறியில் வாழும் யென்னாள்!

கவிதையிலே உவமையது சிறப்புத் தந்தார்!
கற்றாளர் ஆய்வாக முனைந்தே கற்றார்!
அவணியிலே போற்றிடுவார் உவமைக் கவிஞர்
அணித்தமிழின் அழகினிலே ஆற்றல் பெற்றார்!
சுவையான சொற்றொடரில் சுகத்தைக் கொண்டே
சுந்தரமாய் படைத்தாரே வாணி தாசன்!
செவிக்குநல் விருந்தாகும் படைக்கும் பாடல்
செம்மையுடன் தமிழ்நடையில் சிகர மேறும்!



பாவலர்/செவிலியர்
மு.விசய சாமுண்டீசுவரி
புதுச்சேரி

## கவிஞரேறு வாணிதாசன் கனித்தமிழாய் வாழியவே !



புதுச்சேரி மாநிலத்தில் புகழாய்ப் பூத்த
புரட்சிக்க விஞர்போற்றும் புதுமைச் செல்வர்
விதந்தோதும் கவியுலகை விரும்பி நாளும்
வெண்ணிலவாய் ஒளிக்கூட்டி விரிவான் காண
பதம்பார்த்து நிதம்கோத்து பண்பைப் பெய்து
பலநூல்கள் பலகவிதை பாங்காய்ச் செய்து
இதயங்கள் பலவீர்த்த ஏறு போன்று
எழுந்திட்ட பெருங்கவிஞர் வாணி தாசன் !

வில்லியனூர் போற்றுகின்ற அமுத ஊற்றாய்
வில்லம்பாய்ப் பயணித்தார் வேளை தோறும் ,
பள்ளியிலே பலகனவு படிக்கும் போதே
பற்பலவும் சிந்தனைகள் பதிய மிட்டு
துள்ளியெழும் மானைப்போல் கவிஞ ரேறு
தொலைநோக்குப் பார்வையிலே கவியு மீந்தார் ,
வெல்லுமிவர் கவியெல்லாம் விருந்து வைக்கும்
வெடிச்சொற்கள் பறந்துவர நெஞ்சில் தைக்கும் !

இயற்கையினைப் பாடுவதில் இன்பம் கொண்டு
எல்லையிலாப் பாடல்கள் எழுதித் தந்தார் ,
செயற்கையல்ல அத்தனையும் செம்பொன் வைரம்
சீர்திருத்தக் கருத்துக்கும் சொந்தக் காரர்
நயந்தேற்றும் அடிகளெல்லாம் ஞால மீர்த்து
நன்னெறியை வளர்ப்பதிலே எண்ணங் கொண்டார் ,
மயக்கமதைத் தருகின்ற மலர்கள் போல
மணிக்கவிதைப் பொழிந்திட்ட மேக மானார் !

இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் யாத்து
இவ்வுலகோ வாழ்வதற்கோ வழியும் சொல்லி
கருப்பொருளாய் உருமாற்றி கவிதை தன்னில்
காணுகின்ற புதுமையெல்லாம் கொட்டிச் சேர்த்தார்,
நறுமணத்தில் மிளிர்கின்ற முல்லைப் பூக்கள்
நாளெல்லாம் அதனழகோ கூடக் கண்டோம்,
அருங்கவிஞர் வாணிதாசன் புகழோ என்றும்
அகிலத்தில் உயர்ந்துநிற்க அளித்தேன் வாழ்த்து !



கவிஞர். அ. முத்துசாமி,
தாரமங்கலம் .



# பொது வாழ்வு வாழ்ந்தார் நன்றே

தமிழ்மொழியை இயற்கையினை பொதுவுடைமை
பகுத்தறிவைப் பாட்டில் வடித்தே

அமிழ்தமென அனைவருக்கும் சுவையுடனே
அளித்திட்ட கவிஞரேறு!

இமியளவும் கொள்கையினில் இடறாமல்
வாழ்ந்திட்ட வாணிதாசர்

தமிழ்ப்போல இளமையுடன் தழைத்தோங்கி
வாழ்கின்றார் உண்மை அன்றோ!

ஆசிரியர் பணியாற்றி அருந்தமிழில்
சுவையான பாக்கள் யாத்து

மாசிலாத மணியாகப் பாக்களிலே
எளிமையினை ஆக்கித் தந்து

காசிலாத ஏழையர்க்கும் கடும் உழைப்பால்
வளமாக்கும் கருத்தை ஊட்டித்

தூசியெனத் தமிழ்ப்பகையைத் துளியளவும்
அஞ்சிடாமல் வாழ்ந்திட்டாரே!

கொடிமுல்லை தமிழச்சி பொங்கற்பரிசு
கூறும் நல் இலக்கியங்கள் குழந்தையின்பம்

தொடுவானம் எழில்விருத்தம் இனிக்கும் பாட்டு
சிரித்தநுணா பாட்டரங்கப்பாடல் தீர்த்த

நெடுயாத்திரையில் பாட்டு பிறக்குமடா
இரவு வரவில்லை எழில்வாணி தாசர்

தொடுத்தகவிஇரு தொகுப்பும் சேர்த்துப் பதினாறுபேறு
பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தார் நன்றே!



பாவலர் த. மன்றவாணன்
சேலியமேடு 607402

**தமிழகத்தின் வேர்ட்சுவெர்த்**

பாவலர் மணியாய் நெஞ்சில்
 பாமணம் மணக்கப் பாடித்
தூவலும் கொடுத்த செய்தி
 துளிர்ப்புடன் சிலிர்க்கச் செய்யும்
மாவளம் நிறைந்து பூக்கும்
 வாணிதாசர் பாக்கள் நெஞ்சில்
பாவலர் ஏறாய் நிற்கும்
 பாவேந்தர் வழியில் வெல்லும்!

பாரதி தாசன் போல
 பாடலும் வியக்கச் செய்யும்
சாரதி ஆக நின்று
 சர்க்கரைத் தமிழைச் சொல்லும்
சாரலாய் உள்ளம் தொட்டுத்
 தமிழுக்குத் தொண்டும் ஆற்றும்
ஆரலாய்த் துள்ளும் கொஞ்சும்
 ஆதவன் கெஞ்ச மிஞ்சும்

ஓடையில் மகிழ்ந்தே ஆடும்
 உள்ளத்தைக் கவர்ந்தே சாய்க்கும்
வாடையின் குளிராய் வேயும்
 வானவில் நிறமாய்ப் பாயும்
மேடையில் இயற்கை பேசும்
 மென்மையில் மலராய்ப் பூக்கும்
காடுகள், மரங்கள், விண்மீன்
 கவினுறு அழகாய் வாழும்

சேவாலியர் விருது பெற்றே
 சிறந்தநல் கவிஞ ரேறாய்த்
தூவானப்பன்னீர் போலத்
 துலங்கிடும் இனிய நல்லார்
மேவிடும் தாகூர் ஆக
 மிளிர்ந்திடும் எழுத்தின் தூய்மை
தூவலில் வேர்ட்சு வெர்த்தாய்த்
 தொழுதிடும் நாடும் நன்றே!!



**தென்றல்கவி தமிழ்ச்சிட்டு**

பட்டுக்கோட்டை



# தமிழன்னையின் புதல்வன் வாணிதாசன்

தமிழன்னை பெற்றெடுத்த தன்னிகரில்லா தவப்புதல்வனே.
புதுவைக்கு புகழ் சேர்த்த பெரும் புலவர் வாணிதாசனே
பாவேந்தர் பாசறையில் முத்தாய் நிலைத்தவனே
முத்தமிழை சத்தாய் சத்தமி ல்லாமல் கொடுத்தவரே

அலை கடலாய் பரவி வரும் அமுத சொற்களை
அனைவரையும் சான்றோராக்க அள்ளிக் கொடுத்தவரே
செழுமைமிகு செந்தமிழை செழிப்புடனே எழுச்சி கொண்டே
பா வடிவில் பரிசளித்தவரே

இதழ்விரிக்க மலர்ந்த பூவெல்லாம்
வானவில்லாய் தோன்றி தமிழ்மனம் வீசுதய்யா
மனதை வளமாக்கி இன்பத்தை கொடுத்து
மழை போல் பயனை வழங்கியதே

புவியின் கீழ் நீரூற்று வையத்தில் உன் பாட்டு
தமிழுக்கு தேனூற்று குழந்தைக்கு தாலாட்டு
உழைக்காமல் செல்வம் இல்லை உற்ற தமிழை படிக்காமல்
உயர்வில்லையே அறமும் இல்லையே


**செந்தமிழ்ச் செல்வர். பொன் முருகன்**
தலைவர்
கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கியப் பேரவை
புதுச்சேரி.





# வாணியின் புகழ்

சிப்பியில் முத்தாய் பல
சிறப்பான கவிதைகள் அளித்து
புரட்சிதனை மனதில் விதைத்து
புரட்சி அகத்தின் ஒளியாய் திகழ்ந்தாய்
அறிவைப் பெருக்க நல்ல
அறக்கருத்துக்கள் அளித்து
மூடநம்பிக்கை எனும் முள்ளறுத்து
முயற்சி எனும் வேர்பிடித்து
காவியங்கள் பல படைத்த
கவி வாணிதாசனே
உம்புகழ் பாட வாய்ப்பு ஒன்று கிடைத்தது
தமிழால் உனை பாடி மகிழ்கின்றேன்


## மு.கனியமுது

**கவிஞரேறு வாணிதாசனார்**
**கலை இலக்கியப் பேரவை**
**புதுச்சேரி**



# கவிஞரேறு வாணிதாசன் வாழ்க!


( அறுசீர் விருத்தம் )

பாவேந்தன் மாணாக் கன்நீ
பண்பாளன்., பைந்த மிழ்த்தேன்
நாவேந்தி வாழ்ந்த எங்கள்
நல்லாசான் வாணி தாசன்!
பூவேந்தும் மணமாய் அன்று
பொற்‘கொடி முல்லை‘தந்தாய்!
சாவேந்தா உன்னெ முத்தில்
‘தமிழச்சி‘ என்றும் வாழ்வாள்!

புதுவைக்குப் பெருமை சேர்த்தாய்!
புதுமைக்கோர் ‘தொடுவானம்‘ நீ!
எதிலுமுன் இயற்கைப் பார்வை!
எமக்குநீ வோர்ட்ஸ்வர்த் தானே!
கொதிகலன் போன்ற பேச்சு!
குள்ளர் முன் உமது தீர்ப்பு!
எதுவரின் அஞ்சாய்! எங்கள்
எழிற்றமிழ்க் கோ நீ காப்பு!

செங்காந்தள் தமிழ நாட்டின்
தேசிய மலராம்., நீயும்
இங்கந்த பெருமை பெற்றாய்!
‘எழிலோவி யமே‘ யாம் உன்னைத்
தங்கமாய்ப் போற்று கின்றோம்!
தமிழ்நாட்டில் வந்து தித்த
வங்கத்துக் கவிஞ தாகூர்
வாணிதா சன் நீ வாழ்க!

- வங்கனூர் அ.மோகனன் .



# வாணிதாசன்!

(நாற்சீர்த் தாழிசை)


புதுவை வில்லியனூர்
பெருமையுடன் நமக்களித்த
புதுமைக் கவிஞனே
புரட்சிமிகு வாணிதாசன்!

அரங்கத் திருக்காமு
அன்புத் துளசியம்மாள்
வரமுடனே ஈன்ற
வரகவியே வாணிதாசன்!

ஆதிலட்சுமி அருங்கணவராய்
அகிலமெங்கும் கவிமுழங்கி
வீதியெல்லாம் தமிழ்வளர்த்த
வேள்விச்சுடர் வாணிதாசன்!

பாரதி தாசனின்
பரம்பரைக் கவிஞனாய்ப்
பாரதிர முழக்கமிட்ட
பாவலர்மணி வாணிதாசன்!

இயற்கையன்னை வரம்பெற்ற
எத்திராசுலு அரங்கசாமியே
வியப்புமிகு தமிழகத்தின்
வேர்ட்ஸ்வொர்த் வாணிதாசன்!



பிரெஞ்சு அரசின்
பெருமைமிகு செவாலியர்
விருதுபெற்ற தமிழ்த்தாகூரே
விந்தைக்கவி வாணிதாசன்!

எழிலோவியம் கொடிமுல்லை
இனிக்கும் பாட்டு
எழில்விருத்தம் தொடுவானம்
இயற்றியவரே வாணிதாசன்!

கெஞ்சி வாழ்தல்
நஞ்சினுங் கொடிதென்ற
விஞ்சிய கொள்கைவழி
வாழ்ந்தவரே வாணிதாசன்!

சாகித்ய அகாதெமி
கவிதைக் களஞ்சியத்தின்
யூகியாம் கவிஞரேறே
உலகம்புகழ் வாணிதாசன்!

பன்மொழிப் புலவராய்ப்
பார்போற்ற வாழ்ந்த
தென்மொழி வித்தகரே
தீந்தமிழ்க்கவி வாணிதாசன்!

தமிழ்பிரெஞ்சுக் கையகரமுதலி
தகுதியுடனே வெளியிட்ட
தமிழ்க்கவி வாணிதாசன்
தரணிபோற்ற வாழ்கவே!

கோடி கொடுப்பினுங்
கொள்கையிற் கோடேலெனும்
நீடிய கொள்கைக்கவி
நீடூழி வாழ்கவே!

**புலவர் சு.முத்துசாமி**
தூத்துக்குடி


*( ஈரடித் தாழிசை
சார்ந்த 12 கவிதைகள்-
12×2=24அடிகள்)*

## மக்கள் கவிஞர் வாணிதாசன்



புதுவை போற்றும் புகழ்மிகு பாவலர்!
புதுமைப் பாக்கள் புனைந்த புலவர்!
ஆண்டான் அடிமை முறையை அறவே
பூண்டுடன் களைந்து பலரும் வாழவே
என்கிற கருத்தை ஆழ் முடனே
தன்பாட் டின்வழி யேஉணர வைத்தவர்.
உழைக்கும் உழவுத் தொழிலை உயர்வுடன்
தழைக்கும் வகையில் தாங்க வேண்டும்!
அதனால் தானே பசிப்பிணி போக்கி
இதமாய் வாழலாம் என்றார் இவரே!
தனியுரி மைக்குமு காயம் தரணியில்
தனித்தே செழித்த தாலே எங்கும்
பஞ்சமும், பசியும், பிணியும், நாட்டில்
அஞ்சாமல் இருந்தே ஆட்சி செய்தது!
இதனைக் கண்ட வாணி தாசன்
பதமாய்ப் பாட்டில் பாடினார் நன்றே!
உழைக்கும் மக்கள் வாழ்க்கை உயர
உழைப்பின் கூலி உயர்த்திட வேண்டும்
என்றும் கிடைக்க வில்லை என்றால்
புயல்பொல் எழுக, புரட்சி செய்க!
என்கிற பொதுவுடை மையைக் காட்டினார்!
தன்நிலை உயரத் தன்மானம் வேண்டுமே!
மற்றவர் வாழ்ந்திட, ஓயாமல் உழைத்த
குற்றம் இல்லா ஏழைச் சேரி
மக்கள் துன்பம் கண்டே துடித்த
அக்கறை கொண்ட கவிஞர் இவரே!

**பாவலர் வ. பழனி**
*குயவர் பாளையம் புதுச்சேரி - 605013.*



# பாட்டுவேந்தர் பாவலரேறு வாணிதாசன்

மடை திறந்த வெள்ளம்போல் பாடல் தந்து
மாபுகழைப் பாட்டாலே
வென்று காட்டி
கடைமடையும் நிரம்புகின்ற நீரைப் போல
கனிதமிழின் இன்பத்தை
ஊட்டி விட்டார்
இடைமெலிந்த பாவையினைக் காட்டி டாமல்
இனமான தமிழச்சி
பாவி யத்தில்
படைவீரன் போலயிங்கே பாட்டு வாளை
பளீரெனவே வீசிட்ட
பாட்டு வேந்தர்

நண்டுதடம் பார்க்கின்ற நரியைப் போல
நற்றமிழில் கால்பதிக்கும்
பாடல் தந்தார்
வண்டுசுற்றும் பூந்தோட்டம் போல இங்கே
வளமான தேனடையாய்
பாக்கள் ஈந்தார்
வெண்டைவிதை வெடித்திங்கே பரவல் போல
வெல்லுகின்ற பாவாலே
திசைகள் கண்டார்
மண்டைக்குள் சுரந்திட்ட இயற்கை ஊற்றாய்
மதிமிகுந்த செந்தமிழால்
வெற்றி கொண்டார்.

வயல்வரப்பில் நடைபயிலும் கொக்கு போல
நண்டுநத்தை தேடுகின்ற
நாரை போல
கயல்விழியாய் துள்ளுகின்ற கெண்டை போல
கதிர்விளைந்து நிலம்பார்க்கும்
செயலைப் போல



பயிர்நடுவே தலைநிமிர்ந்த களையைப் போல
பகுத்தறிவால் மறைந்துவிடும்
மடமை போல
உயிரான தமிழ்மொழியைப் போற்றிப் போற்றி
உரிமையோடு வாணிதாசன்
பாக்கள் தந்தார்

வான்முட்டும் கற்பனைக்குச் சொந்தக் காரர்
வயல்நிலத்தைப் போலயிங்கே
மனப்ப சிக்கு
தான்மட்டும் விருந்தளிக்கும் ஆற்றல் பெற்றார்
தன்மான உணர்வோடு
படைப்பு தந்தே
ஏன்?எதற்கு? என்றவினா எழுப்பு கின்ற
ஏற்றமுள்ள சிந்தனைக்கு
வித்தும் இட்டே
கூன்பிறையாய் இல்லாமல் மொட்டு போல
கும்பிட்டு வணங்குகின்ற
பாக்கள் தந்தார்

இயற்கையினை வாணிபோல எவரு மிங்கே
இதுவரையில் பாடியது
யாரு மில்லை
பயிரழிக்கும் பூச்சிகளை அகற்றல் போல
பரிதியினால் காரிருளும்
நீங்கள் போல
தயிரினிலே திரளுகின்ற வெண்ணெய் போல
தமிழினிலே வாணிதாசன்
பாடி வைத்த
உயிரனைய பாட்டாலே வாழு கின்றார்
உயிர்நேயம் கொண்டவராம்
வாணி தாசன்

**புதுவைத் தமிழ்நெஞ்சன்**





# திங்கள்போல் நின்றாரே தீந்தமிழர் வாணிதாசர்

தமிழ்ப்பற்று  மிக்காரைத் தயங்காமல் கூடி
தமிழ்மரபைக் காத்தாரே தமிழ்த்தொண்டை நாடி
அமிழ்தமிழே ஒளிர்ந்திடவே அருங்கவிதை யாத்தே
அருந்தமிழர் மனத்திடையில் அகலாமல் நின்றார்
உமிழ்கின்ற சிப்பியினுள் ஒளிர்ந்திருக்கும் முத்தாய்
உலகெங்கும் வாணிதாசர் உரமிட்டார் சத்தாய்
சிமிழ்தன்னில் உறைந்திருக்கும் சிங்காரப் பொட்டாய்
சிலிர்க்குமவர் எழுத்துடனே  சீர்பெருகும் பாட்டே

வானருவி போலவரும் வாணிதாசர் சொற்கள்
வண்டமிழால் இனித்திடுமே கவிமுத்துக் கற்கள்
தேனருவிப் பரம்பரைதான் தேன்தமிழைப் பாடும்
தென்றல்போல் வருடியேதான் தென்பொதிகை சூடும்
கானருவி  இன்னோசை கவியினிலே மிஞ்சும்
கவிஞரேறு என்றேதான் கவியுலகம் கொஞ்சும்
ஈனரிவர் என்றாலே இரங்கிடாரே  இவரே
இழிசொல்லால் பழித்தேதான்  இறுக்குகவி ஏறே

தாய்தந்தை  இட்டபெயர் தரணியெங்கும் ஒலிக்க
தன்பெயரை ரமியென்றே தந்தாரே கவியில்
வாய்மொழியில் பாவேந்தர் வரம்பெற்றே  உயர்ந்தார்
வரும்வழியில் கவிபுனைவில் வாரிசாக நின்றார்
தாய்மொழியில் அவரவர்கள் தம்மொழிக்குப் பெயர்த்தார்
தரமுடனே இவர்கவிதை தரணியெங்கும் பரவ
காய்போன்றே கசந்திடாதே கனியாக்கும் வகையில்
கனிவுடனே ஆசானாய் கருத்துடனே நின்றார்

நல்லூற்றுப் போலாக நற்கவிதைப் பொங்க
நல்லமுதாய் வலம்வந்தே பாட்டாகி நிற்கும்
பல்லிதழாய் ஒட்டிநிற்கும் பண்ணிசையும் சொல்லும்
பழகுதமிழ் சொல்லருமை பாட்டாலே வெல்லும்
சொல்லினிலே வார்ட்ஸ்வொர்த்தே சொல்லிடுமே பாரே
சோலைவயல் சூழ்ந்திடும் சேலிமேடே ஊரே .
கல்லினிலே தேரைபோல் கவியுனுள்ளே உயிரும்
சொல்லழகில் பொருளழகில் சோராதே உயரும்.

சிறப்புடைய சிரித்தநுணா சீரினிக்கும் பாட்டு
சீர்குன்றா மரபினிலே சீம்பால்தேன் கூட்டு
பிறக்குமடா என்றேதான் பிறப்பித்தார் கவிகள்
சிறக்குமது கொடிமுல்லை சீரதுபோல் உண்டோ
கறக்குமடா பால்போலே கனிதமிழில் சொற்கள்
சுரக்குமடா தேன்தமிழாய் சுடர்விடுமே பாரீர்
மறக்குமடா பிறவனைத்தும் மயக்கிடுமே மொழியே
திறக்குமடா செவியெல்லாம் தீந்தமிழின் கவியே

பொங்கலுக்குப் பரிசுதந்தார் பொற்றமிழில் பாட்டு
பொன்னான குழந்தைக்கும் பொற்றமுதப் பாட்டு
கங்குலுக்கும் பாட்டெழுதி கவியின்பம் தந்தார்
கசிந்துருக எழில்விருத்தக் கவியமுதை தந்தார்
திங்கள்போல் உலவிடும் தீந்தமிழின் கவியில்
திகழ்கின்றார் மக்களுள்ளே தித்திக்கும் மொழியில்
நுங்கைப்போல் நலம்சேர்க்கும் நுண்ணமுதக் கவிகள்
நூற்றிடுவோம் நம்மனதில் நூலாக்கி நாமே !





**பேராசிரியர் புதுவைக் கிருட்டினா,**
தலைவர், தலைநகர் தமிழ் மன்றம்.



# கவிஞரேறு வாணிதாசனார்!

(நிலைமண்டில ஆசிரியப்பா)

புதுவையில் பூத்த
பொலிவுக் கவிஞர்
இதயம் ஈர்த்த
இனிய புலவர்!

பாரதி தாசனின்
பரம்பரை தானே
சீருடன் தமிழைக்
கண்டார் தேனாய்!

பிரெஞ்சு மொழியிலும்
புலமை பெற்றவர்
சிரித்த நுணாவைச்
சிறப்பாய் உற்றவர்!



தமிழ கத்தின்
தக்க வேர்ட்ஸ்வேர்த்
கமழும் பாவலர்
மணியே ஆனார்!

பனுவல் பலவாய்ப்
படைத்த கவிஞர்
இனிக்கும் கவிதை
ஈடின்றிப் படைத்தார்!

இயற்கைப் புனைவு
இனிய வகையில்
நயன்மை யோடு
நனிசிறக் கும்மே!

தமிழ்நாட்டுத் தாகூர்
தக்கநல் பட்டம்
அமைந்திடக் கண்டார்
அன்பாய்த் தானே!

அரங்க சாமி
அழகுப் பெயரே
அரங்கம் வாணி
தாசனாய் ஆக்கியதே!

கவிஞ ரேறு
கனிவாம் வாணிதாசன்
உவகைக் கவிதை
உருவாக்கு வாரே!

பாவலர் மணியெனும்
பட்டம் பெற்றே
ஆவலாய்த் தமிழில்
அடைந்தார் அழகே!

பாரதி தாசனின்
பாங்கான சீடர்
பாரம் பரியப்
பாக்களின் அரசன்!

திண்ணைப் பள்ளியில்
சேர்ந்து பயின்றவர்
வண்ணக் கவிஞரை
வாழ்த்திடு வோமே!

முனைவர்
**இராம.வேதநாயகம்**
வடமாதிமங்கலம். 606 907.
திருவண்ணாமலை மாவட்டம்.

# அமுதகவி வாணிதாசன்

செங்கதிரோன்  வரவை தொடுவானை
சேர்க்கின்ற கார்மு கிலினழகை
எங்கெங்கும் பரவும் பேரொளியை
ஏற்றமிகு தமிழின் இன்சுவையை
பொங்குகின்ற எழிலாம் புதுநிலவை
பூக்கின்ற மலரின் புதுப்பொலிவை
தங்கமாக மிளிரும் தீந்தமிழை
தரணிக்கு உரைத்த அமுதகவி

பொதுவுடமைக் காக்க பாட்டெழுதி
புதுமைத்தீ  வளர்த்தார் கவிவாணி
மதுரகவி வடித்த பாட்டெல்லாம்
மதிமயக்கும் தமிழின் தீஞ்சுவையாம்
புதுமையினை பாட்டில் நிலைநிறுத்தி
புரட்சியினை விதைத்த மாமனிதர்
பதுமையையே போற்றிப் பாத்தொடுத்தார்
பைந்தமிழில் வீரம் விதைத்துவைத்தார்

பகுத்தறிவை போற்றும் நெறிகொடுத்தார்
பகுத்துண்ணும் பொதுமை வழிவகுத்தார்
மிகுதியாக புரட்சி போற்றிட்ட
மேன்மைமிகு இயற்கை கவிஞரிவர்
வெகுண்டெழுந்தார் தமிழ்நாட் டின்தாகூர்
வேரறுத்தார் கைம்மை கொடுமையினை
தகுந்தமொழி தமிழின் திறன்கொண்டார்
தமிழச்சி படைத்தே புகழ்கொண்டார்

முற்போக்கு கருத்தால் கவர்ந்திழுத்தார்
முரண்பாட்டை விலக்கித் தடம்பதித்தார்
கற்கண்டு சொல்லால் கவிபடைத்தார்
காதலின்பம் சேர்த்தே நெகிழவைத்தார்
கற்பனையின் ஊற்றால் பாட்டிசைத்தார்
காவியங்கள் படைத்த கவிவாணர்
பொற்காலம் கண்ட கவிஞரேரை
போற்றியென்றும் வணங்கும்  தமிழுலகம்



**பாவலர் வளர்மதி முருகன்**
செயலாளர்
கவிஞரேறு வாணி தாசனார் கலை இலக்கியப் பேரவை
புதுச்சேரி



# வாணிதாசனார் பாநயம்!

தெளிந்தநடை கொண்டதுவாம் வாணிதாசன் பாடல்
சீர்கொள்கை கண்டதுவாம் வாணிதாசன் பாடல்
குளிர்ந்தநிழல் கூடுமின்ப நலன்யாவும் பொலியும்
கோலோச்சும் நற்கருத்துக் கவிதைகளாம் புதையல்
தளிர்ந்தகொடி படர்ந்திடவே கொம்பாக அமையும்
தடம்பதிக்கும் அவர்கவிதை இலக்கணங்கள் பொதியும்
மிளிர்வானத் தோற்றமதில் விண்மீனாய் ஒளிரும்
வியக்கவைக்கும் கவிதைநயம் விளைக்குமின்பம் மிளிரும்!

கரையோடும் அலைநீரும் அழகாகப் பரவும்
கவின்மிக்க பாடலுமே மென்மையதாய்த் தழுவும்
புரையோடும் பழைமையதாம் பழக்கங்கள் பலவும்
பொலிவிழந்து போய்விடுமே கவிதைதருங் கருத்தால்
தரைவாழும் மன்பதைக்குத் தக்ககருத் தூட்டித்
தவழுகின்ற இயற்கையையும் படமெடுத்துக் காட்டும்
இரையூட்டும் மொழிப்பாடல் நெகிழ்வூட்டு மாறே
எல்லோர்க்கும் புரியவைக்கும் வாணிகவி தானே!

மேல்நாட்டுச் செல்லியென மேலோர்கள் சொல்வர்
மேன்மையதாம் அவர்பாடல் இன்பநலங் கண்டே!
சால்புற்ற அன்னாரின் தகைமிக்க பாடல்
சான்றோரின் அறிவிற்கே சத்தாகத் திகழும்!
நூல்காட்டும் நற்புலமை நிறைந்திருக்கு மாறு
நுகரயின்பம் தந்திடுமே நூறுகோடி இன்பம்!
வேல்கொண்ட கூர்போல வாணிதாசன் பாடல்
விளங்கிடுமே எந்நாளும் பாவுலகில் தானே!



**கலைமாமணி, பாவலர். கோ. கலியபெருமாள்**
பெத்துச் செட்டிப் பேட்டை, புதுச்சேரி – 605 008

# வாணிதாசன் பார்வையில் தமிழ்

தமிழ்மொழியும் பிரெஞ்சுமொழி யும்தரமாய்க் கற்றே
தமிழ்மொழிக்கே முன்னுரிமை தந்திட்டார் வாணி
தமிழாசி ரியராகத் தம்பணியை ஆற்றித்
தமிழ்த்தொண்டு செய்திடவே தன்னார்வம் கொண்டார்
அழிழ்தான தமிழினையே அகத்திடையில் ஏற்றி
அகங்குளிரும் கவிதையினை அனுதினமும் யாத்துச்
சிமிழ்விளக்கில் எரிகின்ற சிறுதிரியைப் போலே
சிங்காரத் தமிழ்மொழியைச் சீர்பெறவே செய்தார்.

தமிழ்த்தாயை உளமேற்றி ஒண்டமிழில் தந்து
தமிழாக வாழ்ந்திங்கே தனித்தன்மை உற்றார்
தமிழழகின் சிறப்பெண்ணி உவமைகளை ஏற்றித்
தமிழமுதைப் படைத்தளித்தே தமிழ்நெஞ்சம் சென்றார்
தமிழ்த்தாயை ஓவியத்தில் உயிராகக் கண்டு
தமிழ்ச்சோலை தரும்கனியும் தமிழே என்றார்
இமைப்பொழுதும் தமிழ்த்தாயை மறவாமல் போற்றி
எழிலுறவே பாமலரைச் சூடினாரே நன்றே!

கலைவடிவாய்க் காளைநெஞ்சின் வீரத்தா யாக
கண்மணியாய் வாழுகின்ற வள்ளுவரைத் தந்து
கலங்காத மனங்கொண்ட தாய்த்தமிழை எண்ணிக்
காலமெல்லாம் அன்புமலர் சூடிமகிழ்ந் தாயே!
உலகமொழி யாவினுமே முன்னிலையில் உற்றே
உளமகிழ மாத்தமிழாய் உருவெடுத்த தாயே!
உலகத்தின் மூத்தவளாய்த் தமிழ் மொழியே என்றும்
உயிராக உணர்வினிலே ஊன்றிவிட்டாய் நீயே!

தமிழெங்கள் உயிர்உடம்பென் றேஉரைத்து யாண்டும்
தலைதாழ்த்தித் தமிழுயர வணங்கிடுவீர் என்றார்
தமிழினும்நல் அமுதுண்டோ உலகில் கண்டே
சாராதார் நிலையெண்ணி வாட்டமுற்றார் அன்றே!
தமிழ்த்தாயும் தந்தமொழி தமிழையென்றும்
சங்கீத இசையாகப் பெய்திடுதல் இன்பம்
தழைத்தோங்கும் சேய்உறவோ டொன்றி வாழ்வில் பண்டும்
தனிநிலையாய்த் தமிழோங்க விழைந்தவாணி நீரே!

கலைமாமணி,
நல்லாசிரியர்
**வெ. கிருட்டினகுமார்**
காமசர் ஆசிரியர் நகர்,
ஒட்டம்பாளையம்,
புதுச்சேரி - 605 001



# கவிஞரேறு வாணிதாசன்...

எண்ணங்களை வண்ணமாய்க் குழைத்து
பண்ணாய்ப் பலகவிப் படைத்து...
பாங்காய் கண்ணில் பட்டதை எல்லாம்
ஓங்க உலகுக்கு உரைத்த கவியே...!
உவமையில் மையெடுத்து உலகநிகழ்வை அதில்ப் படைத்து...
ஓடும் நதிக்கும் பாட்டெடுத்தான் ஓயாது உழைக்கும்
காக்கைக் குருவிக்கும் அதில் பங்கு வைத்தான்...
இயற்கையைப் பாடி இயற்கையோடு இயைந்தக் கவி...
தமிழ்நாட்டின் வோட்ஸ்வொர்த்தாய் உலகில் உயர்ந்து நின்றார்...
எங்கள் சேலியமேடு தந்த செந்தமிழ்க்கவி...!
ஆடும் மயிலும் கூவும் குயிலும் தோற்கவே...!
குழந்தைக்கு குதூகலம் காட்டும் தன்பாட்டாலே
குழந்தை இலக்கியம் குவித்தாரே...
இவராலே குழந்தை இலக்கியமும் புத்தொளிப் பெற்றதே...!
ஆண்டை என்று அடிமை என்று யாருமில்லை நாட்டிலே...!
காட்டும் திருத்தி கழனி செழிக்க உழைத்தால் பஞ்சமில்லை வீட்டிலே...!
தன் கூட்டை வருத்தி நாட்டை உயர்த்த உழைத்திடும்
பாட்டாளி பட்டினிக் கிடத்தல் தகுமோ...!
பாடுபடும் ஏழைக்கு வறுமைதான் வரமோ...?
உழைக்கும் வர்க்கம் உயர வேண்டும் — அவன்
வாழ்வு உயரத் திட்டம் வேண்டுமென ஆளுவோரைத்
தட்டி எழுப்பிய பாட்டாளியின் பொதுமை முரசே...!

பாவேந்தர் பரம்பரையில் பூத்த முத்து...
பைந்தமிழ் வளர்த்த வித்து...
புதுவை மண்ணை - தன் புதுமைக்கவியால் செழிவித்த சொத்து...
மண்ணில் ஊறு செய்யும் மடையர் தம்மை...
தன், வீறு கொண்ட கவியால் மாய்த்த மாறன்...



1. இன்ப இலக்கியம்
2. இனிக்கும் பாட்டு
3. எழில் விருத்தம்
4. எழிலோவியம்
5. குழந்தை இலக்கியம்
6. கொடி முல்லை
7. சிரித்த நுணா
8. தமிழச்சி
9. தீர்த்த யாத்திரை
10. தொடுவானம்
11. பாட்டு பிறக்குமடா
12. பெரிய இடத்துச் செய்தி
13. பொங்கற்பரிசு

என மின்னும் பன்முகப் படைப்புகளால் ...
மண்ணைக் காக்க பண்னெடுத்த பன்முக வித்தகர்...
எம் மண்ணின் மானமிகு கவிஞர்களின்
கவிஞரேறு இவரே...!
இவர்ப் பாதம் பணிந்து வணங்குதல் எம் கடனே...!

**- புதுவை க.சரவணன்**





# வாணிதாசனார் வாழ்க

வாணிக்கு தாசனென்று ஆனவன் நீயே
வளமைத் தமிழுக்கு வாசனென்று ஆனவன்நீயே
உவமைப் பொருளுக்கு தேசனென்றும் நீயாகி
உலகக்கவி அரங்கில் நேசனென்று ஆனாயேநீ

இயற்கை தமிழ்தானே உன்றன் இயல்பு
இல்லாதது அதிலில்லை என்பதேயுன் தெளிவு
இருப்பதை எல்லாம் எழிலுற நீயெடுத்து
இன்பந்தவழ பாவடித்தாயே தேன் குழைத்து

முல்லைக்கொடி ஒன்றை மண்ணிலே நட்டு
முத்தாயே தொடுவானம் அதிற்கை பட்டு
முழுவதுமாய் தமிழச்சியவள் மனந் தொட்டு
முடிவிலாத் தமிழிலக்கியம் சென்றாய் நீவிட்டு

இறைவன் தந்த இயற்கை பெருங்கொடையே
ஈடிலாவழகு உன்றன் தீந்தமிழ் நடையே
இகமதைத் தணிப்பது நின்தமிழ்க் குடையே
இல்லையுன்கவி மடையடைக்க மண்ணில் தடையே

அயல்நாடுனை அன்பாய் அழைத்தது செவாலியே
அன்னைத் தமிழ்நாடுனை அழைத்ததோ கவியினேறே
ஆல்போல் நிலைக்கட்டும் உன்றன் பேரே
அவனிக்கு நீவந்ததோ மனிதகுலத்தின் பேறே -

ஆதித்தமிழாய் அகண்ட பேராழியாய்
ஆதவப் பொன்னொளியாய் நின்தமிழ்
அகற்றும் என்றும் அறியாமை இருளை மண்ணிருந்து...
வாழ்க எம்மான் வாணிதாசனார் புகழோங்க...



நாமக்கல் இரா.அ.பழனியப்பன்



# எண்ணம் ஏற்றம் பெறும் ஏணிப்படிகள் குழந்தை இலக்கியம்


## செந்தமிழ்ச்செல்வர் பொன். முருகன்

தலைவர், கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கியப் பேரவை,
குயவர்பாளையம், புதுச்சேரி - 605 013


இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்த நூற்றாண்டாகும். தேங்கி கிடந்த தமிழ் மீண்டும் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியதும் இந்த நூற்றாண்டில் தான்.

புதுவை மண்ணுக்குப் புரட்சிக் கருத்துக்களைப் பொழியும் பாங்கும் இயல்பானது. அதேபோல் இயற்கையின் பேரழகை இயல் பாக எழிலோவியமாக எடுத்து இயம்பும் ஆற்றல் படைத்த மாபெரும் கவிஞர் புதுவை தந்த பூங்குயில் பாவேந்தர் பாசறையின் படைவீரர் தமிழகத்தின் வோட்ஸ் ஒர்த் செவாலியே கவிஞரேறு வாணிதாசன் அவர்கள்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் சமுதாயச் சிந்தனைகளால் கவரப்பட்டு எழுச்சிக் கவிதைகள் பல படைத்த உணர்ச்சிக் கவிஞர் வாணிதாசன். அவர் கொண்ட கொள்கைக்காக இறுதிவரை கொள்கைகள் மாறாமல் உறுதியோடு நின்ற ஓர் இலட்சியக் கவிஞர் எனில் அது முற்றிலும் உண்மையே.



கவியரசர் வாணிதாசன் முற்போக்குச் சிந்தனைகளை உடையவர் அவர் ஒரு மரபுமாறா கவிஞராக அதே நேரத்தில் புதுமை உணர்வை ஊட்டக் கூடிய புரட்சி கவிஞராகவும், நல் சிந்தனையாளராகவும், அறநெறியை

போதிக்கும் கவிஞரா கவும் விளங்கினார். பாக்கள், காப்பியங்கள், சிறுகதைகள், மொழிபெயர்ப்பு, குழந்தை பாடங்கள் என பன்முகத் தன்மை கொண்டவராக விளங்கினார்.

தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்ப் பெருங்கவிஞர் மன்றத்தின் நிரந்தரத் தலைவராய் விளங்கியவர்.

தமிழ் நாட்டுத் தாகூர் எனத் தமிழ்த் தாத்தா பேராசிரியர் மயிலை சிவ. முத்து அவர்களால் பாராட்டப் பெற்றவர். தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய இந்த இருவரினும் விஞ்சிய வகையில் பாடியவர். உண்மையான கவிதைகளைப் புனைவதற்காகவே உதித்தவர். "கவிஞர்கள் பிறக்கிறார்கள் செய்யப்படுவதில்லை" என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினராய் இருந்தவர். சுய முயற்சியால், சுய உழைப்பால் உயர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்து, தூக்கிவிடாக் கவிஞனைப் போல் மறைந்தவர். மாற்றார் அருளுக்கோ அன்றிப் புகழக்கோ எந்நாளும் பொருளுக்கோ பாடாமல்

**"கொடுமையடா மண்ணில் சிலருண்டு வாழல்**
**கூழுக்கும் வழியற்றப் பாட்டாளி தாழல்**
**உடைமை பொதுவாக்கி வாழ்வோம் இந்நாட்டில்**
**ஊரை வளைப் போரை வேர்கல்லிச் சாய்ப்போம்."**

என்ற புரட்சி முழக்கமும், பொதுமை நோக்கமும் கொண்டு பொய்மையை எதிர்த்தே பாடிப் பறந்துவிட்ட மாமன்னர்

வாணிதாசனார் தமது இல்லத்திற்குப் "புரட்சியகம்" எனும் பெயர் சூட்டி வாழ்ந்த புரட்சியாளர்.

ஒருவர் காலமான பின்பும் அவருக்கு எது எஞ்சி நிற்கின்றதோ அதுதான் அவர் வாழ்ந்த வாழ்வின் அடையாளமும் அவர் வாழ்வின் தத்துவமும் அப்படி இங்கு புகழோடு வீற்றிருப்பவர் ஒரு சிலரே அதில் ஒருவர் என் பாட்டன் கவிஞரேறு வாணிதாசன் புதுவை பெற்ற புலவன்.

செவாலியே வாணிதாசன் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை படைத்தளித்துள்ளார் அதில் குழந்தைகள் உளவியல் அடிப்படையில் அமைக்கப்பட்டவை. குழந்தை இலக்கியம், இனிக்கும் பாட்டு, ஆத்திசூடி, கொன்றை வேய்ந்தோன் போன்ற நூல்கள் உள்ள ஒவ்வொரு கவிதை வரியும் ஒரு காவியம். அவர் படைப்புகள் அனைத்தும் சிறந்த பெட்டகமாகத் திகழ்கிறது.

12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் இயற்றிய நீதி நூலே ஆத்திசூடி, கொன்றைவேந்தன். ஔவையாருக்கு பிறகு மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், கவிஞரேறு வாணிதாசன், டாக்டர். வ.சுப. மாணிக்கம், கவிஞர் சிற்பி என பட்டியல் நீள்கிறது.

ஔவையார் எழுதிய கொன்றை வேந்தனுக்கு பிறகு கொன்றை வேய்ந்தோனை கவிஞரேறு வாணிதாசன் ஒருவர் மட்டும் எழுதி இருக்கிறார் என்பது வாணிதாசனாருக்கு கிடைத்த மிகப்பெரிய பேறு. இன்றுவரை கொன்றை வேய்ந்தோனை இவரை தவிர வேறுயாரும் எழுதவில்லை.

குழந்தை இலக்கியம் நூலில் என்உரை என்ற பகுதியில் "பாட்டும் கதையும் குழந்தைகளுக்கு பேரின்பம் ஊட்டுவன பிஞ்சு உள்ளங்களில் இனிய, எளிய முறையில் நல்லறிவைச் சேர்க்கும் முயற்சியே குழந்தை இலக்கியத்தின் குறிக்கோளாகும்" என்று கவிஞரேறு வாணிதாசனே குறிப்பிட்டுள்ளார்.

குழந்தை இலக்கியம் அகவையை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளை மூன்று வகையினராகப் பிரிக்கின்றனர்.

1. பிறந்தது முதல் 5 அகவை உடைய குழந்தைகள் மழலைகள் என்றும்
2. 6 அகவை முதல் 12 அகவை உடைய குழந்தைகள் சிறுவர்கள் என்றும்
3. 13 அகவைக்கு மேலுள்ள குழந்தைகள் இளையோர்கள் என்று கூறுகின்றனர்.

**குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளாதவர்** (குறள்)

என்ற குறள் மேற்கூறப்பட்ட முதல் வகையினர்க்கும்

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது** (குறள்)

என்ற குறள் இரண்டாம் வகையினர்க்கும்

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்** (குறள்)

என்ற குறள் மூன்றாம் வகையினர்க்கு பொருந்தும்.

குழந்தை இலக்கியம் என்பது பிற இலக்கியங்கள் போல் வரலாறு உடையது. அழ. வள்ளியப்பாவின் வருகைக்குப் பிறகே குழந்தை இலக்கியம் கவனம் ஈர்த்ததாகப் பேசப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் குழந்தை இலக்கியம் புது வீரியத்துடன் படைக்கப்பட்டு வருகிறது.

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்று பொது வாகச் சொல்லப்படுவதுண்டு. இன்றைய மாணவர்கள் நாளைய விஞ்ஞானிகள், அறிஞர்கள், மருத்துவர்கள் நாட்டுப் பற்றாளர்கள் என பலவாறாக ஆகலாம்; ஆகக்கூடும் அதற்கான விதை இன்றைய நாளில் விதைக்கப்பட வேண்டும். இன்றைய மாணவர்கள் இதயத்தில் எப்படி விதைப்பது என்பது ஒரு கலை. அக்கலையை நன்கு அறிந்தவர்கள் ஆசிரியர்கள்.

ஆசிரியர்கள் மாணவர்களைச் செதுக்கும் அற்புதச் சிற்பிகள் கவிஞரேறு வாணிதாசனும் ஆசிரியராக இருந்ததால் மழலையருக்கும், சிறுவர்களுக்கும், பெரியவர் களுக்கும் தேவையான கருத்துக்களை அடிப்படையாக கொண்டு குழந்தை இலக்கியம், இனிக்கும் பாட்டு, ஆத்திசூடி, கொன்றைவேய்ந்தோன் படைத்தளித்தார்.

குழந்தை உளவியலில் நீந்திக் கரைகண்ட வாணிதாசன் குழந்தை இலக்கியநூலில்பாடல்களைமிகஎளியசொற்களால்ஓசைநயத்துடன் இனிமையுடனும் எளிமையுடனும் படைத்தளித்துள்ளதைக் காண முடிகிறது.



*நிலவே! நிலவே! வாராயோ!*
*நீ பகலில் எங்குச் சென்றாயோ?*

*உலகிற் கல்லார் உன்னிடத்தில்*
*ஔவைக் கிழவி உண்டென்பார்*
*நிலவே! அந்தக் கிழவிக்கு*
*நீரும் சோறும் கொடுப்பதுயார்? நிலவே*
*அரிவாள்போல் வான் தோன்றி*
*அழகாய் நாளும் வளர்கின்றாய்!*
*பெரிய வெள்ளித் தட்டாகிப்*
*பின்ஏன் குறைந்து தேய்கின்றாய்? நிலவே*

*தம்பி தங்கை உனக்குண்டோ?*
*சாதி சமயம் உனக்குண்டோ?*
*வம்பு வேண்டாம் என்தம்பி!*
*வாட்டம் தீர்க்க வருவாயே! நிலவே*

(குழந்தை இலக்கியம் பக்கம். 14)

என்னும் பாடலில் சிறுவர்களுக்கு நிலவைக் காட்டிச் சோறூட்டும் வழக்கத்தையும், நிலவில் கிழவியொருத்தி இருக்கின்றாள் என்ற கதையைச் சொல்லிவரும் வழக்கத்தையும் கிழவிக்கு நீரும் சோறும் யார் கொடுக்கிறார்கள் என்ற கேள்வியையும் கேட்கின்றார்.

வானில் தோன்றும் நிலவு அரிவாள்போல இருப்பதாகவும் முழுநிலவை வெள்ளித் தட்டாகவும் எண்ணி அழகு பார்க்கிறார். நிலா வளர்ந்து தேயும் தன்மைக்கொண்டது அதுபோல உங்கள் வாழ்க்கையும் மேடு பள்ளம் வருவது இயல்பு அவற்றை எதிர்கொண்டு வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்ற சிந்தனையை குழந்தைகள் மனதில் பதியுமாறு எடுத்துரைக்கிறார்.

சாதி, சமயங்களால் மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே சாதி சமயங்கள் இல்லாத சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்ற அறிவுரையை இப்பாடல் வரிகள் மூலம் சிறுவர்களுக்கு உணர்த்துகின்றார். சீர்திருத்த விதைகளை விதைத்து ஒளிர்கின்றார் மிளிர்கின்றார் கவிஞரேறு வாணிதாசனார்.

***உன்றன் வேலை முதல்வேலை***
***உன்தாய் தந்தை சொற்கேட்டல்***
***உன்றன் வேலை முதல்வேலை***
***உற்றார் ஊரார் நேசித்தல்!***
***உன்றன் வேலை முதல்வேலை***
***உண்மை ஒளிக்கா திருப்பதுவே!***
***உன்றன் வேலை முதல்வேலை***
***ஒழுக்கம் உயிராய் ஓம்புவதே!***

***உன்றன் வேலை முதல்வேலை***
***ஊரைத் திருத்த முயலுவதே!***
***உன்றன் வேலை முதல்வேலை***
***ஊரை வாழ வைப்பதுவே!***

***உன்றன் வேலை முதல்வேலை***
***உன்தாய் மொழியைக் காப்பதுவே!***
***உன்றன் வேலை முதல்வேலை***
***உன்தாய் நாட்டைக் காப்பதுவே!***

*(குழந்தை இலக்கியம் பக். 123)*

*என்னும் பாடலில் இளையோரின் முதல்வேலை தாய் தந்தை சொல்கேட்டு சிறந்த பண்பாளனாக வாழ்வதே என்றும் உற்றாறையும் ஊரையும் நேசித்தல் வேண்டும் ஒழுக்கத்தை உயிராய் எண்ண வேண்டும். தாய் மொழியை காப்பதும், தாய்நாட்டைக் காப்பது முதல் வேலை என்றும் நல்ல சமுதாயத்தைப் படைக்க ஒழுக்க நெறியை குழந்தைகளிடம் ஊட்டுகின்றார்.*

***தோளில் தாயைத் தந்தையைக் கட்டித்***
***தூக்கி வந்த விந்தையை***
***ஆளும் அமைச்சன் கண்டான் - அவன்***
***அருகில் வந்து நின்றான்!***

***பழுத்த கிழங்கள் தூக்கியே - வெள்ளப்***
***பாழைத் தாண்டும் சிறுவனே!***

***கொழுத்த செல்வம் இருக்கையில் - குற்***
***றுயர்எதற் கோதான்? என்றனன்***
***பெற்ற அன்னை தந்தையே - என்றும்***
***பேசும் செல்வம் ஆகுமே!***
***மற்ற செல்வம் யாவுமே - நாட்டில்***
***வந்து வந்து போகுமே!*** *(குழந்தை இலக்கியம் பக். 133)*

*ஊரெல்லாம் வெள்ளம் அங்கிருந்த மக்கள் தன் உடைமை களையெல்லாம் தூக்கிக்கொண்டு வெளியேற, ஒரு சிறுவன் மட்டும் வயதான குற்றுயிர் நிலையில் இருந்த தனது தந்தையை தாயைத் தாங்கியபடி வெள்ளத்திலிருந்து மீள முயல்கிறான். "சிறுவனே உனக்கு இருக்கும் கொழுத்த செல்வத்தை விட்டுவிட்டு இவர்களைக் காப்பாற்ற முயல்வதேன்' என்று அந்நாட்டு அமைச்சர் கேட்க? சிறுவன் அன்னை தந்தையே என்றும் பேசும் செல்வம். பொன் பொருள் மற்றவை யாவும் வந்துவந்து போகும். பெற்றோர்களிடம் பாசத்தோடும் அன்போடும், பழகுதல் வேண்டும். எந்த சூழலிலும் அவர்களை பாதுகாக்க வேண்டும் என்று தந்தை தாய்ப் பேண் என்ற கதைப் பாடலில் 28 அடிகளில் ஒரு சிறு கதையின் மூலம் குழந்தைகளின் உள்ளத்தில் பதியும் வண்ணம் உணர்த்துகிறார்.*

***கற்பிப்போர் கண்கொடுப் போரே! அந்தக்***
***கணக்காயர் உரையினில் இருசெவி சேரே!***
***நற்பெயர் எடுத்திட வேண்டும்! - நாளும்***
***நன்றாகப் படித்துநீ முன்னேற வேண்டும்.***

***அன்போடு கணக்காயர் போற்று - பள்ளி***
***அறிவுரை வாழ்க்கையின் இருளுக்கு மாற்று!***
***என்றென்றும் கற்றிடலாகும்! - அறிவு***
***இல்லாமை என்கின்ற சொல்லற்றுப் போகும்!***

***பள்ளியிற் சள்ளை பொல்லாதே! உடன்***
***பயில்பவர் மீதுநீ கோளும் சொல்லாதே!***
***கள்ளத் தனத்தைக் கொள்ளாதே! செல்லாக்***
***காசாவாய்! கற்காமல் நாளைத் தள்ளாதே!***
***கற்றத் தெளிவதே மேன்மை - கல்வி***
***கல்லாத மக்களால் வருவதே தீமை!***



**பெற்றவர் காதுக்குத் தேனாம் - பிள்ளை**
**பேச்சாளி, அறிவாளி என்பது தானாம்!**

*(குழந்தை இலக்கியம் பக். 99)*

*மாணவர்கள் மனம் மிக மென்மையானது எந்த செய்தியை சொன்னாலும் மனதில் பதிந்துவிடும் பருவம் வண்ணத்துப் பூச்சிகளாக வானில் பறக்கம் பருவம் அப்பருவத்தில் நற்சிந்தனைகளை விதைக்கும் விதமாக இப்பாடலை படைத்தளித்துள்ளார் புதுமைக் கவிஞர் வாணிதாசனார்.*

*கற்றுக் கொடுப்பவர்கள் ஆசிரியர்கள் அவர்கள் வகுப்பில் நடத்தும் உரையினை மாணவர்கள் காது கொடுத்து கேட்டு அதன்படி நடந்து நல்ல பெயரை எடுக்க வேண்டும், அழியாச் செல்வம் கல்வியை கற்று முன்னேற வேண்டும். கற்றுக் கொடுத்த ஆசிரியரை மதிக்க வேண்டும், அவர்களை போற்ற வேண்டும்.*

*பள்ளியில் மாணவர்களொடு சண்டை, சச்சரவு செய்யக் கூடாது. உண்மையை பேச வேண்டும், பொய் சொல்லக் கூடாது, கோளி மூட்டக் கூடாது, பள்ளி வகுப்பறையில் படிக்காமல் நாளை கடத்தக் கூடாது. படித்தால் வாழ்வு சிறக்கும், படிக்காதவர் வாழ்வு தாழ்வு அடைய நேரிடும், பிள்ளைகள் நல்ல பெயரையும் புகழையும் பெற்று பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் சேர்க்க வேண்டும் என்று வாணிதாசனார் குழந்தைகளுக்கு நல் உணர்வினை ஊட்டுகிறார்.*

*குழந்தை இலக்கியம் நூலில் குழந்தைகளை கவரும் வண்ணம் மிக எளிய நடையில் சிறுசிறு சொற்றொடர்களாக எதுகை, மோனை, இசை நயத்துடன், ஓசை நயத்துடன் மனதில் பதியும் வண்ணம் கருத்துக்களைத் தெளிவாகப் பதியுமாறு பாடல்களை படைத்தளித்துள்ளார்.*

1. *தாலாட்டுப் பாடல்கள்*
2. *அறிவுரைப் பாடல்கள்*
3. *அறிவியல் பாடல்கள்*
4. *தமிழுணர்வப் பாடல்கள்*
5. *கதைப் பாடல்கள்.*

என்று பிரித்து மாணவர்களுக்கு கொடுத்துள்ளார்.

குழந்தை இலக்கியத்திற்கு என்று வாணிதாசனார் வகுத்துக் கொண்ட நெறியினையும், பகுத்துக்கொண்ட முறையினையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. தாலாட்டு, ஒலிநோக்கு, கல்விநெறி அறிவுரை, அறிவியல், இயற்கை யழகு, கதை என்று பல்வேறு வகைகள் அவரது குழந்தைப் பாடல்கள் அமைந்துள்ளன. குழந்தைகளின் குறும்புத்தனங்கள், குடும்ப உறவுகள், விளையாட்டு கள், ஊர்திகள், பறவைகள், விலங்குகள், சமுதாயம், தமிழுணர்வு முதலான பாடுபொருள்கள் பல அவரது குழந்தை பாடல்களில் அமைந்துள்ளன.

ஐந்தில் வளையாதது ஐம்பதில்வளையாது என்பார்கள் குழந்தைப் பருவத்தில் எதைக் கேட்டாலும் பசுமரத்தாணி போலப் பதிந்துவிடும். எவர் ஒருவர் இந்தச் சமுதாயத்தை திருத்த எண்ணுகிறாரோ அவர் முதலில் குழந்தைகளுக்கு அறிவரை கூறி நல் வழிப்படுத்துவதே மிகச் சிறந்த வழியாகும். அதை உணர்ந்த கவிஞரேறு வாணிதாசன் இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயம் என்று எண்ணி குழந்தை இலக்கியத்தை படைத்துள்ளார்.

தமிழ் மீது அளப்பரிய அன்பு கொண்டு ஒலியழகும், சொல்லழகும், அணியழகும் பொருந்திய மரபுக் கவிதைகள் எழுதி மண்ணுக்கடியில் மறைந்து மண்ணை வளமாக்கும் மண் புழுவைப் போல் தன்னை முன்னிலைப்படுத்தாமல் தமிழுக்கு வளம் சேர்த்தவர் கவியரசர் வாணிதாசனார்.

வாணி புகழை நாளும் பாடுவோம்
வாணிதாசன் கண்ட
சமுதாயத்தை உருவாக்குவோம்
வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!



# இணையிலோர் வாணிதாசர்

கட்டளைக் கலித்துறை

## மைசூர் இரா. கர்ணன்



எண்ணில் கவிஞர்கள்
இன்றமிழ்த் தோன்றினர்
இவ்வுலகே

மண்ணில் விளைந்த
மதிவுயர் வைரங்கள்
மாண்புயர்வே

கண்ணாய்த் தமிழைக்
கழிவுயர் கற்றார்
கதிவுயர்ந்தே

வண்மை நிறைந்தநம்
வாணிதா சர்கூர்
வரகவியே!

கல்விப் புகட்டிய
கன்னித் தமிழர்
கவிஞரேறே

நல்வினைக் கொள்கையர்
நன்றே நினைத்திடும்
நற்றமிழே



அல்லும் பகலும்
அருந்தமிழ் நற்பணி
ஆற்றலரே

தொல்தமி ழாய்ந்ததோர்
தூணாய் விளங்கிய
தூயவரே

இனிக்கும்பாட் டென்ற
எளியநூல் தந்தவோர்
எந்தமிழர்

இன்ப இலக்கியம்
ஏற்றிய எங்கள்
இனிமனத்தார்

வன்மை இரவு
வரவில்லைக் கண்ட
வடிவழகர்

நன்னெழில் ஓவியம்
நற்றமி ழாளும்
நனிவுயர்வே

புதியஆத் திச்சூடி
பூவாய் மணக்குமோர்
பொற்றமிழே

உதிர்எழி லோவியம்
ஒண்மைசீர் ஓங்கல்
ஒளிர்தமிழே

விதியாய் எழில்நல்
விருத்தம் இனியதோர்
வெண்டமிழே

யதிகவர் நல்தீர்த்த
யாத்திரை செந்தமிழ்
யௌவனமே

தங்கத் தமிழர்
தரமுயர் மண்ணின்
தலைமகனாய்

மங்காப் புகழாய்
மறத்தமிழ் மாண்புயர்
மாமணியாய்

எங்கும் நிறைந்த
இனிசேர் புகழுடை
ஈடிலெங்கள்

வங்கக் கடற்கரை
வான்புகழ் வாணியார்
வண்டமிழே!

**மதிப்புறு முனைவர்**
**மைசூர் இரா. கர்ணன்**

# வாணிதாசன் தீட்டிய எழிலோவியம்!



**மேகலா இராமமூர்த்தி,**
இயற்பியல் பேராசிரியர்,
ஃப்ளோரிடா பல்தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,
அமெரிக்கா.

*“மனத்தின் உணர்வுகளைத் தங்கு தடையின்றிச் சொற்களில் வெளிப் படுத்தும் ஆற்றலே கவிதை” என்றார் ஆங்கிலக் கவிஞரான வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் (*William Wordsworth*). “சிறந்த சொற்கள் சிறந்த வரிசையில் அமைவதே சிறந்த கவிதை” என்பது வேர்ட்ஸ்வொர்த்தின் நண்பரும் அவரோடு இணைந்து 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கற்பனாவாத இயக்கத்தை (*Romanticism*) வளர்த்தவருமான சாமுவெல் டெய்லர் கோல்ரிட்ஜின் (*Samuel Taylor Coleridge*) கருத்து. தமிழ்நாட்டில் மகாகவி பாரதி, அவரது கவிதா மண்டலத்தைச் சேர்ந்த பாவேந்தர் பாரதிதாசன், பாரதிதாசனின் மரபைச் சேர்ந்த கவிஞர்கள் எனப் பலர் கற்பனாவாதத்தை வளர்த்தெடுத்த சிறப்புக்குரியோர் ஆவர். அவ்வகையில் பாவேந்தர் பாரதிதாசன் மரபில்வந்த கவிஞர்களுள் குறிப்பிடத்த ஒருவர் தாம் வாணிதாசன்.*

### வாணிதாசனின் இளமைக் காலமும் கல்வியும்

*புதுச்சேரியை அடுத்த வில்லியனூரில் 1915ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 22ஆம் நாள் திருக்காமு, துளசியம்மாள் இணையருக்குத் திருமகனாய்ப் பிறந்தார் அரங்கசாமி எனும் இயற்பெயர் கொண்ட கவிஞர் வாணிதாசன். வில்லியனூரில் இருந்த திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வி பயின்றார். தந்தையாருக்குப் புதுச்சேரிக்கு பணிமாற்றல் நிகழ்ந்ததால் புதுச்சேரி நகரப்பள்ளியில் தம் கல்வியைத் தொடர்ந்தார். அப்பள்ளியில் பாவேந்தர் பாரதிதாசன் இவருக்கு வகுப்பாசிரியராக*



அமைந்தமை இவரது நல்லூழே எனலாம். பாவேந்தரின் தமிழால் ஈர்க்கப்பட்டு அரங்கசாமிக்கும் தமிழார்வம் முகிழ்த்தது.

ஆங்கிலம், பிரெஞ்சு எனும் இரண்டிலும் மையத்தேர்வில் புதுச்சேரி மாநிலத்தில் முதல் மாணாக் கராய்த் தேர்ச்சிபெற்றார் அரங்கசாமி. தமிழில் மேலும் புலமைபெற விரும்பி பாரதிதாசன் நடாத்திய தனிப்பாட வகுப்பில் சேர்ந்தார். தமிழிலக்கண இலக்கியங்கள்மீது கவனம் செலுத்தி நன்கு பயின்றார். கவிதை எழுத வேண்டும்; பாரதிதாசனைப்போல் கவிஞராக வேண்டுமெனும் ஆவல் முளைவிட்டது அரங்கசாமிக்கு. பாரதிதாசனும் தம் மாணவரின் ஆர்வத்துக்கு ஊக்கமூட்டினார்; அதன்பயனாய்ச் சிறுசிறு கவிதைகள் எழுதலானார் அரங்கசாமி.

அரங்கசாமியின் தொடக்ககாலக் கவிதைகள் சி.பா. ஆதித்தனார் 1942இல் தொடங்கி நடத்திவந்த 'தமிழன்' இதழில் வெளியாயின. 'ரமி' எனும் புனைபெயரில் (அரங்கசாமி என்பதன் சுருக்கம்) கவிதைகள் எழுதிவந்த அவரிடம், தமிழன் இதழாசிரியரான மேதாவி என்பவர் "உங்கள் ஆசிரியர் பாரதிக்கு தாசன் என்பதால் பாரதிதாசன் எனும் பெயரில்எழுதினார்; பாரதி என்றாலும் வாணி என்றாலும் ஒரேபொருள்தான்; நீங்கள் வாணிதாசன் எனும் பெயரில் எழுதலாமே!" என்று ஆலோசனை வழங்க, அதுமுதல் அரங்கசாமி 'வாணிதாசன்' ஆனார் என்றறிகின்றோம்.

கவிஞர் வாணிதாசனின் படைப்புகள் அனைத்தும் தேனில் ஊறிய தீம்பலாவாய் இனிப்பன; கற்பனை நயம் செறிந்தன. கருத்தாழம் மிக்கன. அவற்றுள் ஒன்றான 'எழிலோவியம்' குறித்து இனிக் காண்போம்.

**தொடுவானில் ஒரு துளை**

கடலிடை எழுந்த காலைக் கதிரவனின் எழிற்காட்சியைக் காண்கின்றார் கவிஞர். அவருக்குக் கதிரவனின் தோற்றம், "தொடுவானமென்னும் மதிலுக்கு அப்பால் தோன்றிடும் அழகைக் காண நடுவினில் ஏற்படுத்திய துளையா? அகண்ட தீபமா? நடு விளக்கா? எனும் வியப்புக் கலந்த ஐயத்தைத் தருகின்றது; கூடவே கதிரவன் ஒளிபடும் இடமெல்லாம் பொன்னாய் மின்னுவது களிப்பையும் ஏற்படுத்துகின்றது.

**"தொடுவான மதிலுக் கப்பால்**
**தோன்றிடும் அழகைக் காண**
**நடுவினில் துளைத்த சந்தோ**
**அகண்டமோ நடுவி ளக்கோ**
**கடலிடை எழுந்த காலைக்**
**கதிரவன் கதிரின் வீச்சுப்**
**படுமிட மெல்லாம் பொன் பொன்**
**பார்எழி லோவி யத்தை."**

**செல்லரித்த வானக்குடை**

மாலைநேரத்தில் கதிரவன் விடை பெற்றுச் செல்ல வானில் கருமை படர்ந்தது; விண்மீன்கள் ஒவ்வொன்றாய் வானில் தோன்றின. நெஞ்சை யள்ளும் அக்காட்சியைக் கூர்ந்து நோக்குகின்றார் கவிஞர் வாணிதாசன். கருமை படர்ந்த வானம் கருநிறக் குடையாகவும், அதில் தெரியும் விண்மீன்கள் செல்லரித்த பொத்தல்களாகவும் அவருக்குத் தோற்றமளிக்கின்றன. இக்காட்சியில் நிலைத்திருந்த கவிஞரின் கவனத்தை ஈர்த்து இன்பத்தை ஈந்தது அப்போது வானவெளியில் உலா வந்த நிலா.

**"அந்தியில் ஒவ்வொன் றாக**
**வானத்தை அடைந்த மீன்கள்**
**சிந்தையை அள்ளும்; வானம்**
**செல்லுண்ட குடைபோல்**
**தோன்றும்**
**வந்தது நிலவே இன்பம்**
**வந்ததே..."**

வண்ணதாசனின் முன்னோடிக் கவிஞர்களான மகாகவி பாரதியும் பாரதிதாசனுங்கூட இயற்கையழகில் ஈடுபட்டு நிலவையும் விண்மீன் களையும் பாடியவர் கள்தாம்.

**மகாகவி பாரதி,**

"வட்டக் கரியவிழி கண்ணம்மா
வானக் கருமை கொலோ?
**பட்டுக் கருநீலப் புடவை**
**பதித்த நல்வயிரம்**
**நட்ட நடுநிசியில்**
**தெரியும் நட்சத்திரங்களடீ!'**
**என்**கிறார்.

அவருக்கு வானம் கருநீலப் பட்டுப் புடவையாகவும் நட்சத்தி ரங்கள் (விண்மீன்கள்) அதில் பதித்த நல்வயிரங்களாகவும் தெரிகின்றன.

பாவேந்தர்,

**"மண்மீதில் உழைப்பா ரெல்லாம்**
**வறியராம் உரிமை கேட்டால்**
**புண்மீதில் அம்பு பாய்ச்சும்**
**புலையர்செல்வராம் இதைத்தன்**
**கண்மீதில் பகலி லெல்லாம்**
**கண்டுகண்டு அந்திக் குப்பின்**
**விண்மீனாய்க் கொப்ப ளித்த**
**விரிவானம் பாராய் தம்பி!"**

என்கிறார்.

உழைக்கும் வறியவர்களின் துயர் கண்டு கொதித்த வானின் உடலில் தோன்றிய கொப்புளங்களாகப் பாவேந்தருக்கு விண்மீன்கள் தெரி கின்றன.

**மஞ்ஞையா? மங்கையா?**

மலையில் தவழ்கின்ற கார் முகிலைக் காண்கின்றாள் மங்கை யொருத்தி. "வேட்டையாட விலங்கோ பறவையோ சிக்காதா"?

என்றெண்ணி அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்த வேட னுக்குக் கார்கூந்தல் இடை தழுவ ஒசிந்து நின்றிருந்த தோகையவள் தோற்றம் மயில்போலக் காட்சிநல்க, "ஆகா! மயில், மயில்!" என்று மகிழ்ச்சியோடு கூவியபடி அவளை நோக்கித் தன் அம்பினைக் குறிவைத் தான்; நல்லவேளை, அவன் அம்பைச் செலுத்துவதற்கு முன்பு அவன் குரல்கேட்டுத் தினையைக் குத்திக் கொண்டிருந்த வேட்டுவச்சி தலைநிமிர்ந்தாள்; வேடன் குறிவைத் திருப்பது மயிலுக்கு அன்று; மயி லொத்த சாயலாளாகிய மலைநாட்டு மங்கைக்கு என்பதனை எடுத்துக் கூறி அவனை அம்புவிடாது தடுத்தாள்; உண்மையறிந்த வேடன் மலையென மலைத்து நின்றான்; அவன் செயல்கண்டு மலையே நீ சிரிக்கமாட்டாயோ? என்று நயமான தொரு கற்பனையை 'மலை' என்னும் தலைப்பில் விவரிக்கின்றார் கவிஞர்.

***"மலைதவழ் கார்பார்த் தாளை***
***'மயில்! மயில்!' என்று கூவிச்***
***சிலையினை வளைத்தான் வேடன்!***
***தினை குத்தும் வேட்டு வச்சி,***
***ஸ ி மலைநாட்டு மங்கை அந்த***
***'மயில்! மயில் இல்லை!' என்றாள்!***
***மலையே, கேள்! உன்போல் வேடன்***
***மலையானான்! சிரித்தி டாயோ?"***

**பொதுவுடைமைவாதி**

விளைச்சல் தருகின்ற வயல், பயனற்ற பொட்டல் என்றெல் லாம் வேற்றுமை பாராது எல்லா விடத்திலும் பொழிந்து உயிர்களைக் காக்கும் முகிலை, "அன்னை" என்று வாழ்த்திடும் கவிஞர் வாணிதாசனுக்கு, "உன்னைப் போலவே வேற்றுமை பாராது, நாட்டு விளைபொருள் அனைத்தும் அனைவர்க்கும் பொதுவானது எனும் எண்ணம் தமிழ்நாட்டில் தோன்றிடில் இன்பவாழ்வு அனை வர்க்கும் கிட்டுமே" எனும் எண்ணம் எழுகின்றது. அதனை 'முகில்' என்னும் தம் கவிதையில் வெளிப்படுத்தி யுள்ளார்.

***"விளைவயல் பொட்டல் என்ற***
***வேற்றுமை கருதா தென்றும்***
***அளித்துயிர் ஓம்பு கின்றாய்!***
***அன்னையே! முகிலே! வாழி!***
***விளைவினை மக்க ளெல்லாம்***
***பொதுவாகத் துய்க்கும் மேன்மை***
***முளைத்திடில் தமிழர் நாட்டில்***
***முளைத்திடும் இன்பவாழ்வே!"***

**முகில் குறித்த**
**கவிஞர் வாணிதாசனின் சிந்தனை,**

***"அறுகுளத்து உகுத்தும்***
***அகல்வயல் பொழிந்தும்***
***உறுமிடத்து உதவாது***
***உவர்நிலம் ஊட்டியும்***
***வரையா மரபின்***
***மாரி..."***

*(புறம். 142 - பரணர்)*

எனும் பரணரின் புறநானூற்றுப்

பாடலை நினைவுபடுத்துகின்றது.

### கடற்பெண்ணின் கண்ணீர்

"அலைக்கரங்கள் வளையை (சங்கு) கடற்கரையில் போக்கிட, ஆழத்தில் இருக்கும் முத்துக்களைக் கண்ணீராய்ச் சிந்தித் தலைவிரி கோலமாகக் கரையினில் புரளுகின்றாய், கொல்லன் ஊதுலையிலிருந்து வெளிப் படும் வெப்பக் காற்றாய் மூச்சுவிடுகின்றாய்; உன் இன்பவாழ்வைக் கெடுத்தவர் யாரேனும் உண்டோ? காதலால் ஏற்பட்ட நிலையோ இது? சொல்லிடு கடற்பெண்ணே!" என்று கடலின் செயல்களைப் பெண்ணின் துயரநிலையோடு ஒப்பிட்டு அவலச்சுவை ததும்பப் பாடியுள்ளார் கவிஞர், தமது 'கடல்' எனும் கவிதையில்.

**"அலைக்கைகள் வளையைப் போக்க**
**ஆழ்கண்ணீர் முத்தம் சிந்தத்**
**தலைவிரி கோல மாகத்**
**தடங்கரை புரளு கின்றாய்!**
**உலைஎறி காற்றைப் போல**
**உயிர்க்கின்றாய்! இன்ப வாழ்வை**
**அலைத்தவர் உண்டோ? காதல்**
**அறிவையோ?கடற்பெண்ணாளே!"**

வாணிதாசனின் பாடல், சங்கப் புலவர் அம்மூவனாரின்,

**"யாரணங் குற்றனை**
**கடலே பூழியர்**
**சிறுதலை வெள்ளைத்**
**தோடுபரந் தன்ன**
**மீனார் குருகின்**
**கானலம் பெருந்துறை**
**வெள்வீத் தாழை**
**திரையலை நள்ளென்**
**கங்குலும் கேட்குநின் குரலே."**
*(குறுந். 163 - அம்மூவனார்)*

எனும் குறுந்தொகைப் பாடல் தலைவியின் எண்ணவோட்டத்தை ஒத்திருக்கக் காணலாம்.

### கடுகுள்ளம்

சேரிக்குச் செல்கின்றார் கவிஞர். நாட்டை, மக்களை, அவர்தம் வாழ்வை, கலையை, அரசைத் தம் உழைப்பால் ஊட்டி வளர்க்கும் சேரிமக்களின் குடிசைகளோ பொத்தல்கள் நிறைந்ததாய் இருக்கக் காண்கின்றார். "ஏழைகள் படும் பாட்டால் கொழுக்கும் செல்வரின் கடுகுள்ளத்தால், அரசின் புறக் கணிப்பால் விளைந்த அவல மல்லவா இது!" என்று வேதனையுறு கின்றது அவர் உள்ளம். ஏழைகளின் பாட்டை ஒரு பாட்டாய் வடித்து விடுகின்றார் 'சேரி' எனும் தலைப்பில்.

**"நாட்டினைக் கலையை, நாட்டு**
**மக்களை, அரசை, வாழ்வை,**
**ஊட்டியே வளர்க்கும் தோளை**
**உழைப்பினைக் கண்டேன்!**
**அன்னோர்**
**பாட்டினால் கொழுக்கும் செல்வர்**

**கடுகுள்ளப் பண்பைச் சேரி**
**காட்டிற்று! குடிசைப் பொத்தல்**
**காட்டிற்றே அரசீ னத்தை!"**

கவிஞர் வாணிதாசன் தம் பாடலில் பயன்படுத்தியுள்ள 'கடுகுள்ளம்' எனும் சொல்லை நாம் பாவேந்தரின் "உலக ஒற்றுமை" எனும் பாடலிலும் காணமுடிகின்றது.

**"தன்பெண்டு தன்பிள்ளை**
**சோறு வீடு**
**சம்பாத்தியம் இவையுண்டு**
**தானுண்டு என்போன்**
**சின்னதொரு கடுகுபோல்**
**உள்ளங் கொண்டோன்!**
**தெருவார்க்கும் பயனற்ற**
**சிறிய வீணன்!"**

தானும் தன் குடும்பமும் வாழ்ந்தால்போதும் என்றெண்ணும் சுயநலத்தானைக் கடுகுள்ளத்தோன் என்று பாவேந்தர் சாடுவதுபோல், பிறர்க்கு ஈயாது தாம் மட்டும் கொழுக்கும் செல்வரின் உள்ளத்தைக் கடுகுள்ளம் என்று சாடியுள்ளார் வாணிதாசன். பாவேந்தர் பரம்பரையைச் சேர்ந்தவர் தாம் என்பதை வெளிப்படுத்தும் முத்திரையல்லவா இது!

**வெள்ளைத்தாள் கோட்டையில் நல்விருந்து**

"நூல்கள் மனிதர்களின் சிந்தனையில் பிறந்து, தலைமுறை தலைமுறையாக மக்களின் செவிகளில் தவழ்ந்து, பனை ஓலையிலும், பதப் படுத்தப்பட்ட தோலிலும், குன்றுகளிலும் எழுதப்பெற்றுப் பின்னர் வெள்ளைத்தாள் எனும் கோட்டைக் குள் நுழைந்து வள்ளலாய்க் கலை விருந்து படைக்கின்றன" என்று நூல்கள் எழுதப்பட்ட முறையின் பரிணாம வளர்ச்சியினையும் அவை நல்கும்பயனையும்எழிலோவியமாய்த் தீட்டியிருக்கின்றார் கவிஞர் 'நூல்' எனும் தலைப்பில்.

**"கருத்தினில் பிறந்து, மக்கள்**
**காதினில் தவழ்ந்து, தாளிக்**
**குருத்தினில் வளர்ந்து, தோலில்,**
**குன்றினில் துள்ளி யாடி**
**அருங்கலை அள்ளி அள்ளி**
**அளிக்கின்ற வள்ள லாகி**
**விருந்தூட்டு கின்றாய் இன்று**
**வெள்ளைத்தாள்**
**கோட்டைக் குள்ளே!"**

**முதுமைக்கோலம்**

மூதாட்டியின் தோற்றத்தை விவரிக்கும் கவிஞர், அவளது தலைமயிர் முற்றிய கரும்பின் பூப்போல் வெளுத்திருப்பதாகவும், நெற்றியில் தோன்றும் சுருக்கங்கள் வயலில் படைச்சால் கொண்டு உழும்போது ஏற்படும் கோடுகள்போல் இருப்பதாகவும், வற்றிப் போன கன்னங்கள் சதைப் பற்றின்றிக் காய்ந்துபோன மாங்கனி போல் தோன்றுவதாகவும், ஒளிகுன்றிக் குழிவிழுந்த கண்கள்

நன்றாக முற்றிய பிரப்பங்காய் தன் நிறம் மாறி நீலமும் மஞ்சளும் கலந்த நிறத்தை வெளிப்படுத்துவதுபோல் இருப்பதாகவும்காட்சிப்படுத்துகின்றார்.

**"முற்றிய கருப்பம் பூவாம்**
**தலைமயிர்! முதுமை காட்டும்**
**நெற்றியின் சுருக்கம் புன்செய்**
**நிலந்தோன்றும் படைச்சா லாகும்!**
**வற்றிய கன்னம் காய்ந்த**
**மாங்கனி! குழிந்த கண்கள்**
**முற்றிய பிரப்பங் காயின்**
**முழுநீல மஞ்சள் காட்டும்!"**

**கடந்திட இயலாக் கல்லறை**

இவ்வுலகில் அழியாத பெருநூல் களைப் படைத்த சான்றோர்கள், அருங்கலைகளை வளர்த்த அறிஞர் கள், தவறுசெய்து பழிசுமந்தோர், பச்சிளம் குழந்தைகள், மீன்விழி மாதர், வலிபொருந்திய காளையர், மூத்தோர், எல்லோரிடத்தும் அன்பு காட்டும் மேலோர் என்று எவரா யினும் புவியில் பிறந்தால் மரணத்தை எதிர்கொண்டு கல்லறைக்குச் சென்றே ஆகவேண்டும்; அதனை யாராலும் தடுக்க இயலாது என மானுட வாழ்வின் நிலையாமையை விளக்குகின்றார் கவிஞர், 'கல்லறை' குறித்த கவிதையில்.

**"அழிவிலாப் பெருநூல் செய்தார்;**
**அருங்கலை வளர்த்தார், நாட்டில்**
**பழியினைச் சுமந்தார், மென்மைப்**
**பச்சிளங் குழவி, கெண்டை**
**விழியினர், காளை, மூத்தோர்,**
**கழியன்பால் அமைதி காட்டும்**
**மேலவர், வந்தோர்க் கெல்லாம்**
**கல்லறை! கடந்தார் உண்டோ?"**

இவ்வாறு இயற்கைக் காட்சிகளை யும், வாழ்வியல் நிகழ்வுகளையும் தம் பாட்டறிவையும் (கவிப்புலமை) பட்டறிவையும் குழைத்துப் படிப் போர் உள்ளங்களைக் கவரும் எழிலோவியங்களாய்த் தீட்டியுள் ளார் கவிஞர் வாணிதாசன்.

**பெற்ற பாராட்டுகள்**

கவிஞர் வாணிதாசனின் எழிலோவியத்தைப் படித்த தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார், "வாணிதாசர் பெரும் உலகக் கவிஞர் ஆதல் வேண்டும்" என்று மனந்திறந்து பாராட்டி யிருக்கின்றார்.

"தாம் கண்ட காட்சிகளைச் சிறிதும் வழுவாமல் படம்பிடித்துக் காட்டுவது போன்றுஎளியசொற்களைக்கொண்டு பொருள் ஆழத்தோடு அமைத் திருப்பது இவருடைய அறிவின் திறமையினையும் பிற்காலத்தே இவர் அடையத்தக்க அழியாப் பெரும்புகழின் சிறப்பினையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றது. இவருடைய பாடல்களை உலகப் பெருங்கவிஞருள் ஒருவரான இரவீந்திரநாத தாகூர் அவர்களின் பாடல்களுக்குச் சமமாகக் கூறலாம்" என்று வாணிதாசனைத்

’தமிழ்நாட்டுத் தாகூராக’க் கண்டு பாராட்டியிருக்கின்றார் எழுத்தாளர், இதழாளர், குழந்தைக் கவிஞரெனும் பன்முகத் திறனாளரான மயிலை சிவ. முத்து அவர்கள்.

தம்முடைய பாடல்களில் இயற்கைக்குப் பேரிடம் தந்திருப்பதால் ’தமிழ்நாட்டின் வேர்ட்ஸ்வொர்த்’ எனும் சிறப்புப்பெயரும் கவிஞர் வாணிதாசனுக்கு உண்டு.

பாவேந்தர் பாரதிதாசன் மரபினைச் செம்மையாய் வழிநடாத்திச் சென்ற முதன்மையான கவிஞர்களுள் ஒருவர் வாணிதாசன் எனில் மிகையில்லை. காலத்தைவென்று நிற்கும் கவின்மிகு பாடல்களைப் படைத்திருக்கும் கவிஞர் வாணிதாசனின் புகழ் கவிவானில் என்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கும்!

*கட்டுரைக்கு உதவிய நூல்:*
*எழிலோவியம்*
*(கவிதைத் தொகுப்பு)*
*கவிஞர் வாணிதாசன்,*
*நவபாரத் பிரஸ், சென்னை - 2.*



# வாணிதாசன் புகழ் வாழ்க!

பாவேந்தன் பரம்பரையில் வந்த கிழக்கு
பாண்டி மண்தந்த சூரிய விளக்கு
மொழி உணர்வே இவரின் இலக்கு
மோதி நின்று எழுச்சித்தரும் சிலிர்ப்பு.

பகுத்தறிவுப் புரட்சியே இவரின் கேள்வி
பாரினிலே தமிழ் உயர்வே இவரின் வேள்வி
கொடி முல்லை தமிழர்களின் போர்வாள்
இன்ப இலக்கியம் மொழி உணர்வு வெற்றிவேல்.


இயற்கையின் இனிமையைப் பாடி வைத்தார்
இனிய தமிழ் முழக்கத்தை ஓதி வைத்தார்
தமிழச்சி பெண்ணுரிமை முழக்க முரசு
தொடுவானம் இவரின் இன்ப ஓவியம்.


தமிழ்நாட்டின் வோர்ஸ்வர்த் என உலா வந்தார்
தமிழ்நாட்டின் தாகூர் என்று பட்டம் பெற்றார்
தமிழ் உணர்வு மக்களிடம் நிற்க வேண்டும்
தரணியிலே தமிழ்க்கொடி தான் பறக்க வேண்டும்.

இவர் எழுதி வைத்த படைப்பெல்லாம் முத்துகள்
எழுச்சித்தரும் தமிழ்நாட்டின் சொத்துகள்
விருத்தமே மொழி அழகின் நல் இலக்கணம்
உயிர் நடைபோட வைக்கும் தமிழ் இலக்கணம்.

வாணிதாசன் வழியில் இனி நடப்போம்
வற்றாத தமிழ்ப் பெருமை சேர்த்து வைப்போம்
விடியல் வரும் எழுச்சி நடை நீபோடு
எழிலார்ந்த தமிழுக்கு இல்லை இனி கேடு.

- முனைவர் இதயகீதம் இராமானுஜம்






# வாணிதாசன் வாழி!

பொலியும் புதுவையில் புகழ்பெற்ற வில்லியனூர்
கலியுக நாயகன் காமு துளசியின்
குலம்தழைக்க கொழுந்து விட்ட ரங்கசாமி
இலகு கல்வியை எளிதாய்க் கற்றவரே
பாரதி தாசனார் பாதைவழி நடந்தவரே
ஊரார் மெச்சும் ஒண்டமிழ் ஆசானே
பெரியார் கொள்கையைப் பெரிதாகக் கொண்டவரே
அரிய தமிழோடு ஆறுமொழி கற்றவரே
ஒன்பான் மணிகளை நன்மகவாய் ஈந்தவரே
பண்பால் உயர்ந்தவரே பாசம்மிகக் கொண்டவரே
கோடி கொடுப்பினும் கொள்கையில் கோடாது
சாடினாய் மறத்தினைச் சாற்றினாய் தமிழச்சி
உள்ளிட்ட பலபனுவல் உவப்புடன் சொன்னவரே
அள்ளக் குறையாத அரியபல விருதுகளை
அரசும் அறிஞரும் ஆனந்தமாய்த் தந்தார்கள்
பாவலர் மணியென்றும் புதுமைக் கவியென்றும்
காவலர் தமிழுக்கு கணக்கற்ற புகழ்மாலை
வாணிக்குத் தாசனாய் வண்டமிழர் பலரையும்
தோணியாய்க் கரைசேர்த்தீர் தொண்டுபல செய்தவரே
கவிஞர் ஏறாக மாநாட்டுக் கவியரங்கில்
குவிந்துள்ள கூட்டத்தைக் குளிர வைத்தாயே
படிமத்தை தேர்வைத்து பாரினைச் சுற்றிடவோம்
அடிபணிந்தோம் அண்ணலே அன்றாடம் போற்றிடுவோம்
தொல்காப்பியர் தொண்டர் அடிப்பொடி காளியப்பன்
நல்கிய கவிதனை நாயகனே ஏற்றிடுக.



**புலவர் ஆ.காளியப்பன் க.மு.,கல்.மு.,**
தலைவர் தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம் பேரூராதீனம்
பூலுவபட்டி, கோயம்புத்தூர் 641101

# செவாலியே வணிதாசர்!



சித்திரையில் பூ பூக்கும் செவ்விழதைக் காட்டும்
　செழுந்தென்றல் இசையாகி மென்னுடலைத் தீண்டும்!
சித்தர்கள் உறைவிடமாம் நம்புதுவை மண்ணில்
　சீர்பெற்றே நிறைவுற்றோம் நெஞ்சார சாய்ந்து!
எத்திசைக்குச் சென்றாலும் எம்புதுவை ஈர்க்கும்
　என்மனதில் நிற்பதுவோ கவிவாணி தாக்கம்!
கொத்துமலர் சாற்றுகின்றேன் பெருமுழக்க மிட்டே
　குன்றேறி வணங்கிடுவோம் தொடுவானம் தொட்டே!

வான்தவழும் முகிலினங்கள் வரவேற்கும் காலை
　வளம்கொடுக்கும் தென்பெண்ணை நீர்நிரையும் வேளை!
தேன்சுரக்கும் முக்கனிகள் நாக்கினிலே ஊறும்
　தெகிட்டாத செவ்வாழை மரத்தினிலே தொங்கும்!
வான்போற்றும் புலவர்கள் கொண்டாடும் நம்மூர்,
　வாணிக்குச் சூடுகின்றேன் பாமாலை பாடி!
மாண்போடு கூறுகின்றேன் பாட்டரங்கப் பாட்டு
　மண்ணிடையே ஒளிர்கின்றாய் சிலையாக நின்று!

நெஞ்சார்ந்த நடையினிலே இனிக்கின்ற பாட்டு
　நெற்கதிர்கள் சாய்ந்திடுமே தொடுவானம் பார்த்து!
பஞ்சாங்கம் பாராத மகராசன் என்றே
　பக்கத்து ஊராரும் சொல்லிடையே கேட்டு!
அஞ்சாத சிங்கமென்று வலம்வந்தாய் யாண்டும்
　அழகெனவே படைத்தாயே தமிழச்சி மாண்பு!
கெஞ்சிவாழ்தல் நஞ்சினும்கொ டிதென்றுபாடி விட்டு
　கேணிநீர்ப்போல் ஊற்றெடுக்கும் கொடிமுல்லை பற்று!

வாணிதாசன் கவிதைவளம் வான்போற்றும் என்றும்
　வாழ்வோரின் சிந்தனைகள் மீண்டெழுப்பும் மன்றம்!
காணிப்பொன் விளைபொருட்கள் உண்டென்று கூறி
　கார்தந்த செந்நெல்லை வறியவர்க்கு வாரி!
கோணிநிரை பொன்தரினும் கொள்கைனிற் ஆழ்ந்து
　குலவிளக்காய் சிறந்தோங்கும் வாணிதாசன் பாங்கு!
வாணியவன் வழியினிலே இயற்கையினைப் போற்றி
　வளமார்ந்த சிந்தனைகள் வரலாறு நோக்கி!



பாவலர் இராகி. சிரீதரன் பிரான்சு.

# வாணிதாசன் ஒரு பார்வை!

கவிஞரேறு வாணிதாசன் கவிதைக் கலைக்குரிய பாவும் பாவினங்களும் என்று ஒரு அழகிய தொகுதியை கவிஞர் பெருமக்களுக்கு விட்டுச் சென்றுள்ளார். யாப்பியல் முறைப்படி பல பாடல்கள் புனைந்துள்ளார். கவிதை என்பது அதற்குரிய ஆற்றல் மற்றும் தனிச்சிறப்புகள் உண்டு.அது பொருளையும் இலக்கணத்தையும் உணர்த்துவதாக அமையும்.

வாணிதாசனார் அவர்கள் தன் குருவாக பாவேந்தர் பாரதிதாசனை ஏற்றுக் கொண்டு அவர் தன் வழியில் கவிதைகளை வழங்கியுள்ளார். யாப்பியல் முறைப்படி கவிதை பாடுவது சற்று சிரமம். கவிதையில், உணர்ச்சி, கற்பனை ஒலிநயம், அணிகலன்கள், தொடைநயம்,கலைகள் முதலியவை பொருந்த வேண்டும்.

தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், பொங்கற் பரிசு, குழந்தை இலக்கியம், சிரித்த நுணா, இனிக்கும் பாட்டு, எழில்விருத்தம்,வாணிதாசன் கவிதைகள் 1,2,3 தொகுப்புக்கள் என்று சிலவற்றை குறிப்பிட்டுள்ளேன்.

எழில்விருத்தம் எனும் நூலில் நூற்று இருபது ஆசிரிய விருத்தங்கள் எழுதியுள்ளார். அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம் ஆகியன அடங்கும்.

குறிப்பாக அறுசீர் விருத்தத்தில் வாணிதாசனாரின் எடுத்துக்காட்டு:

‘ மாற்றார்க்கும் காலம் காட்டும்
மணிக்கூண்டே உன்னைப் போல‘
எழுசீர் விருத்தம் ஒரு எடுத்துக்காட்டு:




‘நாட்டினில், ஆறே! நீயிலா ஊர்க்கே
நல்லழ கில்லையென் றாரே! ‘

எண்சீர் விருத்தம்:
விண்மீனைப் பற்றிய கவிதை:

தைத்திங்கள் குளம்பூத்த பூவோ விண்மீன்?
தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக் காசோ,
என்று பாடினார்.

கவிஞரேறு வணிதாசனார் ஒரு புரட்சிப் பாவலர். பாரதியார், பாரதிதாசன் வரிசையில் வந்தவர். அவர் படைப்புகளில் புரட்சி மனம் வீசும்.



‘ கல்லின்கீழ்ச் செடியைப் போல
காலத்தைக் கடத்தி விட்டீர்
செல்வத்தை ஆண்டான் துய்க்க
வயலினில் உழைத்தீர்! தேய்ந்தீர்;
செல்வத்தை ஆக்கு வோர்கள்
தீராத பசியில் வாடல்
நல்லதோ! எண்ணிப் பாரீர்
நலிவெலாம் உமக்கே தோன்றும்! ‘

என்று அடிமைப் பட்டவர்களுக்காக பாடினார்.

‘சேரியைத் திரும்பிப் பாரீர்
குடிசையில் தெரியும் வானம்‘

‘உணவினை உழைப்பை யார்க்கும்
பொதுவாக்க உயரும் வாழ்வே‘
என்று பொதுவுடமை கொள்கையினை பறை சாற்றினார்.

இறுதியாக படித்தவர்களுக்கு ஒரு விண்ணப்பம் வைத்தார்.

‘எழுத்தாலே தாய்நாட்டைத் தான்பிறந்த நாட்டை
ஈடேற்ற முனைவதுதான் படைத்தவனின் செய்கை ‘
என்று மனதை தைக்கும்படி பாடி வைத்துள்ளார்.

வாணிதாசன் ஒரு பார்வை என்ற தலைப்பில் சில பாடல்கள் எடுத்துக் காட்டாக கூறியுள்ளேன். அவர் தமிழுக்கு அளித்த பங்கு மிக உண்டு. அவர் தம் படைப்புகள் ஏராளம்! ஏராளம்!

அவருடைய கவிதைப் பண்புகளை நினைக்கும்பொழுது அவர் புகழ் இலக்கிய உலகில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

பாவலர் இராகி.சிரீதரன்

# கவிஞரேறு வாணிதாசன்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

கவிஞ ரேறு வாணிதாசன்
கவிதை உலகில் தனித்துவமாய்
கவிதை காவி(ய) பலநூல்கள்
கருத்தாய் எழுதிப் புகழ்பெற்றார்
கவிதை கவிதை என்றேதான்
காலை மாலை வாழ்ந்திட்டார்
கவியால் அழகாய் இயற்கையினைக்
காவி யமாகப் படைத்திட்டார்(।)

இயற்கை எழிலை அழகாக
எழுதிப் படைத்தார் தொடுவானம்
நயமாய் இருந்த மங்கையினை
நாட்டைத் திருத்தும் தமிழச்சி(யும்)
இயல்பாய்க் குழந்தை படித்திடவே
இன்பக் குழந்தை இலக்கியமும்
இயற்கை போற்றும் எழிலோவி(யம்)
இல்லப் பெண்ணாய் கொடிமுல்லை

பெற்றார் அவரும் பிள்ளைகளைப்
பெருமை சேர்க்கும் ஒன்பதுபேர்
சுற்றம் போற்ற வளர்ந்தனரே
சொந்தம் சூழ வாழ்ந்தனரே
பற்று கொண்டு அனைவருமே
பாட்டன் புகழைப் பாடினரே
கற்றுத் தேர்ந்த சிலபேர்கள்
கவிதை எழுத முயன்றனரே



பாட்டன் புகழைக் கேட்டிடவே
பாவ லரெல்லாம் புகழ்ந்திடவே
கேட்டுக் கேட்டுத் தமிழ்ப்பற்று
கேட்கா வரமாய் மாறியதே
பாட்டன் புகழை நான்பார்த்து
பாடல் எழுதப் பழகிடவே
பாட்டும் என்னுள் பிறக்குதடா
பாவ லனாக மாற்றுதடா

இறந்த பின்னும் வாழ்கின்றாய்
இனிய பாடல் படைத்ததினால்
பிறக்கும் பாடல் உனைநினைத்தால்
பிறவிப் பயனாய் உணர்ந்தேனே
திறக்கும் கதவு தமிழ்வளர்க்க
திறமை உன்னால் கண்டேனே
கறந்த பாலின் தூய்மையைபோல்
கற்றுக் கவிதை படைத்தேனே

துள்ளும் நடையில் உன்பாட்டு
தொடர்ந்து கேட்டால் தாலாட்டு
உள்ளம் காணத் துடிக்கிறதே
உன்னி(டம்) பயில நினைக்கிறதே
உள்ளம் நிறைய நெகிழ்கின்றேன்
உன்னைப் புகழ முயல்கின்றேன்
கள்ளம் ஏதும் சொல்லவில்லை
கவியால் உன்னை ணங்குகிறேன்

**முனைவர். சா.தமிழ்க்குமரன்**
(தகு)



# புதுமைக்கவிஞர் வாணிதாசனார்!

பல கவியைப் பார்த்திருப்பேன் பாவலனே உன்போலச்
சிலகவியே என்னுள்ளில் சிலையாக அமர்ந்தவராம்
உலகினிலே கவியெல்லாம் ஒன்றினிலே கருத்தூன்றிப்
பலப்பலவாய்ச் சுவைதனையே பாட்டினிலே ஏற்றினரே! 1.

இயற்கையிலே ஒன்றியதால் இயல்பான பொருட்களுமே
மயக்கத்தால் உன்படைப்பில் மனமாற்றம் செய்கின்ற
வியப்பைத்தான் காண்கின்றேன் விரிவானின் கூன்பிறையில்
வயற்காட்டில் ஒளிசிந்தும் வடிவெல்லாம் புதுமைகண்டேன்! 2.

கீழ்வானின் உருக்கியபொன் கிடைத்திருக்கும் உன்பாட்டில்
ஆழ்கடலின் முத்துக்கள் அலங்கரிக்கும் அதன்கழுத்தில்
தாழ்வான பள்ளத்தில் தடம் புரளும் நீரலைமேல்
வாழ்ந்திருக்கும் புல்கூட வாழ்த்துனக்குச் சொல்லிடுமே! 3.

உச்சிதனில் பூக்களுமே உன் பாட்டில் சிரித்தாட
நொச்சியுடன் காற்றினிலே நுணாவெல்லாம் அசைந்தாடக்
கச்சிதமாய்த் தாளமுடன் கல்லிடுக்கில் தேரைபாட
அச்சுவையைப் பருகித்தான் அழகுசிரித் ததென்றாயோ? 4.

ஊர்கோடிப் பாட்டியவள் உரலிடிக்கும் வெற்றிலையில்
கார்கால நெற்கதிரைக் களம்தூற்றும் கையசைவில்
தார்வேந்தன் வருகைக்குத் தலையசைத்து வணங்குதல்போல்
யார்யார்க்கோ கொடியசைத்து எழிலாக வரவேற்பாய்! 5.





பட்டாடை விரித்திருக்கும் பசும்புல்லும் உன்பாட்டில்
கட்டுடலாள் நடையழகும் களிப்பூட்டும் வயற்காட்டில்
பட்டுமேனிப் பறவைகளும் பாய்ந்தோடும் கன்றுகளும்
விட்டுவைக்க வில்லைநீயே வியந்தோமெல் லாம்புதுமையே! 6.

நீலமேக வானத்தின் நீள்விரித்த பரப்பையுமே
கோலப்பொத் தல்குடிசை கொண்டுநீயும் காட்டிடுவாய்
காலமெல்லாம் வெள்ளரிக்காய் கண்டிருப்போம் அணில்முதுகின்
தோலுவமை வெள்ளைக்கோ டுதோன்றுதையா உமக்குமட்டும்!
7.
அந்தியிலே தோன்றுகின்ற அழகான விண்மீன்கள்
சந்திருக்கும் குடையினிலே சார்ந்தி ருக்கும் செல்லரிப்பாம்
மந்திகளின் நீண்டவாலும் மாமரத்துக் கருங்குயிலும்
வந்துதிக்கும் பாட்டினிலே வாழ்ந்திடுமாம் உவமைகளே! 8.

கொழுமீனைக் கவ்வுகின்ற குடுமிவெண்மைக் கொக்கையும்தான்
அழத்தொடங்கும் விடிவெள்ளி அந்திவானத் தோற்றமும்தான்
எழுப்பிடுமே தீக்கொண்டை எரியாத சேவலும்தான்
செழித்திருக்கும் உன்பாட்டில் சொல்வதெல்லாம் புதுமையைத்தான்!

மேல்வானக் காட்சியெலாம் மிதந்துவரும் கற்பனையில்
நீள்கடலின் அழகுடனே நிலம்தோன்றும் இயற்கையெலாம்
சேல்துள்ளும் எழிலுடனே செப்புகின்ற வாணிதாச!
ஆள்போலுன் புகழினிலே அழியாமல் நிலைத்திருக்கும்! 10

தமிழ் மாமணி,

புலவர். பூங்கொடிபராங்குசம்

# புலவரேறு வாணிதாசன்!


*புதுவைக்குப் புகழ்சேர்த்த பாவேந் தர்போல்*
*புரட்சிப்பா எழுதியவர் வாணி தாசன்!*
*மதிநுட்ப யாப்பறிவால் அறிஞர் போற்றும்*
*மறுமலர்ச்சிப் பாவயலை உழுதார்! மக்கள்*
*விதியென்றும் ஊழென்றும் விளம்பி வந்த*
*வெறும்பொழுதில் இனமான யாழை மீட்டிப்*
*பொதிகைமலைத் தென்றலென வலமும் வந்தார்;*
*பூந்தமிழ்க்கு மிகப்பெரிய புகழைச் சேர்த்தார்!*

*கொடிமுல்லை தமிழச்சி இனிக்கும் பாட்டு*
*குழந்தைஇலக் கியம்பொங்கற் பரிசு மற்றும்*
*தொடுவானம் எழிலோவியம் எழில்வி ருத்தம்*
*தீர்த்தயாத் திரைசிரித்த நுணாவைப் போன்ற*
*படைப்புகளால் வரலாற்றுப் பெருமை கொண்டார்*
*பகுத்தறிவுப் பாசறையின் மறவர் ஆனார்!*
*துடிப்புறவே தமிழ்நாட்டின் தாகூர் ஆகித்*
*தொல்தமிழின் பன்முகங்கள் ஒளிரச் செய்தார்!*

*பாவேந்தர் மாணாக்கர் வாணி தாசன்*
*பன்னரிய தம்புலமைத் திறத்தால் நாளும்*
*நாவினிக்கும் பாடல்களை நல்கி நாட்டின்*
*நடப்புகளை எடுத்துரைத்தார்; தமிழுக் கென்றும்*
*காவலரண் போலிருந்தார்; தமிழா சானாய்க்*
*கற்பித்தார் மாணவர்க்கே! உலகம் போற்றும்*
*பாவலராம் வாணிதாசன் நமது நெஞ்சில்*
*பைந்தமிழாய் என்றென்றும் நிலைத்து வாழ்வார்!*

**முனைவர் கடவூர் மணிமாறன்**
*தலைவர் தமிழ்ப்பேரவை*
*குளித்தலை-639104,*
*கரூர் மாவட்டம்.*





# கவிவாணி வாழ்க

கலி வெண்பா

கலைமகள் வாழ்த்தால் கவிவாணி என்றோம்
அலைகடல் போலவே அன்பிலே ஊற்றாய்
இயற்கை எழிலால் இனிக்குமாம் பாட்டு
இயற்றவே இன்ப இலக்கியம் வந்ததாம்
எங்கும் இயற்கை எதிலும் இனிமையாம்
பொங்கிய உம்கவிதை போற்றிடும் நாடெல்லாம்
பாரதியின் பற்றினால் பாவேந்தர் பாசத்தால்
பாரதம் போற்றுமே பாட்டரங்கம் பாடி
தமிழன் உணர்வை தமிழச்சி நூலாய்
அமிர்தமாய் கொண்டுள்ள ஆத்திசூடி தோன்ற
அழகு தொடுவானம் அன்புடனே பூக்க
குழந்தை கவிதைக் குறும்புடனே பாட
கவிதை கடலாய் கவின்மிகு பாட்டால்
கவிவாணி வாழ்கின்றாய் காலம் கடந்தும்
தமிழ்வளர்ப்பால் உம்புகழ் தைமகள் வாழ்வாய்
தமிழ்வாணி வாழ்க தகை.

**பாவலர் அருள் நந்தினி** பெ ஆசிரியை
(கவிஞரேறு வாணிதாசனரின் பெயர்த்தி)
ரெட்டியார்பாளையம், புதுவை.




# பொதுவுடைமை பாடிய புதுவைக் கவிஞர் வாணிதாசன்

**- பொன். குமார்**

*தமிழகத்தில் மறுமலர்ச்சிக் கவிஞர்களுள் முதிர்ந்த அறிவும் கனிந்த அனுபவமும் பொதுநோக்கு பார்வையும் கொண்டு விளங்கியவர் கவிஞர் திரு. வாணிதாசன். அவர் பாரதிதாசன் காட்டிய புதிய வழியில் கற்றாரும் மற்றவரும் துடிக்கும் இளைஞர்களும் தொண்டு கிழவர்களும் நடிகர்களும் நாடாளும் நாவலர்களும் படித்து இன்புறத்தக்க எழில்மிக்க கவிதைகளை இனிய தமிழில் ஏற்றமுறப் பாடி வந்தவர். 1915இல் பிறந்து 1974இல் இறந்தவர். 1940களில் இருந்து எழுதத் தொடங்கிய வாணிதாசன் இறக்கும் வரை எழுதிய தொகுப்புகள்*

***இரவு வரவில்லை***
***இன்ப இலக்கியம்***
***இனிக்கும் பாட்டு***
***தமிழச்சி***
***கொடி முல்லை***
***தொடுவானம்***
***எழிலோவியம்***
***எழில் விருத்தம்***
***குழந்தை இலக்கியம்***
***சிரித்த நுணா***
***தீர்த்த யாத்திரை***
***பாட்டரங்கப் பாடல்கள்***
***பாட்டு பிறக்குமடா***
***பெரிய இடத்துச் செய்தி***



**பொங்கற்பரிசு**
**வாணிதாசன் கவிதைகள்-முதல் தொகுதி**
**வாணிதாசன் கவிதைகள்-இரண்டாம் தொகுதி**
**வாணிதாசன் கவிதைகள்-மூன்றாம் தொகுதி**
**விட்டர் விகோவின் ஆன்மெல்லோ**

கவிஞரேறு வாணிதாசன் படைப்புகளில் பல்வேறு பாடுபொருகள்களைக் காணமுடியும். மனித குலத்திற்கு தேவையான பொதுவுடைமை கவிஞரேறு வாணிதாசன் படைப்புகளில் வாசிக்கக் கிடைக்கின்றன. கம்யூனிசம் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான பொதுவுடைமை என்ற சொல்லை தமிழில் முதன்முதலில் உருவாக்கிப் பயன்படுத்தியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.

அவரது பாரத சமுதாயம் வாழ்கவே என்ற பாடலில்தான் பொதுவுடைமை என்ற சொல் முதன்முதலாகக் கையாளப் பெற்றது. பாரதியைத் தொடர்ந்து பல்வேறு கவிஞர்கள் பொதுவுடைமையைப் பயன்படுத்தியுள்ளனர். பொதுவுடைமையைப் பாடியுள்ளனர். பாரதியும் ஒரு புதுச்சேரி கவிஞர். வாணிதாசனும் ஒரு புதுச்சேரி கவிஞர். எனவே வாணிதாசன் படைப்புகளில் பொதுவுடைமை சிந்தனைகள் இருப்பதில் வியப்பில்லை.

**சேரிக் கடையின் ஆட்டத் திடையும்**
**சிறுவர் கூட்டம் ஆண்டையின்**
**பேரைக் கேட்டுக் கருகி வாடிப்**
**பேச்சு மூச்சு அற்றதே**

என்னும் வரிகளை வாணிதாசன் கவிதைகள் பகுதி 1இல் காணமுடிகிறது. ஆண்டைகளின் ஆதிக்கம் அந்த காலத்தில் அதிகமாகவே இருந்தது. ஆண்டைகளுக்கு அடிமையாகவே மக்கள் இருந்து வந்தனர். கவிஞர் ஆண்டையின் பேரைக் கேட்டாலே சிறுவர் கூட்டம் மூச்சு நின்று போனது என்கிறார். ஆண்டைகளின் அதிகாரமும் மிரட்டலும் எந்தளவிற்கு இருந்தது என்பதைக் காட்டுகிறது.

***ஆண்டை பண்ணை ஆட்கள் என்னும்***
***அச்சம் நீங்கு நாளினில்***
***ஈண்டு வறுமை அடிமை மாயும்***
***மக்கள் வாழ்வு இன்பமே***

என்னும் பாடல் வரிகளும் ஆண்டைப் பற்றியதே. இவ்வரிகள் இடம் பெற்ற தொகுப்பும் வாணிதாசன் கவிதைகள் பகுதி ஒன்றே. ஆண்டை என்னும் அச்சம் ஆழ்மனத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும். அகற்றப்பட்ட பின்பே ஆனந்தம் மனத்தில் வேர்விடும். வறுமையும் ஒழியும். வாழ்வின் இன்பமும் மலரும். ஆண்டை இல்லா வாழ்வே ஆனந்த வாழ்விற்கு அடிப்படை.

***உடைமை பொது செய்யா நாட்டில் உயரும்***
***மடமைபோல் ஆகும் அவனில்லா வாழ்க்கை***

என இன்ப இலக்கியத்தில் எழுதியுள்ளார். பொதுவுடைமை இல்லாத நாட்டில் ஒரு மனிதன் உயர முடியாது என்கிறார். பொதுவுடைமைக் கொள்கையை ஓர் உவமையாக வைத்து எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

***உண்டியின்றேல் உயிரில்லை உடற்றசையும் இல்லை***
***உலகத்தார் பன்னெடு நாள் கண்டுவரும் உண்மை***
***மண்டிவரும் வளமெல்லாம் ஒரு சிலர்க்கா சொந்தம்?***
***வளமைமிகு வாழ்வுக்குப் பகுத்துண்ணும் பண்பைக்***
***கொண்டிருத்தல் நூலோர்கள் தொகுத்தவற்றுள் எல்லாம்***
***குடியோம்பும் செயலுக்கே தலைமையென்று சொன்னார்***

என்றொரு பாடல். உயிர் இயங்கவும் உடல் இருக்கவும் மனிதர் உண்டு வாழ்தல் வேண்டும். அதற்கு உணவு அவசியம். ஒரு சிலருக்கு மட்டுமே உணவு சொந்தமாகக் கூடாது. தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி சொன்னதற்கு ஏற்ப வாணிதாசனும் உணவு எல்லோருக்கும் பொது என்கிறார். எனவே உணவு இருப்பவர்கள் பகுத்துண்டு வாழ்தல் வேண்டும் என்பதுடன் அதுவே சிறந்த பண்பு என்கிறார். இப்பாடலை இன்ப இலக்கியத்தில் காணமுடிகிறது.

இன்ப இலக்கியம் தொகுப்பிலேயே வாசிக்கக் கிடைத்த வரிகள் இவை.

***இல்லார், இருப்பவர் இல்லாத தமிழ்நாட்டை***
***அல்லவோ பெற வேண்டும் கொல்லேறே எழுந்திரு***
***அஞ்சாதே கலங்காதே பஞ்சையைத் திரும்பிப்பார்***
***நெஞ்சை உருக்கும் ஏழை நிலைமாற்ற எழுந்திரு***

இவ்வரிகளில் எல்லோரும் சமம் என்னும் நிலையே ஏற்பட வேண்டும் என்கிறார். தமிழ்நாட்டு மக்கள் அத்தகைய நிலையை அடைய வேண்டும் என்று வேண்டியுள்ளார். இதனால் வாளா இருக்காமல் ஏழைகளின் உயர்த்தவும் கோரிக்கை விடுத்துள்ளார். பொதுவுடைமை நிலை மாற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதும் கவிஞரின் வேண்டுகோள்.

***வாளை புரளும் வயலின் விளைவெல்லாம்***
***தானே நனியுண்ணும் தாத்தாக் களையெல்லாம்***
***ஓட்டுவோம் நாட்டில் உடமை பொதுசெய்வோம்***
***வானிருந் திங்கோர் அணுக்குண்டு வீழினும்***
***ஆருக்கும் அஞ்சோம் என்(று) ஆளவோர் அருகில்***
***அறைக அறைகவே***

என்னும் பாடல் இடம் பெற்ற தொகுப்பு சிரித்த நுணா. மனித சமுதாயத்தில் பொதுவுடைமை வேண்டுமெனில் மனித மனங்களில் அதற்கு அடிப்படையான அன்பு வேண்டும். அன்பே பொதுவுடைமைக்கு அடிப்படை. பொதுவுடைமைக்கு எதிராக, பொதுவுடைமையை ஒழிக்கும் விதமாக அணுக்குண்டே வீசினாலும் மனிதர்கள் அஞ்சாமல் எதிர்த்து நின்று பொதுவுடைமை காக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

***பெயல்தேக்கி நீர்பாய்ச்சிக் காட்டை மேட்டைப்***
***பெருந்தோள்கள் வலியெடுக்க ஒவ்வோர் நாளும்***
***வயலாக்கி நெல்விளைப்போன் மனைவி மக்கள்***
***வயிற்றுக்குப் புல்லுணவு கிடைக்க வில்லை***
***அயல் நோக்கி அழுகின்றார் விளைப்போர் ஏங்க***
***அறுவடையைச் செய்கின்றோர் வேற்றோர் ஆவார்***

என்னும் பாடலும் வாணிதாசன் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. இப்பாடல் மூலம் உழுதவனை விட அறுவடைச் செய்பவனுக்கு உணவு சென்றடைகிறது என்கிறார். உழைப்பவனுக்கே உணவு சென்று சேர வேண்டும் என்பது கவிஞரின் சிந்தனை. வயலில் இறங்கி வேலை செய்பவர் ஒருவர். வயலில் விளைவதை வீடு கொண்டு சேர்ப்பார் ஒருவர்.

**செல்வத்தை ஆண்டான் துய்க்க**
**வயலினில் உழைத்தீர் தேந்தீர்**
**செல்வத்தை ஆக்கு வோர்கள்**
**தீராத பசியால் வாடல்**
**நல்லதோ? எண்ணிப் பாரீர்**
**நலிவெல்லாம் உமக்கே தோன்றும்**

என்பது தமிழச்சியில் காணப்படும் பாடல். இப்பாடலிலும் உழைப்பவர் பயன்பெற வேண்டும் என்கிறார். உழைப்பவர் பசியில் வாடும் போது உழைக்காத செல்வந்தர்கள் உட்கார்ந்து உண்பது அநியாயம். எனவே இப்பாடலில் உழைப்பவர்களையே எண்ணிப்பார்க்க சொல்லியுள்ளார். உழைக்கும் மக்களுக்காக குரல் கொடுத்துள்ளார்.

**பொருளைத் தமதாக்கிப் பொய்யுரைத்தே ஏய்க்கும்**
**திருடராம் செல்வரும்**

என தீர்த்தயாத்திரையில் நேரடியாகவே பொருளைத் தமதாக்கிக் கொள்ளும் செல்பவர்களைத் திருடர் என்று சாடியுள்ளார். திருட்டு என்பது திருடுவது மட்டுமல்ல பிறர் பொருளைத் தமதாக்கி ஏய்ப்பதும் திருட்டே என்பது கவிஞரின் திடமான கருத்து.

**விளைவினை மக்க ளெல்லாம்**
**பொதுவாகத் துய்க்கும் மேன்மை**
**முளைத்திடில் தமிழர் நாட்டில்**
**முளைத்திடும் இன்ப வாழ்வே**

என எழிலோவியத்தில் கவிஞர் வாணிதாசன் விளைந்த பொருள்களை எல்லாம் பொதுவாக்க வேண்டும் என்கிறார்.

அவ்வாறு பொதுவாக்கினாலே தமிழ் நாட்டு மக்களிடையே இன்பம் முளைத்திடும் என்று அறிவுறுத்தியுள்ளார். உற்பத்தி செய்யப்படும் எதுவும் பொதுவுடைமைக்க வேண்டும் என்கிறார்.

**உயர்வு தாழ்வு இன்றி மக்கள்**
**உடைமை பொதுவாய் அடைந்து வாழத்**
**துயரம் நீக்கும் இன்ப நிலவைத்**
**தோப்புத் துரவு எங்கும் சேர்த்தே**
**நீலவானைக் கோலம் செய்ததே - வெண்**
**ணிலவு இன்பப் பாலை வார்த்ததே**

என தொடுவானத்தில் கவிஞர் பொதுவுடைமை கருத்தை வலியுறுத்தியுள்ளார். பொதுவாய் உடைமைகளை வைப்பதன் மூலம் ஏற்றத்தாழ்வு என்பது மக்களிடையே இராது என்றும் அறிவுறுத்தியுள்ளார். மேலும் தோப்புத் துரவுடன் மனிதர்கள் வாழ வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

**உடைமை பொதுவாக்கி உழைப்பைப் பகிர்ந்தளித்தால்**
**உயரவில்லை தாழ்வில்லை அயராதே அஞ்சாதே**

என்னும் இரண்டே வரிகளில் எல்லாரும் உயர்வு தாழ்வின்றி வாழ இருக்கும் உடைமைகளை எல்லாம் பொதுவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். எல்லோரும் சமம் என்னும் நிலை ஏற்பட்டு விட்டால் அயர வேண்டியதில்லை, அஞ்ச வேண்டியதில்லை என்றும் ஆறுதல் கூறியுள்ளார். இவ்வரிகள் இடம்பெற்ற தொகுப்பு தொடுவானம். இதே தொகுப்பில் இடம் இன்னுமிரண்டு வரிகள்

**உடைமை பொது செய்து திராவிட நாட்டை**
**உருவாக்கத் தூளாகும் பணக்கார மூட்டை**

இருக்கும் உடைமைகளை எல்லாம் பொதுவில் கொண்டு வந்து விட்டால் பணக்காரர்கள் இல்லாது போவார் என்கிறார். திராவிட நாடு என்று தன் திராவிட பற்றையும் வெளிப்படுத்தியுள்ளார். திராவிடத்தின் கொள்கைகளில் ஒன்றே எல்லோரும் சமம் என்பது.

***உழைப்பினைப் பொதுமை ஆக்கி***
***உருப்பெறும் விளைவை எல்லாம்***
***பிழைப்பவர் பகிர்ந்து துய்க்கப்***
***பேணுதல் பொதுமை***

*என எழில் விருத்தத்தில் பொதுவுடைமை என்றால் என்னவென்று தெரிவித்துள்ளார். இதில் உழைப்பை பொதுமையாக்க வேண்டும் என்றும் விளைபவையை பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இவையே பொதுவுடைமை என்கிறார். பொதுவுடைமையை பொதுமை என்பது குறிப்பிடத்தக்கது.*

***கொடுமையடா மண்ணில் சிலருண்டு வாழ்தல்***
***கூழுக்கும் வழியற்றுப் பாட்டாளி தாழல்***
***உடைமை பொதுவாக்கி வாழ்வோமிந் நாட்டில்***
***ஊரை வளைப் போரை வேர்கல்லிச் சாய்ப்போம்***

*என வாணிதாசன் கவிதைகள் தொகுதி 1இல் வாசிக்கக் கிடைத்த வரிகள். இவ்வரிகளிலும் சிலர் மட்டுமே வாழ்தல் கூடாது என்றும் எல்லாவற்றையுமே பொதுவாக்குதல் சிறப்பு என்கிறார். அதுவே பயன்தரும் என்கிறார். மேலும் மக்களுக்கானதை வளைத்து தனதாக்கிக் கொள்வோரை வேரோடு சாய்ப்போம் என்கிறார்.*

***வறுமையா தடைக் கடங்கும்?***
***உடைமையைப் பொதுவாய்ச் செய்த***
***மேவிழா உயர் வாழ்க***

*என்றும் ஒரு கவிதையில் எழுதியுள்ளார். மேதினத்தில் எல்லோருமே ஒன்று என்கிறார். மேதினம் எல்லோரையும் உயர்த்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். குறிப்பாக மேதினம் எல்லாவற்றையும் பொதுவுடைமையாக்கியது என்கிறார்.*

*கவிஞரேறு ஒரு மக்கள் கவிஞர். மக்களுக்காகவே பாடியுள்ளார். மக்களையே பாடியுள்ளார் பொதுவாக ஒரு கவிஞரிடம் ஒரு சமூக அக்கறை இருக்க வேண்டும். மக்கள் நலனில் முன்னேற்ற சிந்தனை உடையவராக இருக்க வேண்டும். மிக முக்கியமாக*

பொதுவுடைமை சிந்தனை கொண்டவராக இருக்க வேண்டும். கவிஞரேறு வாணிதாசனிடம் பொதுவாகவே பொதுவுடைமை சிந்தனை கவிஞரேறு வாணிதாசனிடம் ஏராளம் உள்ளன என்பதை கவிஞரின் வரிகள் காட்டுகின்றன. இன்னும் அவர் படைப்புகளில் பொதுவுடைமைச் சிந்தனைகள் இருக்கின்றன. பொதுவுடைமைக் கொள்கைக்கான வரிகளைத் தேடுபவர்கள் கவிஞரேறு படைப்புகளைத் தேடி வாசித்தால் கண்டடைய முடியும். எடுத்துக்காட்ட முடியும். ஒரு பொதுவுடைமைவாதியை விட அதிகமாகவே கவிஞரேறு சிந்தித்துள்ளார். எழுதியுள்ளார். பொதுவுடைமையை பாடிய கவிஞரேறு வாணிதாசனிடம் ஒரு பொதுவுடைமைக் கவிஞரே. எல்லோரும் வாசிக்க வேண்டும். பொதுவுடைமையை பின்பற்ற வேண்டும். ■



# வாணிதாசன் ஒரு மரபுப் பாவலன்

**முனைவர் க. அரிகிருஷ்ணன்**
*இரட்டணை அஞ்சல், திண்டிவனம் வட்டம்*

*பாவலரேறு, புதுமைக்கவிஞர், பாவலர் மணி, பாவலர் மன்னன், தமிழ்நாட்டுத் தாகூர், தமிழ்நாட்டு வேர்ட்ஸ்வேர்த் என்றெல்லாம் போற்றப்படும் வாணிதாசன், பாவேந்தார் பாரதிதாசனாரிடம் தொடக்கக்கல்வி பயின்றவர். பாரதிதாசன் பரம்பரை எனப் போற்றப்படுபவர். இத்தகைய புகழுடைய வாணிதாசன் ஒரு மரபுப் பாவலன் என்பதை விளக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.*

**வாணிதாசனார் கையாண்ட பாவகைகள்**

*பாவலரேறு வாணிதாசனார் தனது படைப்புகளில் குறள்வெண்பா, நேரிசை சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பா, நேரிசை கலிவெண்பா, இன்னிசைக் கலிவெண்பா முதலான பாவகைகளைக் கையாண்டுள்ளார்.*

**குறள் வெண்பா**

*இரண்டடியாய் வரும் குறள்வெண்பா, பாட்டரங்கப் பாடல்கள், வாணிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதி ஆகிய நூல்களில் கையாளப்பட்டுள்ளன.*



**நாகாக்கும் செந்தமிழே நானுன்னைப் பாடவே**
**காகா எனக்கரைந் தேன் பாட்டரங்கக் கவிதை** *ப. 47*

*என்ற இப்பாடல் பாட்டரங்கப் பாடல்கள் என்னும் நூலில், நானிலம் என்னும் தலைப்பிலமைந்த தமிழ் வாழ்த்துப் பாடலாகும். இது, காய்ச்சீர், விளச்சீர், மாச்சீர்களைப் பெற்று நாள் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.*

**நேரிசை சிந்தியல் வெண்பா**

மூன்றடியாய் தனிச்சொல் பெற்றுவரும் நேரிசை சிந்தியல் வெண்பா யாப்பில், ஒரு பாடல் காணக்கிடைக்கிறது.

**நேரிசை வெண்பா**

நான்கடியாய்தனிச்சொல்பெற்றுவரும்நேரிசைவெண்பாயாப்பில், பொங்கல் பரிசு, இரவு வரவில்லை, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் தொகுதி (ஒன்று, இரண்டு, மூன்று), பாட்டரங்கக் கவிதை ஆகிய நூல்களில் இருந்து பாடல்கள் கிடைக்கின்றன.

**பஃறொடை வெண்பா**

ஐந்தடி முதல் பன்னிரண்டடிவரைப் பாடப்படும் பஃறொடை வெண்பா அமைப்பிலானப் பாடல்கள் பொங்கல் பரிசு, வாணிதாசன் கவிதைகள் (முதற்தொகுதி), பாட்டரங்கப் பாடல்கள் ஆகிய இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளன.

**நேரிசை ஆசிரியப்பா**

ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடி நாற்சீராகவும் வரும் நேரிசை ஆசிரியப்பா அமைப்பிலானப் பாடல்கள் தீர்த்த யாத்திரை, பொங்கல் பரிசு, இரவு வரவில்லை, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் தொகுதி (ஒன்று, இரண்டு, மூன்று), பாட்டரங்கப் பாடல்கள் ஆகிய இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

**நிலைமண்டில ஆசிரியப்பா**

அனைத்து அடிகளும் நாற்சீர் பெற்று அமையும் நிலைமண்டில ஆசிரியப்பா அமைப்பிலானப் பாடல்கள் தீர்த்த யாத்திரை, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் (தொகுதி மூன்று), பாட்டரங்கக் கவிதை ஆகிய நூல்களில் அமைந்துள்ளன.

**நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா**

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்களைப் பெற்று அமையும் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா அமைப்பிலான பாடல், இலக்கிய இன்பம் என்ற நூலில் காணக் கிடைக்கிறது.

**கொச்சகக் கலிப்பா**

கலிப்பா உறுப்புகள் முறைமாறியும், கூடியும் குறைந்தும் வரும் கொச்சகக் கலிப்பா அமைப்பிலும் பாடல்கள் கிடைக்கின்றன. இவை கொச்சகக் கலிப்பா வகைகளுள் தரவுக் கொச்சகத்தைச் சார்ந்தவை.

**கலிவெண்பா**

கலிவெண்பா, வெண்பா வகைகளுள் ஒன்று. இஃது இன்னிசைக் கலிவெண்பா, நேரிசைக் கலிவெண்பா என இருவகைப்படும். இன்னிசைக் கலிவெண்பா பதின்மூன்று அடிகள் முதல் பல அடிகளில் தனிச்சொல் பெறாமல் வரும். நேரிசைக் கலிவெண்பாவின் இரண்டிரண்டு அடிகள் ஒவ்வொரு எதுகையும் தனிச்சொல்லும் பெற்று வரும்.

***வான் தீ நிலம்கால் புனல்கண்டு நம்மவர்***
***வாழ்நாள் முதலாய் வளங் கொள் தமிழே!***
................. ................. ................... .............
***அறைக! அறைக வே!***

இப்பாடல் இன்னிசைக் கலிவெண்பா வகையைச் சார்ந்தது. பதினெட்டு அடிகள் பெற்று தனிச்சொல் பெறாமல் வந்துள்ளது.

***சிந்துக்குத் தந்தை; செழுந்தமிழைத் தென்னாட்டார்***
***வந்திக்கச் செய்தனன் மாக்கவிஞன்;-முந்தை***
.................. ................. ................ ...............
***என் கவிதை எள்ளாமல் இன்மழலைச் சொல்லெண்ணி***
***என்வணக்கம் ஏற்பீர் இனிது!*** ***பாட்டரங்கப் பாடல்கள்*** பக்.

இப்பாடல் நேரிசைக் கலிவெண்பா வகையைச் சார்ந்தது. இது, இரண்டிரண்டு அடிகள் ஒவ்வொரு எதுகையும் தனிச்சொல்லும் பெற்று அமைந்துள்ளது.

**வாணிதாசன் கையாண்ட பாவினங்கள்**

வாணிதாசனார் பாவினங்களில் குறள்வெண்செந்துறை, அறுசீர், எழுசீர், எண்சீர், பன்னிருசீர் ஆசிரியவிருத்தங்கள், கலித்துறை, கலித்தாழிசை, கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் ஆகிய வடிவங்களிலும் பாடல்கள் படைத்துள்ளார்.

**குறள்வெண்செந்துறை**

சீர் வரையறை இன்றி இரண்டடியாய் அளவொத்து வரும் குறள்வெண்செந்துறை அமைப்பில், இரவு வரவில்லை, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் தொகுதி ஒன்று, வாணிதாசன் கவிதைகள் தொகுதி இரண்டு, இனிக்கும் பாட்டு, குழந்தை இலக்கியம் ஆகிய நூல்களில் பாடல்கள் அமைகின்றன.

**அறுசீர் ஆசிரியவிருத்தம்**

அறுசீர் ஆசிரியவிருத்த அமைப்பில், எழிலோவியம், தீர்த்த யாத்திரை, பொங்கல் பரிசு, இரவு வரவில்லை, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் தொகுதி ஒன்று, இரண்டு, மூன்று, பாட்டரங்கப் பாடல்கள், எழில்விருத்தம், குழந்தை இலக்கியம், தமிழச்சி ஆகிய இலக்கியங்களில் பாடல்கள் காணக்கிடைக்கின்றன.

**எழுசீர் ஆசிரியவிருத்தம்**

எழுசீர் ஆசிரியவிருத்த அமைப்பில், பொங்கல் பரிசு, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் தொகுதி ஒன்று, எழில்விருத்தம் ஆகிய இலக்கியங்களில் பாடல்கள் அமைந்துள்ளன.

**எண்சீர் ஆசிரியவிருத்தம்**

எண்சீர் ஆசிரியவிருத்த அமைப்பில், தீர்த்த யாத்திரை, பொங்கல் பரிசு, இரவு வரவில்லை, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் தொகுதி ஒன்று, இரண்டு, மூன்று, பாட்டரங்கப் பாடல்கள், எழில்விருத்தம், குழந்தை இலக்கியம், கொடிமுல்லை ஆகிய இலக்கியங்களில் பாடல்கள் கிடைக்கப்பெறுகின்றன.

**பன்னிருசீர் ஆசிரியவிருத்தம்**

பன்னிருசீர் ஆசிரியவிருத்த அமைப்பிலானப் பாடல், இரவு வரவில்லை இலக்கியத்தில் அமைந்துள்ளது.

**கலித்துறை**

ஐஞ்சீரடி நான்காய் வரும் கலித்துறை அமைப்பிலானப் பாடல்கள், பொங்கற்பரிசு, சிரித்த நுணா, வாணிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, பாட்டரங்கப் பாடல்கள், எழில் விருத்தம் ஆகிய நூல்களில் கிடைக்கின்றன.

**கலிவிருத்தம்**

நாற்சீரடி நான்காய் அமைந்த கலிவிருத்த அமைப்பில், பொங்கற்பரிசு, இரவு வரவில்லை, வாணிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதி, பாட்டரங்கப் பாடல்கள் ஆகிய நூல்களில் பாடல்கள் காணப்படுகின்றன.

**வஞ்சித் தாழிசை**

இருசீரடி நான்கு மூன்றடுக்கிய வஞ்சித்தாழிசை அமைப்பில் (பாட்டரங்கப் பாடல்கள் பக். 127) ஒரு பாடல் மட்டும் கிடைக்கிறது.

**வஞ்சி விருத்தம்**

முச்சீரடி நான்காய் அமைந்த வஞ்சிவிருத்த அமைப்பிலானப் பாடல், குழந்தை இலக்கியம் (173) என்னும் நூலில் அமைந்துள்ளது.

**முடிவுரை**

கவிஞரேறு அவர்கள், பாரதிதாசன் பரம்பரை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பாரதிதாசனாரைப் போன்றே தமது இலக்கியங்கள் முழுவதும் மரபுப் பாக்களைக் கையாண்டிருப்பது சிறப்புற்குரியதாகும். இவர் தமது நூல்களில், குறள்வெண்பா, நேரிசை சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை


வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பா, நேரிசை கலிவெண்பா, இன்னிசைக் கலிவெண்பா முதலான பாவகைகளையும் குறள்வெண்செந்துறை, அறுசீர், எழுசீர், எண்சீர், பன்னிருசீர் ஆசிரிய விருத்தங்கள், கலித்துறை, கலித்தாழிசை, கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் ஆகிய பாவின வடிவங்களையும் கையாண்டுள்ளார். இவை தவிர, பிற்கால யாப்பியல் நூல்கள் குறிப்பிடும் சிந்து (முச்சீர், நாற்சீர் இரட்டை), கண்ணி, சந்தப்பாடல்கள் எனப் பலவற்றையும் பாடியுள்ளார். ■





# வாணிதாசனார் புகழ் வாழி!

வாணி!. கலைவாணி தமிழ் வாழியெனப் பாடிக் கிடந்தோர் பாரினில் யேணி!.
அப்படி இருந்து வளர்த்தார் தமிழை படிக்கத் தந்தார் வாணிதாசனார் புகழ் வாழி!
கூனிக் குறுகிக் கிடந்தார் நடுவே இருந்து பாடிக் கிடந்தார் மேலோர் தோழி!
கலைவாணி யாகிட படைப்பார் சங்கப் புலவர் வழியினர் மேலோர் தாயீ..
கொஞ்சல் மறந்தால் குமரித் தமிழும் வாழுமா சொல்லடி.. கேளடி தோழி..
குடிகள் எழுந்து போற்றல் போலொரு தொழிலும் இன்றது எது?.
வயதும் காலமும் வாழ்நாளெல்லாம் வழங்கிய பெருமக்கன் நினைவுகள் வாழி!.
பொங்கும் புதுவை மண்ணில் புகழாய் எழுந்தோர் அப்படி நிலைத்தார் புகழைப் சூடி!
ஊரி ஊரித் திளைத்தார் தமிழில் ஊரிக் கிடந்தவர் வாணிதாசனார் ஒருதேனீ!.
வாழி! வாழி! வாரி விதைப்போர் தானே நல்லாசிரியரடி தோழி!.
அப்படி வாழ்ந்து கலந்தார் ஆய்ந்தார் இன்று கழனிகளடி தாயீ!..
தமிழாய்.. தமிழாய் வாழ்விடை பயனாய் கிடந்தார் வாணியார் பெருமைகள் வாழி!
வழி! வழித் தமிழை வாரி அணைத்து கொள்வார் நலங்கள் தொடரென வாழி!
ஏடும் எழுத்தும் எடுத்துரை பேச்சும் தோரணங்கள் ஆனது மேவி!
தொல்லுலகில் நாம் தொடர்ந்துறவாடி நிலைக்கவே நம் தமிழ்த் தாயி!.



பாவலர் மு இராமச்சந்திரன்

தலைவர். தமிழர் தன்னுரிமைக் கட்சி.

# வாணிதாசனாரை வாழ்த்தி மகிழ்வோம்

முனைவர் அ.பாரதிராணி
உதவிப் பேராசிரியர் தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி -3

வில்லியனூர் கண்ட வியப்புறு மாந்தர்
நல்லியல்பு கொண்டே நலமுடன் வாழ்ந்தார்
பாவேந்தர் தாமே பகன்ற கல்வியால்
பாப்புனையும் ஆற்றல் பயனெனக் கொண்டாரே!

ஆவலாய் கவிஞரேறு அழகான விருதுடனே
பாவலர் மணியாய் பாரினில் வாழ்ந்தாரே
தூவலாய் இயற்கையுடன் துணையானார் எழுத்தாலே
காவலாய் மனத்தினிலே கனிந்திட்டார் படைப்பாலே!

தமிழச்சி கொடிமுல்லை தந்திட்டார் காப்பியமாய்
அமிழ்தாய் எழிலோவியம் அழகிய தொடுவானம்
திமிலாய் குழந்தைக்குத் திருத்தமான இலக்கியங்கள்
உமிழ்ந்தார் வாணிதாசன் உயர்தமிழ்ச் சொல்லாலே!

தமிழ்நாட்டுத் தாகூரெனத் தந்தார் சிவமுத்து
தமிழகத்தின் வேர்ட்ஸ்வோர்த் தரமான பட்டமன்றோ
உமியாகப் பறக்கவில்லை உயர்ந்திட்டார் எழுத்தாலே
அமிழ்தாய் இனித்திட்டார் ஆன்றோரும் போற்றிடவே!

பாரதி தாசனின் பரம்பரைக் கவியாக
சாரதி போன்றே சார்ந்திட்ட அரங்கசாமி
சீராகத் தொடுத்திட்ட செந்தமிழ்க் கவியாலே
ஊராரும் போற்றிடவே உள்மனதில் நிறைந்திட்டார்

புதுவை நகரில் புலர்ந்திட்ட வாணியவர்
செதுக்கி வைத்த செழுந்தமிழில் வாழ்கின்றார்
முதுமை தராத முத்தான அவர் படைப்பை
கதிராகத் தாங்கி கருத்தாக விதைத்திடுவோம்!

பன்மொழி கண்ட பாங்கான கவிஞரின்
நன்மொழி அறிந்தே நாளும் போற்றுவோம்
வெல்லும் மொழிதந்த வீறுடைய கவி யேறை
செல்லும் வழியெங்கும் சிறப்பாக வாழ்த்திடுவோம்!



# கவிஞர் வாணிதாசனாரின் கற்பனை வளம்!

**தமிழ்மாமணி, புலவர் பூங்கொடி பராங்குசம்**

‘ ஒரு கவிஞனுக்குக் கருத்து உதயமானால் மட்டும் போதாது ; அக்கருத்தை உயிரோ வியமாக்கச் செஞ்சொற்கள் வேண்டும்‘ என்று அறிஞர் நியூமன் கூறுகிறார்.

எந்தப் புலவனும் தன் கருத்தைக் கவரும், தன் நெஞ்சை ஈர்க்கும் ஒன்றைத்தான் பாடுபொருளாகப் பாடித் தன்னை அடையாளம் காட்டுவான். அந்த வகையில் ஒரு புதுமைக் கவிஞராக நம்மிடையே வலம் வந்த கவிஞர் வாணிதாசனார், தமிழைப் பாடினார்; தன்மதிப்பைப் பாடினார் ; தணியாத காதல் உணர்வைப் பாடினார் ; இன்னும் என்னவெல்லாம் கண்டாரோ அவற்றைப் பற்றியெல்லாம் பாடினார். ஆனால் இயற்கையை எழிலோவியமாகத் தீட்டிய போதுதான் தம் உள்ளத்தை அடையாளம் காட்டுகிறார்!

அவருடைய பாடல் முழுதுமே சிறந்த சொல்லாட்சியால் துள்ளல் போடுகின்றன. எந்தப் பொருளை வேண்டுமானாலும் ஒரு கவிஞன் பாட முடியும் ; ஆனால், படிப்பவன் அதைத் தொடர வேண்டுமானால், பாடலின் பொருளை உணர வேண்டுமானால் அந்தக் கவிதையைக் கவிஞன் மெருகூட்டும் சொற்கள் தான் அதற்குத் துணை நிற்கமுடியும்.



‘ ஒலிகளைச் சொல்லில் சிறை செய்கின்ற தொழிலைத்தான் கவிஞன் செய்கிறான்‘ என்று கவிஞர் ஷெல்லி கூறுவதை இங்கு நோக்க வேண்டும்.

வாணிதாசனார் இயற்கையைப் பாடும் போதெல்லாம், அந்த இயற்கையுள் தாமும் ஒன்றி விடுவதை அவருடைய அழகிய சொல்லாட்சிகளே

விளக்குகின்றன. இயற்கையை அவர் பாடாத பொருளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு எந்தச் சிறு சந்திலும் அவர் தன்னை வெளிப்படுத்திக் காட்டுகிறார். அவர் பாட்டில் நொச்சி மணக்கிறது; நுணா சிரிக்கிறது; பச்சைப்பசேல் என்ற நெல் வயலும் பாங்காய் அழைக்கிறது; குயில்பாடுகிறது; கோலமயில் தோகை விரித்தாடுகிறது; அந்திவானம் சிவக்கிறது; ஆறு குளமெல்லாம் அழகின் ஓவியமாகக் காட்சியளிக்கின்றன. இவை போன்ற பல காட்சிகளை நம் முன் உள்ளதை உள்ளவாறு கொண்டு நிறுத்துவதற்கு அவரின் சொல்லாட்சியும் சொற்சுவையும் தான் காரணமாக அமைகின்றன!

விடியற்காலைப் பொழுது!வாணிதாசனாருக்குக் கவிதை எழுதக் கை துடிக்கிறது; எழுதுகோலை எடுக்கிறார் ; எதைப் பற்றி எழுதலாம் என்று எண்ணிய உடனே பாடும் குயில் என்னைப்பற்றி எழுதுங்கள் என்கிறது; புன்னை மலர்கள் எல்லாம் சிரித்து எம்மை மறக்க வேண்டாம் என்று அழகாய் மயக்குகின்றன; அருகே படர்ந்திருக்கும் புல்தரை என்னை வரைக என்று சொல்கிறது ; வானில் பொன்னை உருக்கியதுபோல் விளங்கும் இளம் பரிதி , பூரிப்போடு தன் முகம் காட்டுகிறது. இப்படி இயற்கையெல்லாம் கவிஞரைக் கொள்ளை கொள்ளும்போது எதை விட்டு எதை எழுத முடியும்? ஆனாலும் ஒட்டுமொத்தமாக ஒன்றாக அவற்றைப் பாடுகிறார் கவிஞர்.

**என்ன எழுதுவ தென்று பலப்பல**
**எண்ண மிடுமதி காலையிலே**
**என்னை எழுதெனக் கன்னல் மொழிக்குயில்**
**இளமரக் காவில் இசைமீட்டும்**
**புன்னை மலர்சிரித் தென்னை மயக்கும்**
**பொன்னை உருக்கி இளம்பரிதி வானில்**
**பூரிப் புடனெழுந் தோடி வரும்**
(வாணிதாசன் - சிரித்த நுணா - 33)

எவ்வளவு அழகான கற்பனை! அழகான சொல்லாட்சி! நமக்கு நன்றாகத் தெரிந்தது குயில் கூவுவதும் அது கேட்பதற்கு நன்றாக இருப்பதும் தான். இதுவே குயிலுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு! ஆனால் இளமரக்காவில் இசை மீட்டுகிற அந்த கன்னல் மொழிக்குயில் என்னை எழுதெனச் சொல்வது கவிஞருக்கு மட்டும்தான் தெரிந்திருக்கிறது.

புன்னை மலர்கள் உதிர்ந்து கிடக்கும் காட்சியும், இறைந்து கிடக்கும் அந்தப் பூக்களெல்லாம் பொன்னிறப்பட்டாடை விரித்து அழகாய் இருப்பதும் மட்டும்தான் நமக்குத் தெரியும் . ஆனால் கவிஞருக்கோ, புன்னை மலர்கள் எல்லாம் சிரிக்கின்றனவாம் ; சிரித்து மயக்குகின்றனவாம் ; மயக்கித் தம்மைப் பாடுபொருளாய்க் காட்டுகின்றனவாம் ; இப்படிப் புல்தரையும் சொல்ல , இளம்பரிதியும் பூரிப்புடன் கவிஞரை எழுதக் கேட்பதாகக் கற்பனைத் திறனில் ஒரு சொல்லாட்சியை வைத்துப் படிப்பவர் கருத்தை ஈர்க்க வைக்கிறார் கவிஞர். இவையெல்லாம் கவிஞரின் எண்ணங்களில் கிளர்ச்சியை உண்டு பண்ணியதால்தான் இப்படி எழுத முடிந்தது என்று கூறலாம். ஒரு கவிஞன் காட்சி ஒன்றைப் பார்த்த உடனே, தன் எண்ணத்தில் தோன்றுவதை அப்படியே எழுத்தால் உருவாக்கும் திறன் பெற்றால் தான் அவன் என்ன நினைத்தானோ அதைப் படிப்பவர் மனதிலே பதிய வைக்க முடியும் . அந்த வகையில் கவிஞர் வாணிதாசனின் கண்ணோட்டத்தில் இயற்கை வளங்கள் எல்லாம் இப்படித்தான் படிப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளுகின்றன .

அதனால் தான் கவியரசர் கண்ணதாசனும்,

'சொல்வளம் கற்பனை ஊற்று என்ற இரண்டும் வளமாகப் பெற்றவர் வாணிதாசன்!' என்று வாழ்த்துகிறார். தாகூரைப்போல வளமாகச் சொல்லெடுத்துப் பாடுவதில் வல்லவர் வாணிதாசனார். கவிதையிலே எளிமையான சொற்கள்கூட அசைக்க இயலா ஆற்றலைப் பெற்று விளங்குகின்றன என்று சொல்வார்கள் .அதற்கேற்ப வண்ணக் கலவையைத் தூரிகையால் வரைந்து வடிவம் கொடுக்கும் ஓவியனைப்போலத் துள்ளலும் துடிப்புமுள்ள சொல்லடுக்குச் சொற்களால் பாப்புனையும் பாவலராக வாணிதாசனார் விளங்குகிறார்!

அவரது சொல்லாட்சித் திறனில் மற்றொரு கூறாக அமைந்திருப்பது, வந்த சொல்லே திரும்பத் திரும்ப வந்து புதுப்புது நயங்களைத் தருவது. இதைத் திறமையான கவிஞரால் மட்டுமே உருவாக்க முடியும் என்பதால் இந்தச் சொல்லாட்சியிலும் தாமே திறமையுள்ளவர் என்பதைக் காட்ட வாணிதாசனார் எழுதியிருக்கும் பாடல் இது!

**வருவாய்! என அழைத்தேன் உன் வருவாய் என்ன**
**தருவாய் எனக்கேட்டாள்; என் வருவாய் உன்றன்**
**செவ்வாய்ச் சிரிப்பென்றேன்; சீறிச்சிலைத்துமே,**
**அவ்வாயும் இவ்வாயும் செவ்வாயும் புதனும்போல்**
**சேர்ந்திருக்க வேண்டு மென்றாள்!**

*இதில்' வாய்' என்ற சொல் கவிஞரால் கையாளப்பட்டுப் பல கோணங்களில் பொருள் உணர்த்துவதைக் காண முடிகிறது .*

*அதுமட்டுமன்று ; இதில் நுட்பமாக ஒரு கருத்தையும் தம் சொல்லாட்சியால் புரிய வைக்கிறார் கவிஞர் . செவ்வாயும் புதனும் போல் இணைபிரியாதிருக்க வேண்டும் என்றது அவ்வாயும் இவ்வாயுமே! காதலரின் இதழ்கள் இணைந்திருக்க வேண்டும் என்ற காதல் உணர்வைத் தம் சொல்லாட்சியால் சுவைபடக் கவிஞர் எழுதியிருப்பது பாராட்டுக்குரியது!*

*அதனால்தான் சொல்லோவியங்களால் சுவைபட நம்மைக் கவர்ந்து விடுகிறார் வாணிதாசனார் என்பதால்,*

**'அற்பமாம் பதரைத் தூற்றி**
**அறுவடைப் பயனைக் கூட்டி**
**நெற்கொண்டு மணிகள் சேர்க்கும் நிகரற்ற வாணிதாச! '**

*என்று குறிப்பிடுகிறார், தமிழறிஞர் தமிழண்ணல் அவர்கள்!*

*கவிஞர் வாணிதாசனாருடைய பாடல்களில் சொல்லாட்சியாக நாம் காண்பவற்றில் ஒன்று உவமை நயம்! சொல்ல வரும் காட்சியை உவமை நயத்தோடு அவர் சொல்லும் அழகே அழகு!*

**'அந்தியிலே மேற்றிசையில் தொடுவானப் பரப்பில்**
**அழகூட்டும் முகிலினங்கள் ' -**

*என்று தொடுவானைப் பற்றிப் பாடும் கவிஞர், ஏறக்குறைய 30 இடங்களுக்கு மேல் அதைப்பற்றித் தம் கவிதையில் குறிப்பிடுகிறார் என்றால் , தொடுவானம் அவரை எந்த அளவு கவர்ந்திருக்கிறது என்பதை உணர்ந்து மகிழலாம்.*

**‘அந்தியிலே தொடுவானம் தீப்பற்றி வேகும்**
**அழகெண்ணிக் கொண்டிருந்தேன் ‘**

*என்று அந்தி வானத்தின் செம்மையைப் பற்றியும்,*

**‘ தொடுவானும் கடலும் ஒன்றித்**
**தோளோடு தோளைப் பின்னும்‘**

*என்பதில் தொடாத வானம் கடலும் கூடத் தோளோடு தோளாகச் சார்ந்திருக்கும் என்பது பற்றியும் கவி நயத்துடன் தொடுவானம் பற்றித் தொட்டிருக்கும் கவிஞர், தொடுவானில் தோன்றி மறையும் மின்னற்கீற்று இருட்டில் நடந்து செல்பவர் கைகளில் சுமந்து செல்லும் மின் விளக்கைப்போல ஒளியூட்டும் என்று, நடந்து செல்கையில் ஆடி ஆடி அங்கும் இங்கும் ஒளியூட்டும் விளக்கின் கீற்றை மின்னற் கீற்றுக்கு உவமைப்படுத்திப் பாடுவது அருமை!*

*இன்னுமொரு அழகான உவமை ! கொடியில் தொங்கிக் கொண்டிருக்கிறதாம் பீர்க்கம் பூக்கள் .அந்த வெள்ளை நிறப்பூக்களைப் போலத் தொடுவானில் கீழ்த்திசையின் மங்கலான ஒளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பீர்க்கம் பூக்கள்போலத் தோன்றி, அடுத்தடுத்த நொடிகளில் வான் நிறைந்த பளிச்சென்று பூக்களாகத் தெளித்தாற் போல நிறைந்திருக்குமாம் விண்மீன்கள் என்பதை அவரன்றி யாரால் அழகூட்ட முடியும்? இதனைத் ,*

**‘ தொங்குகின்ற பீர்க்கம்பூப் போலக் கண்முன்**
**தொடுவானில் கீழ்த்திசையில் ஒளியில் மங்கி**
**அங்கொன்றும் இங்கொன்றும் முன்னர்த் தோன்றி**
**அடுத்தநொடி வான்நிறையும் விண்மீன் கூட்டம்**
**என்னும் பாடல் வரிகளால் உணரலாம்!**

*கடலிடை எழுந்த காலைக் கதிரவனின் தோற்றத்தைக் கவிஞர் விளக்கும்போதும் தொடுவானத்தைத் தொலைதூரத்திற்கு அப்பால் கடலில் தோன்றும் நீண்ட சுவராகவும், தொடுவானின்கண் தோன்றும் கதிரவனைப் பற்றிக் கூறும் போது, மதிற்சுவரின் நடுவில் துளைத்த சந்து என்றும், அஃது அகண்டமோ? என்று வினவியும், நடுவிளக்கோ என்று வியப்புற்றும் கதிரின் வீச்சுப்படும் இடமெல்லாம்*

பொன்போன்று தகக்கும் எழிலோவியம் போல் விளங்குகிறதென்று கவிஞரின் சொல்லாட்சி இங்கே தனிநடம் புரிகின்றது.

***‘ தொடுவான மதிலுக் கப்பால்***
***தோன்றிடும் அழகைக் காண***
***நடுவினில் துளைத்த சந்தோ!***
***அகண்டமோ! நடுவிளக்கோ!***
***கடலிடை எழுந்த காலைக்***
***கதிரவன்? கதிரின் வீச்சுப்***
***படுமிட மெல்லாம் பொன்! பொன்***
***பார்எழி லோவியத்தை ‘***

-

என்பதைப் பார்க்கும்போது கவிஞன் கையாளும் சொற்களும், உவமைகளும், அணிகளும் தான் கவிதைக்கு உயிர் நாடி என்பதை நன்குணரலாம்!

கவிஞரின் சொல்லோவியத்தில் புத்தம் புதிய சொற்களைத் தேடிப் புகுத்துவது அவருக்கே உரிய கைவந்த கலையாக இருக்கிறது. நகர்ப்புறத்தே வாழும் கன்னியர்கள் கடற்கரையில் வந்து உலவுவதைப் பார்த்த கவிஞரவர்கள் கற்பனையில்,

‘ கடற்கரையோரம் காற்றாட வந்த
நடைபயில் நிலவுகள் நகரக்கன்னிகள் ‘

என்று நடைபயில் நிலவுகள் என்ற புதிய சொல்லாட்சியால் நகரக் கன்னியர்களைக் குறிப்பிடுவது சுவைக்கும்படியாக உள்ளது

. இவ்வாறாக வாணிதாசனாரின் கவிதைகள் யாவும் கற்பனை வளத்திலும் சொல்வளத்திலும் நம்மை வியக்க வைக்கும் அளவுக்கு அமைந்துள்ளன என்றால் மிகையில்லை!

■

# தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் வாணிதாசன்

(இத்தரையில் அரங்கதிரு காமய்யா துளசியம்மா
பத்தரையின் மாற்றாகப் பெற்றெடுத்த நற்றமிழன்
எத்திராசல்(உ) என்கின்ற அரங்கசாமி இயற்பெயரே
எத்திக்கும் புகழ்மணக்கப் புனைந்தபெயர் வாணிதாசன் 1

வில்லியனூர் கவிஞரிவர் வெற்றி(க்)கொடி நாட்டியவர்
எல்லோரும் போற்றியநல் இயற்கையினைப் பாடிவைத்த
சொல்வேந்தர்; பிரெஞ்நாட்டின் செவாலியராய்ச் சிறப்புற்றார்
நல்லாசான் வாணிதாசன்; நாடுபோற்றும் நற்கவிஞன் 2

பாரதியார் பாவேந்தர் பாடலுக்கே இணையாக
பாரினுக்குப் பாடல்கள் படைத்தளித்த வாணிதாசன்
பாரினிலே உயர்ந்ததான நோபலெனும் பரிசுபெறும்
காரியங்கள் ஆற்றியநல் கவிஞர்தான் வாணிதாசன் 3

ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் அருமையான நோபலையும்
ஈங்கிவரும் பெற்றிருப்பார் என்றுரைத்தார் கண்ணதாசன்
ஏங்குகின்ற தமிழர்கள் ஏராளம் இவ்வாறு
தூங்குகின்ற தமிழர்காள் தோள்தட்டி எழுந்திருங்கள் 4

நயமான கவிதைகளை நமக்களித்தார் வாணிதாசன்
வியப்புமிகு கவிதைகளால் விருந்தளித்த வாணிதாசன்
தயங்காது இயற்கையினைத் தான்பாடிய வாணிதாசன்
அயல்நாட்டு ஓட்ஸ்வொர்த்தை ஐயமின்றி அடுத்திருப்பான் 5

நல்லநல்ல நூல்களையே நமக்களித்தார் வாணிதாசன்
பல்நோக்கு பாடல்கள் படைத்தளித்தார் வாணிதாசன்
எல்லாநல் நூல்களுமே நாட்டுடமை ஆயினவே
வல்லவராம் வாணிதாசன் வரலாறாய் மாறினாரே 6



**கவிச்சுடர் ப. குமரவேல்**
புதுவை



## கவிஞரேறு வாணிதாசன் புகழ் காலமெலாம் பரவிடுக!

மண்ணதிலே வாழ்ந்துயர்ந்த மாண்புற்ற மாகவியே
எண்ணுமுயர் இற்றலுடன் அருங்கவியைத் தந்தவரே!
நுண்ணறிவுச் சிந்தனைகள் நிறைந்துயர்ந்த மாட்சியனே!
தமிழச்சி, தொடுவானம், கொடிமுல்லை எனப்பலவாய்,

பண்நிறைந்த பலநூலாய் பார்போற்ற நீதந்தாய்!
பாவலரில் வேர்ட்ஸ்வொர்த்தாய் பாவேந்தர் பரம்பரையில்
கண்ணான கவிதைகளாய் எழிலோவிய இதமானாய்!
கவிதாகூர் உருவமென களையாகச் சிறந்திட்டாய்!

சிந்திக்கும் ஆற்றலது சிறந்திருந்த தமிழ்மகனே!
தித்திக்கும் வாழ்வதனைத் திடமாகச் சேரிமக்கள்
முந்தித்தே தான்பெறவே முகிலாக நீவிரும்பி
முகிழ்ந்தே நல்கருவாக நயமாகச் சொல்லிட்டாய்!

எண்ணமுயர் சான்றோர்கள் இனிக்கின்ற அமுதெனினும்
ஏழையெலாம் தான்பெற்று இனிதாக மகிழ்ந்திடவே
எந்நாளும் விரும்பிடுவார் ஏற்றமதை நீதந்தாய்!
ஏற்றபுகழ் தான்பெற்றாய்! எண்ணுள்ளம் தான்நின்றாய்!

தமிழ்வளர்க்கும் நற்பணியைத் தளராது செய்திட்டாய்!
தமிழ்மொழிக்கே புகழ்சேர்த்தாய் தரணிக்கே ஒளிதந்தாய்!
அமிழ்தான செந்தமிழை அருந்திடவே நீவிரும்பி
அருஞ்சொற்கள் பலஇணைத்து அருங்கவியாய் தந்திட்டாய்!

மாயிருளைப் போக்குகின்ற மாண்கதிராய் வலம்வந்தாய்,
மகிழ்கின்ற எம்மனத்தே மலையெனவே உயர்ந்திட்டாய்!
கவிபோற்றும் கவிஏறே! கன்னல்மொழி நிறைந்திட்ட
கண்ணான உம்புகழை எந்நாளும் பாடிடுவோம்!



**தமிழ்ச்செம்மல் செ.வ.மதிவாணன்,**
செயலாளர், கல்லைத் தமிழ்ச் சங்கம்
கல்லக்குறிச்சி மாவட்டக் கம்பன் கழகம், கல்லக்குறிச்சி - 606 202.

# இயற்கையின் இனிமை வாணிதாசன்



அரங்கசாமி என்றொரு பெயர் இருந்தது
ஆனால் தமிழ் அவரை 'வாணிதாசன்' என்றது.
இருபதாம் நூற்றாண்டின் இன்னிசை அவர்
தமிழ்நாட்டு மண்ணில் பிறந்த தமிழ் வேந்தர்.

சங்கத்தின் நயமும் புதுமையின் சிந்தனையும்
சேர்ந்து நடந்த கவிதைச் சோலை அவர்.
எளிய சொல்லில் ஏந்திழைத்த உணர்வு
ஆழத்தில் முத்தெடுக்கும் அவர்தம் கவிதை.

இயற்கையைப் பேச வைத்தார் - இலையசைய
மலர்சிரிக்க காற்றோடு கவி பாடினார்.
'இயற்கைக் கவிஞர்' என்று உலகம் போற்றியது
'தமிழ் இனிமைக் கவிஞர்' என்று நா நவின்றது.

காதல் சொன்னார், கருணை பொழிந்தார்
தமிழின் பெருமை தலைநிமிர செய்தார்.
மனிதநேயம், சமூக அக்கறை
அத்தனையும் அவர் வரியில் வாழ்ந்தது.

எளிமையான சொல், ஆனால் உயிருள்ள உணர்வு
படித்தால் மனதில் இயற்கையே வந்து நிற்கும்.
பள்ளியிலும் கல்லூரியிலும் பாடமானார்
புத்தகத்தை தாண்டி நெஞ்சில் இடம்பிடித்தார்.

வாணிதாசன் - தமிழ்க் கவிதை உலகின் தனிவிளக்கு
எளிமையும் இனிமையும் கலந்த தேன்துளி.
காலம் மாறினாலும் கரைவதில்லை அவர் கவி
இன்றும் வாசகர் நெஞ்சில் வாழும் கவிதை.



கவித்தோழி பாத்திமா சுமையா
அகார ஹொறம்பாவ
குருநாகல் மாவட்டம்




## கவிஞரேறு வாணிதாசன் புகழ் வாழ்க!

கவிஞரேறு வாணிதாசன் புகழைப் பாடு!
கருத்துகளில் புதுமைகளைக் காணும் நாடு!
புவி போற்றும் படைப்புகளில் உயர்வாய் நின்றார்!
புத்துணர்வுக் கவிதைகளை இனிதாய்த் தந்தார்!
நவில்கின்றார் தமிழ்நாட்டுத் தாகூர் என்று!
நல்விருது செவாலியராம் பெற்றார் அன்று!
கவியுலகில் பாவேந்தர் அடியைப் பற்றிக்
கனித்தமிழின் பெருமையினை உரைத்தார் பாரில்!

இயற்கைதனைப் புனைவெனவே பதித்தார் பாவில்!
இனிமையான ஆத்திசூடி புதிதாய் ஈந்தார்!
உயர்கவிதை படைத்திட்ட பெருமை போற்று!
ஒப்பற்ற பாடல்கள் தமிழின் ஊற்று!
வயல்வெளிகள் ஓடையெனக் கவிஞர் பாடும்
வனப்பெல்லாம் வாணிதாசன் திறனைக் கூறும்!
நயமுடனே பலபடைத்தார் குழந்தைப் பாடல்!
நற்றமிழ்த்தாய் மைந்தனெனப் போற்றிப் பாடு!



முனைவர் ஓசூர் மணிமேகலை

# வீண்முயற்சியா?
# விடாமுயற்சியா?

முயற்சி செய்ய முதலடி வைத்தால்
முட்டுக் கட்டைப் போட்டு சொல்வார்
வீண்முயற்சி + நீ
முயற்சி செய்து மூளையால் வென்றால்
முன்னே வந்து கைக்குலுக்கி சொல்வார்
விடாமுயற்சி !

முடியும் உன்னால் முயன்று வென்றிடு!
மூச்சும் பேச்சும் முனைப்பாய் இருந்தால்
பெரும்வெற்றி + காரிருள்
மடியும், கதிரும் முளைத்தெ முந்தே
மண்ணில் விண்ணை மலர்த்திக் காட்டும்
கைப்பற்றி !

சரியெனப் பட்டதை சட்டென செய்திடு!
சரிநிகர் தானே சம்மதம் ஆகும்
அறிந்துவிடு + தீப்
பொறியென பறந்து புறப்படு இன்றே
பொசுக்குத் தீதை புலம்பல் தவிர்த்தே
நிமிர்ந்துவிடு!

எரிதழல் போல எழுந்து நின்றே
எதிரியின் சாம்பலை எங்கும் தூவி
மகிழ்ந்துவிடு + உன்
சிரிப்பில் தெறிக்கும் சிந்தனை துளியில்
சிவந்த உலகை சிறகை விரித்து
படைத்துவிடு!

உனக்குள் இருக்கும் உன்னை எழுப்பி
உலகைப் பொதுவாய் உடனே அமைக்க
உறுதியெடு + நீ
கனக்கும் நெஞ்சில் கசடை நீக்கி
காரிருள் இல்லா கற்பனை உலகில்
பரிதியெடு!

முடியா தென்று மூளையில் இல்லை
மூச்சைப் பேச்சை முனைந்து செய்தால்
வென்றிடலாம் + நீ
செடியாய் கொடியாய் மரமாய் வளர்ந்து
மண்ணுயிர் வாழ மதியால் வாகை
பெற்றிடலாம்

- புதுவைத் தமிழ்நெஞ்சன்



# மனித உணர்வுகளை எளிய தமிழில் உணர்த்திய கவிஞர் வாணிதாசன்.


– கவிஞர் எஸ். ஏ. கப்பார்
(இலங்கை)

*22 ஜூலை 1915 இந்தியாவைச் சேர்ந்த புதுச்சேரி மாவட்டம், விலிலியனூர் எனும் கிராமத்தில் பிறந்தவர் வாணிதாசன் அவர்கள்.*

*அரங்க திருக்காமு மற்றும் துளசியம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் அரங்கசாமி எத்திராசலு.*

*ரமி எனும் புனைபெயரில் கவிதைகள் எழுதிவந்த இவர் தமிழறிஞரும், சிறந்த கவிஞரும் ஆவார். தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர். 34 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிவர். பாவேந்தர் பாரதிதாசனிடம் ஆரம்பக் கல்வியைக் கற்று பாப்புனையும் வல்லமை பெற்றவர். அக்காலப் பகுதியில் வெளிவந்த 'பொன்னி' எனும் இலக்கிய இதழ், 'பாரதிதாசன் பரம்பரை' என்னும் தலைப்பிட்டு பாரதிதாசன் பரம்பரையில் வந்தவர்கள் எனப் பல பாவலர்களை அறிமுகப்படுத்தியது. அந்த வரிசையில் பாவலர் வாணிதாசன் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்ந்தார்.*

*1935ஆம் ஆண்டில் தன் சிற்றன்னைக்கு தம்பி மகளான ஆதிலட்சுமி என்பவரை மணமுடித்து ஆணும் பெண்ணுமாக மொத்தம் ஒன்பது குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். அவர்களுள் மூத்தவளான மாதரிக்கும் வ. கலியமூர்த்தி என்பவருக்கும் 67 வருடங்களுக்கு முன் (10-05-1959 ஆம் ஆண்டு) திருமணம் நடைபெற்றது.*



*வாணிதாசன் தமிழின் இனிமை, இயற்கை நேயம், சமூகப் பொறுப்பு ஆகியவற்றைத் தனது பாடல்களில் அழகாக வெளிப்படுத்திய அற்புதமான தமிழ்க் கவிஞர். அவரது கவித்திறனுக்காக வழங்கப்பட்ட "கவிஞரேறு" என்ற பட்டத்தைக் கொண்டே பிற்காலங்களில் "கவிஞரேறு வாணிதாசன்" என அழைக்கப்பட்டார்.*

தமிழ்ப்பற்று, மனிதநேயம், உழைப்பாளர் வாழ்க்கை, கிராமத்து அழகு போன்றவை அவரது கவிதைகளின் மையக் கருக்களாகும். இவரது சிறுவர் பாடல்களில் மலர்கள், காற்று, மழை, வயல்கள், பறவைகள், இயற்கைக் காட்சிகள் தோற்றம் பெற்றதோடு மொழிநடை மிக எளிமையாகக் காணப்படுகிறது. மக்கள் எளிதில் ரசிக்கக்கூடிய வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. சமூக சிந்தனை சமத்துவம், கல்வி, மனித மதிப்பு போன்ற கருத்துகளையும் கவிதைகளில் எடுத்துரைக்கத் தவறவில்லை. இவரது பல பாடல்கள் பள்ளி கல்லூரிப் பாடத் திட்டங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது கவிதைகளில் காணப்படும் சங்க இலக்கிய நயம், இனிய ஓசை நயம், காட்சிப்படையாக எழுதும் திறன், இயற்கையையும் மனித உணர்வுகளையும் இணைக்கும் பாணி என்பன வாணிதாசனை ஓர் இயற்கைக் கவிஞராக நினைவுகூர்கின்றன.

இவரது புகழ்பெற்ற பாடல்கள் சாகித்திய அகாதமி வெளியிட்ட 'தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்ற நூலிலும் தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட 'புதுத்தமிழ்க் கவிமலர்கள்' என்ற நூலிலும் காணப்படுகின்றன. ரஷ்ய மொழி, ஆங்கில மொழி முதலியவற்றிலும் இவரது கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவர் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். 'தமிழ்-பிரெஞ்சு கையகர முதலி' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். பிரெஞ்சுக் குடியரசுத்தலைவர் இவருக்கு 'செவாலியர்' விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளார். மேலும் கவிஞரேறு, பாவலர் மணி, புதுமைக் கவிஞர், தமிழ்நாட்டுத் தாகூர் முதலிய பட்டங்களும் வாணிதாசனுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவரது இலக்கியங்களில் 'தமிழச்சி', 'கொடிமுல்லை' ஆகிய சிறு காவியங்களும், 'தொடுவானம்', 'எழிலோவியம்', 'குழந்தை இலக்கியம்'போன்றகவிதை நூல்களும்பிரசித்திபெற்றவை.எனினும் 'வாணிதாசன் கவிதைகள்' என்னும் தொகுப்பே பெரும் புகழைப் பெற்றுக்கொடுத்தது. அத்துடன் இவரது பாடல்களில் இயற்கைப் புனைவு சிறந்து விளங்குவதால் இவரை 'தமிழகத்தின் வோர்ட்ஸ் வொர்த்' (Wordsworth of Tamil Nadu) என்று பாராட்டுகின்றனர்.

வாணிதாசன் கவிதைகள் தொகுப்பிலிருந்து இயற்கைக் கவிதைகள் சில:

**காலை அழகு**



வெள்ளி முளைப்பினிலே - அழகு
துள்ளுது வான்பரப்பில்! - சிறு
புள்ளின ஓசையிலே - அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே- அழகு
கண்ணைக் கவருதடி! - சிறு
சோலைக் கலகலப்பில் அழகு
சொரியுது உள்ளத்திலே!

**ஆறு**

மலையில் பிறந்தேன் தவழ்ந்திறங்கி
மண்ணில் பாய்ந்தேன் விளையாட
இலையும், சருகும், உதிர்பூவும்
இயற்கை தந்தாள் வழித்துணைக்கே
சலசலத் திடுவேன் கல்லிடுக்கில்
சாரைபோல் நான்நெளிந் தோடிப்பின்
தலையை அசைப்பேன் பாய்ந்தோடித்
தமிழ்த்தேன் இசையை மீட்டிடுவேன்!

**அந்தி அழகு**

ஓடைச் சலசலப்பில் - அழகு
ஒலிக்குது இன்னிசையாய்! - அதில்
ஆடுஞ்செவ் வல்லிமலர் - அழகை
அள்ளி இறைக்கு தடி!

கோதி உடல்கழுவிப் - பலநிறக்
குருவி குளிக்கையிலே - அழகின்
போதை தலைக்கேற - உடலுள்
புகுந்ததோர் புத்துணர்வு!

*வாணிதாசனுடைய தமிழ்த்தொண்டைப் பாராட்டித் தமிழக அரசு இவரது குடும்பத்துக்கு 10,000 ரூபா பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளது. இவர் பெயரில் சேலியமேட்டில் ஓர் அரசு உயர்நிலைப் பள்ளியும் உள்ளது.*

*1950 ஆம் ஆண்டு பாரதிதாசன் தலைமையில் புதுவையில் நடைபெற்ற கவியரங்கில் முதற் பரிசை முடியரசனும் இரண்டாம் பரிசை வாணிதாசனும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.*

*மனித உணர்வுகளை எளிய தமிழில் உணர்த்திய அந்த அற்புதக் கவிஞர் 07 ஆகஸ்ட் 1974 ஆம் ஆண்டு தனது 59 ஆவது வயதில் இயற்கை மரணம் எய்தினார். தமிழ் நாடு அரசு கவிஞர் வாணிதாசன் நூல்களை அரசுடைமையாக்கியுள்ளது.*

*கவிஞர் வாணிதாசன் 20 நூல்களை எழுதியுள்ளதாக அறியக் கிடைக்கிறது. அவை:*

1. இரவு வரவில்லை
2. இன்ப இலக்கியம்
3. இனிக்கும் பாட்டு
4. தமிழச்சி (சிறு காப்பியம் 1949)
5. கொடி முல்லை (சிறு காப்பியம் 1950)
6. தொடுவானம் (இசைப் பாடல்கள் 1952)
7. எழிலோவியம் (இயற்கைப் பாடல்கள் 1954)
8. எழில் விருத்தம் (1956)
9. குழந்தை இலக்கியம்
10. சிரித்த நுணா
11. தீர்த்த யாத்திரை
12. பாட்டரங்கப் பாடல்கள்
13. பாட்டு பிறக்குமடா
14. பெரிய இடத்துச் செய்தி
15. பொங்கற்பரிசு
16. வாணிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி (1956)
17. வாணிதாசன் கவிதைகள் - இரண்டாம் தொகுதி
18. வாணிதாசன் கவிதைகள் - மூன்றாம் தொகுதி
19. விட்டர் ஹியூ கோவின் ஆன்ழெல்லோ
20. தமிழ்-பிரெஞ்சு கையகர முதலி.



# கவிஞரேறு வாணிதாசன்

வானளந்திடும் புனைத்திறன் பல
வடிவளந்திடும் "பா" த்திறன்
தேனளந்திடும் பொருட்சுவை கடல்
திரையளந்திடும் சந்தங்கள்
தானளந்திடும் பார்வையால் கவி
தனையளந்திடும் "வாணியார்"
கானளந்திடும் வரிகளால் மனங்
கரைபுரண்டிடச் செய்கிறார் ! (1)

உள்ளரும்பிய வார்த்தைகள் வழி
ஊடரம்பிய அணிநலன்
கள்ளரும்பிய தனிநடை புதுக்
கருத்தரும்பிய பாவியம்
வெள்ளரும்புகள் கொடிமுல்லை' மொழி
விழியரும்புகள் 'தமிழச்சி'
சொல்லரும்பிய வாணியின் ஒளிச்
சுடரரும்பிய ஞாலமே ! (2)

துள்ளுகின்றன அழகியல் பொழில்
சூடிநின்றன விருத்தங்கள்
அள்ளுகின்றன சொற்சுவை எழில்
ஆட்சிசெய்திடும் இயற்கையால்
கிள்ளுகின்றன மனத்தினைப் பெருங்
கிளர்ச்சிசெய்திடும் கவிதைகள்
தள்ளுகின்றன கிறக்கித்தில் வாணி
தாசசிந்தனை வேகமோ ? (3)

ஏடுகொண்டன பல்பொருள் நனி
எழுந்துக்கொண்டன வண்ணங்கள்
பீடுகொண்டன கவிநயம் தவப்
பெருமைகொண்டன மொழிவளம்
நாடுகண்டது நற்றமிழ் புவி
நன்மைகண்டது "வாணியால்"
ஈடுகொண்டநம் கவிஞரை புகழ்
இனிமைகொண்டுநாம் வாழ்த்துவோம் !(4)



- இராதே



# வாணி தாசனாய் வாழ்ந்திட்ட வள்ளல் நீ!

பாவேந்தர் பாசறையில் பைந்தமிழ்ப் பயின்றவன் நீ!
பாங்காய்ச் சொல்லெடுத்துப் பாக்களை யாத்தவன் நீ!
பகுத்தறிவுப் பகலவனின் அடியொற்றி நடந்தவன் நீ!
பஞ்சமர் துயர்நீங்கப் பயன்மரமாய் வாழ்ந்தவன் நீ!

பகைவனுக்கு அருளிடும் பண்புடை மனிதன் நீ!
பாரெல்லாம் செந்தமிழைப் பரப்பிய தமிழன் நீ!
பாடும் குயிலாக இன்தமிழை இசைத்தவன் நீ!
பண்ணொடு இசைகூட்டிக் காவியம் வடித்தவன் நீ!

வண்டமிழை வையமெல்லாம் வாழவைத்த கவிஞன் நீ!
வண்ணம் பலசேர்த்த வரம்பெற்ற புலவன் நீ!
வசைஒழிய வாழ்ந்திட்ட வகையான வல்லவன் நீ!
வருங்காலம் உனைப்பாட வாழ்ந்திட்ட நல்லவன் நீ!

தாய்நாட்டை நெறிப்படுத்தத் தவித்திட்ட தலைவன் நீ!
தமிழ்மக்கள் நலம்பேணத் துடித்திட்ட இதயம் நீ!
தந்நலம் கருதாதச் சமுதாயத் தொண்டன் நீ!
தனக்குவமை இல்லாதத் தனிப்பெரும் கவிஞன் நீ!

வாணி தாசனாய் வாழ்ந்திட்ட வள்ளல் நீ!
வாய்மையால் சாதனை புரிந்திட்ட செம்மல் நீ!
வையம் உனைப்பாட வாழ்ந்திடும் மன்னன் நீ!
வருங்காலம் வளமுறவே வகைசெய்த தென்னன் நீ!

கவிஞர் சோலை எழிலன்,
வ. சுந்தரராஜு. இ.வ.ப (ப.நி)
சீனிவாச நகர், திருச்சி-620017.

# இயற்கையின் இசையை எழுதிய கவிஞர் – வாணிதாசன்

தமிழ் இலக்கிய உலகில் இயற்கையையும் மனித உணர்வுகளையும் இனிமையாய் பாடிய கவிஞர்களில் தனித்துவமான இடம் பெறுபவர் கவிஞர் வாணிதாசன். "தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்" என்று அழைக்கப்படும் அவர், இயற்கையோடு மனித வாழ்வை இணைத்து கவிதை வடித்தவர்.

வாணிதாசன் கவிதைகளை வாசிக்கும் போது, பசுமை வயல்கள் கண்முன் விரிகின்றன; மழைத்துளிகள் மனதை நனைக்கின்றன; பறவைகளின் குரல் காதில் விழுகிறது. அவரது கவிதைகள் இயற்கையை வெறும் காட்சியாக அல்ல, உயிருள்ள உறவாகக் காணச் செய்கின்றன.

வாணிதாசனின் கவிதைச் சிறப்புகள்



- எளிய தமிழில் ஆழமான உணர்வுகள்
- இயற்கை மற்றும் கிராமிய வாழ்க்கை மையம்
- மனிதநேயம் கலந்த பார்வை
- இசைநயம் கொண்ட சொற்தேர்வு
- வாசக மனதை அமைதிப்படுத்தும் மென்மை

அவரது கவிதைகளில் மண் மணமும், மழை வாசனையும், உழைப்பின் வியர்வையும் உணர முடிகிறது.

*இயற்கையின் ஆழ்களம்: பாவலரேறுவின் தத்துவ வரிகள்*

*1. முல்லைக் காட்டின் மௌன கீதம்* (Eco–Aesthetics)
*பச்சைப் பசேலென்ற புல்வெளியின் மடியினிலே*
*பனித்துளிகள் தூங்கும் அமைதி - அங்கே*
*இச்சை ஏதுமின்றி இலைகள் அசைகின்ற*
*இயற்கையின் மௌனத் தவம்!*

*மானினங்கள் துள்ளி விளையாடும் காட்டின்*
*மாண்பினைச் சொல்லும் கவிதை; - வான்*
*மீனின் ஒளியை விடவும் உன்னதமாய்*
*மின்னுதே காட்டு மல்லிகை!*

*2. மலையும் மானுட அறமும் (*Philosophical Nature*)*
*விண்ணைத் தொட்டு நிற்கும் பெருமலையே! - உன்னிடம்*
*வீணான அகந்தை ஏதுமில்லை!*
*மண்ணைச் சுமந்து நின்ற போதிலும் - நீ*
*மனிதர்க்குத் தருவது தூய அருவி!*

*பேராசை கொண்டு மனிதன் அலைய - நீயோ*
*பேரமைதி காத்து நிற்கிறாய்!*
*நீராய் உருகி நிலத்தைக் காக்கும் - உன்*
*நெஞ்சமே உலகினில் உன்னத அறம்!*

*3. இயற்கையின் போர்க்குரல் (*Nature as a Rebellion*)*
*புயலாய் எழும் கடல் அலையே! - நீ*
*பூமியின் அடிமைத்தனம் உடைப்பாய்!*
*இடியாய் முழங்கும் கார்மேகமே! - வான்*
*எதேச்சதிகாரத்தை நீ தகர்ப்பாய்!*

*இயற்கையின் சீற்றமே பேராயுதம்; - அது*
*இன்மொழி பேசிடும் தமிழரின் கவசம்!*
*செயற்கை மனிதரின் ஆணவம் அடக்க - இந்த*
*செந்தமிழ் இயற்கையே என்றும் எழும்!*

*ஆழமான இலக்கியப் பகுப்பாய்வு (Deep Literary Insights):*

*இயற்கை வழி தத்துவம் (Eco-Philosophy): வாணிதாசன் அவர்கள் இயற்கையை வெறும் ரசனைப் பொருளாக (Aesthetic Object) மட்டும் பார்க்கவில்லை. மலையின் மௌனத்தையும், கடலின் சீற்றத்தையும் மனிதன் கற்க வேண்டிய 'அறமாகவும்', 'போர்க்குரலாகவும்' மாற்றுவது இவரது தனிச்சிறப்பு.*

*பாரதிதாசன் மரபின் நீட்சி: தன் ஆசான் பாரதிதாசனைப் போலவே, இயற்கையின் பிரம்மாண்டத்தை விவரிக்கும் போது, அதோடு தமிழ் உணர்வையும், பகுத்தறிவுச் சிந்தனையையும் இணைத்துத் தமிழரின் அடையாளமாகவே இயற்கையை உருவகிப்பார்.*

*படிமங்களின் அடர்த்தி: 'இச்சை ஏதுமின்றி இலைகள் அசையும் இயற்கையின் மௌனத் தவம்' போன்ற வரிகள், பற்றற்ற நிலையைக் காட்டும் மிக ஆழமான தத்துவப் படிமங்கள் (Philosophical Imagery) ஆகும்.தூதூ மனிதநேயம் மலரும் கவிதைகள். வாணிதாசன் இயற்கையை மட்டும் பாடவில்லை; மனித மனங்களையும் படித்தார். ஏழைகளின் வாழ்வு, உழைப்பாளியின் பெருமை, அன்பின் மென்மை ஆகியவை அவரது கவிதைகளில் ஒளிர்கின்றன.*

*அவரது கவிதைகள் வாசகனை சிந்திக்க வைக்கின்றன; இயற்கையை நேசிக்க கற்றுத் தருகின்றன; மனிதனாக வாழ நினைவூட்டுகின்றன.*

*நிறைவாக*

*தமிழ் கவிதை உலகில் வாணிதாசன் ஒரு மென்மையான தென்றல். காலம் மாறினாலும், இயற்கை இருக்கும் வரை அவரது கவிதைகளும் உயிரோடு இருக்கும்.*

*மழை நனைக்கும் மண் போல*
*மனங்களை நனைக்கும் கவிதைகள் -*
*வாணிதாசன் கவிதைகள்.*



**1. இந்தியாவின் வேர்ட்ஸ்வொர்த்**

ஓடையின் பாட்டைத் தன் பேனாவில் ஏற்றினான்,
காடுகளின் அழகைக் கவிதையாய் மாற்றினான்!
பாரதிதாசனின் தலைமாணக்கனாய் நின்று,
பாவலரேறுவாய் வான்முட்டி வென்றான்!



**2. செவாலியர் வாணிதாசன்**

பிரெஞ்சு மொழியிலும் செந்தமிழ் பேசினான்,
உலக அரங்கில் உயர்தமிழை வீசினான்!
'செவாலியர்' விருதும் அவன்மார்பில் மின்னவே,
வாணிதாசனாய் கவியுலகை ஆண்டான்!

**3. வற்றாத கவி அருவி**

மலையின் மௌனத்தில் தத்துவங்கள் தேடினான்,
அலையின் சீற்றத்தில் விடுதலையைப் பாடினான்!
மண்ணின் பசுமையை ஏடுகளில் தீட்டியே,
வற்றாத கவியருவியாய் நெஞ்சில் வாழ்கிறான்!

ராஜு ஆரோக்கியசாமி
மண்ணச்சநல்லூர் (தா), திருச்சி (மா), - 621216

# வாணிதாசன் ஒரு பார்வை

பரணி சுப சேகர்
மதுரை 17 தமிழ்நாடு.

புதுவையை அடுத்த வில்லியனூரில் 22/07/1915 ஆம் நாள் அரங்க. திருக்காமு துளசியம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். இயற்பெயர் அரங்கசாமி என்ற எத்திராசலு. ரமி என்றொருப் புனைப்பெயரும் கொண்டவர்.

பாரதிதாசனிடம் தொடக்கக் கல்வி பயின்றவர். தொடக்கக் கல்வியே பா இயற்றும் அளவுக்கு தொடக்கமாயிற்று. முத்துக்குமார சுவாமி பிள்ளையும் முடியரசனும் தமிழ் கற்றுக் கொடுத்தனர்.

1935 ஆம்ஆண்டு இவரது திருமணம் நடைபெற்றது

1938 ல் சி.பா. ஆதித்தனார் அவர்களிடமிருந்து ரூபாய் பத்து, இவர் எழுதிய கவிதைக்கு முதல் பரிசாகக் கிடைத்தது.

1950இல் பாரதிதாசன் நடத்திய அழகின் சிரிப்பு கவியரங்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்றார்.

1950இல் கோவை முத்தமிழ் மாநாட்டு கவியரங்கில் வெள்ளிக்கிண்ணம் பரிசு பெற்றார்.

1972இல் தமிழ்க் கவிஞர் மன்றத்தின் பொன் மோதிரமும்



1973இல் புதுவைத் தமிழ் சங்க வெள்ளிக் கேடயமும்

தமிழக அரசின் பாவேந்தர் பரிசு 10000/- பெற்றார்

திரு. வி.க.. பாரதி தாசன், மா. ராமலிங்கம்., கண்ணதாசன் ஆகியோர் வாணிதாசனை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

தமிழ்நாடு அரசு இவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கியுள்ளது.

புதுவையில் இவர் வாழ்ந்த சேலியமேட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு இவரது பெயர் வைக்கப் பட்டுள்ளது.

இவரது பிறந்தநாள் அரசு விழாவாக புதுவையில் கொண்டாடப்படுகிறது. தமிழன் என்ற பத்திரிகையில் இவரது கவிதைகள் வெளிவந்த போதுதான் இதழ் ஆசிரியர் இவருக்கு வாணிதாசன் என்று பெயரிட்டார்.

இவரது பாடல்கள் சாகித்திய அகாதமி வெளியிட்ட தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்ற நூலிலும் தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட புதுத்தமிழ்க் கவிமலர்கள் என்ற நூலிலும் இடம் பெற்றுள்ளன.

ஆங்கிலம் உருசிய மொழிகளில் இவரது பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சு மொழியிலும் சிறந்து விளங்கியவர்.

பிரெஞ்சு குடியரசுத்தலைவர் இவருக்கு செவாலியர் என்ற விருதினை வழங்கியுள்ளார். மேலும் கவிஞரேறு மற்றும் பாவலர் மணி போன்ற பட்டங்களும் பெற்றவர்.

பாரதிதாசன் அடியொட்டிப்பாடிய கவிஞர்களை பாரதி தாசன் பரம்பரை என்று அழைத்தனர். இவர்களில் வாணிதாசன் மிக முக்கியமானவர்.

இரவு வரவில்லை,
இன்ப இலக்கியம்,
இனிக்கும் பாட்டு,
எழில் விருத்தம்,
எழிலோவியம்
குழந்தை இலக்கியம்
கொடிமுல்லை,
சிரித்த நுணா





தமிழச்சி,
தீர்த்த யாத்திரை
தொடுவானம்,
பாட்டரங்கப் பாடல்கள்
பாட்டு பிறக்குமடா,
பெரிய இடத்து செய்தி
பொங்கல் பரிசு,
வாணிதாசன் கவிதைகள் மூன்று தொகுதிகள்,

விக்டர் ஹூகோவின் ஆன்லெல்லோ (காதல் எங்கே) விதவைக் கொரு செய்தி போன்ற நூல்களையும் வாழ்க்கை, பட்டிக்காட்டுப்பெண் கருங்காலம், என்ற தொடர் கதைகளையும், கவிதையில் வினாவும் விடையும் என்ற கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

வாணிதாசன் ஆத்திசூடியும் கொன்றை வேய்ந்தோனும் எழுதியுள்ளார். சிரித்த நுணாவில் இவைகள் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டுத்தாகூர் என்றும் தமிழ் நாட்டு வோர்ட்ஸ்வொர்த்' என்றும் அழைக்கப் பட்டவர்.

தான் வாழ்ந்த வீட்டிற்கு புரட்சி அகம் எனப் பெயர் வைத்தவர் வாணிதாசன் ஆவார்.

எழுத்தின் மூலம் புரட்சி செய்து எழுத்தால் மாற்றத்தை உண்டாக்க முடியும் என்று செய்து காட்டியவர் வாணிதாசன்.

07/08/1974இல் இவர் மறைந்தாலும் எழுத்தால் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் வாணிதாசனை சிந்தையிலிட்டு செம்மை யாகலாமா?

இவரது கொன்றை வேந்தனுக்கு தெளிவுரை எழுதியுள்ள பலரில் நானும் ஒருவனாக இருந்ததில் மகிழ்வு. இந்நூல் எனது 15 வது நூலாக வெளியானது.

வாணியாரின் வரிகளுக்கு என்றும் வாசமுண்டு. வாசிப்போம். நேசிப்போம்.

# வான்புகழ் வாணிதாசன்!

கவித்திலகம் வெற்றிப்பேரொளி

பாரதிதாசன் கண்ணதாசன் என்ற இருதாச இமயங்களுக் கிடையில் தானுமோர் இமயமாய் எழுந்து நின்றவர் கவிஞரேறு வாணிதாசன். புதுச்சேரி மண்ணுக்கு தன் ஆசான் பாரதிதாசனைப் போலவே புகழ்சேர்த்த பாவலர்மணி வாணிதாசன். பிரான்சு அரசின் செவாலியே விருதுபெற்ற செந்தமிழ்க் கவிஞர் வாணிதாசன்.

'தமிழ்நாட்டின் தாகூர்' என்றும், 'தமிழக வோர்ட்ஸ் வர்த்' என்றும் தமிழறிஞர்களால் கொண்டாடப்பட்டு வருபவர் வாணிதாசன்.

'தமிழச்சி', 'கொடிமுல்லை' போன்ற காவியங்களைப் படைத் தளித்த காவியக்கவிஞர் வாணிதாசன். சிறுவர் இலக்கியங்களிலும் சிந்தைசெலுத்தி, சிறப்புப் படைப்புகளைப் படைத்தளித்தவர் வாணிதாசன். இசைத்தமிழுக்கு வாணிதாசன் தந்த பெருங்கொடை 'தொடுவானம்' என்னும் இசைபாபாடல் தொகுப்பு.

புதுச்சேரியில் தன் குருநாதரைப் போலவே சிலையாக நின்று நம்மை வரவேற்கிறார் அழியாப் புகழ் வாணிதாசன்.

வான்புகழ் வாணிதாசனை, அவர் விருத்த இலக்கணத்திற்கு வெகுமதியாகத் தந்த 'எழில் விருத்தம்' தொகுப்பை தமிழுலகம் என்றும் நினைவில் நிறுத்தும்! நெஞ்சில் வைத்துப் போற்றும்! ■



# வளரும் இமயமலை

பாரதி தாசனார்
பரம்பரைக் கவிஞர்
பல்வகைச் சந்தம் பாச்சிறப்பு - இவர்
பாண்டிச் சேரியின்
வில்லிய னூருக்குப்
படைத்தார் உயரிய தனிச்சிறப்பு.

நேரதி கப்புகழ்
பழைமை இலக்கிய
நிகரில் சந்தம் எழில் விருத்தம் - அது
நிச்சயம் தமிழில்
முக்கிய படைப்பு
நினைத்தால் தேனை அது பெருக்கும்.

இரவு வரவில்லை
இன்ப இலக்கியம்
இனிக்கும் பாட்டு நூல்வரிசை - இவை
இனிதே தொடர்ந்து
பட்டியல் நீண்டது
எம் அன்னைக்குச் சீர்வரிசை.

மரபாம் யாப்பில்
மகிமைசேர் அணிகள்
மறைவின்றி பொருள்நலம் வெளிப்படை
- இதை
மாண்புசால் சான்றோர்
மதித்தே போற்றினர்
எளிமை இனிமையே அடிப்படை.

இயற்கை உருவகம்
இணைந்தே புனைந்த
ஈடில் லாச்சீர் கவித்துவம் - இதை
இன்றும் நினைத்தால்
நெஞ்சில் இனிக்கும்
எழில்சேர் உயர்நிலை மகத்துவம்.

பெயர்ப்பால் பலமொழி
பேசி மகிழ்ந்தன
போற்றும் இவர்கவி திறத்தினை - அவை
பெருமை சேர்த்தன
பிரெஞ்சு செவாலியர்
பீடுறு விருது சேர் சிறப்பினை.

தென்மொழி புத்தக
வெளியீட்டுக் கழகம்
சிறப்புடன் சாகித்ய அகாதமி - ஆம்
இன்னும் பலப்பல
இலக்கிய அமைப்புகள்
எழுத்தால் போற்றின தனித்தனி.

கண்முன் அகர
முதலி காட்டிய
கவினுறு நூலின் வெளியீடு - இவர்
கவிஞர் என்பதைத்
தாண்டிய சிறப்பை
காட்டும் இலக்கிய முதலீடு.

தொடக்கக் கல்வி
பாவேந்தர் வழி
தொடர்ந்தார் ஆசிரியப் பெரும்பணி - இவர்
தொடங்கிய கவிதை
பாரதிநாள் இன்றடா
தொடர்ச்சி உயர்ந்தது கவி ஏணி.

நடத்திய அழகின்
சிரிப்பு அரங்கில்
நல்திறன் பெற்றார் ஒருபரிசு - அதில்
நற்குண ஆசான்

முடிய ரசனார்
நல்பாராட்டும் பெருமகிழ்வு.


வீட்டின் பெயரே
"புரட்சி அகம்" தான்
விளைகவி எல்லாம் கருத்து வளம் - இவர்
வெளியிட்ட செய்தி
திராவிட நாட்டில்
விரைந்து பரவிட புகழ்முகம்.

நாட்டின் சிறந்த
கவிதாகூர்போல்
நம்தமிழ் மண்ணில் முன் நின்றார் - இதன்
நலம் வளச்சிறப்பை
மயிலை சிவமுத்து
நற்சொல் தந்திட புகழ்வென்றார்.

அரங்க சாமி
என்னும் பெயரில்
உறங்கி விடாமல் வாணி அருள் - ஆம்
அணைத்துக் கொண்டது
நினைத்தால் இனிக்கும்
அத்தனைப் படைப்பும் போக்கும் இருள்.

வாணி பொழிந்தாள்
வாழ்வார் உலகம் உள்ளவரை - இதை
வாழ்த்தும் கவிதைகள்
ஆழ்த்தும் மகிழ்வில்
வளரும் தொடர்ந்து இமயமலை!

**கவிப்பேரொளி நீரை. அத்திப்பூ**
**(சே.அப்துல் லத்தீப்)**
அஞ்சல் பயிற்சி மைய மேனாள் உதவி
இயக்குநர் - வளரும் இமயமலை
நீர்முளை அஞ்சல் 614711 நாகை மாவட்டம்





## கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கியப் பேரவை

*பதிவு எண் 249/2021*

17,வள்ளலார் வீதி குயவர்பாளையம் புதுச்சேரி 13.

*கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கிய பேரவையின் செயல்பாடுகள்*

*"தமிழ்க்காப்போர் வாழ்வார் தனி தமிழ்ச்சாய்போர் வீழ்வார் தமிழ் இன்பம் சேர்க்கும் தூய தமிழ் துன்பம் போக்கும்" என்னும் கவிஞரேறு வாணிதாசனாரின் வரிகளுக்கு இணங்க தமிழுக்கு தொண்டு செய்யும் தொண்டர்கள் அனைவரும் தழைத்து ஓங்குவார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.*

*இயற்கை அழகை இன்தமிழில் குழைத்து கவிதைகள் படைத்த கவிஞரேறு வாணிதாசனாரின் மீதும் தமிழ் மீதும் கொண்ட பற்றின் காரணமாக 2021 இல் முறையாக கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கியப் பேரவை சீரும் சிறப்புமாக தலைவர் செந்தமிழ் பற்றாளர் பொன்முருகன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.*

*கவிஞரேறு கலை இலக்கிய பேரவை தோற்றுவிப்பதற்கு முன்பே அதன் செயல்பாடுகள் தொடங்கிவிட்டன 2019 ஆம் ஆண்டு அரசு தொடக்கப்பள்ளி எக்கோல் ஆங்கிலேஸில் கவிஞரேறுவின் குழந்தை இலக்கியம் மற்றும் இனிக்கும் பாட்டு நூல்களில் இருந்து சில பாடல்களை தேர்ந்தெடுத்து அந்த பாடல்களுக்கு இசை ஆசிரியர் திரு வெங்கடேசன் அவர்களின் உதவியுடன் இசை அமைக்கப்பட்ட குழந்தைகளுக்கான 'குறுந்தகடு வெளியீட்டு விழா' நடைபெற்றது. இவ்விழாவிற்கு பள்ளி கல்வி இயக்கத்தின் இயக்குநர் மரியாதைக்குரிய உயர்திரு ஊெ.வீ ருத்ர கவுடு அவர்கள் தலைமை தாங்க மரியாதைக்குரிய பள்ளியின் தலைமை ஆசிரியர் பாஸ்கர் முன்னிலை வகுத்தார். இந்தக் குறுந்தகடுகள் புதுவையின்*

பள்ளிக்கல்வி இயக்கத்தின் சார்பில் உள்ள வட்டம் 1கீழ் அடங்கியுள்ள அனைத்து தொடக்கப்பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டது.

அந்த ஆண்டு கவிஞரின் பிறந்த நாளும் எக்கோல் ஆங்கிலேஸ் தொடக்கப்பள்ளியில் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது. சங்கத்தமிழ் இலக்கிய பூங்கா அமைப்பை நமது பேரவை அணுகி கவிஞரேறுவின் தமிழச்சி என்னும் நூலை மறுபதிப்பு செய்து வெளியிட வேண்டுகோள் விடுத்தது. இதன் விளைவாக தமிழச்சி காவியம் மறு பதிப்பு சீரும் சிறப்புமாக அச்சங்கதினரால் வெளியிடப்பட்டது.

கவிஞரேறு வாணிதாசன் ஆத்திச்சூடி கொன்றைவேய்ந்தோன் என்னும் நூலை நல்லாசிரியர் வளர்மதி முருகன் 2021ல் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து கவிஞரேறு வாணிதாசனாரின் ஆத்திச்சூடி கொன்றைவேந்தன் தெளிவுரை நூலை படித்த கவிஞர் பரணி சுபசேகர் அவர்கள் மீண்டும் கவிஞர் வாணிதாசனின் கொன்றைவேய்தோனுக்கான தெளிவுரை நூலை பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க வெளியிட்டு மகிழ்ந்தார்.

மரபுமாமணி நா. பொன்னுசாமி அவர்கள் தொகுத்த தொடுவானம், குழந்தை இலக்கியம், இனிக்கும் பாட்டு, பாட்டு பிறக்குமடா, நூல்களை 'கவிஞரேறு வாணிதாசன் படைப்புகள்' என்ற தலைப்பில் 2022ல் நமது பேரவை வெளியிட்டது.

மேலும் 2023 இல் கவிஞரேறு வாணிதாசனார் கலை இலக்கியப் பேரவையின் மூலமாக 'அறிஞர்கள் பார்வையில் ஆத்திச்சூடி கொன்றைவேந்தன்' என்னும் நூல் வெளியிடப்பட்டது. நூலின் தொகுப்பாசிரியர் திருமதி பொன்வாணி ஜானகிராமன் ஆவார்.

அனைத்து உலக பொங்கு தமிழ் சங்கத்தின் தலைவர் மதிப்புறு முனைவர் சுந்தர பழனியப்பன் அவர்களுக்கு நம் பேரவையின் தலைவர் திரு. பொன்முருகன் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அச்சங்கத்தினர் புதுவையில் உள்ள புதுவை தமிழ்ச் சங்கத்தில் வாணிதாசனார் சிறப்பு விழா எடுத்து அவ் விழாவில் 'பன்முகப் பார்வையில் கவிஞரேறு வாணிதாசனார் 'என்னும் ஆய்வு கோவை நூலை வெளியிட்டு சிறப்பித்தனர்.

*புதுவையில் உள்ள திருவள்ளுவர் உலக சாதனையாளர் அமைப்பின் தலைவர் புதுவை எழுச்சிக்கவி சரவணன் அவர்களின் யோகி பதிப்பகம் மூலமாக 'கவிஞரேறு வாணிதாசன் படைப்பு வளம்', என்னும் தொகுப்பு நூலும்நமது பேரவையின்விண்ணப்பத்திற்கு இணங்க வெளியிடப்பட்டது.*

*2024 கவிஞரேறு கலை இலக்கியப் பேரவையின் சார்பாக நிகழ்ந்த ஆண்டு விழாவில் பேரவையின் செயலாளர் நல்லாசிரியர் வளர்மதி முருகன் தொகுத்த கவிஞரேறுவின் ஆய்வு கட்டுரைகள் அடங்கிய 'தீந்தமிழ் அமுதம்' என்னும் நூலும் 'கவிஞரேறுவின் சுயசரிதை' என்னும் நூலும் வெளியிடப்பட்டது.*

*2025 இல் கவிஞரேறு கலை இலக்கிய பேரவையின் ஆண்டு விழாவில் 'வண்ணத்தமிழ் வளம்' என்னும் வாணிதாசனார் குறித்த ஆய்வு நூலை பேரவையின் தலைவர் செந்தமிழ் காப்பாளர் பொன்முருகன் தொகுத்து வெளியிட்டார்.*

*2026 ஆண்டில் நமது பேரவை நடத்தவருக்கும் கவிஞரேறு வாணிதாசனாரின் பிறந்தநாள் விழாவில் கவிஞரேறு வாணிதாசனாரின்' இலக்கிய இன்பம்' தொகுப்பு நூலை பாவலர் பொன்வாணி ஜானகிராமன் தொகுத்து வெளியிட உள்ளார். மேலும் கவிஞரேறு வாணிதாசனாரின் ஆத்திசூடிக்கு கதைகள் எழுதி 'சொற்படி நட' என்ற நூலையும் செந்தமிழ்ச் செல்வர் பொன்முருகன் எழுதி வெளியிட உள்ளார்.*

*ஆண்டுதோறும் நிகழும் பேரவை விழாவில் தமிழறிஞர்களுக்கு கவிஞரேறு வாணிதாசனார் விருதும், ஆசிரியர்களுக்கு ஆசிரியர் செம்மல் விருதும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்குசாதனையாளர் விருதும் , பத்தாம் வகுப்பில் தமிழில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கும் விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*

தலைவர் செந்தமிழ் பற்றாளர்

**பொன் முருகன்**

கவிஞர் ஏறு வாணிதாசனார் கலை இலக்கிய பேரவை


தஞ்சைத் தமிழ் மன்றம்
நாளும் தமிழ் வளர்ப்போம்
தஞ்சைத் தமிழ் மன்றம்
எட்டாம் ஆண்டுவிழா
நாள் : 16.08.2026
ஞாயிற்றுக்கிழமை
இடம் : வலங்கைமான்
கவியரங்கம்
வயலினிசை
தவிலிசை
நாதஸ்வர இசை
பரதநாட்டியம்
நூல் வெளியீடு
விருது வழங்குதல்
அனைவரும் வருக



# என்றும், அன்றுபோல்

**நல்லாசிரியர் வே.பூங்குழலி பெருமாள்.**
**தமிழ் விரிவுரையாளர் புதுச்சேரி**

'கேட்டிலும் உண்டோ உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் '

என்று வாய்விட்டுச் சத்தமாகப் படித்துக் கொண்டிருந்தாள் மகள் மணிமேகலை .

அப்பா வேகமாக வேலைக்குக்கிளம்பிக் கொண்டிருந்தார்.

"என்னங்க...'' என்று அழைத்தாள் மனைவி.

"என்னம்மா" என்று திரும்பினார் அப்பா.

"ஒன்றும் இல்லைங்க இன்னும் பழைய இடத்திற்குதான் செல்கின்றீர்களா?"

காலில் செருப்பை மாட்டிக் கொண்டவர் சற்றே நின்று திரும்பி மனைவியைப் பார்த்தார்.

"என்ன கேட்டாய்?"

"இல்லை இன்னும் அந்த ஒன்றுமில்லாத பழைய முதலாளி வீட்டிற்குத்தான் செல்கிநீர்களா? என்று கேட்டேன்'' என்று சொல்லிவிட்டு மனதிற்குள் ஏதேதோ முனக ஆரம்பித்தாள் அவள்.

காலில் செருப்பை மாட்டத் தொடங்கியவர் திரும்பி வந்து அவளைப் பளீர் என்று அறைந்து விட்டு ஒன்றுமே சொல்லாமல் காலில் செருப்பை மாட்.டிக் கொண்டு சென்று விட்டார் அப்பா.

கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அழுதாள்அம்மா.

மணிமேகலை அம்மா அருகில் வந்து கண்ணீரைத் துடைத்து விட்டுக் கேட்டாள் .

"ஏன்மா நீயும் அப்பாவும் வேலைக்குச் செல்லும்போதெல்லாம் சண்டை போடறீங்க?"

"அப்பாதப்பானவேலைசெய்றாராமா? என்று" கேட்டாள் மணிமேகலை.

மகளை வாரி அணைத்த கோமதி "இல்லம்மா தப்பான வேலை செய்யல ஆனால் தப்பாமல் பழைய இடத்திற்கு வேலைக்குப்போகிறார். அதனால் தான் வேறு நல்ல இடத்திற்கு வேலைக்குப் போனால் நாலு காசு சம்பாதிக்கலாம் உனக்கு வேண்டியதைச் செய்யலாம்னு சொல்றேன்".

"அவர் எங்கே கேட்கிறார் எல்லாம் என் தலைவிதி என்றாள்அம்மா".

மணிமேகலை தாயைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். பின் மீண்டும் படிக்கச்சென்று விட்டாள் .

மாலை அப்பா வீட்டிற்கு வந்தவுடன் ஓடிச் சென்று கழுத்தைக் கட்டிக் கொண்டாள் அவள்.
மகிழ்ந்து போன அப்பா ''என்ன மணிமேகலை அப்பாவிடம் என்ன கேட்கப் போகிறாய்?" என்றார் .

அப்பா. நேரடியாகக் கேட்டவுடன்

அதிர்ச்சி அடைந்த அவள் ‘‘இல்லப்பா உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப் போறேன் நீ பதில் சொல்லு”.

“சரி கேளு”

“நீ ஏம்பா அம்மா சொல்றத கேட்க மாட்டேங்கற”.

மகளை தள்ளி நிறுத்திப் பார்த்த அப்பா கண்களைத் துடைத்துக்கொண்டார்.

“அப்பா ஏம்பா அழற?”

“இல்லம்மா நீ குழந்தையா இருக்கும் போது நானும் அம்மாவும் உன்னைத் தூக்கிக்கொண்டு வண்டியில் செல்லும் போது ஒரு பெரிய விபத்து”.

“என்னப்பா என்ன விபத்து?”

“ஆமாம்மா அந்த விபத்துல நாம பிழைத்ததே இறைவன் அருளாலத் தான் .அது மட்டும் அல்ல உன் அம்மாவுக்கு உடம்பு முழுக்கக் கட்டு. அவளால் எந்த வேலையும் செய்ய முடியல .

நீயும் விபத்து நடந்த அதிர்ச்சியில் பேச்சு இழந்து விட்டாய் .

என்னால் நடந்து வேலைக்குச் செல்ல முடியாதபடி இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு.”

“ஐயையோ என்னப்பா சொல்றீங்க? நான் பேச்சை இழந்து விட்டேனா! பிறகு எப்படி இப்போ உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன்.

‘‘சொல்றேன்மா’’ என்று சொல்லி, துண்டை உதறித்தோளில் போட்டுக் கொண்ட அப்பாவின் கண்கள் எங்கேயோ பார்க்க.... என்னிடம் சொல்லத் தொடங்கி னார். “நான் இப்போ போகிற அதே இடத்தில் தான் அப்பவும் வேலை செய்து கொண்டிருந்தேன்.



என் முதலாளி பெரும் செல்வந்தர். பெரும் கொடையாளர். யார் வந்தாலும் உதவி செய்வார். அவரைச் சுற்றி அவர் பணத்திற்காக ஒரு கூட்டம் அவருடனேயே இருக்கும் ஐயா! ஐயா! என்று எப்பவுமே அவர் வீட்டில் ஒரு பெருங்கூட்டமே இருக்கும்.

எனக்கு விபத்து என்ற உடன் நம் வீட்டிற்கு வந்து பார்த்தவர் என் முதலாளி.

அது மட்டும் இல்லாமல் நான் குணமாகும் வரை எனக்குச் சம்பளம் கொடுத்தவர் என் முதலாளி.

எவ்வளவு செலவானாலும் உன் மகளை பேச வைக்கிறேன் என்று உன்னைப்பேச வைத்தவர் என் முதலாளி.

என் கால்கள் குணமானதும் அவர் காலுக்குச் செருப்பாக நான் உழைத்தேன். அவரை என் தெய்வமாகத்தான் பார்த்தேன். அம்மா இந்த நிலையில் அவர் செய்து வந்த தொழிலில் ஒரு பெரிய இழப்பு. அவரால் சமாளிக்கவே முடியல.

“ஐய்யய்யோ ! என்னப்பா என்ன ஆச்சு.”

“ஆமாம்மா அவர் செல்வம் எல்லாம் கரையத்தொடங்கியது கூடவே அவருடன் இருந்த கூட்டமும் விலகத் தொடங்கியது .

ஐயாவே தெய்வம் என்று சொல்லிய கூட்டம் வெய்யிலுக்குக்கூட அவர் வீட்டில் ஒதுங்க மறுத்தது.

தனக்கென்று ஒரு குடும்பத்தைக் கூட அமைத்துக் கொள்ளாத என் முதலாளி கவலைப்பட்டு கவலைப்பட்டுப் பக்கவாத நோய்வந்து படுக்கையில் விழுந்துவிட்டார். அவரிடம் பணமும் இல்லை. அவரை கவனிக்க யாரும் இல்லை. எல்லோரும் விலகிப் போய்விட்டனர். ஏனென்றால்’ அவரவர் குடும்பம், தேவை,

ஒன்றுமில்லாத இவரிடம் இருந்தால் என்ன பயன் என்று எல்லோரும் வேறு இடத்திற்கு வேலைக்குப்போயிட்டாங்க. என்னால் அப்படிப் போக முடியல அம்மா.

இன்னைக்கு நீ பேசுற பேச்சு அவர் போட்ட பிச்சை.

அன்றைக்கு நான் முடியாமல் படுத்த போது முடியாது வேலையை விட்டுப்போ என்று சொல்லாத முதலாளி இன்று பக்கவாதம் உடலுக்கு மட்டும் அல்ல உள்ளத்திலும் என்று துன்பப்படும்போது நான் எப்படி மா அவரிடத்தில் போகாமல் இருக்க முடியும்.

அதனால் தினமும் அவருக்குத் தேவை யானதைச் செய்துவிட்டுப் பின் கூலி வேலைக்குப் போகிறேன். குடும்பம் நடத்தணுமே என்று உன் அம்மாவும் நான் முழுநேரம் வேறு இடத்திற்கு வேலைக்குப் போனால் கூடுதல் சம்பளம் வரும் என்று சண்டை போடுகிறாள்.

என்னால் போகாமல் இருக்க முடியல என்று அழுதார் அப்பா.

கேட்டிலும்... என்னும் குறளுக்கு ஆசிரியை சொன்ன விளக்கம் இப்போது புரிந்தது மணிமேகலைக்கு.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருந்த உறவை கேட்ட மணிமேகலை மகிழ்ச்சியுடன் மீண்டும் பொருள் புரிந்து திருக்குறளைப் படிக்கத் தொடங்கினாள்

**கேட்டிலும் உண்டோ உறுதிக் கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்.** ■

# பொறுமையின் கடைசி துளி விழும் தருணம்

## எஸ். ஜெர்லின் பிரீமா (மின்னொளி)

சில மனிதர்களின் மாற்றம் திடீரென நிகழாது. அது, அவர்கள் அமைதியாக உடைந்து முடித்த பிறகு தான் நிகழும். ஆனால் வாழ்க்கை அவனை பல அனுபவங்களின் வழியாக நடத்துகிறது. சிலர் அவனை புரிந்து கொள்கிறார்கள். சிலர் அவன் அமைதியை பலவீனமாக நினைக்கிறார்கள். சிலர் அவன் மனக் காயங்களைக்கூட வார்த்தைகளால் மீண்டும் மீண்டும் குத்திக் கிழிக்கிறார்கள்.



*கருவில் இருக்கும் குழந்தை*
*பூவுலகில் வரும் போது*
*அழும் காரணம் கூட*

*தாயின் கருவறையில் கிடைத்த*
*அமைதியும் பாதுகாப்பும்*
*இனி இல்லை என்பதால் தானோ....?*

அப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பை தேடித்தான் மனித வாழ்வு தினம் தினம் நகர்கின்றதா?

அதிகம் அமைதியாக இருப்பவர்கள் தான் அதிகம் உடைந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அமைதியை இந்த உலகம் மதிப்பதற்கு பதிலாக மிதித்துக் கொண்டிருக்கிறது. அவன் அமைதியை இந்த உலகம் இவன் எதற்கும் ஆகாதவன் என ஓரங்கட்டுகிறது. அளவுக்கு அதிகமான அவமதிப்புகளையும் அவமானங்களையும் துரோகங்களையும் கண்ட மனிதன் முகத்தில் புன்னகை ஏந்தி வலம் வந்தால் இவனை எதுவும் பாதிக்காது என்று அர்த்தமல்ல.

பல இன்னல்களையும் துன்பங்களையும் கண்ட பின்பும் ஒரு மனிதன் பொறுமை காக்கின்றான், அமைதியாக இருக்கின்றான் என்றால் எதற்கும் ஆகாதவன் என்றோ அல்லது அவனுக்கு பேசத் தெரியாது என்றோ அர்த்தம் இல்லை.

அவன் உறவுகளை இழக்க விரும்பாததால் மௌனம் காக்கின்றான். சொல்ல வேண்டிய வார்த்தைகளை தன்னுள் அடக்கிக் கொள்கின்றான். வரவேண்டிய கண்ணீரை தடுத்து கேட்கக் கூடாத அவமதிப்புகளை சகித்துக் கொள்கின்றான். புரிந்து கொள்ளாத உறவுகளுக்காக தன்னையே மாற்றிக் கொள்கின்றான். உறவுகளை இழக்க பயப்படுகிறான். தான் நேசித்த வர்களை விட்டு விலகிவிடக் கூடாது என நினைக்கின்றான்.

அதனால், ஒரு நாள் எல்லாம் சரியாகிவிடும், நானும் ஓர் சராசரி மனிதனைப் போல் மகிழ்வோடு வாழ்வேன் என்று நம்புகின்றான். அந்த அதீத நம்பிக்கையால் தன்னைத் தானே சமாதனப்படுத்திக் கொண்டு, பொறுமை என்னும் ஆகச் சிறந்த ஆயுதத்தால் தன்னையே ரணமாக்கிக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் தன்

கண்ணீரை மறைக்கின்றான். தவறு செய்தவர்கள் வெறும் உதட்டளவில் மட்டுமே கூறும் மன்னிப்பு என்ற வார்த்தையில் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்கின்றான் ஒரு சின்ன புன்னகையால்.

மனதில் உருவாகும் ஒவ்வொரு காயமும் ஒரு சேர அவன் மனதின் உள்ளே ஒரு பெரிய புயல் ஒன்று உருவாக்குகிறது. வெளியில் மட்டும் தான் பிறர் பார்வைக்கு அமைதியானவனாக இருக்கிறான். ஆனால் உள்ளே சத்தமில்லாமல் சரிந்துக் கொண்டிருக்கின்றன அவன் ஆசை கனவுகள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள் என எல்லாமே.

ஆனால் வெளியில் கவலை இல்லாமல் இருக்கும் மனது மட்டும் எப்போதும் எரிமலைபோல் உள்ளுக்குள் புகைந்து கொண்டே இருக்கும். ஓயாமல் தன்னைத்தானே கேள்விக் கேட்டுக் கொண்டே இருக்கும். அந்தக் கேள்விகள் இவ்வாறானதாக இருக்கும்

நான் உண்மையாக உயிருக்கு உயிராக நேசித்தவர்கள் என்னை ஏன் புரிந்துக்கொள்ளவில்லை? இவர்கள் என்னைக் காயப்படுத்த காரணம் என்ன? என் அமைதியா அல்லது அவர்களின் ஆணவ அகங்காரமா? இந்த வலிக்கும் காயங்களுக்கும் இவர்கள் மீது நான் கொண்ட பாசமும், நம்பிக்கையும் தான் காரணமா? அல்லது நான் தான் இவர்களை நம்பி ஏமாந்தேனா? எனது அளவுக்கு அதிகமான பொறுமைதான் இவர்கள் இப்படி நடந்துக்கொள்ள காரணமா? என பல கேள்விகள் கண்ணாடிச்சில்லாய் மாறி இதயத்தை கிழித்துக் கொண்டிருக்கும்.

அந்த கேள்விகளுக்கான பதில் கிடைக்காமல் போகும் போது மனதில் பொறுமையின் கடைசி துளி விழுகிறது. அது திடீரென வரும் கோபம் அல்ல. பல வருடங்களாக அடக்கி வைத்த கண்ணீரின் வெடிப்பு. ஆயிரம் முறை மன்னித்த இதயத்தின் சோர்வு. இனி எதையும் சகிக்கும் ஆற்றல் எனக்கு இல்லை என உள்ளம் கதறும் தருணம். அந்த



நொடிவரை தொலைந்திருந்த தன்னை மீண்டும் தேட தொடங்குகிறான்.

எப்போதும் அமைதியாக இருந்தவன் தனக்காக போராட தொடங்குகிறான். தன்னை புரிந்துக் கொள்கிறான். தன்னைக் காப்பாற்ற நினைக்கிறான். அந்த மாற்றம் சிலருக்கு கோபமாக, திமிராக, அகம்பாவமாக தெரியும். ஆனால் உண்மையில் அது உடைந்த மனம் தன்னைத்தானே மீண்டும் கட்டிக்கொள்ளும் ஒரு முயற்சி. ஏனெனில் அதிகம் காயப்பட்ட மனிதர்கள்தான் ஒரு நாள் மிகவும் அமைதியான, அதே நேரம் வலிமையான மனிதர்களாக மாறுகிறார்கள்.

ஒரு இதயம் தொடர்ந்து வலியை தாங்கிக்கொண்டே இருந்தால் ஒரு கட்டத்தில் அது இரண்டு முடிவுகளில் ஒன்றை எடுக்கும்.

1) முழுவதுமாக அது உடைந்து விடும்

2) இனிமேல் யாராலும் உடைக்க முடியாத அளவுக்கு வலிமையானதாக மாறிவிடும்.

இதில் அந்த இரண்டாவது மாற்றம் தான் மிகவும் ஆபத்தானது, அதே நேரத்தில் அழகானதும் கூட.

முன்பு போல் எல்லோரிடமும் மனதை திறக்க மாட்டான். யாரையும் எளிதாக நம்ப மாட்டான். யாருக்காகவும் தன்னை இழக்க மாட்டான்.

என்னை நான் காப்பாற்றிக்கொள்ளா விட்டால் யாராலும் என்னை காப்பாற்ற இயலாது என்ற மிகப்பெரிய உண்மையை இறுதியாக புரிந்துகொண்டிருப்பான்.

உண்மையில் பொறுமை என்பது என்ன? நம்மில் பெரும்பாலானோர் சொல்வது உண்டு பல நேரங்களில் பொறுத்துப்போ, சகித்துப்போ என்று. அளவுக்கு அதிகமான பொறுமை சில நேரத்தில் உன் உயிரையும் பலி கேட்கலாம் என்பதில் கவனம் தேவை.

பொறுமை என்பது எல்லாவற்றையும் சகித்துக்கொள்வது அல்ல. எப்போது பேச வேண்டும், எப்போது விலக வேண்டும், எப்போது ‘போதும்’ என்று சொல்ல வேண்டும் என்பதை அறிவதும் பொறுமையின் ஒரு பகுதி தான்.

நம்முடைய வாழ்வில் சில உறவுகள் நம்மை வளர்க்கும். சில உறவுகள் நம்மை மெதுவாக உடைக்கும் மென் கொல்லிகள். அதை உணராமல் தொடர்ந்து பொறுத்துக்கொண்டும் சகித்துக்கொண்டும் போனால் நம்மை நாமே இழந்துவிடுவோம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்பதே நம்மில் பலரும் அறியாத உண்மை.

உடைந்த நம் வாழ்க்கையில் பிறர் என்னை புரிந்துகொள்ள வேண்டும் என்ற சின்ன எண்ணத்தை தாண்டி நான் என்னை புரிந்து கொண்டால் போதும் என்ற பெரிய எண்ணம் நம்மில் உதித்தால் உடைந்த உள்ளம் உருப்பெறும்.

அதிகம் அழுத கண்கள்தான் ஒருநாள் தெளிவாக இந்த உலகத்தை பிரித்துப் பார்க்கும். அதிகம் உடைந்த இதயம் தான் வலிமையான இதயமாக மாறும். இதுதான் பொறுமையின் கடைசி துளி விழும் தருணமாக இருக்கும்.

முடிவுகள் அழிவு அல்ல. அது மறு பிறப்பின் தொடக்கம். அப்படியே பொறுமையின் கடைசி துளி விழும் தருணமும்.

■




ஆக்கம்.

**குயில்.மு.இரசியா பேகம்**

தஞ்சை

# மின்னலைத் தேடி...



குயில்.மு.இரசியா பேகம்

## 3

**த**வளைச் சத்தம்...

அமைதியான இரவில்...

தூங்க முடியாமல் துவண்டாள் சனா...

காலையில் எழுந்து வழக்கமான வேலைகளை முடிக்கும் போது..அந்த போன் ரீங்காரம் கேட்டுப் பாய்ந்து எடுத்தாள் நம் பைங்கிளி

'ஹலோ அம்மா உங்க பையன் எப்படி இருக்காங்க?' என்றாள்.

'நலம்மா, ரொம்ப தேங்ஸ்மா'

'எந்த ஹாஸ்பிடலம்மா?'

'இந்திரா காந்திமா'

'என் காலேஜ்ம்மா'

'நகைம்மா'???

'கவலைப்படாதே'

'அதை எங்கச் சேர்க்கணும்மோ அங்கச் சேர்த்து விட்டு வருகின்ற வழியில்தான் இப்படி'

*'அப்பாடி இராத்திரி தூங்கமே இல்லை யம்மா'*

*'எனக்குந்தான் ...*

*எனக்கு ஒரே பையன். அவனை விட்டால் எனக்கு யாருமில்லை' என்று தழு தழுத்தாள் தாய்*

*'நல்லவர்களை கடவுள் சோதிப்பார். ஆனா கைவிடமாட்டார் சரியான நேரத் தில் கைக் கொடுப்பார்'*

*'உன் பெயர் ரஜினியா?'*

*பின் அவள் வாருவதைப் புரிந்து 'அம்மா 'என்றாள்*

*'சரி எப்போ பார்க்கலாம்?'*

*'11, மணிக்கு புளூம்(ணுயிலிலிது) எங்க காலேஜ் ரெஸ்டாரண்ட் வருவீர்களா?'*

*'வருகிறேன்' என்றார் தாய்*

*காலை 11 மணி சனா காலேஜிருந்து அந்த ரெஸ்டாரண்ட் வந்து படியேறினாள்..*

*அங்கே ஒரு பெண் உயரமாக நடுத்தர வயதில், மாநிறமாக மிகக் களையான முகத்துடன் புர்காவில் மிகப்பவித்தரமாகத் தெரிந்தாள் ..*

*சனா அவளை நோக்கி மிக நெருக்க மான உணர்வில் வந்தாள்.*

*அவளும் 'நீதான் சனாவா?' என்றாள்.*

*'ஆம் 'என்றவள் 'அஸ்ஸலாமு அலைக் கும்மா' என்றாள்.*

*'வா அலைக்கும் சலாம்' என்றாள் தாய்.*

*அவள் கையில் அந்த கருப்பு தோல் பையைத் தந்தாள்.*

*அதை பிரித்தவள் நிமிர்ந்தாள்.*

*'அம்மா அவர் எப்படி இருக்கிறார்?'*

*'இன்னும்* ICU *வில்தான் இருக்கான். ஆபத்து ஏதுமில்லை, உசார இருக்கான். எங்கிட்ட பேசினான். மதியம் காலில் எலும்பு முறிவுக்கு ஆபரேசன் பண்ணி பிளேட் வைக்கணும்னுன்னாங்க'*

*'எனக்கொரு உதவி பண்ணுவியாடா '*
*'என்னம்மா'*

*'நான் மட்டுந்தான் அவனுக்கு. அப்பா யில்லாப் பிள்ளை ஏதோ சொந்தக்காரரங்க உதவியில் சிங்கப்பூருக்கு உணவு பொருட் கள் சில ஏற்றுமதி செஞ்சு சம்பாதிக்கிறோம். இப்போ இவன் படுத்து விட்டான்.*

*மாலை 6 மணிக்குள் கொரியரில் இந்த கொட்டேசன் கவரை சேர்க்கணும் உதவுவியா?'*

*'சரிம்மா உங்க பெயரு என்றாள்,?'*

*'மரியம் 'என்றாள்.*

*'எனக்கு இந்த ஊர் புதிது வாடகை வீட்டில் நானும் எனது தோழியும் தங்கிப் படிக்கிறோம்.*

*பெற்றவர்கள் வெளியூர் , என்று தயங்கி*

*பரவாயில்லை!*

*தோழியோடு போகிறேன் உங்களுக் காக என்றாள்'*

*மரியம் சனாவை தழுவி அன்புடன்*




*நெற்றியில் இதழ் பதித்தாள்.*

*'மிகவும் அழகாக இருக்கிறாய்' என்று சொல்லி திருஷ்டிக் கழித்தார்.*

*மாலை 4.30 மணி சனா தன் தோழி மதியை அழைத்துக் கொண்டு அந்த கவர் இரண்டை எடுத்துக் கொண்டு கூரியர் ஆபீஸ் நோக்கி விரைந்தாள்...*

*அப்போது! அப்போது!*

*தொடரும்...*

# மூவரி கவிதைகள்

1.

முற்றுப் புள்ளி இட
முளைக்கிறது
முன்னூறு கேள்விகள்

2.

குழந்தையின் ஆட்டம்
நிழலின் நடனம்
விளக்கின் ஜாலம்

3.

சருகின் ஓசையில்
சுருளும் மனதில் பயம்
கேட்கிறது மரணத்தின் ஓலம்

4.

பொங்கும் பால்
குளிர் நீர்த்துளி
ஏறும் சினம் இறங்கும்

5.

பொறி ஒன்று சேர
கற்பூரம் பற்றியது
உயிர் ஒன்று தோன்றியது

6.

சூழும் கரு மேகம்
சரியும் வெண் முத்துக்கள்
விழும் சாரல்

**சசிகலா விஸ்வநாதன்**

**பாவேந்தர் பாரதிதாசன் - பழனியம்மாள்**



சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடுமறந்தால் - மற்றப்
பாதிதுலங்குவதில்லை...

பாவேந்தர்



தொடர் : 14

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்




ரஸ்னா ரம்ஸான்

இலங்கை , அக்குறணை

காலையின் இளம் கதிர்கள் சொகுசான அந்த சமையலறையின் கண்ணாடிச் சுவர்கள் வழியே ஊடுருவி, அங்கிருந்த பாத்திரங்களின் மீது பட்டுப் பிரதிபலித்தன. 'மெமரீஸ்' ரெஸ்டாரண்ட்டின் எக்ஸிகியூட்டிவ் கிச்சன் அது.

ஐஸ்வர்யா தன் தலையை நேர்த்தியாகக் கட்டி, செஃப் கோட் மற்றும் ஏப்ரன் அணிந்து கொண்டு கண்ணாடியின் முன் நின்றாள். இரண்டு வருடங்களுக்குப் பிறகு மீண்டும் சமையல் உலகிற்குள், அதுவும் ஒரு எக்ஸிகியூட்டிவ் கிச்சனுக்குள் அசிஸ்டென்ட் செஃப்-ஆக நுழைவது அவளுக்குள் ஒரு புதிய சிலிர்ப்பையும், அதே சமயம் ஒருவித இனம் புரியாத பயத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

அவள் சமையல் கூடத்திற்குள் நுழைந்த போது, அங்கிருந்த மற்ற ஊழியர்கள் அவளை ஒரு விசித்திரமான பார்வையோடு நோக்கினர். பொதுவாக அந்த ஹோட்டலில் மிகக் கடுமையான தேர்வைக் கடந்தே ஊழியர்கள் சேர்க்கப் படுவார்கள். ஆனால், ஐஸ்வர்யா நேரடியாக அஷ்வினின் தனிப்பட்ட சமையலறையிலேயே நியமிக்கப் பட்டிருப்பது பலருக்குள் பொறாமையையும் சந்தேகத்தையும் கிளப்பியிருந்தது.

'குட் மார்னிங் செஃப்...' ஐஸ்வர்யா அங்கிருந்த சீனியர் செஃப் ஆனந்திற்கு மரியாதையாக கூறினாள்.

ஆனந்த் அவளை ஏளனமாகப் பார்த்து விட்டு, 'ம்ம்... குட் மார்னிங். எம்.டி சார் உன்னை டைரக்டா அப்பாயிண்ட் பண்ணியிருக்கலாம். ஆனா இந்த கிச்சனைப் பொறுத்தவரைக்கும் நான் சொல்றது தான் ரூல்ஸ். ஆரம்பத்துல பெரிய டிஷ் எல்லாம் பண்ணிடலாம்னு கனவு காணாத. முதல்ல காய்கறிகளை வெட்டுறது, மசாலாக்களை தயார் செய்றதுல இருந்து தான் உன் வேலை ஆரம்பிக்கும்,' என்று கண்டிப்புடன் கூறினான்.

ஐஸ்வர்யா புன்னகையுடன், 'கண்டிப்பா செஃப். சமையல்ல எந்த வேலையும் குறைஞ்சது இல்லை,' என்று கூறிவிட்டுத் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வேலை செய்யத் தொடங்கினாள்.

அதே நேரம், சமையலறையின் கதவுகள் தானியங்கி முறையில் திறக்கப்பட, அஷ்வின் உள்ளே நுழைந்தான். கருப்பு நிற செஃப் கோட்டில் அவன் கம்பீரமாக காட்சியளித்தான். அவனது கூர்மையான கண்கள் முதலில் தேடியது ஐஸ்வர்யாவைத் தான்.

அவள் எவ்வித சலனமுமின்றி, மிக நேர்த்தியாக வெங்காயங்களை மெல்லியதாக வெட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவளது கைவிரல்களின் வேகம் அவளது அனுபவத்தைப் பறை சாற்றியது.

'செஃப் ஆனந்த்... இன்னைக்கு ஸ்பெஷல் மெனுவுக்கான தயாரிப்புகள் எப்படி போய்ட்டிருக்கு?' அஷ்வினின் கரகரப் பான குரல் சமையலறையை அதிர வைத்தது.

'எல்லாம் ரெடி சார். ஆனா இந்த புதுப் பொண்ணு... ஐஸ்வர்யா, இவங்களோட வேகம் நமக்கு செட் ஆகுமானு பார்க்கணும்,' என்றான் ஆனந்த் அஷ்வினிடம் நல்ல பெயர் வாங்கு வதற்காக.

அஷ்வின் மெதுவாக ஐஸ்வர்யாவின் அருகே வந்தான். அவளது கத்தி அசைவுகளை உற்றுப் பார்த்தவன், 'ஐஸ்வர்யா... இங்க இருக்குற கஸ்டமர்ஸ்க்கு டைமிங்

ரொம்ப முக்கியம். கை விரல் நகம் பட்டுடாம பாத்துக்கோ... ஏன்னா உன் இரத்தம் பட்டு இந்த சமையல் கெட்டுப் போறதை நான் விரும்பல,' என்று அசிங்கப்படுத்துவது போல் கூறினான்.

ஐஸ்வர்யா கத்தியை ஒரு நொடி நிறுத்தி, அஷ்வினின் கண்களை நேராகப் பார்த்தாள். 'என் சமையல்ல நேர்த்திய தவிர வேற எதுவும் கலக்காது சார். நீங்க உங்க வேலையைப் பார்க்கலாம்,' என்று பதிலடி கொடுத்தாள்.

அஷ்வினின் தாடை இறுகியது. ஊழியர்கள் முன்னிலையில் அவளது இந்தத் துணிச்சல் அவனுக்குள் கோபத்தை ஏற்றியது. 'பார்க்கலாம்... உன்னோட இந்த திமிர் எத்தனை நாளைக்குத் தாங்குதுனு பார்க்குறேன்,' என்று மனதில் நினைத்துக் கொண்டே நகர்ந்தான்.

மறுபுறம், மெடிக்கல் காலேஜ் வளாகம் பரபரப்பாக இருந்தது. ராகினி கையில் சில கோப்புகளுடன், தனது புதிய கல்லூரியின் அழகை ரசித்துக் கொண்டே நடந்து சென்று கொண்டிருந்தாள். அவளது நீண்ட நாள் கனவு நனவாகும் மகிழ்ச்சி அவளது முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

அப்போது, பின்னாடி இருந்து வேக மாக வந்த ஒரு சொகுசு பைக், அவளது மிக அருகில் வந்து சடன் பிரேக் போட்டு நின்றது. அந்த அதிர்ச்சியில் ராகினியின் கையில் இருந்த கோப்புகள் அனைத்தும் காற்றில் பறந்து தரையில் சிதறின.

'வாட் தி ஹேல்! பார்த்து வர மாட்டியா?' என்று கோபமாகக் கத்தினாள் ராகினி.

பைக்கில் இருந்து இறங்கியது வேறு யாருமல்ல, ரிஷாந்த் தான். அவன் தனது கூலிங் கிளாஸைக் கழற்றிவிட்டு, ராகினியை மேலிருந்து கீழ் வரை ஒரு அலட்சியப் பார்வையோடு பார்த்தான்.

'ஓ... புது அட்மிஷனா? நீ தான் பார்த்து நடக்கணும் பேபி. இது என்னோட ஏரியா. இங்க வந்து என்கிட்டயே சத்தம் போடுறியா?' என்று வம்புக்கு இழுத்தான் ரிஷாந்த்.

'ஏரியா? இது மெடிக்கல் காலேஜ்... உன்னோட லோக்கல் ஏரியா இல்லை. வண்டி ஓட்டத் தெரியலனா வீட்ல இருக்க வேண்டியதுதானே? என்னோட இம்பார்ட்டன்ட் ஃபைல்ஸ் எல்லாம் வீணா போச்சு!' என்று ராகினியும் சளைக்காமல் கத்தினாள்.

ரிஷாந்த் அவளது தைரியத்தைக் கண்டு லேசாக வியந்தாலும், தன் ஈகோவை விட்டுக்கொடுக்காமல், 'இந்த ரிஷாந்த்கிட்டயே இவ்வளவு பேசறியா? இந்த ஃபைல்ஸை விட இதோட மதிப்பு அதிகம். ஒழுங்கா சாரி கேட்டுட்டு போயிடு, இல்லைனா காலேஜ் லைஃப் உனக்கு நரகமாயிடும்,' என்று மிரட்டலாகக் கூறினான்.

'சாரி கேக்கணுமா? அதுக்கு வாய்ப்பே இல்லை மிஸ்டர் ரிஷாந்த். தப்பு உன் மேல தான்,' என்று கூறிவிட்டு, ராகினி தன் ஃபைல்களை வேகவேகமாக எடுத்துக் கொண்டு அவனைத் தாண்டிச் சென்றாள்.

ரிஷாந்த் அவளது போக்கையேப் பார்த்துக் கொண்டிருந்தான். 'சுவாரசிய மான பொண்ணு தான்... ஆனா என்கிட்டயே மோதியிருக்கக் கூடாது. உன்னை என்ன பண்றேன்னு பாரு,' என்று குறும்பாக சிரித்துக் கொண்டான்.

மதிய உணவு நேரம்...

'மெமரீஸ்' ரெஸ்டாரண்ட்டில் ஒரு முக்கிய வி.ஐ.பி கஸ்டமர் வந்திருந்தார். அவர் ஒரு புகழ்பெற்ற உணவு விமர்சகர் (Food Critic). அவர் ஆர்டர் செய்தது அஷ்வினின் Signature டிஷ் ஆன 'ராயல் சீஃபுட் பிளாட்டர்'.

துரதிர்ஷ்டவசமாக, அந்த நேரத்தில் அஷ்வின் ஒரு முக்கிய பிசினஸ் மீட்டிங்கில் இருந்தான்.

'செஃப் ஆனந்த்... எம்.டி சார் மீட்டிங்ல இருக்காரு. ஆனா அந்த கஸ்டமருக்கு இப்போவே டிஷ் வேணுமாம். என்ன பண்றது?' என்று பதற்றமடைந்தார் மேலாளர்.

ஆனந்த் யோசித்தான். 'எம்.டி சாரோட Signature டிஷ்ஷை நான் பண்ணா அதுல ஏதும் சுவை மாறினா என் வேலைக்கே ஆபத்தாயிடும்,' என்று பயந்தான்.

அப்போது ஐஸ்வர்யா முன்னே வந்தாள். 'சார்... அந்த டிஷ்ஷோட செய்முறை எனக்குத் தெரியும். நான் அதை தயார் செய்யவா?' என்றாள் தைரியமாக.

ஆனந்த் அவளைப் பார்த்து சதித்தன மாகச் சிரித்தான். 'இவளாகவே வந்து மாட்டிக்கிறாள். ஏதேனும் தப்பு நடந் தால் பழி முழுவதையும் இவள் மீது போட்டுவிடலாம்' என்று எண்ணி, 'சரி ஐஸ்வர்யா, நீயே பண்ணு. ஆனா ஏதும் தப்பு நடந்தா... நீ தான் பொறுப்பு,' என்றான்.

ஐஸ்வர்யா முழு கவனத்துடன் சமைக்கத் தொடங்கினாள். அஷ்வின் அவளுக்குக் கற்றுக் கொடுத்த நுணுக்கங்கள் ஒவ்வொன்றும் அவளது நினைவுக்கு வந்தன. மிக நேர்த்தியாக, அஷ்வினின் பாணியிலேயே அந்த உணவைத் தயார் செய்து, அழகாக அலங்கரித்து கஸ்டமருக்கு அனுப்பினாள்.

அடுத்த பத்து நிமிடங்களில், அந்த உணவு விமர்சகர் சமையலறைக்குள் நுழைந்தார். அங்கிருந்த அனைவரும் பயத்தில் உறைந்தனர்.

'இந்த டிஷ்ஷை செஞ்சது யாரு?' என்று கம்பீரமாகக் கேட்டார்.



ஆனந்த் உடனே ஐஸ்வர்யாவை முன்னிறுத்தி, 'இவதான் சார்... புதுசா சேர்ந்த அசிஸ்டென்ட் செஃப். ஏதும் தப்பு இருந்தா...' என்று இழுத்தான்.

ஆனால் அந்த விமர்சகர் புன்னகைத்து, 'அற்புதம்! அஷ்வினோட சமையல்ல இருக்குற அதே ருசி இதுலயும் இருக்கு. ஆனா இன்னைக்கு இந்த டிஷ்ல ஏதோ ஒரு விவரிக்க முடியாத அன்பும், நளினமும் கலந்திருந்தது. சுவை பிரமாதம்! வாழ்த்துகள் ஐஸ்வர்யா,' என்று பாராட்டி விட்டுச் சென்றார்.

சமையலறையே கைதட்டலால் நிறைந்தது. ஆனந்தின் முகம் கருகியது.



அதே நேரம், மீட்டிங் முடிந்து உள்ளே நுழைந்த அஷ்வின், இந்தத் தகவலைக் கேட்டு அதிர்ச்சியடைந்தான். அவன் ஐஸ்வர்யாவைத் தனியாகத் தன் அறைக்கு அழைத்தான்.

'என் அனுமதி இல்லாம என் Signature டிஷ்ஷை நீ எப்படி சமைக்கலாம் ஐஸ்வர்யா? உனக்கு எவ்வளவு தைரியம்?' என்று மேசையைத் தட்டிக் கத்தினான் அஷ்வின்.

'கஸ்டமர் முக்கியம்னு நீங்கதானே சார் சொல்லிக் கொடுத்தீங்க? ஹோட்டலோட பேரை காப்பாத்தத் தான் நான் சமைச்சேன்,' என்றாள் ஐஸ்வர்யா அமைதியாக.

அஷ்வின் அவளருகே நெருங்கி வந்து, அவனது மூச்சுக்காற்று அவளது முகத்தில் பட்டது.

'என் பேரை காப்பாத்த உனக்கு எந்த தகுதியும் இல்லை. நீ சமைச்ச சுவையில அந்த கஸ்டமர் மயங்கியிருக்கலாம்... ஆனா எனக்குத் தெரியும், இந்த அன்பான முகமூடிக்கு பின்னாடி நீ எவ்வளவு பெரிய துரோகத்தை ஒளிச்சு வச்சிருக்கன்னு!' என்று ஆக்ரோஷமாகக் கூறினான்.

அவளது கண்கள் கலங்கின, ஆனால் அதை மறைத்துக் கொண்டு, 'நான் எந்த துரோகமும் செய்யல அஷ்வின்...' என்று அவளது வாய் அறியாமல் அவனது பெயரை உச்சரித்தாள்.

அந்தப் பெயர் அவனது காதில் விழுந்ததும், அஷ்வின் ஒரு நொடி அப்படியே ஸ்தம்பித்து நின்றான். அவளது விழிகளில் தெரிந்த அந்த வலி, அவனுக்குள் ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

(நேசம் தொடரும்...)

# ஸெதகாவின் பலன்

ரஸ்னூா ரம்ஸான்
அக்குறணை, கண்டி, இலங்கை

பத்தாம் தரம் வகுப்பறையில் கணித ஆசிரியர் கரும்பலகையில் கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்தார். ஆனால், முதல் பெஞ்சில் அமர்ந்திருந்த அர்ஷத்தின் கவனம் அதில் இல்லை. அவன் கண்கள் புத்தகத்தில் இருந்தாலும், மனம் வீட்டில் இருக்கும் உம்மாவிடமும், நான்கு வயது தங்கை ஆயிஷாவிடமும் தான் இருந்தது.

அர்ஷத்துக்கு ஐந்து வயதிருக்கும் போதே அவன் தந்தை ரஹ்மான் மாரடைப்பால் இறந்துபோனார். அன்று முதல் அவன் தாய் பாத்திமா, தையல் வேலை செய்து, இரவும் பகலும் பாடுபட்டு அர்ஷத்தை வளர்த்தார். 'நம்ம அர்ஷத் பெரிய படிப்பு படிச்சு, இந்த வறுமையை மாத்தணும்' என்பதுதான் பாத்திமாவின் ஒற்றைக் கனவாக இருந்தது. அர்ஷத்தும் வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்து உம்மாவின் கனவுக்கு உயிர் கொடுத்தான்.

ஆனால், விதி வேறு கணக்கு போட்டது. கடந்த ஒரு மாதமாக பாத்திமா கடுமையான சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார்.

அனைத்தும் தலைகீழானது. பத்தாம் வகுப்புப் படிக்கும் அந்தச் சிறுவனின் தோள்களில் திடீரென ஒரு குடும்பத்தின் பாரம் விழுந்தது. காலையில் பள்ளி, மாலை நான்கு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை ஒரு மளிகைக் கடையில் பகுதிநேர (Part-time) வேலை. இடையில் தங்கை ஆயிஷாவிற்கு உணவு ஊட்டுவது, உம்மாவிற்கு மருந்து கொடுப்பது என அர்ஷத்தின் நாட்கள் ரத்தமும் சதையுமாக நகர்ந்தன.

'யா அல்லாஹ்... என் உம்மாவை குணமாக்கிரு... எங்களால மருத்துவச் செலவுக்குப் பணம் கட்ட முடியலையே...' என்று ஒவ்வொரு தொழுகையிலும் அர்ஷத் கண்ணீர் வடித்தான். வீட்டின் வாடகை பாக்கி வேறு மூன்று மாதங்களாகச் சேர்ந்துவிட்டது.

அன்று வெள்ளிக்கிழமை. மாலை கடையில் வேலையை முடித்துவிட்டு, உம்மாவிற்கு மருந்தும், தங்கைக்கு பிஸ்கட்டும் வாங்கிக்கொண்டு அர்ஷத் வீட்டுப் படிக்கட்டுகளில் ஏறினான்.

அங்கே, அவர்கள் வீட்டு வாசலில் ஒரு பெரிய கூரியர் பார்சலுடன் ஒருவர் நின்றுகொண்டிருந்தார்.

'தம்பி, இது ரஹ்மான் என்பவரோட வீடா? இந்த முகவரிக்கு ஒரு பார்சல் வந்திருக்கு,' என்றார் அந்த நபர்.

'ஆமா, அது எங்க வாப்பா... ஆனா, அவங்க இறந்து பத்து வருஷம் ஆகுதே...' என்று அர்ஷத் திகைப்புடன் கூறினான்.

'எனக்குத் தெரியாது தம்பி. அனுப்பியவர் எல்லா விவரமும் சரியா எழுதி, 'இப்போதைய குடும்பத்தினரிடம் சேர்க்கவும்'னு சொல்லியிருக்கார். இந்தாங்க, கையெழுத்து போடுங்க,' என்று பார்சலை ஒப்படைத்துவிட்டுச் சென்றார்.

அர்ஷத் குழப்பத்துடன் வீட்டிற்குள் சென்றான். படுக்கையில் இருந்த உம்மா பாத்திமா பலவீனமாகப் பார்சலைப் பார்த்தார். அர்ஷத் அந்தப் பார்சலைப்

பிரித்தான். உள்ளே ஒரு சிறிய டைரியும், அதன் கீழே ஒரு தடிமனான கவரும் இருந்தன. அந்தக் கவரைத் திறந்து பார்த்த அர்ஷத்திற்கு தூக்கி வாரிப்போட்டது. அதில் இரண்டு லட்சம் ரூபாய் பணம் இருந்தது!

'உம்மா... பணம்... நிறைய பணம் இருக்கு உம்மா' என்று அர்ஷத் கத்தினான்.

'யாருப்பா அனுப்பினது? உன் வாப் பாக்கு ஏது இவ்வளவு பணம்?' என்று பாத்திமா ஆச்சரியத்திலும் பயத்திலும் கேட்டார்.

அர்ஷத் அந்த டைரியை எடுத்து, அதன் முதல் பக்கத்தைத் திருப்பினான். அதில் ஒரு கடிதம் எழுதப்பட்டிருந்தது. அதை அவன் சத்தமாக வாசித்தான்:

மதிப்பிற்குரிய ரஹ்மான் அவர்களின் குடும்பத்தினருக்கு,

இதை எழுதும்போது என் கண்கள் கலங்குகின்றன. பத்து வருடங்களுக்கு முன்பு, நான் என் மகளின் இதய அறுவை சிகிச்சைக்காகப் பணமில்லாமல், மருத்துவ மனை வாசலில் கையேந்தி அழுது கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த ரஹ்மான் பாய், என்னை யார் என்றே தெரியாத நிலையிலும், தன்னிடம் இருந்த, தன் சொந்தத் தொழிலுக்காகச் சேர்த்து வைத்திருந்த ஒரு தொகையை அப்படியே என்னிடம் கொடுத்தார்.

'இதை கடனா நினைக்காதீங்க... ரஹ்மத் (இறைவனின் கருணை) என்று நினைத்து வாங்குங்கள்' என்று சொல்லி விட்டுச் சென்றார். என் மகள் இன்று உயிரோடு இருக்க அவர்தான் காரணம்.

அதன்பின் நான் வெளிநாடு சென்று, இன்று நல்ல நிலைக்கு வந்துவிட்டேன். ரஹ்மான் பாயைத் தேடி நான் வந்த போதுதான், அவர் வபாத்தாகிவிட்ட செய்தியும், அவரது குடும்பம் வறுமையில் இருக்கும் விவரமும் தெரிந்தது. அன்று அவர் எனக்குச் செய்த உதவிக்கு, நான் செய்யும் மிகச்சிறிய நன்றிக்கடன் இது.

அர்ஷத்... நீ நன்றாகப் படிக்க வேண்டும். உன் உம்மாவை நன்றாகப் பார்த்துக்கொள். இன்ஷா அல்லாஹ், உனது படிப்புச் செலவு முழுவதையும் இனி நானே ஏற்றுக்கொள்கிறேன். உங்கள் தந்தை விதைத்த நன்மைகளின் பலன் இது.

- இப்படிக்கு, நன்றியுடன் அஹ்மத்.

வாசித்து முடித்தபோது அர்ஷத்தின் கண்கள் அருவியாய்க் கொட்டின. பாத்திமா கைகளை ஏந்தி, 'யா அல்லாஹ்... என் கணவர் செய்த தர்மம் வீண் போகவில்லை. என் பிள்ளைகளை நீ கைவிடவில்லை,' என்று கதறி அழுதார். சின்னஞ்சிறு தங்கை ஆயிஷா ஒன்றும் புரியாமல் நாநாவின் கண்ணீரைத் தன பிஞ்சு விரல்களால் துடைத்தாள்.

அர்ஷத் அந்த டைரியை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். அவனுக்குத் தெரிந்துவிட்டது - தன் தந்தை விட்டுச் சென்ற ஆகச்சிறந்த சொத்து, அவர் செய்த 'ஸதகா' தான் என்று.

நாளை உம்மாவை பெரிய மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற நிம்மதியோடும், 'நன்றாகப் படித்து பெரிய ஆளாக வேண்டும்' என்ற புதிய நம்பிக்கையோடும், அர்ஷத் அன்று இரவு நிம்மதியாகக் கண் அயர்ந்தான்.

(கதை முற்றும்)

# கற்பகத்தின் கல்யாணம்





16

அன்புச்செல்வி சுப்புராஜு
பட்டாபிராம், சென்னை - 600072

ஆஸ்பத்திரியில் அப்பாவைப் பார்த்ததும் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள் கற்பகம்.

'அப்பா உடம்பு நல்லாதா இருக்கு பாப்பா, எதுக்கு அழுகுற... இங்கே பாரு... தெம்பா எழுந்து உட்கார்ந்து இருக்கேன்ல, அழுகாத தாயி... ' தழுதழுத்த அப்பாவின் குரலைக் கேட்டதும் அழுகையை அடக்கிக் கொண்டவள் அவரின் கையைப் பிடித்தப்படி பக்கத்தில் உட்கார்ந்தாள்.

'ஒரு முக்கியமான விசயங்க...' என்று ஆரம்பித்து முதல் நாள் நிகழ்வுகளை அம்மா சொல்லவும் தீவிர யோசனைக்குப் பிறகு கற்பகத்தைப் பார்த்து 'நீ என்ன சொல்ற பாப்பா' என்று அப்பா கேட்க 'இப்போதைக்கு கல்யாணம் பற்றிய யோசனையே இல்லைங்கப்பா, நம்ம தையல் ஸ்கூல்ல இன்னும் பெரிசா நடத்தணும்ப்பா. அதான் என்னோட ஆசை' பதிலளித்தால் கற்பகம்.

'நீ சொல்றது சரிதான் பாப்பா, ஆனா நீ அப்பாவோட நெலமையையும் பாக்கணும்ல தாயி, டாக்டர் இன்னும் ரெண்டு மாசங்கூட தாங்காதுங்கிறாரு. எனக்கும் கண்ணாசை பாக்கணும்னு ஆசை இருக்காதா?' அப்பா சொல்லவும், நெஞ்சம் அதிர சத்தமாக அழத் தொடங்கினாள் கற்பகம்.

'சும்மா சும்மா அழாத பாப்பா, ஒன்னைய அப்படியா வளர்த்துருக்கோம்? எம்புள்ள ஆம்பளைக்கு ஆம்பளையா, பொம்பளைக்கு பொம்பளைய தைரியமா நிக்குமுனு நெனச்சேன், நமக்கு பொறவு தம்பி, தங்கச்சிக்கு உறு தொணையா இருக்கும், வீட்டைப் பார்த்துப்பன்னு நெனைச்சேன்... இப்படி தொட்டாச்சுருங்கியா அழுகுறேயே... என்ன செய்வேன்?' கலங்கிய அப்பாவின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

'நாங் கல்யாணம் பண்ணிக்கிட்டா வீட்டை எப்படிப்பா பாத்துக்க முடியும். அங்கே என்ன சொல்லுவாங்களோ? இன்னும் ரெண்டு, மூனு வருசம் போகட்டும் ப்பா.பொறவு யோசிக்கலாம்' கற்பகம் பேசப்பேச குலுங்கிச் சிரிக்கத் தொடங்கி விட்டார் அப்பா.

'என்னாச்சுப்பா...'

'ஏம்பாப்பா, மாப்பிள்ளைய பிடிச்சிருக் காக்கும்... '

'நா எப்பப்பா அப்படி சொன்னேன்..'

'அதாஉம்முகமும், பேச்சும் சொல்லுதே...'

'வேணான்னுதான சொன்னேன் ப்பா'

'ஆமாந்தாயி... ஆனா நாம பேசற வார்த்தைகளே நம்ம உள்மன ஆசைகளைக் காட்டி கொடுத்துடும். வேணாம்னு

சொல்லும் போதே - குடும்பத்தை பார்த்துக்க விடுவாங்களோ என்னமோனு யோசிக்கிறல்ல.. அதா நெசம்'

அப்பா சொல்லவும் முகம் சிவந்து போனது கற்பகத்துக்கு. 'இல்லப்பா... நீங்க சொன்னதுக்கு தான் பதில் சொன்னேன்'

'அக்காவ்... அப்பா உன் மனசைக் கண்டுபிடிச்சிட்டாரு. நீ சமாளிக்காத' கிண்டலடித்த தம்பியை முறைத்தாள்.

'அவங்க ரொம்ப நல்ல குடும்பம் தாயி, கலங்காத... பயப்படாத... நா இருக்கும் போதே ஒத்த மகளுக்காவது கல்யாணம் பண்ணிட்டேன்ங்கிற நிம்மதிய எனக்குக் கொடு' கையேந்திய அப்பாவைப் பார்த்து திகைத்து நின்றாள் கற்பகம்.

'ஏண்டி அறிவுகெட்டவுளே... நீயெல்லாம் மனுசியா? ஒரு மனுசன் கையேந்தி கெஞ்சுறாரு, மரமாட்டம் நிக்குறவ... சரிங்கப்பான்னு ஒத்த வார்த்தை சொன்னா என்ன? வாயிலிருந்து முத்தா உதிர்ந்திடும். அவகிட்ட என்னாங்க பேச்சு... மாப்பிள்ளை வீட்டுக்காரவுககிட்ட சம்மதம் சொல்லிடுறேன். அடுத்தடுத்து சீக்கிரமா கல்யாண வேலையைப் பார்ப்போம். நீங்க நிச்சயமா பாப்பா கலியாணத்தைப் பார்ப்பீங்க'

'உருவி உருவி வளர்த்தாலும், களக்கம்பு கொடுத்து வளர்த்தாலும் காடை காட்டுலதான்னு புரிஞ்சுக்க பாப்பா. புடுங்கி நட்டாத்தான் நெல்லு நாத்து தழைக்கும். பொட்டையா பொறந்தா பொறந்த வீடு பொறுத்துப் போற வரைக்குந்தா... அதென்ன நீ இல்லன்னா வீடு தள்ளாடிடுமா என்ன? எனக்கு கை, காலு இல்லையா... நா வச்சுக் கொடுத்த தையல் ஸ்கூல்தானே அது? நா பார்த்துக்க மாட்டேனா.. வீடு கவனிக்க மாட்டேனா... நீ இருந்தாலும், இல்லைன்னாலும் வீடு வீடாத்தான் இருக்கும் பாப்பா. உங்க உங்களுக்கு அனுபவம் வரட்டுமுனுதா பொறுப்பக் கொடுக்குறோமே தவிர, வேல செய்ய ஏலாம இல்லை'

'உனக்கு மாப்பிள்ளைய பிடிச்சிருக்கு தங்கம், எங்களுக்காக யோசிக்கிற. எவ்வளவு நாளைக்கு தள்ளிப் போட முடியும் சொல்லு, இன்னைக்கு ஒன்னப் பாராட்டுற இதே ஊரு நாளைக்கு வேல பாக்குற திமிர்ல ஆம்பளையாட்டம் அலையுறான்னும்... கட்டிக் கொடுக்க வக்கில்லாம பொம்பளப் புள்ளைய வீட்டோட வச்சுக்கிட்டு அவ காசையும் சேர்த்து சாப்பிட்டுக்கிட்டு இருக்கானு பேசாதா... ' பேசிக்கொண்டே போன அம்மாவை இடைமறித்தாள் கற்பகம்.

'ஊரு ஆயிரஞ் சொல்லும் அம்மா, அதுக்கெல்லாம் நாம தலையாட்ட முடியுமா? நமக்கு எது நல்லது, எது சரின்னு பாக்கணும்ல... அப்பா சரியாகி வீட்டுக்கு வரட்டும். தம்பிக படிப்பு முடியட்டும். பொறவு எங்கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாம்'

'இந்தாரு பாப்பா, நீ பேசினதையே பேசாதே... நாளைக்கு நா மாப்பிள்ளை வீட்டுக்கு சம்மதம் சொல்லி தகவல் அனுப்ப போறேன். அம்புட்டுதே... நீ வாய்மூடி நில்லு. அதுபோதும்'

'ஏலேய் ஏன் வாயப் பார்த்துட்டே நிக்குறவேன். இந்தா போயி இந்த மருந்து, மாத்திரை வாங்கிட்டு வா, இன்னைக்கு அப்பா கூடவே தங்கிக்க. நாளைக்கு நா மாப்பிள்ளை வீட்டுல என்ன சொல்றாங்க, ஏது சொல்றாகன்னு கேட்டுட்டு வரணும். நெறையா வேல கெடக்கு' தம்பியை விரட்டிய அம்மா, அப்பாவின் கிட்டே சென்று' உங்களுக்கு ஒன்னும் ஆவாதுங்க. ஆனாலும் ஒங்க நிம்மதிக்காக இந்த கல்யாணத்தை பேசி முடிச்சு சீக்கிரமா வைக்க சொல்றேன். சந்தோஷமா இருங்க, பாப்பாவுக்கு வாழ்த்து சொல்லுங்க' என்று ஆறுதலாகப் பேசவும் அப்பாவின் முகம் மலர்ந்தது.

மாத்திரை வாங்கிய தம்பி வந்ததும் அம்மாவும், கற்பகமும் ஊருக்குத் திரும்பினார்கள்.

(தொடரும்...)




**விலங்குகளுக்கு உணவு கொடுத்தல்**

மறுநாள் காலை, அர்ஜுன் ஒரு விசித்திரமான சத்தத்தைக் கேட்டு எழுந்தான்.

“மா...” அது மீண்டும் மென்மையாகவும், பழக்கமில்லாததாகவும் ஒலித்தது. அவன் மெதுவாகக் கண்களைத் திறந்து கவனமாகக் கேட்டான். அந்தச் சத்தம் மீண்டும் கேட்டது, “மா... மா...” குழப்பத்துடன், அவன் எழுந்து உட்கார்ந்து அது என்னவென்று யோசித்தான்.

அவன் இன்னும் தூக்கக் கலக்கத்துடன் வெளியே நடந்தான். கிராமத்தின் காலைப் பொழுது அமைதியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருந்தது; எங்கும் பறவைகள் கீச்சிட்டுக் கொண்டிருந்தன. மென்மையான சூரிய ஒளி முற்றத்தில் மெதுவாகப் பரவியது. காற்று குளிர்ச்சியாகவும், நகரத்திலிருந்து மாறுபட்டும் இருந்தது. எல்லாம் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருந்தது.

பாட்டி ஏற்கெனவே மாட்டுக் கொட்டகைக்கு அருகில் விழித்திருந்தார். அவர் கையில் புதிய பச்சைப்புல் நிறைந்த ஒரு கூடையை வைத்திருந்தார். “காலை வணக்கம், அர்ஜுன்,” என்று அவர் புன்னகையுடன் சொன்னார். அர்ஜுன் தன் கண்களைத் தேய்த்துக்கொண்டு, “பாட்டி... அது என்ன சத்தம்?” என்று கேட்டான். அவர்கள் மெதுவாகப் பசுவை நோக்கிச் சென்றனர்.

“வா, அதற்குத் தீனி போடுவோம்,” என்று அவர் அன்புடன் சொன்னாளர். அர்ஜுன்உடனடியாகப்பின்வாங்கினான். “இல்லை, பாட்டி... எனக்குப் பயமாக இருக்கிறது,” என்றான். பாட்டி அருகில் நடந்து சென்று, அவனுக்கு மென்மையாக ஆறுதல் கூறினார். “கவலைப்படாதே, அவள் மிகவும் அன்பானவள்.”அவர் அவனிடம் ஒரு கைப்பிடி புல்லைக் காட்டினார். “இதை மெதுவாகக் கொடு,” என்றாளர். அர்ஜுனன் ஒரு கணம் தயங்கினான். பிறகு அவன் மெதுவாக முன்னே நகர்ந்தான். அவன் பசுவை நெருங்கியபோது அவன் கைகள் லேசாக நடுங்கின. லட்சுமி அசையாமல் அமைதியாக நின்றாள். அவள் பயமின்றி

# கோடைக்காலமும் பாட்டி வீடும்

## விடுமுறை நாட்களிலிருந்து சிறிய பாடங்கள்

**அத்தியாயம் 2**

அர்ஜுனனைப் பார்த்தாள். "கொடு," என்று பாட்டி ஊக்கப்படுத்தினார். அர்ஜுனன் தன் கையை நீட்டி, புல்லைக் கவனமாகக் கீழே போட்டான். பசு அதை மெதுவாகச் சாப்பிட்டது. அர்ஜுனன் ஆச்சரியத்துடன் கண் சிமிட்டினான். "அது ஒன்றும் செய்யவில்லை..." என்றான். பாட்டி மென்மையாகப் புன்னகைத்தார். "அதற்குப் பசிதான்," என்று பதிலளித்தார். அர்ஜுனன் மெதுவாக இயல்பாக உணரத் தொடங்கினான். லட்சுமிக்கு உணவளித்த பிறகு, பாட்டி ஒரு சிறிய கிண்ணத்தில் தண்ணீர் கொண்டு வந்தார் . "இப்போது நாம் பறவைகளுக்குத் தண்ணீர் கொடுப்போம்," என்றார். அவர்கள் அதைத் தோட்டத்தில் ஒரு மரத்தின் அடியில் வைத்தனர். அவர்களைச் சுற்றி எல்லாம் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு, ஒரு சிறிய சிட்டுக்குருவி கிண்ணத்தின் அருகே வந்தது. அது குடிப்பதற்கு முன் கவனமாகச் சுற்றிலும் பார்த்தது. அர்ஜுனன் அசையாமல் அமைதியாக அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். விரைவில் மற்றொரு பறவை அதனுடன் சேர்ந்தது. மேலும் பல பறவைகள் ஒவ்வொன்றாக வந்தன. விரைவில் பல பறவைகள் ஒன்றாக மகிழ்ச்சியாகத் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தன.அர்ஜுனன் அவற்றைப் பார்த்தவாறே மென்மையாகப் புன்னகைத்தான். "அவை பயப்படவில்லை," என்றான். "இது ஒரு பாதுகாப்பான இடம் என்று அவற்றுக்குத் தெரியும்," என்று பாட்டி பதிலளித்தார்.

பின்னர், அர்ஜுனன் தானாகவே சில தானியங்களைக் கொண்டு வந்தான். அவற்றை மெதுவாகத் தரையில் தூவினான். பறவைகள் மீண்டும் வேகமாக வந்தன.

இந்த முறை, அர்ஜுனன் அருகில் அமர்ந்து அவற்றை மகிழ்ச்சியுடன் பார்த்தான். அவனுக்கு இனி பயம் இல்லை.

அன்று மாலை, அர்ஜுனன் மீண்டும் லட்சுமியின் அருகில் சென்றான். இந்த முறை தயக்கமின்றி அவளுக்கு உணவளித்தான். "இதோ," என்று மென்மையாகக் கூறினான்.

பசு அமைதியாக உண்டது. பாட்டி பெருமிதப் புன்னகையுடன் அவனைப் பார்த்தார்.

"எல்லா உயிரினங்களுக்கும் கவனிப்பு தேவை," என்று பாட்டி மென்மையாகக் கூறினார். அர்ஜுனன் தலையசைத்து, "அவை நம்மைப் போன்றவையே," என்று பதிலளித்தான். "ஆம்," என்றார் பாட்டி. "அவை பசியையும், தாகத்தையும், மகிழ்ச்சியையும் கூட உணர்கின்றன." அர்ஜுனன் தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் அமைதியாகப் பார்த்தான்.

அன்று அவனுக்குள் ஏதோ ஒன்று மாறியிருந்தது. அவனுக்கு இனி பயம் இல்லை. அவன் அமைதியாகவும் அன்பாகவும் உணர்ந்தான். அந்தக் கிராமம் அவனுக்கு அந்நியமாகத் தோன்றவில்லை. அது இதமாகவும் உயிரோட்டமாகவும் இருந்தது.

நீதி: அனைத்து உயிரினங்களிடமும் அன்பாக இருங்கள்.

தொடரும்....




**பர்வதவர்மன். பி**
பத்தாம் வகுப்பு , ஓசூர்

# ஐஸ்கிரீம் பெரிதா? காப்பி பெரிதா?

## ஓவியங்களும் கதையும் – சு.பிரவந்திகா

ஒரு அழகான சித்திரப் புத்தகத்தில், பல குட்டி குட்டி உணவுகள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள், அந்தப் புத்தகத்தின் 'சுவை உலகம்' பக்கத்தில் ஒரு பெரிய வாக்குவாதம் தொடங்கியது.




முதலில், காப்பி இனத்தைச் சேர்ந்த குட்டி காப்பிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்தன. ஒரு பெரிய தலை காப்பி, கூடவே மகிழ்ச்சியாகச் சிரிக்கும் சிறிய காப்பிகள், அடியில் ஒரு சூடான பெரிய கோப்பை என ஒரு கூட்டமாக கூடி அமர்ந்தார்கள். மேலே ஒரு பதாகையில் 'உணவுப் பிரியர்கள்' பெருமையாக எழுதிக்கொண்டார்கள்.

'பாருங்கள்! நாங்கள்தான் உலகத்திலேயே சிறந்தவர்கள். நாங்கள் சூடாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்போம். காலையில் எங்களைக் குடித்தால் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்,' என்று பெரியதலை காப்பி பெருமையாகச் சொன்னது.

இதைக் கேட்டு அங்கே இருந்த ஐஸ்கிரீம் கூட்டத்திற்கு கோபம் வந்தது. அவர்கள் தங்கள் கூட்டத்தைக் கூட்டினார்கள். கோன் ஐஸ்கிரீம், குச்சி ஐஸ்கிரீம், வெண்ணிலா, சாக்லேட் எனப் பல வண்ணமயமான ஐஸ்கிரீம்கள்



- வேகப் பாதை,
  ஒரு உயிரின் மௌனம்
  நீளும் இரவு..

- நடுவே வந்தாய்,
  நிறுத்த முடியவில்லை
  நெஞ்சில் நிழலாய்.

**சு.விமலா**
பட்டாபிராம், சென்னை - 600072




இருந்தன. அவர்களும் ‘உணவுப் பிரியர்கள்‘ என்று தங்கள் பக்கம் எழுதினார்கள்.

‘என்ன? நீங்களா சிறந்தவர்கள்? கோடையில் எங்களைக் கண்டால் எல்லோரும் ஓடி வருவார்கள். நாங்கள் குளிர்ச்சியாகவும், இனிப்பாகவும் இருப்போம். குழந்தைகளுக்கோ எங்களை மிகவும் பிடிக்கும். நாங்கள்தான் உண்மையான ’உணவுப் பிரியர்கள், எங்களைத்தான் அனைவரும் விரும்பி உண்பார்கள்,‘ என்று ஐஸ்கிரீம் கோன் பதில் சொன்னது.

‘ஆமாம், நாங்கள்தான்! நாங்கள்தான்!‘ என்று குச்சி ஐஸ்கிரீமும், மற்ற ஐஸ்க்ரீம்களும் கூடச் சேர்ந்துகொண்டன.

இந்த வாக்குவாதம் அதிகமாகிக் கொண்டே போனது. ‘நாங்கள்தான் பெரிசு!‘, ‘இல்லை, நாங்கள்தான் பெரிசு!‘ என்று கத்தினார்கள்.

அப்போது, அந்தப் புத்தகத்தில் இருந்த ’சமாதான தேவதை’ ஒரு சூப்பர் யோசனையுடன் வந்தது. அதன் கையில் இருந்த கோலில் ’நேர்மறைச் சிந்தனை’ என்று எழுதப்பட்டிருந்தது.

சமாதான தேவதை, ஐஸ்கிரீம் கூட்டத்தில் இருந்து ஒரு அழகான சாக்லேட் பார் ஐஸ்கிரீமை அழைத்து வந்தது. காப்பி கூட்டத்தில் இருந்து ஒரு சூடான காப்பி கோப்பையை அழைத்து வந்தது.

இரண்டையும் சேர்த்து ஒரு பெரிய, சுவையான ‘ஆப்காட்டோ‘ (Affogato) செய்தது. (சூடான காப்பியில் குளிர்ச்சியான ஐஸ்கிரீம் சேர்ப்பது)

‘இப்போது இதைச் சாப்பிட்டுப் பாருங்கள்!‘ என்று தேவதை சொல்ல, ஐஸ்கிரீமும், காப்பியும் ஒன்றாகச் சேர்ந்து அதைப் பார்த்தன. அதன் சுவை அற்புதமாக இருந்தது!

‘ஆஹா! இது எவ்வளவு சுவையாக இருக்கிறது! சூடான காப்பியும்,






குளிர்ச்சியான ஐஸ்கிரீமும் ஒன்றாகச் சேர்ந்தால் மிகவும் சுவையாகவும், அழகாகவும் இருக்கிறோம்!‘ என்று இரண்டும் மகிழ்ச்சியாகச் சொல்லின.

சமாதான தேவதை சிரித்துக் கொண்டே, ‘யாரு பெரியவர்ன்னு சண்டை போடாதீங்க. நீங்க ரெண்டு பேரும் தனித்தனியாவும் நல்லா இருக் கீங்க, ஒன்றாகச் சேரும்போதும் இன்னும் நல்லா இருக்கீங்க. அதுதான் முக்கியம்,‘ என்று சொன்னது.

ஐஸ்கிரீமும் காப்பியும் தங்கள் தவறைப் புரிந்து கொண்டன. ஒற்றுமை யாகச் சேர்ந்து இருந்தால், இன்னும் சிறப்பான விசயங்களைச் செய்யலாம் என்று உணர்ந்து கொண்டன.

அப்புறம் என்ன? எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து, சிரித்துக் கொண்டே ஆட்டமும், பாட்டமுமாக கொண்டாடினார்கள்.


## சு.பிரவந்திகா

எட்டாம் வகுப்பு
பட்டாபிராம், சென்னை - 600072






**ஜீ.தேஜேஷ்**



**ஜீ.நறுமுகை**



# கலங்காதே விழியே

கலங்காதிரு விழியே..
கலங்குவதால் தென் புடப்
போவதில்லை புது வழியே...!


காலம் கொடுக்கும் பரிசு
ஏதோ ஒரு வழியில் கண்ணீர்

கலங்கி நின்றால் நம்
வாழ்வோ நீரோடு கரைந்து
மடியும் உப்புக் கல்லாகுமே...!

விரல் கொண்டு துடைக்காதே
உன் விழி நீரை
துணிவினைக் கொண்டு
துடைத்தெறி பெண்ணே.....!

– ஆர் எஸ் கலா





# வெண்பாப் போட்டி (பயணம்) 55

போட்டியின் காலம் ஜீன் 01 முதல் 12 வரை 2026

கோடை விடுமுறை

கூட்டைக் கலைத்திடும் கோடைக் கொடுமையின்
பூட்டை  உடைத்துப் புறப்பட்டேன்! - கூட்டை
மறக்கவைக்கும் ஊட்டி மலைத்தொடரை  நாடிச்
சிறகடித்தேன்  உள்ளம் சிலிர்த்து !

பாவலர்  கோவதன், மலேசியா

.

கடல்தாண்டிச் சென்றேன் குவைத்நாடும் கண்டேன்
தடங்கலும் வந்திட தங்கினேன் -  திடமும்
கலைந்தது போருலகம் கண்டதும் நெஞ்சம்
குலைத்த விடுமுறை கேடு

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

கோடை விடுமுறைக் கொண்டாட்டம் கூடிவரும்
ஆடை குறைந்திடும் ஐரோப்பா - மேடையில்
இத்தாலி நாட்டில் இனிதான சுற்றுலா
வித்தைகள் யாவும் வியப்பு

ரூபா அன்ரன்,  சுவிற்சர்லாந்து

.

அலைபேசி தன்னில் அருங்கவிதை யாத்து
மலையாய்க் குவித்து மகிழ்ந்தேன் - கொலைசெய்
கொடுங்கோடைக் காலத்தில் கோலமிகு வீட்டில்
குடும்பத்தின் பேரன்பைக் கொண்டு!

கெங்கை பாலதா

.

வெப்பம் மிகுந்த விடுமுறை நாட்களில்
இப்புவி தோற்றிய அண்ணலைச் - செப்பியும்
போற்றிப் புகழ்ந்துமே போக்கினேன் திங்களின்
ஆற்றலை எண்ணி வியப்பு.

ப. முருகன் யோகீஸ்வரர்

.

கோடை விடுமுறைதான் கொண்டாட்ட மேதுமில்லை
காடையர் யுத்தத்தைக் கட்டவிழ்த்தார் - பாடையிலே
அப்பாவி மக்களங்கே அன்றாடம் போகையிலே
எப்படியெங் கேநாம்போ வோம் ? .

இரா. சம்பந்தன், யேர்மனி

.

அன்பு மனைவியொடும் ஆசை குழந்தையொடும்
இன்பஉலா சென்றோம் இனிமையாய் - நன்றாக
ஊட்டியைப் பார்த்தே உளம்மகிழ்ந்தோம் நாளிரண்டும்
வீட்டை மறந்தே வியந்து!

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்

.

வெண்பா பயில்வதென வேட்கையுற்று நின்றேன்யான்
எண்ணிடும் நூல்பலவும் ஆய்ந்திங்கு! - கண்ணுற்றேன்
குன்றமென பாவகைகள் கற்றறிந்து நானுமிங்கே
குன்றிமணி பாவடித்தேன் காண்.

செல்வம் பெரியசாமி, நாமக்கல்

.

கோடை விடுமுறையில் கூடி உறவினர்கள்
மூடை முடிச்சுடன் மூணாறு - வீடை
மறந்து வெளியில் மகிழ்வுலா சென்றோம்
பறந்து வீடடைந்தோம் பார்.

செல்வம் பெரியசாமி

.

மற்றவ ரெல்லாம் மகிழ்வாய்ப் புறப்பட்டுச்
சுற்றுலா செல்வர் சுகமாக - சுற்றாமல்
கொண்டாடி இன்புற்றேன் கோடையை ஓசூரில்
தண்மையாம் வானிலையால் தான்.

ஓசூர் மணிமேகலை

.

கோடை விடுமுறைக்குக் குற்றாலம் போகவே
ஆடைகளைத் தேர்ந்தெடுத்து ஆர்வமுடன் - மூடையிட
இல்லாள் வழிமறித்து எங்கே எனவினவக்
கல்லாகிப் போனேனே காண்.

மலர்மைந்தன்...

.

விடுமுறை விட்டதும் வீடுவந்த பேத்தி
இடும்பணி ஏற்றேன் எலிபோல் - அடுப்படியில்
தேங்காய் கடலை திருடியும் தோட்டத்தில்
மாங்காய் பறித்தும் மகிழ்ந்து.



அ. சி. தியாகராசன், காரைக்குடி.

.

விட்டாலும் விட்டார் விடுமுறை நாட்களும்
தட்டிலே சாப்பாடு தட்டாது - மட்டில்லா
சாப்பிட்டுப் போனேன் சலிக்காது நூலகம்
பாப்பாவைக் கூப்பிட்டேன் பார்.

கதிரேசன் குருசாமி

.

கோடையின் வெப்பம் குறையாமல் ஏறிடவே
வாடையாய்க் காற்றடிக்கும் வாஞ்சையாய்ச்- சூடையும்
ஓட்டும் கொடைக்கானல் ஓடி உலாசென்றோம்
வாட்டும் குளிருக்கு வா.

பாவலர்மணி வா.சண்முகம்

.

வேம்பொடு புங்கைநிழல் வேனிற் கிதமாகத்
தாம்பாடும் ஊஞ்சலிலே தானாடி - ஆம்பலாடும்
வண்டெனவே சொந்தவூர் வாழ்வெனக்கு வாய்த்தகோடை
கண்மலர்ந்தேன் சொர்க்கம் கடந்து.

வள்ளி முத்து

.

மூணாரில் கட்டிய மாடத்தில் ஏறிநின்று
காணாதக் காட்சியைக் கண்டு - தூணான
நாணாத ஆசைகளை நித்தம் நிறைவேற்றிப்
பூணாத வெயிலும் அழகு

கவிஞர் கவிநிலா மோகன், தஞ்சாவூர்.

.

நீண்டநாளாய் நானும் நினைத்திருந்த ஆசையது
வேண்டுமருள் தந்தருளும் வேல்முருகன் - ஆண்டுவரும்
சுந்தர நாடாம் சுவாமி மலைச்சென்றேன்
கந்தன் திருமுகம் கண்டு.

பெ. கோமதிராஜ்குமார், திருத்துறைப்பூண்டி.

.

பீடையில்லாக் குற்றாலப் பேரருவி கொட்டுகையில்
கோடை வெயிலில் குளித்தோமே - ஆடைகட்டி
மேடையேறி ஆடுகின்ற மெல்லிய பூங்காற்றின்
வாடையே என்றும் வனப்பு×

கவிஞர் வீக பொன்னையா, புதுக்கோட்டை

.

பார்த்தேன் பனிமூடும் பர்வதங்கள் காஸ்மீரில்
ஆர்த்தேன் தணியாத ஆசையில் கோர்த்திட
வார்த்தேன் வகையாக வண்ணப் படவரிசை
சேர்த்ததென் கைப்பேசும்  சீர்.

குயில்.மு.இரசியா பேகம். ரசியா கஸ்ஸாயி

.

பார்ப்ப தனைத்தும் பனிப்படலம் போர்த்துமோ?
வேர்க்குமிக் கோடையில் விந்தையோ?  -  ஓர்வில்
புரைவளர்ச்சி கண்ணில் புகையெனத் தோன்றக்
கரைந்ததத் திங்கள் கரைத்து!

ஆனந்த் சுந்தரராமன்

.

ஏத்தித் தொழுதிடும் ஏற்றமது தந்திடும்
பேத்தி விளையாட்டு பெற்றிடும் - மாத்தியே
போற்றி விளையாடும் பொன்னின் சதுரங்கம்
மாற்றாக ஆனதே பார்.

சோ. சுந்தரேசுவரி

.

ஊட்டிவரைச் சென்றேனென் உற்றநற் பேர்த்தியுடன்
காட்டு மலைரயில் காட்டிடும் - காட்சிகளை
ஆட்டமும் பாட்டுடன் ஆழ்ந்து ரசித்தனர்!நல்
மாட்சிமையாம் நீல மலை.

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூரு.

.

காலத்தே ஊருக்குக் காரணமாய் வந்ததுவும்
பாலை வெயிலின் பயத்தால்தான் - கோலமோ
ஊரிலும் வெப்பம் விடமறுத்து வம்புசெய்ய
நீரிருக்கும் வேறூர் நகர்வு

பக்ருதீன் இப்னு ஹம்துன்

.

சில்லென்று காற்று சிலுசிலுன்னு வீசுகின்ற
நில்லென்று நம்மை நிறுத்துகின்ற - புல்லென்றே
ஆடை அணிந்த அழகான எங்களுரே
கோடை விடுமுறைக்குக் கோன்

சி. செல்லமுத்து, மேல்மங்கலம்.

.

வீட்டினில்தா னிந்த விடுமுறை நாட்களெல்லாம்
கூட்டிலடை காக்கும் குருவியாய்! - ஏட்டினையும்
வாசிக்கா(து) ஏதோ வழக்கமாய் வேலைகளை
நேசித்து செய்தேன் நெகிழ்ந்து.

மாலதி திரு

.

வாழ்க்கையில் கொண்டாட்டம் வாடையில் வந்திடுமா
ஆழ்கடல் முத்தாக ஆங்காங்குச் - சூழ்ந்திடுங்
காழ்ப்புணர்ச்சி கோடையிலுங் கானலாய் வந்திட
ஏழ்பிறப்பும் இந்நிலையா என்று .

சரஸ்வதி பாஸ்கரன்

.

பிணியோடு போராடி பின்னெங்கே கோடை?
தனியாய்க் கழிப்பதுநான் தானே - அணிந்த
பிணிநீங்கி வாடை பிறங்கும் மலையில்
நனைகுளிரில் ஆடுவேன்?நான்.

தென்றல் கவி

.

ஓய்வி லுழைப்பினிலும் ஒன்றுமில்லை மிச்சமாம்
போய் வருவோம் பக்கத்தில் புன்னகையாள் - வாய்விட்டாள்
ஆங்கில நாட்டின்கன் ஆதிக்கம் ஆசியர்கள்
ஓங்கும் நிறவெறியும் உண்டு

*( பிரான்ஸிலிருந்து பிரித்தானியாப்பயணத்தில் கண்டது)*

இரா இரத்தினகுமார்

# வெண்பாப் போட்டி (பயணம்) 56

போட்டியின் கால அளவு  ஜூலை 01 முதல் 12 வரை 2026

இம்மாதப் போட்டி....

.

தாங்கள்வாழும்பகுதியில்உள்ளகோயில்திருவிழாவிற்குதங்களின்உறவினர்களைக் குடும்பத்துடன் அழைக்கும் படி ஒரு வெண்பா...
குடமுழுக்கு, தேரோட்டம், காப்பு கட்டுதல், தீமிதி
இன்னும் பல அவரவர் கற்பனைக்கு ஏற்றபடி அமைக்கலாம்...



.

வழக்கம்போல்களம்முழுவதும்கவிஞர்களின்கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :- தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் ஆசிரியர்
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு .

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**



# வெண்பா உரைவீச்சு





## அகத்தில் எழுவதெல்லாம் அந்தாதி....

.

அமின் : -

.

அன்பின் உருவமவள்
ஆசை அருவியவள்
இன்பம் தரும்நல்
இனிப்புமவள் - முன்பிருந்தே
என்னை அணைக்கும்
இனிமையவள் ஏற்றநல்
அன்னையும் தானவளே
ஆம்.

.

ஏடி : -

.

ஆமென்று சொன்னால்
அருகே இருந்தபடி
தேம்பாய என்னைத்
திருடுபவள் - ஓம்பியெனைச்
சுந்தர வாழ்வில்
சுமப்பவள் என்னவளே
எந்தன் வழியின்
இணை.

.

அமின் : -

.

இணையென்ற சொல்லின்
இலக்கணம்; என்தன்
துணையாக வாழ்வின்
தூய்மை; - மனையில்
அவளின்றி நானில்லை
ஆமென்றன் வாழ்வின்
தவமே அவளொருத்தி
தான்.

.

ஏடி : -

.

தானாகப் பேசும்
தனிமழையாம் என்னவள்
தேனாகப் பார்க்கும்
திருமதியாம் -- வானாளும்
ஒள்ளொளிபோல் என்னை
உயிர்கொடுத்து ஆள்கின்ற
கள்ளின் இனிமையவள்
காண்.

.

அமின் : -

.

காண்கின்ற போதெல்லாம்
கன்னத்தில் முத்தமிட்டுத்
தேன்கிண்ணப் பேச்சால்
திகட்டவைப்பாள் - நான்கொண்ட
எல்லாம் அவளாய்
இருப்பதுவே என்பெருமை
இல்லையெல் நானில்லை
இங்கு.

.

ஏடி : -

.

இங்கும் ஒருநிலவா
என்று வியக்கவைக்கும்
பொங்கும் அழகில்
பொலிந்திருப்பாள் - தங்கமெல்லாம்
புன்னகையின் முன்னால்
பொசுக்கென்று தோற்றுவிடும்
என்னவள் என்பேன்
இனித்து.

## அவரவர் இல்லத்தரசியின் அழகை அவரவர் வர்ணித்தல் ....

.
அமின் : -
.
இனித்திருப்பாள் எந்நாளும்
என்நெஞ்சின் உள்ளே
சனித்திருப்பாள் வீசிவரும்
சாரல் - பனிபோல்
குளிர்ந்திருப்பாள் பார்வை
குவித்திருப்பாள் நெஞ்சில்
ஒளிர்ந்திருப்பாள் என்னவளாம்
ஓர்.
.
ஏடி : -
.
ஓரழகு கண்ணில்;
உளத்தை மயக்கும்இன்
னோரழகு பார்வை
உயிர்ப்பிடியில்; - தேரழகு
என்னவளின் முன்னால்
இழக்கும்; மனத்தழகின்
முன்னேயும் நிற்கா
முகில்.
.
அமின் : -
.
முகிலான கூந்தல்மேல்
மொட்டுக்கள் எல்லாம்
வகிட்டழகில் நின்று
வளர்க்கும் - சகியவள்
என்வாழ்வில் மட்டும்
இருப்பாள் இணையாகப்
பொன்வாழ்வை ஈவாள்
பொலிந்து.
.
ஏடி : -
.
பொலிகின்ற வார்த்தையெலாம்
பொன்றாத அன்பை
சலிக்காமல் தாரும்
சரமாய் - வலியென்றால்
மங்கையவள் பேச்செனக்கு
மாமருந்தாம்; என்னுளத்தில்
பொங்கும் எலாமவளே
போ.

.
ஏடி : -
.
போவென்றால் போவாள்
பொறுத்து சிலநிமிடம்
வாவென்று சொன்னாலும்
வந்திடுவாள் - ஆவலுடன்
இத்தனையும் நான்சொலேன்
என்னுடைய வார்த்தைகளால்
அத்தனையும் நெஞ்சத்தால்
அங்கு.
.
அமின் : -
.
அங்கெல்லாம் எந்தன்
அகத்தின் நிலையறிந்து
பொங்கும்நே சத்தைப்
பொலிந்துநிற்கும் - எங்குமே
என்னவளைப் போலே
எவளுமில்லை என்வாழ்லில்
பெண்ணல்ல என்னவோர்ப்
பொன்.
.
ஏடி : -
.
பொன்னகையே வேண்டாம்
பொலிவான என்னவளின்
புன்னகையே போதும்
புகழ்பேச - அன்னம்போல்
என்னையே நோக்கி
இருகால் நடந்துவத்தால்
இன்பம் பெருகும்
எனக்கு.
.
அமின் : -
.
எனக்காக வாழ்பவள்;
இன்பத்தில் துன்பில்
மனக்காயத் திற்கு
மருந்தாய்த் - தனக்கான
எல்லாமும் விட்டுவிட்டு
என்னைத் தொடர்ந்துவரும்
செலவமவள் வேறில்லை
சீர்.

.

ஏடி : -

.

சீர்வேண்டாம் சீர்வேண்டாம்
சீச்சீச்சீ என்னவளின்
நேர்நிற்கும் காதல்
நிறைந்திருக்க - யார்கொடுக்கும்
எப்பொருளும் வேண்டாம்
எனக்கென்பேன் போதுமவள்
அப்பழுக்கே இல்லாத
அன்பு.

.

அமின் : -

.

அன்புக்கு அவள்தான்
அகராதி என்வாழ்வில்
துன்பிற்கு அவளே
துணையாவாள் - அன்றையெனும்
அந்தநிலை கூட
அடியேன் மகற்கில்லை
எந்தனுக்கே என்பேன்
இனித்து.

.

ஏடி : -

.

இனிக்கின்ற ஆறுதலும்
இன்பங்கள் கூறி
பனிபோலப் பேசும்
மதமும் - மணிக்கணக்கில்
இல்லா ளுடனே
இணைத்து பயணிக்கச்
சொல்லும் அகந்தன்னைச்
சூழ்ந்து.

.

அமின் : -

.

சூழ்நிலை மாறிடினும்
சொல்ல முடியாத
வாழ்நிலைகள் மாறிடினும்
வாழ்வெல்லாம் - எழ்மையது
என்னை உலுக்கிடினும்
என்னவள் கூடநின்றால்
குன்றும் தொடுவேன்நான்
கொள்.

.

ஏடி : -

.

கொள்கை அவளுக்குக்
கொண்டவன் நான்மட்டும்;
எள்ளளவும் இல்லை
எதுவொன்றும் - கள்ளுமே
என்னவள்அன் பின்முன்
எளிதாகத் தோற்றுவிடும்
அன்னையின் இன்னோர்
அசல்.

.


அமின் : -

.

அசலாக நானும்
அவள்முகத்தைப் பார்த்தே
நிசமாகப் போனால்
நிலத்தில் - வசமாகும்
எல்லாம் அதிஷ்டமாய்
என்நாளில் மாறிவிடும்
பொல்லாமை ஓடிவிடும்
பொய்த்து.







வாசகர்களுக்காக..
வலிமைமிகு எண்ணங்கள்
( கட்டுரைத் தொகுப்பு )
வலிமைமிகு எண்ணங்கள்
தொகுப்பாளர்கள்:
தமிழ்நெஞ்சம் அமின்
அன்புச்செல்வி சுப்புராஜ்
பக்கங்கள்: 480.
விலை: 4X0
உங்களுக்காக: ரூ380/- மட்டுமே.
அஞ்சல் செலவு: உங்களுக்காக நாங்கள்
வேண்டுவோர் தொடர்பு கொள்க
Gpay: 8946082893

**வாழ்த்திய நெஞ்சங்களுக்கு**
**மனமார்ந்த நன்றி**

என்நலம் வேண்டி நாளும்
இறைவனை வேண்டி இங்கே
தன்னலம் பாரா நட்பின்
தனித்துவ வாழ்த்துக் காக
நன்றியைச்  சொல்லி நானும்
நலமுடன் உங்க ளோடே
என்றுமே வாழ்ந்தி  ருக்க
இதயத்தில் சிரிக்கின்  றேனே



தமிழ்நெஞ்சம் அமின்